ஈழத்து நவீன கவிதை

புதிய உள்ளடக்கங்கள் - புதிய தரவுகள் - புதிய போக்குகள்

கலாநிதி செ. யோகராசா

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து நவீன கவிதை

புதிய உள்ளடக்கங்கள் - புதிய தரவுகள் - புதிய போக்குகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து நவீன கவிதை

புதிய உள்ளடக்கங்கள் - புதிய தரவுகள் - புதிய போக்குகள்

கலாநிதி செ.யோகராசா
முதுநிலை விரிவுரையாளர்
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு – சென்னை
2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு எண் : 285

ஈழத்து நவீன கவிதை :
புதிய உள்ளடக்கங்கள் – புதிய தரவுகள் – புதிய போக்குகள்
– கலாநிதி செ.யோகராசா எழுதியது.

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12, தொ.பே. 2421388, மி. அஞ்சல் : kumbh@sltnet.lk
– 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை – 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12,

Eliathu Naveena Kavithai :
Puthiya Uladakkam - Puthiya Tharavukal - Puthiya Pokukal
(Sri Lankan Tamil Moden Poetry : New Contents - New Data - New Trends)
By Dr. S. Yogaraja

Printed by **Kumaran Press (Pvt) Ltd.**
- 361,1/2 Dam Street, Colombo -12

Published by **Kumaran Book House**
- 361,1/2 Dam Street, Colombo -12,Tel. - 2421388, E.mail : kumbh@sltnet.lk
- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

ISBN 978 - 955 - 659 - 101 -X

All rights reserved. No part of this book may be reproduced, translated, stored in a retrieval system, or transmitted in any form or by means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior written permission from the Author or the Publisher.

சமர்ப்பணம்

அமரர்கள்
பண்டிதர் ஆர்.கே. முருகேசு அவர்களுக்கும்
பண்டிதர் க. வீரகத்தி அவர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

கொழும்புப் பல்கலைக்கழகத்திலே 1968ஆம் ஆண்டு "தமிழ்" சிறப்புக் கற்கைநெறி மாணவர்களுக்கு விருப்பிற்குரிய ஒரு பாடமாக ஆரம்பித்த 'ஈழத்துத் தமிழ் இலக்கியம்' இன்று ஈழத்தின் அனைத்துத் தமிழ்ப் பல்கலைக்கழகங்களில் மட்டுமன்றி, பாடசாலை மட்டத்திலே உயர்தர வகுப்பு தமிழ் பாடத்திட்டத்திலும் முதன்மை பெறுமளவிற்கு முக்கியம் பெற்றுவிட்டது; இடைநிலை வகுப்பு பாடநூல்களிலும் ஏதோ ஒரு விதத்தில் இடம் பெறுகின்றது.

எனினும், ஆசிரியர்கள் விருப்புடன் கற்பிப்பதற்கும் மாணவர்கள் விருப்புடன் கற்பதற்கும் இயலாதநிலைமை நிலவுகின்றமை கண்கூடு, உசாத்துணை நூல்கள் போதியளவு இல்லாமையே இதற்கான முக்கியமான காரணமாகும்.

இந்நிலையில் கொழும்புப் பல்கலைக்கழகத்திலே நான் ஈழத்து இலக்கியம் கற்றமை காரணமாகவும் பின்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்திலே நீண்ட காலம் கற்பித்து வருவது காரணமாகவும் இத்துறைப் பற்றி இடையறாது சிந்திக்கவும் தேடவுமான வாய்ப்புக்கள் எனக்கு ஏற்பட்டுள்ளன. அவ்வப்போது நடைபெறும் கருத்தரங்குகளும் பிரதேச மட்ட சாகித்திய விழாக்களும் ஈழத்து இலக்கியம் பற்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் தூண்டுகோலாக இருந்து வருகின்றன. இவ்வாரோக்கியமான சூழலிலே ஈழத்து நவீன கவிதை தொடர்பாக நான் எழுதிவந்துள்ள கட்டுரைகள், ஆய்வுகள் ஆகியவற்றின் ஒரு பகுதியே இப்போது இந்நூலாக வெளிவருகின்றது.

இக்கட்டுரைகள் ஈழத்து நவீனகவிதையின் தோற்றம் குறித்தும், முக்கியமான முன்னோடிகள்/ஆளுமைகள் சிலர் குறித்தும் பிரதேச அடிப்படையிலும், கோட்பாட்டு நிலையிலும், பொதுப்பார்வையிலும் ஈழத்து நவீன கவிதை பற்றிப் பேசுகின்றன. எனினும், இக்கட்டுரைகள் முழுமையானவையல்ல என்பது வெளிப்படை. குறிப்பாக, ஈழத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கவிதையின் முக்கியமான ஆளுமைகள் இன்னும் பலருள்ளனர். மஹாகவி, நீலாவணன், இ.முருகையன் முதலான முக்கிய ஆளுமைகள் பற்றி இத்தொகுப்பில் எதுவும் இடம்பெறவில்லை. ஆயினும், ஈழத்து நவீன கவிதை பற்றிச் சிந்திப்போராது சிந்தனையை விரிவுபடுத்தவும் ஆழப்படுத்தவும் இவை ஓரளவாவது உதவுமென்பதில் ஐயமில்லை.

இவை அவ்வவ்காலத் தேவைகளுக்காக எழுதப்பட்டன-வாதலின், தொகுப்பு நிலையில் இன்று நோக்கும்போது கூறியது கூறல் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளமை புலப்படுகின்றது. எனினும், கட்டுரையின் முழுமை கருதியும் சிதைவுறாமைக் கருதியும் அவை நீக்கப்படாமல் அவ்வாறே இடம்பெற்றுள்ளன.

இவற்றை எழுதுவதற்கு வாய்ப்பு தந்த சஞ்சிகை ஆசிரியர்கள், கருத்தரங்கு ஏற்பாட்டாளர்கள் அனைவரையும் இவ்வேளை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன். சமூகநோக்குடன் எனது நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டுவரும் நண்பர் குமரனுக்கும் நன்றியுடையேன்.

கலாநிதி செ.யோகராசா
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்
10.11.2007

பொருளடக்கம்

முன்னுரை vii

I. அறிமுகம்

1. ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி : ஊற்றுக்களும் ஒட்டங்களும் கிளைகளும் 3

II.தோற்றம்

2. ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றமும் மறுமலர்ச்சிக் குழுவினரும் 13
3. ஈழத்து இலக்கியச் சஞ்சிகைகளும் நவீன கவிதையின் தோற்றமும் - மறுமதிப்பீடு 18
4. ஈழத்தில் தமிழ்க் கவிதையின் தோற்றம்: மறுமதிப்பீடு 25
5. ஈழத்தில் புதுக்கவிதையின் தோற்றம் 29
6. 'ஈழகேசரிக்' கவிதைகள் 36

III.முன்னோடிகள்/ஆளுமைகள்

7. ஈழத்தின் முதற்பெண் கவிஞர் : மீனாட்சியம்மாள் நடேசய்யர் 43
8. ஈழத்தின் நவீன கவிதை முன்னோடி : சாரதா 47
9. ஈழத்து முற்போக்குக் கவிதை முன்னோடி: அ.ந.கந்தசாமி 53
10. தனித்துவமான மொழி உணர்ச்சிக் கவிஞர் : ஆரையூர் அமரன் 57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஈழத்து நவீன கவிதையின் மற்றொரு முன்னோடி : நுஃமான் 61

12. எழுபதுகளின் இரு ஆளுமைகள் : வில்வரத்தினம், சிவசேகரம் 79

13. சோலைக்கிளியின் கவிதைகள் : ஒரு அறிமுகம் 96

IV. பிரதேச அடிப்படை

14. ஒப்புநோக்கில் மலையகக் கவிதை 107

15. மட்டக்களப்புப் பிரதேச நவீன கவிதை ஊற்று புலவர்மணி பெரியதம்பிபிள்ளை 112

16. தமிழ்த்தேசியமும் மட்டக்களப்புப் பிரதேசக் கவிஞர்களும் 118

V. கோட்பாட்டு நோக்கு

17. இருபதாம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகளில் பெண்களும் பெண்கவிஞர்களும் 125

18. ஈழத்துக் கவிதையில் எதிர்ப்புக் குரல்கள் 155

19. உருவநோக்கில் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி 176

VI. பொதுப்பார்வை

20. ஈழத்து நவீன தமிழ்க் கவிதை: ஒரு புதிய அலை 185

21. தமிழிலக்கியப் பரப்பில் ஈழத்து நவீன கவிதை 192

22. ஈழத்து நவீனகவிதை வளர்ச்சி: இன்னும் சில பக்கங்கள் 197

23. ஈழத்து நவீன கவிதையின் வளம் நோக்கி... 201

VII. அண்மைக்காலப் போக்குகள்

24. தொண்ணூறுகளுக்குப் பின்னர் ஈழத்தில் நவீன கவிதை முயற்சிகள் 209

I அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி
ஊற்றுக்களும் ஓட்டங்களும் கிளைகளும்

I

நவீன கவிதையின் தோற்றம் பற்றி நோக்குவது நாவல், சிறுகதை என்பனவற்றின் தோற்றம்பற்றி நோக்குவதைவிடச் சிக்கலானதொன்று. ஏனெனில், தமிழ்க் கவிதை முற்றிலும் புதிய வடிவமன்று; ஏறத்தாழ இரண்டாயிரமாண்டுக்காலப் பாரம்பரிய வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான தமிழ்க் கவிதை 20ஆம் நூற்றாண்டில் நவீன கவிதைக்குரிய பண்புகளைப் பெற்றுக் கொண்டமை கண்கூடு. இத்தகைய நவீன தன்மைகள், உள்ளடக்கம், உருவம், வெளிப்பாட்டுமுறை என்பன சார்ந்தனவாயுள்ளமை நாமறிந்ததே. இவ்வாறு நோக்கும் போது எழுகின்ற சிக்கலொன்றுண்டு. இன்னொரு விதமாகக் கூறின், உள்ளடக்க நோக்கில் ஈழத்துக் கவிதை 19ஆம் நூற்றாண்டிலேயே நவீன பண்பு கொண்டதாக உருவாகிவிடுகின்றது. இவ்வாறான நவீன கவிதைக்கான ஆரம்பகால முயற்சிகளை நவீன கவிதைக்கான ஊற்றுக்கள் என்று கூறுவது பொருத்தமானது.

மேற்கூறியவாறான நவீன கவிதை ஊற்றுக்கள் சிலவற்றுள் தி.த.சரவணமுத்துப்பிள்ளையின் "தத்தை விடுதூது" (1892) என்ற படைப்பாக்க முயற்சி விதந்துரைக்கப்பட வேண்டியதொன்று. 19ஆம் நூற்றாண்டுப் பெண்கள் நிலைபற்றி-அவர்களுக்கு நடைபெறும் பொருந்தா மணம்பற்றி-பல்வேறு கோணங்களில் நன்கு சிந்தித்துப் பாடல்கள் புனைந்துள்ளார் அவர். பாரதியாரின் பெண்விடுதலைக்கும் முன்பே அதற்கு நிகரான பாடல்களை சரவணமுத்துப்பிள்ளை புனைந்துள்ளார் என்று கூறுவதில் தவறில்லை. இவ்வழி, பின்வரும் பாடல்கள் நுணுகி நோக்கத்தக்கவை :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிற் பசுங்கிளிபோற்
கோதையரை எப்போதும்
வீட்டில் அடைத்து வைக்கும்
விரகிலருக்கு யாது உரைப்போம்
பூட்டித் திறந்தெடுக்கும்
பொருளாகக் கருதினரோ
கேட்டோர் நகைப்பதும்
கேட்டிலரோ!

கண்ணை மறைத்தே கொண்டுபோய்க்
காட்டில் விடும் பூனையைப்போல்
பெண்ணை மனை அடைத்து வைத்து
பின்ஒருவர் கைக்கொடுப்பார்
தம் மனைக்கோர் பசு வேண்டிற்
தாம் பலகாற் பார்த்திருந்தும்
பின்னுந் துணிவிலராய் பேதுறுதல் மாந்தர்குணம்
என்னே மணவினையை இமைப்பொழுதிலே முடிப்பார்.

மேலே, பெண்களை வீட்டிலடைத்து வைத்திருத்தல், பசுவாங்குவது பற்றிக் குறிப்பிடுதல் முதலியன, பாரதியாரது பெண் விடுதலைக்-கும்மிப் பாடல்கள் சிலவற்றை ஞாபகப்படுகின்றமை கவனத்திற்-குரியது. இதனாலேயே, "தத்தைவிடுதூது நூலினைப் பாரதியார் படித்திருக்கலாம் என்று ஊகிக்க வாய்ப்புள்ளது" என்று கைலாசபதி குறிப்பிடநேர்ந்தது. இவ்விடயம் தொடர்பாக எனது அவதானிப்-பொன்றையும் குறிப்பிட வேண்டும். இன்னொரு இடத்திலே நான் குறிப்பிட்ட வார்த்தைகளில் கூறுவதானால் "தி.த.சு. பணிபுரிந்த "காலேசு"க்குப் பாரதியார் சென்றுள்ளதையும் தி.த.சு. சொற்பொழி-வாற்றிய அக் காலேசுத் தமிழ்ச்சங்கம் பற்றிப் பாரதியார் பாடியுள்ளதோடு அங்கு சொற்பொழிவாற்றியுள்ளதையும் (1905) கவனிக்கும் போது தத்தைவிடுதூதினைப் பாரதியார் படித்திருக் கலாமென்ற கைலாசபதியின் ஊகம் வலுப்பெற வாய்ப்புள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்".

20ஆம் நூற்றாண்டில் ஏறத்தாழ பாரதியாருக்குச் சமகாலத்தில் ஈழத்தில் வாழ்ந்த பாவலர் துரையப்பாபிள்ளை நவீன கவிதைக்கான மற்றொரு ஊற்றாகக் கருதப்படத்தக்கவர். ஈழத்தில் "தேசியம்" பற்றி முதன்முதலாகப் பாடியிருப்பவர் பாவலரே. இந்திய சுதந்திரப் போராட்ட வீரரான லோகமான்ய திலகரின் பிறப்பிடமான பம்பாய் மாகாணத்தில் சிலகாலம் வாழ்ந்தமை காரணமாக தேசிய உணர்வு கைவரப்பெற்று பிரக்ஞை பூர்வமாக பாவலர் துரையப்பாபிள்ளை

தேசியம் பற்றிப் பாடியுள்ளார் என்று கூறுவதில் தவறில்லை என்றே கருதத்தோன்றுகிறது.

ஈழத்தில் நவீன கவிதையின் ஊற்றுப் பற்றிச் சிந்திப்போர், பாவலர் துரையப்பாபிள்ளைக்குப் பின்னர், ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றத்திற்கு வழிவகுத்த மறுமலர்ச்சிக்குழுவினர் பற்றி கவனிக்க முற்படுகின்றனரே தவிர, 1930களில் உருவான ஈழகேசரிக் காலக் கவிஞர்கள் பற்றிக் கவனிக்கத்தவறி விடுகின்றனர். ஈழகேசரி காலக் கவிஞர்கள் சிலரது (யாழ்ப்பாணண், மு.நல்லதம்பி, 'சத்தியநாதன்', அகிலேஸ்வர சர்மா) கவிதைகளுள் சில, முக்கிய கவனிப் பிற்குரியனவாகின்றன. எடுத்துக்காட்டாக, சாதிப் பிரச்சினை பற்றி சத்தியநாதன் பாடியுள்ள கவிதையின் ஒரு பகுதியை இங்கு எடுத் தாள்வது அவசியமாகின்றது. அது எனது கருத்திற்கு வலுவூட்டுகின்றது.

தீண்டப் படாதாரென்று - உலகில்
திசைமுகன் செய்ததுண்டோ
வேண்டப் படுவதீதோ? ஐயோ
வீண்கதை பேசுகிறீர்"

உரிமை உரிமை என்பீர் - உங்கள்
எளிய சகோதரர் தங்கள்
உரிமை உரிமை என்றால் - வேத
ஏடு விரிப்போம் என்பீர்

ஈழகேசரிக் காலம் போன்று அதே முப்பதுகளில் ஈழத்து நவீன கவிதைக்கான மற்றோர் ஊற்று மலையகத்திலிருந்து பிரவாகித்-திருப்பதையும் ஆய்வாளர்கள் கவனிக்கத் தவறிவிட்டனர். இவ்விதத்தில் மீனாட்சியம்மாள் நடேசய்யர் (அவரது கணவரான நடேசய்யரைவிட) முக்கியமான ஒருவராகின்றார். அன்னார் இந்தியத் (மலையக)த் தொழிலாளர் நிலைபற்றி அவதானித்து அவர்களை எழுச்சியூட்டும் பொருட்டுப் பாடியுள்ள பாடலிலிருந்து ஒரு பகுதியை இங்கு தருவது இவ்வழி பொருத்தமானது :

சிங்கள மந்திரிகள் கூற்று - மிக
சீரு கெட்டதென்று சாற்று
சங்கடமே நேரிடுமென தோற்றுதிந்திய
சமூகம் நெருப்பாய் வரும் காற்று

நன்றிகெட்டுப் பேசும் மந்திரிமாரே - உங்கள்
நியாய மென்ன சொல்லுவீரே
இன்றியமையாத வொருபோரே - செய்ய
இடமுண்டாக்குகிறீர் நீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II

மேற்கூறிய ஊற்றுக்களின் சங்கமிப்பே ஈழத்தில் 1940களில் நவீன கவிதைப் பிரவாகத்திற்கு வழிவகுக்கின்றது.

எனினும், 1940களிலே ஈழத்தில் நவீன கவிதைப் பிரவாகத்திற்கு, மேற்கூறிய பின்புலத்தைவிட சமகால சமூக, அரசியல் மாற்றங்களும் வழிவகுத்திருந்தன என்பது கவனத்திற் கொள்ளப்படவேண்டிய-தொன்றாகின்றது.

குறிப்பாக, இக்காலத்தில் இலவசக்கல்வி முறை அறிமுக-மானமையும் , இதனால் கிராமத்து இளைஞர்கள் நகரங்களுக்குச் செல்ல முற்படுவதும் அவர்கள் புதிய அனுபவங்களுக்காட்படுவதும் நிகழ்கின்றன. இக்கால படைப்பாளி யாகிய அ. ந. கந்தசாமி இதுபற்றி இவ்வாறு கூறுவது நினைவுகூரப்பட வேண்டியதொன்று :

> வாலிபத்தின் வைகறையிலே பள்ளி மாணவனாக யாழ்ப்பாண நகரக் கல்லூரி வந்துவிட்டு மாலையில் கிராமத்தை நோக்கிப் புகை-வண்டியில் செல்லுகையில் சில சமயம் தன்னந்தனியாக ரயில் வண்டியிலிருப்பேன். அப்பொழுது என் கண்கள் வயல் வெளி-களையும் தூரத்துத் தொடு வானையும் உற்றுநோக்கும்.... உள்ளத்தி-லும் உடம்பிலும் சுறுசுறுப்பும் துடிதுடிப்பும் நிறைந்த காலம்..... உலகையே என் சிந்தனையால் அளந்து விட வேண்டுமென்று பேராசை கொண்ட காலம் .....

மேலும் இக்காலத்தில் தமிழ்ப் பாரம்பரியக் கல்வி முறை பண்டிதர்களை உருவாக்கிய கல்விமுறை ஆட்டங் காண்கின்றது. இத்தகைய பண்டிதர்களுக்கு கிராமத்து இளைஞர்கள் 'கிறுக்கியவை' பிடிக்காது போனமையும் அதை எதிர்த்தமையும் இப்பின்னணியில் மஹாகவி 'பண்டிதர்' என்ற புனைபெயரையும் அ.ந.கந்தசாமி 'கவீந்திரன்' என்ற புனைபெயரையும் தரித்துக் கொண்டமையும் சுவாரஸ்யமான நிகழ்வுகளாகின்றன.

இவ்வேளை எழுத்தாளர் சங்கங்களும் உருவாகத் தொடங்கின. நாம் நன்கறிந்த 'மறுமலர்ச்சி எழுத்தாளர் சங்கம்' மட்டுமன்றி, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் இக்காலத்தில் உருவாகியிருந்தது பலரும் மறந்து விட்ட விடயமாகிறது.

இக்காலப் பகுதியிலேயே இலங்கை கம்யூனிஸ்ட்ற் கட்சி ஆரம்பிக்கிறது என்பதும் சோல்பரி ஆணைக்குழு வருகை தருகின்றது என்பதும் கவனத்திற்குரியன. ஏனெனில், அரசியல் விழிப்புணர்ச்சி ஓரளவாவது ஏற்பட இவை வழி வகுத்திருக்கும் என்று ஊகிப்பதில் தவறில்லை. அனைத்தையும் விட, தமிழகச் சஞ்சிகைகளான கிராம

ஊழியன், சூறாவளி, கலாமோகினி முதலியன இங்கு அறிமுக-மாகின்றன. (கிராம ஊழியனில் இடம் பெற்ற புதுமைப்பித்தன் - மாணிக்கச் செட்டியார் தொடர்பான சர்ச்சையில் மறுமலர்ச்சிக் கவிஞர்களுனொருவரான 'சாரதா' வும் பங்கு பெறுகின்றார்.) இப்பின்புலத்தில் ஈழத்தின் பல இடங்களிலும் இலக்கியச் சஞ்சிகைகள் (மறுமலர்ச்சி - யாழ்ப்பாணம்; பாரதி - கொழும்பு; பாரதி - மண்டூர்; எரிமலை - திருகோணமலை) தோற்றம் பெறுகின்றன.

இத்தகைய பரந்துபட்டதொரு ஆரோக்கியமான இலக்கியச் சூழலில் நவீன கவிதைப் பிரவாக ஓட்டம் இடம் பெறுவது தவிர்க்க இயலாததாகின்றது.

இவ்விடத்திலேதான் இன்னொரு முக்கியமான விடயத்தையும் குறிப்பிடுவதவசியம். 40களில் பிரவாகித்த நவீன கவிதை ஓட்டத்தில் 'மறுமலர்ச்சி'ச் சஞ்சிகைக்கு மட்டுமன்றி, முன்குறிப்பிட்ட 'பாரதி ' (கொழும்பு), பாரதி (மண்டூர்), 'எரிமலை' (திருகோணமலை) 'உதயன்' (மட்டக்களப்பு) முதலானவற்றிற்கும் முக்கிய பங்குள்ளது. இன்னொரு விதமாகக் கூறின் யாழ்ப்பாணத்தில் உருவான மறுமலர்ச்சியுடன் தொடர்புபட்ட நவீன கவிதையின் தோற்ற உருவாக்கம் அதே காலப்பகுதியிலேயே யாழ்ப்பாணத்திற்கு அப்பாலுள்ள ஏனைய பிரதேசக் கவிஞர்களது நவீன கவிதை ஓட்டத்துடனும் தொடர்புபடுகின்றமை மனங்கொள்ளத்தக்கது.

'மறுமலர்ச்சி' இதழ்க் கவிதைகளில் கிராமியம், இயற்கை, காதல், குடும்ப உறவு முதலானவை முக்கியம் பெற, பாரதி (மண்டூர்) யில் சமூக நோக்குடைய கவிதைகளும் 'பாரதி' (கொழும்பு) யில் பிரக்ஞை பூர்வமாக முற்போக்குக் கவிதைகளும் (சில, மொழி-பெயர்ப்புக் கவிதைகள்) இடம்பெறுகின்றன. ('எரிமலை' 'உதயன்' முயற்சிகள் பற்றி இன்று வரை அறிய முடியாதுள்ளமை விசனத்திற்-குரியதே). இவ்வாறு நோக்கும் போது நவீன கவிதை பிரவாகித்த காலத்திலேயே கிளைகளும் உருவாகத் தொடங்கியமை புலப்படு-கின்றது.

இவ்விடத்தில் 'மறுமலர்ச்சி' சஞ்சிகை சார்ந்த கவிஞர்கள் பற்றிய முக்கியமான புதிய அவதானிப்பொன்றும் நினைவுக்கு வருகின்றது. அதாவது, மறுமலர்ச்சிக் குழுவினர் பட்டியலில் இடம்பெற்றிருந்தாலும் முக்கியம் பெறாமலிருந்த கவிஞர் சாரதா இன்றைய அவதானிப்பில் பெறுகின்ற முக்கியத்துவம் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. நவீன கவிதையின் அடிப்படைப் பண்பு-களுளொன்று அது அன்றாட அனுபவத்தின் வெளிப்பாடாகவுள்ள-மையாகும். இவ்விதத்தில் அத்தகைய பண்பு மறுமலர்ச்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்களுள் முதன்முதலாகச் சாரதாவிடமே முகிழ்ப்பது குறிப்பிடத்தக்கது. எ - டு :

'பிரயாண அனுபவம்'

பிரயாணஞ் செய்வதென்றால் எனக்கோர் ஆசை;
பேசாமற் போய் வருவேன், எங்கென்றாலும்
அரைநாளின் மேலாக ஒருவர் வீட்டில்
ஆறி நிற்ப தென்னியல்புக் கடுக்கா தப்பா;
சிரந்தாழ்த்தி வணங் கிடவுஞ் செய்வேன்;ஆனால்
செட்டு விடும் மூடர்களைச் சேரமாட்டேன்.
பிரவேசப் பரீட்சையில் கண்டேன் உங்கள்
பிரமாத அடக்கமெல்லாம்; பிறப்புவாசி!
வரவேற்றீர் உபசரித்தீர்; வளைத்துப்பேசி
வந்த கருத்தாளாளாய் வலிந்து கேட்பீர்
பரதேசம் வந்தொருநாள் ஆவதற்குள்
பாசத்தாற் பிணிப்பதற்கும் பார்த்தீர்...

அவ்வாறே, நவீனகவிதையின் மற்றொரு பண்பான 'எதிர்ப்புக் குரல்', தொன்மங்களை மறுவாசிப்புச் செய்தல் முதலியனவும் அவரது கவிதைகள் சிலவற்றிலே வெளிப்பட்டுள்ளன. (முறையே, சூடுகண்ட பூனை, சகுந்தலைதுயர் என்பன உதாரணங்களாகின்றன.) இவ்வடிப்படையில் நோக்கும் போது, நவீன கவிதைபற்றிய சிந்தனை - சிரத்தை மஹாகவிக்கு முன்னரே சாரதாவிடம் முகிழ்த்திருப்பது புலப்படுகின்றது. அதுமட்டுமன்றி, ஐம்பதுகளுக்கு முன்னரே சாரதா இத்தகைய கவிதைகள் சிலவற்றைப் படைத்திருப்பதும், மஹாகவி ஐம்பதுகளுக்குப் பின்னரே அவ்வாறு படைப்பதும் அதிகமெழுதி முதன்மைப் பெறுவதும் கவனத்திற்குரியனவாகின்றன. ஐம்பதுகளுக்குப் பின்னர் முதன்மை பெற்றாலும் ஈழத்து நவீன கவிதையின் முதன்மையான முன்னோடி மஹாகவி என்பதில் சந்தேகமில்லை. எனினும் அவருக்கு முன்பே நவீன திசை நோக்கிய சிறு பயணத்தை சாரதா மேற்கொண்டிருந்தாரென்பதே கவனிக்கப்பட வேண்டியது (இத்தகைய முடிவினால் மஹாகவியின் இடம் எவ்விதத்திலும் இறங்கிவிடவில்லை). மேற்கூறியவாறான நாற்பதுகளில் பிரவாகித்த ஈழத்து நவீனகவிதை ஓட்டத்துடன் ஐம்பதுகளின் பின்னர் பல கிளைகள் சங்கமிக்கின்றன. அவை வெவ்வேறான உப பண்பாட்டலகுகள் கொண்ட பிரதேசங்களிலிருந்தது வருகின்ற கிளைகளாகின்றன.

இவ்வாறான கிளைகள் அனைத்தும் பிரதேச நிலைப்பட்டன அல்ல என்பதனையும் சில அவ்வாறிருப்பினும் வேறு சில, பொதுப் பண்பாடு தழுவியவை என்பதையும் மனங்கொள்வதவசியம்.

ஏலவே, பாரதி (மண்டூர்) சஞ்சிகையூடாக மட்டக்களப்பு பிரதேசக் கிளையும் 'பாரதி' (கொழும்பு) சஞ்சிகையூடாக கொழும்பு, மலையகப் பிரதேசக் கிளைகளும் உருவாகியிருந்த நிலமை ஐம்பதுகளின் பின் விரிவடைகின்றது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் நீலாவணன் வரவும் மலையகத்தில் சக்தி பாலையா முதலானோரின் வரவும் (மலையக நவீனகவிதை முன்னோடி சி. வி. வேலுப்பிள்ளையை ஆங்கிலக் கவிஞர் என்றே கருதவேண்டும்; தமிழில், மலையகம் சார்ந்த முதற்கவிஞர் சக்தி பாலையா என்றே கருத முடிகின்றது;) இடம் பெறுகின்றன!

மேலும், ஆழ்ந்து நோக்கும்போது பல்கிளைப்பட்ட ஈழத்து நவீன கவிதை ஓட்டத்தில் மஹாகவி, நீலாவணன் ஆகியோருடன் இ.முருகையன், சில்லையூர் செல்வராசன், தா. இராமலிங்கம், நுஃமான், சண்முகம் சிவலிங்கம், மு. பொன்னம்பலம் ஆகியோருக்கும் முக்கிய பங்குள்ளமை தெரியவருகிறது.

மஹாகவி, அடிப்படையில் மனோரதியப் பாங்கின் ஆதிக்கத்திலிருந்த நவீனதமிழ்க்கவிதையை யதார்த்தவழி நோக்கித் திருப்பினார். (சமகால யதார்த்தம் மட்டுமன்றி முற்பட்டகால சமூக, அரசியல் யதார்த்த நிலையின் ஒரு வெட்டுமுகம் 'கோடை'யில் வெளிப்படுகின்றது.) அன்னாரது ஏனைய சாதனைகள் யாவும் யதார்த்த அடிப்படையிலிருந்தே வெளிப்படுகின்றன.!

நீலாவணன் சமூகப்பார்வையை அகல்விப்பதுடன் ஆத்மார்த்தப் பண்பையும் ஈழத்து நவீன கவிதைக்கு வழங்கினார்.

முருகையன் ஈழத்து நவீன கவிதையில் பல்வேறு விடயங்களை பாடுபொருளாக்கியதுடன் விஞ்ஞான நோக்கையும் வித்தியாசமான வெளிப்பாட்டு முறைகளையும் வெளிப்படுத்தினார்.

சில்லையூர் செல்வராசன் தமிழில் அரசியல் அங்கதக் கவிதையின் முன்னோடியானார்.

ஈழத்தில் தோற்றம் பெற்ற புதுக்கவிதையை அரசியல் வழியில் திருப்பியவர் நுஃமான் (தமது அத்தகைய கவிதைகளை 'புதுக்கவிதை'யாக நுஃமான் கருதுவதில்லை).

அவ்வாறான புதுக்கவிதையை சமூக விமர்சனத்திற்குப் பயன்படுத்தியவர் தா. இராமலிங்கம்;

அவ்வாறான புதுக்கவிதையில் ஆத்மார்த்தப் போக்கை வலுப்பெறச் செய்தவர் மு. பொன்னபலம்

ஆழமான விடயங்களை மிக எளிய சொற்களில் சொல்ல முற்பட்டவர் சண்முகம் சிவலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான ஒன்பது வெவ்வேறு கிளைகளும் சங்கமித்த பின்னர்தான் ஈழத்தின் நவீனகவிதை ஒட்டம் முழுமை எய்தியது என்று கூற வேண்டும்! இவர்களை ஈழத்து நவீன கவிதை முன்னோடிகள் என்றுரைப்பதில் தவறில்லை,

மேற்கூறிய ஈழத்து நவீனகவிதை ஒட்டத்தில் எழுபதுகள் தொடக்கம் பல்வேறு சிறுகிளைகள் உருவாகின்றன. எழுபதுகளில் சிவசேகரம், வ.ஐ.ச. ஜெயபாலன், வில்வரத்தினம், அ.யேசுராசா, குறிஞ்சித் தென்னவன், சோ. பத்மநாதன், பஸீல்காரியப்பர் ஆகியோரும் எண்பதுகளிலிருந்து சேரன், சோலைக்கிளி. சு. முரளீதரன் ஆகியோரும் தொண்ணூறுகளில் ஆத்மா, ஜபார், றாகலைபன்னீர்ச் செல்வம், நட்சத்திரன் செவ்விந்தியன், அஸ்வகோஷ், றஸ்மி, தேவஅபிரா,. உமாஜிப்ரான், கருணாகரன் அமரதாஸ் முதலான பலகிளைகளும் புறப்படுகின்றன. (இங்கு இப்பெயர்கள் பட்டியல் என்ற அடிப்படையில் இடம்பெறவில்லை. இவர்கள் ஒவ்வொருவரது கவிதைகளும் தனித்தன்மை பெற்றுள்ளன என்ற அடிப்படையில் இடம்பெறுகின்றன). இன்னொருவிதமாகக் கூறின், தமிழக - நவீன கவிதைப்போக்கில் இவ்வாறான பண்பு ஒவ்வொரு கவிஞரும் தத்தமளவில் தனித்துவ ஆளுமை கொண்டிருத்தல் என்பது - அரிதாகவே உள்ளது.

ஈழத்து நவீன கவிதை ஒட்டத்தில் வேறிரு பிரதான கிளைகளின் சங்கமிப்புமுள்ளது பெண்நிலைவாத நோக்குடைய கவிதைகளின் போக்கும் புகலிடக் கவிதைகளின் போக்குமே அவைகளாகும். முதற் கவிதைப் போக்கிற்கு எடுத்துக்காட்டுக்களாக அ. சங்கரி, ஒளவை, ஊர்வசி, கல்பிகா, கலா, மைத்ரேயி மைதிலி ஆகர்ஷியா, மருதமுனைஅனார், பெண்ணியா, விநோதினி, தமிழ்நதி, ரஞ்சினி, பிரதீபா தில்லைநாதன் முதலானோரையும் மற்றைய கவிதைப் போக்கிற்கு எடுத்துக்காட்டுக்களாக, கி.பி.அரவிந்தன், இளவாலை விஜயேந்திரன், திருமாவளவன், ரவி, அளவெட்டி சிறீசுக்கந்தராசா, சக்கரவர்த்தி - முதலானோரைம் குறிப்பிடலாம்.

இறுதியாக ஒன்று: மேற்கூறிய கவிஞர்களுடன் ஈழத்து நவீன கவிதையின் கிளைகள் முழுமைஎய்தி விடவில்லை என்பதோடு அவை ஆழமான ஆய்வை அவாவி நிற்கின்றன என்பதனையும் மனங்கொள்ளவேண்டும்!

II தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றமும் மறுமலர்ச்சிக் குழுவினரும்

ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் மறுமலர்ச்சிக் குழுவினர் ஏற்படுத்திய சில மாற்றங்கள் இதுவரை எவராலும் சுட்டிக் காட்டப்படவில்லையென்றே கூறவேண்டும். அவ்வாறு தனித்து நோக்குமளவுக்கு அவர்கள் என்னதான் செய்தார்கள் என்ற வியப்பு அல்லது ஐயம் சிலருக்கு எழுதல் கூடும். இந்நிலையில் ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் மறுமலர்ச்சிக் குழுவினர் செய்த சில குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கோடிட்டு காட்டுவது பொருத்தமுடையதாகும்.

1943 அல்லது 1944இல் தான் 'மறுமலர்ச்சிச் சங்கம்' யாழ்ப்பாணத்தில் உதயமாகியது. வரதர், அ.செ.முருகானந்தம், நாவற்குழியூர் நடராஜன், அ.ந.கந்தசாமி, பஞ்சாட்சர சர்மா ஆகியோர் அப்போது அதில் அங்கம் வகித்தனர். அச்சங்கத்தினால் முதலில் கையெழுத்துப் பிரதியாகவும், பின் (அச்சுருவில்) சஞ்சிகையாகவும் வெளியிடப்பட்டதே "மறுமலர்ச்சி"யாகும். இதில் கவிதை எழுதியோருள் குறிப்பிடத்தக்கவர்கள் மஹாகவி, சாரதா, அ.ந.கந்தசாமி, சோ.தியாகராஜன், நாவற்குழியூர் நடராஜன், கதிரேசன் முதலியோராவர். எனினும் இவரது ஆக்கங்கள் மறுமலர்ச்சியில் மட்டுமன்றி ஈழகேசரி, பாரதி, கிராம ஊழியன் என்பவற்றிலும் வெளிவந்தன. அவையும் நம் கவனத்துக்குரியன.

இக்குழுவினரின் இயல்புகளை அறிந்து கொள்வது இன்றியமையாதது. மறுமலர்ச்சிக் குழுவிலுள்ள ஒருவரின் நினைவலைகள் இவை :

> வாலிபத்தின் வைகறையிலே பள்ளி மாணவனாக யாழ்ப்பாண நகரக் கல்லூரிக்கு வந்துவிட்டு மாலையில் கிராமத்தை நோக்கிப் புகைவண்டியில் செல்லுகையில் சில சமயம் தன்னந்தனியாக ரயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டியிலிருப்பேன். அப்பொழுது என் கண்கள் வயல் வெளிகளையும் தூரத்துத் தொடுவானையும் உற்றுநோக்கும் ..... உள்ளத்திலும் உடம்பிலும் சுறுசுறுப்பும் துடிதுடிப்பும் நிறைந்த காலம் ..... உலகையே என் சிந்தனையால் அளந்துவிட வேண்டுமென்று பேராசை கொண்ட காலம் .....

ஒருவரின் நினைவலைகளாயினும் பொதுவாக இக்குழுவினர் அனைவருக்கும் இவை பொருந்துவனவாம்.

"காண்பதெல்லாம் புதுமையாகவும் அழகாகவும், வாழ்க்கை ஒரு வானவில் போலவும்" விளங்கிய இம் மறுமலர்ச்சிக் கவிஞர் கையிற்றான் ஈழத்தைப் பொறுத்த வரையில், முதன்முதலாக செய்யுள் - கவிதை வேறுபாடுகள் வெளிப்படத் தொடங்கின; தெளிவுற்றன.

செறிவான அக அனுபவத்தின் வெண்சூட்டிலே பிறப்பெடுக்கும் ஒன்றுக்கு, செய்யுளானது ஊடகமாக அமையும் போதே அது கவிதை ஆகிறது. அத்தகைய அனுபவங்களை வெளிப்படுத்துவதற்குச் செய்யுளைக் கருவியாகக் கொள்ளும் நவீன தன்மையை மறுமலர்ச்சிக் குழுவினர் ஏற்படுத்தியமை அவர்தம் சாதனைகளுள் முதன்மையானது, இதனை மேலும் விளக்குவது நன்று.

பொதுவாகவும் குறிப்பாக ஈழத்துத் தமிழிலக்கியத்தைப் பொறுத்த வரையிலும் செய்யுள் நீண்ட கால வளர்ச்சியும் ஆதிக்கமும் பெற்றிருந்தது. கவிதைக்குச் செய்யுள் யாப்பே முக்கியமானதாக விருந்தது. அற, நீதிக்கருத்துக்களும், கடவுளரும் அதன் பொருளாயின; சோதிடம், வைத்தியம் முதலிய கலைகளெல்லாம் செய்யுளிலேயே அமைந்திருந்தன; இவற்றிற்குக் கற்றோரின் பாராட்டும் அத்தியாவசியமாகும்.

இந்நிலையில் 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சமூக, அரசியல் மாற்றங்கள் மனங்கொள்ளத்தக்கன; அதனால் கவிதையின் இயல்பு, நோக்கம், பொருள், உருவம் என்பன சிற்சில மாற்றத்துக்குள்ளாயின.

சமுதாயப் பிரச்சினைகளை இலக்கியப் பொருளாக்கும் போக்கைப் பாவலர் துரையப்பாபிள்ளையிடம் காணமுடிகிறது; அதற்கேற்ற எளிமையும், அதற்கேற்ற யாப்பு அமைதிகளும் அவரது ஆக்கங்களில் இடம்பெற்றன. சிந்து, கும்மி, கண்ணி முதலியவற்றை அவர் கையாண்டார்; எனினும் அவை இசைத்தன்மை மிக்க பாக்களே.

ஆரம்பகால "ஈழகேசரி"யில் வெளிவந்த "கவிதை"களிற் பெரும்பான்மையனவும் சமூகச் சீர்திருத்தம், தேசாபிமானம், விடுதலைவேட்கை என்பவற்றைப் பொருளாகக் கொண்டனவே. எனினும், செயற்கைப் பாங்கும் போதனைத் தன்மையும் அவற்றில் விரவியிருந்தன.

மேற்கூறிய பின்னணியில் மறுமலர்ச்சிக் குழுவினர் ஏற்படுத்திய மாற்றம்-அதாவது, அனுபவத்தையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் நவீன கவிதைத் தன்மையைச் செய்யுளில் புகுத்தியமை குறிப்பிடத்தக்கதல்லவா?

மறுமலர்ச்சிக் குழுவினர் இவ்வாறு கவிதையைக் கரம் பிடித்தமை இயல்பானவொன்றேயாகும். அவர்களிற் பலர் கிராமத்திலிருந்து கல்லூரிப் படிப்பிற்காக நகரத்துக்குச் சென்ற இளைஞர்கள். அவர் தம் வாழ்க்கைமுறை மாற்றம் புதிய அனுபவங்களை அளித்தது. புதுச் சிந்தனைகளும், இலட்சிய வெறியும், இலக்கிய ஈடுபாடும், அசாதாரண தன்னம்பிக்கையும் அவர்களிடம் நிறைந்திருந்தன. அத்துடன், "குருகுலக்கல்வி" வழிச் செல்லாமல் கல்லூரிகளுக்குள் நுழைந்தமை, செய்யுள் மரபில் ஊறும் வாய்ப்பை அற்றுப்போகச் செய்தது. இவை யாவும் செய்யுள் மரபிலிருந்து விடுபட்டு நவகவிதையை நாடக் காரணங்களாயமைந்தன.

செய்யுள், "கவிதை"யாயிற்று; அதன் நோக்கம் வேறுபட்டமைந்தது. அவை மட்டுமல்ல. கவிதைப் பொருளும், அதனை நோக்கும் முறையும் மாறுபட்டமைந்தன. இவ்வழி, மூவர் கவிதைகளின் இயல்புகள் குறிப்பிடத்தக்கன.

அமைதியான குடும்ப வாழ்வும், எளிமையான கிராம வாழ்க்கையும், சிறப்பாக "மஹாகவி" யின் ஆரம்பக்காலக் கவிதைப் பொருளாயின. அவரது கவித்துவ ஆற்றலில் அவருக்கிருந்த அசாதாரண நம்பிக்கை கவிஞன் பற்றியும் கவிதை பற்றியும் பாடவும் தூண்டின.

அ.ந.கந்தசாமியின் கவிதைகள் முற்போக்கான கருத்துக்களையும், சிந்தனைகளையும் கொண்டன. வாழ்வின் அடித்தளத்திலுள்ள மக்களதும், தொழிலாளரதும் வாழ்வின் அவலங்கள் அவரிடம் வெளிப்பட்டன.

மறுமலர்ச்சிக் கவிஞருள் "சாரதா" (இ.சரவணமுத்து) குறிப்பிடத்தக்க ஒருவராவர். ஆயினும் அவரது கவிதைகள் இதுவரை நன்கறியப்படவில்லை என்றே கூறுதல் வேண்டும். அவர் தொடாத பொருட்களில்லை. அனைத்தும் 'சுவை புதிது வளம் புதிது' ஆக விளங்கின எனல் மிகையன்று. ஒரு மகிழ்ச்சியான குடித்தனம் பற்றிய 'அந்தரங்கம்', பெண்மை சீறும் 'சூடு கண்ட பூனை', சமுதாய நாற்றங்களை நையாண்டி செய்யும் 'ஆளில்லை' ஆகிய மூன்று கவிதைகளும் அவரை இனங்காணப் போதுமானவையாகும்.

பாரதிக்குப் பின் வளர்ந்த நவீன தமிழ்க் கவிதையின் முக்கிய பண்புகளுள் ஒன்று கவிதையின் பேச்சோசைத் தன்மையாகும். இப்பண்பு இன்று தென்னகத்தை விட ஈழத்திலேயே செழிப்புற வளர்ந்து ஈழத்துக் கவிதையின் சிறப்பியல்புகளுள் ஒன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளிர்கின்றது. இதன் தொடக்க நிலையை மறுமலர்ச்சிக் குழுவினரிடம் காணலாம்.

கைத்தேனா உங்களுக்கு ?
கால்நடையில் கூடக்
கந்தோர்விட் டெப்பொழுதோ
வந்திருக்கக் கூடும்!
பத்தான தேமணி
அப்பாவருவார் என்று
பார்த்திருந்த கண்மணியாள்
போய்த்துயின்று விட்டாள்
.....

என்பது 'மஹாகவி'யின்' கவிதையொன்றின் முதலடிகள். முழுக் கவிதையும் விரிவு கருதித் தரப்படவில்லை. ஆயினும் பேச்சோசையின் அழுத்தம் கவிதைக்கு எவ்வளவு தூரம் சிறப்பளிக்கின்றது என்பதற்கு இம் முழுக் கவிதையும் நல்லெடுத்துக்காட்டாகும்.

இக்கவிதைகளின் பிறிதொரு சிறப்பியல்பாக அமைவது, அவை சரளமான ஒசையொழுங்கையும், மென்மையான.. நளினமான குழைவான சொற்களையும் கொண்டிருந்தமையாம். எ-டு:

கேட்டியோ! அன்றுனைக்
கீழ்மைப் படுத்திய
நாட்டிலே நின்கவி
நாதம் நிறைந்தது;
ஈட்டிவேல் வாளெனத்
தீட்டிநீ விட்டசொற்
பாட்டினால் எம்தளைப்
பாரம் குறைந்தது

நாவற்குழியூர் நடராஜனின் மேற்காட்டிய கவிதையில் தடங்கலின்றிச் சொற்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்ந்து செல்வதைக் கவனிக்கலாம்.

மறுமலர்ச்சிக் குழுவினரிடம் பரிசோதனைத் தாகமும் விதந்துரைக் குமளவிற்கு விளங்கிற்று. இன்று கணிசமானவளவு வளர்ந்துள்ள வசனகவிதை தென்னிந்தியாவில் மணிக்கொடிக் குழுவினரிடம் அரும்பியது. ஈழத்தில் இக் குழுவைச் சார்ந்த வரதர், சோதி, விஜயன் முதலியோரும் இவ் வசனகவிதையை எழுதிப் பார்த்தனர். சோதியின் வசன கவிதையொன்றில் வருவன பின்வரும் சில அடிகள் :

சூரியன் வந்து வேலையைச் செய்யட்டும்
கூட்டுபவளைப் போல
பணக்காரன் ஏழையை வதைக்கட்டும்
அரிவாளைப் போல
உடம்பெடுத்தவன் உயிரோடு போகட்டும்
நண்பர்களைப் போல
எல்லோரும் சென்ற வழியிலே நடப்போமே
எப்படிவந்தாலும் வரட்டுமென்று.

இவை, இன்றைய 'மீரா'வின் வசன கவிதையை வரிக்குவரி நினைவூட்டுகின்றது என்பதிலே தவறில்லை.

ஆங்கிலக் கவிதை மொழிபெயர்ப்பு முயற்சிகளிலும் இக்குழுவைச் சார்ந்தோர் ஈடுபட்டனர். இது முதன் முயற்சியன்று. இவர்களுக்கு முன்னரும் ஷெல்லி, ரெனிசன், பைரன் முதலிய கவிஞர்களின், ஆங்கிலக் கவிதைகளைச் சிலர் மொழி பெயர்த் துள்ளனர். எனினும், சிறந்த மொழிபெயர்ப்புக்கள் என்ற விதத்தில், அ.ந.க., சாரதா முதலியோரின் முயற்சிகளைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

ஒட்டுமொத்தமாகக் கூறின், இன்று ஈழத்துப் புனைகதை இலக்கியம் போன்று கவிதை இலக்கியமும் தமிழ்நாட்டிலிருந்து வேறுபட்ட நவீன இயல்புகளைப் பெற்று வளர்ந்துள்ளது உண்மையே. அவ்வாறாயின் கவிதையைப் பொறுத்தவரையில் அதற்கு வேண்டிய களமமைத்துக் கொடுத்தோருள் முக்கியமானோர் மறுமலர்ச்சிக் குழுவினரேயாவர்.

- பாவலர் துரையப்பாபிள்ளை
நூற்றாண்டுமலர், 1972.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

ஈழத்து இலக்கியச் சஞ்சிகைகளும் நவீன கவிதையின் தோற்றமும்

மறுமதிப்பீடு

ஈழத்தில் நவீன கவிதை தோற்றம் பெற்ற பின்புலத்தில் யாழ்ப்பாணத்தில் (1943இல்) நிறுவப்பட்ட "மறுமலர்ச்சிச் சங்கம்" முக்கிய பங்கு வகிக்கின்றது[1]. இவ்வழி மறுமலர்ச்சிச் சங்கம் வெளியிட்ட "மறுமலர்ச்சி" சஞ்சிகைக்கும் மிக முக்கிய பங்குள்ளது[2]. ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளான மஹாகவி, நாவற்குழியூர் நடராஜன், "சாரதா" முதலானோரின் கவிதைகள் மறுமலர்ச்சிச் சஞ்சிகையிலே இடம் பெற்றுள்ளன. இவர்களது கவிதைகள் ஆரம்ப நிலையில் காதல், இயற்கை, கிராமிய வாழ்க்கை முதலான விடயங்களை அனுபவம் சார்ந்த நிலையில் வெளிப்படுத்துவனவாக விளங்கின; இக் கவிதைகளில் பேச்சோசைப் பண்பும் முகிழ்க்கத் தொடங்கியது. ஆய்வாளர்கள் இவற்றையே ஈழத்தின் ஆரம்பகால நவீன கவிதைப் பண்புகளாக இனங்கண்டு வந்துள்ளனர். அதே வேளையில், இக்காலப் பகுதியில் ஈழத்தின் வேறு பிரதேசங்களிலிருந்தும் "பாரதி" (கொழும்பு), பாரதி (மண்டூர்), எரிமலை (திருகோணமலை) முதலான இலக்கியச் சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. இவை போதியளவு ஆய்வாளரது கவனத்திற்குட்படவில்லை என்றே கூறவேண்டும்[3]. இவற்றில் வெளிவந்துள்ள கவிதைகள் நவீன கவிதைக்குரிய வேறு சில பண்புகளை வெளிப்படுத்தக் கூடியன. எனவே, இப் பின்னணியில், ஈழத்து நவீன கவிதையின் தோற்றமென்பது மறுமதிப்பீட்டிற்குள்ளாக வேண்டியுள்ளது.

மேற்கூறிய அடிப்படையில் முதலில் கவனத்திற்குள்ளாக வேண்டிய இலக்கியச் சஞ்சிகை கொழும்பிலிருந்து (கே.கணேஷ், கே.இராமநாதன் ஆகியோரை இணையாசிரியர்களாகக் கொண்டு) வெளிவந்த "பாரதி" (1946 ஜனவரி - 1948 டிசம்பர்) என்பதாகும். ஈழத்தின் முதல் முற்போக்குச் சஞ்சிகை இதுவே. எனினும் ஈழத்தின் முற்போக்கு அணிசார்ந்த விமர்சகர்கள் முற்போக்குச் சஞ்சிகையான இச்சஞ்சிகையை கவனத்திற்குட்படுத்தத் தவறியுள்ளமை வியப்புக்குரிய விடயமாகிறது. ஆதலின், ஈழத்தின் நவீன கவிதையின் தோற்றத்தில் "பாரதி"க்குரிய இடம் பற்றி அவதானிக்க வேண்டியது[4] அவசியமாகின்றது.

மார்க்சியச் சித்தாந்தச் சார்புடைய - சமூகநோக்குடைய - முற்போக்குச் சார்ந்த கவிதைகள் பிரக்ஞைபூர்வமாக, "பாரதி" சஞ்சிகையிலேயே முதன்முதலாக வெளிவந்தன. இவ்விதத்தில் கவீந்திரன் (அ.ந.கந்தசாமி) எழுதிய மலையகத் தொழிலாளர் பற்றிய கவிதை விதந்துரைக்கப்பட வேண்டியது. "தேயிலைத் தோட்டத்திலே" என்ற தலைப்பிலான அக்கவிதை "காலையிலே சங்கெழுந்து பம்மும்" என்று ஆரம்பித்து, இவ்வாறு முடிகின்றது:

> பானையிலே தண்ணீரில் இட்டிருந்த
> பழையதனை எடுத்தே உண்டு மிஞ்ச
> மானை நிகர் கண்ணாள் தன் மணவாளர்க்கு
> மற்றதனை வைத்துவிட்டு விரைந்து சென்று
> கானகத்து மூங்கிலிலே வேய்ந்த கூடை
> கழுத்தினிலே பின்புறமாய்த் தொங்கவிட்டு
> தானெழுந்து விரைவாள் தன் வேலைக்காக
> தன் கண்ணின் துயரத்தைத் துடைத்துக் கொள்வாள்

"பாரதி" சஞ்சிகையில் வெளிவந்த மேற்கூறிய கவிதை, (i) பிரக்ஞை பூர்வமாக ஈழத்து மக்களது பிரச்சினை முதன்முதலாகப் பேசப்படுதல் (ii) ஈழத்துக் கவிஞரது சமூகப்பார்வை யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு வெளியே முதன்முதலாக வெளிப்படுதல் (iii) மலையகத் தொழிலாளரது பிரச்சினை (தமிழில்) நவீன கவிதையூடாக முதன்முதலாக வெளிப்படுதல் என்ற விதங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இக்கவிதைக் குரியவரான அ.ந.கந்தசாமி - "கவீந்திரன்" - மறுமலர்ச்சிச் சங்கத்துடனும் "மறுமலர்ச்சி"யுடனும் நெருங்கிய தொடர்புடையவராக இருந்தாலும் இக்கவிதை "பாரதி"யில் வெளிவந்துள்ளது என்பதும் மறுமலர்ச்சியில் அன்னார் எதுவும் எழுதவில்லை என்பதும் சிந்தனைக்கும் வியப்பிற்குமுரியதான விடயங்களாகின்றன). கே.கணேஷும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கலாவிநோதன், ராம், வித்யா முதலான) பல புனைப் பெயர்களில் பாரதியில் கவிதை எழுதியிருக்கின்றார்.

"பாரதி" சஞ்சிகையில் எழுதிய கவிஞர்கள் சர்வதேச விவகாரங்களிலே நாட்டம் கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். (கேரளாவிலுள்ள) கய்யூர்க் கிராமத்தில் அநியாயமாகத் தூக்கிலிடப்பட்ட தொழிலாளர்கள் பற்றிய கவிதையொன்றின் பகுதியினை இவ்வழி எடுத்துக் காட்டலாம் :

எப்படி இறந்தனர் பார்!,
எங்களருந் தோழர் நால்வர்
செப்பரிய சேவை செய்தார்
செருக்களத்தில் மாயவில்லை
.....

முற்போக்குச் சார்புடைய மொழிபெயர்ப்புக் கவிதைகளும் முதன்முதலாக "பாரதி"யில் இடம் பெறுகின்றன. வங்கக் கவிஞரான கௌதம சட்டோபாத்யாவின் கவிதைகளின் மொழிபெயர்ப்பு இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கதொன்று. அக்கவிதையின் ஒரு பகுதியை மாதிரிக்காக இங்கு எடுத்தாள்வது பொருத்தமானது :

என் அருமைத் தோழனே,
நான் வாழும் இடமறியாய்
நகரின் தெருக்களிலே
நாலுமரம் சேருமிடம்
நான் உறங்கி வாழ்வதுண்டு
என்வீடு சிதைந்த கூடு
என் உயிரோ ஒய்வின்றி
ஓங்காரம் செய்யத் துடிக்குது
லட்சக் கணக்கான பாட்டாளிகள்
பாடுபடுவோர் இடையில்
நான் அலைந்து திரிவேன்
.....

தொகுத்து நோக்கும் போது, "பாரதி" சஞ்சிகையினூடாக வெளியிடப்பட்ட மேற்கூறியவாறான கவிதைத் தடங்கள், "மறுமலர்ச்சி"ச் சஞ்சிகை வெளிப்படுத்திய கவிதைத் தடங்களிலிருந்து வேறுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்விதத்தில், "பாரதி" சஞ்சிகையூடாக, ஈழத்து நவீன கவிதையின் தோற்றம் பிறிதொரு தடத்தில் சென்றுள்ளமை தெளிவாகப் புலப்படுவதும் கவனத்திற்குரியது.

இக்காலப் பகுதியிலே மற்றொரு இலக்கியச் சஞ்சிகையும் அண்மைக்காலம் வரையும் பரவலாக அறியப்படாத இலக்கியச் சஞ்சிகையுமானதொரு சஞ்சிகை மண்டூரிலிருந்து "பாரதி" என்ற பெயரில் வெளிவந்துள்ளது[5].

இப் "பாரதி"யிலும் சமூக நோக்குடைய கவிதைகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கவி ஜி.எம்.செல்வராஜ் எழுதிய "இதுவா பொங்கல்?" என்பது இவ்விதத்தில் கவனத்திற்குரியதொரு படைப்பாகும். அக் கவிதையின் ஒரு பகுதி, இது :

ஏழைகளைக் கூப்பிட்டு ஏசிப்பேசி
ஏலாத வேலைகளைச் செய்துவிட்டு
நாளைவா கூலிதர வென்று சொல்லி
நாட்டாண்மை காட்டி யெந்நாளும் தங்கள்
பேழையிலே நிரப்பிவிட்ட பணத்தைக் கொண்டு
பெருமையுடன் ஊரறியப் பொங்கலிட்டு
வாழையிலை வெட்டியதில் புக்கை கட்டி
வறியவர்க்கு வழங்குவதும் பொங்கலாமோ?

ஆக, நவீன கவிதையின் முக்கியமான பண்புகளுளொன்றான "அதிகார எதிர்ப்பு" என்பது "பாரதி"யின் கவிதைகளில் முகிழ்க்கத் தொடங்குவது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி, ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றத்தில் மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்தும் கவிஞர் குழாமொன்று உருவாகி பொது ஓட்டத்துடன் இணைந்து கொள்வதையும் அவதானிக்க முடிகின்றது.

மேலும், இப் "பாரதி"யானது, கவிதை தொடர்பான பரிசோதனை முயற்சிகளுக்கும் இடமளித்துள்ளது. இவ்வழி, "பாரதி"யில் இடம்பெற்ற "வசன கவிதை" முயற்சி குறிப்பிடத்தக்கது. "வசனக் கவிதை" என்ற மருடத்திலே "கற்பனைக் காதலிக்குக் கலைக்கடிதம்" என்ற பெயரில் எஸ்.கே.ராஜூ எழுதிய கவிதையொன்று பின்வருமாறு ஆரம்பிக்கின்றது:

தளிர்க்கரங் கொண்டு தங்கத் தாளில்
களிப்புடன் எழுதிய கடிதம் கிடைத்தது
விழிப்புடன் இருந்து மீண்டும் மீண்டும்
சலிப்படையாது படித்துப் பார்த்தேன்
படித்துப் பயன் என் பதில் எழுத வேண்டாமோ
கண்ணே மணியே கனியே
என்றெழுத எனக்குத் தெரியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப் பகுதியில், அ.செ.முருகானந்தத்தினை ஆசிரியராகக் கொண்டு திருகோணமலைப் பிரதேசத்திலிருந்து "எரிமலை" என்றொரு சஞ்சிகையும் வெளிவந்துள்ளது. ஆயினும், அது பற்றிய மேலோட்டமான கட்டுரைகூட எதுவும் வெளிவந்திருப் பதாகத் தெரியவில்லை. திருகோணமலைப் பிரதேச எழுத்தாளர் சிலர் "எரிமலை" ஊடாக வெளிப்பட்டிருப்பரென்று ஊகிக்கலாமாயினும், இதழ்கள் பார்வைக்குக் கிட்டும் போதுதான் அத்தகைய ஊகங்கள் உறுதிப்பட வாய்ப்புள்ளது!

ஆயினும், "எரிமலை" தவிர, மேற்குறிப்பிட்ட "பாரதி" சஞ்சிகைகளே ஈழத்து நவீன கவிதையின் தோற்றம் தொடர்பாக இதுவரை கூறப்பட்டு வந்துள்ள கருத்துக்களை மறுமதிப்பீடு செய்யப் போதிய வாய்ப்பளித்துள்ளன என்பது இதுவரை கூறியவற்றிலிருந்து புலப்படுகின்றது எனலாம்.

இந்நிலையில் நவீன கவிதை தோற்றம் பெற்ற காலப்பகுதியை "மறுமலர்ச்சிக் காலம்" என்று கூறப்பட்டு வருவது பற்றியும் சிந்திக்க வேண்டி உள்ளது. அதாவது, "மறுமலர்ச்சி"ச் சஞ்சிகையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, அவ்வாறு கூறப்பட்டிருக்குமாயின், இப்போது, அதனை மேலும் விரிவுபடுத்தி "மறுமலர்ச்சி"யுடன் "பாரதி" (கொழும்பு) பாரதி (மண்டூர்) முதலானவற்றையும் சேர்த்துக் கொள்வதே பொருத்தமானது எனலாம்.

அதுமட்டுமன்றி, இத்தொடர்பிலே பிறிதொரு விடயத்தையும் அழுத்திக் கூறவேண்டியுள்ளது. அதாவது, ஈழத்து நவீன கவிதை உருவாக்கத்திலே மேற்குறிப்பிட்ட இலக்கியச் சஞ்சிகைகளுக்கு மட்டுமன்றி, "ஈழகேசரி" பத்திரிகைக்கும் முக்கிய இடமுண்டு.

மறுமலர்ச்சிச் சஞ்சிகையோடு தொடர்புபட்டுள்ள படைப்பாளி களும் அவ்விதத்தில் மறுமலர்ச்சிச் சங்கமும் உருவானதிலே "ஈழகேசரி"யின் "கல்வி அனுபந்த"ப் பகுதியும் "இளைஞர் சங்க"மும் மறைமுகமாகச் செல்வாக்குச் செலுத்தியிருந்தன[5].

தவிர, முற்குறிப்பிட்ட இலக்கியச் சஞ்சிகைகளிலே எழுதிய பலரும் "ஈழகேசரி"யின் சமகால இதழ்களிலும் எழுதி வந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, கவீந்திரனின் (அ.ந.கந்தசாமி) சிறந்த கவிதைகளுள் சில, "ஈழகேசரி"யில் வெளிவந்திருப்பதைக் குறிப்பிடலாம். மேலும், பரிசோதனை முயற்சி என்ற விதத்தில் "ஈழகேசரி"யிலும் வசன கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இவ்விதத்தில் "வரதர்", "ஜோதி" முதலானோரின் ஆக்கங்கள் முக்கியமானவை. இவ்வாறான முக்கியத்துவத்தை அறிவதற்காக, "ஜோதி" எழுதிய வசன கவிதையொன்றின் ஒரு பகுதியை இங்கு எடுத்தாள்வது பொருத்தமானது, அது பின்வருமாறு:

சூரியன் வந்த வேலையைச் செய்யட்டும்
கூட்டு பவளைப் போல
பணக்காரன் ஏழையை வதைக்கட்டும்
அரிவாளைப் போல...

எழுபதுகளளவில், தமிழ்நாட்டுப் புதுக்கவிஞரான மீராவின் காதற் காவியமான "கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்" தொகுப்பிலே மேற்கூறியவாறு உவமையூடாக முற்போக்குச் சிந்தனையை வெளிப் படுத்துகின்ற இதுபோன்ற பகுதிகள் சில வெளிவந்துள்ளமையையும் இவ்வேளை நினைவு கூர்வது அவசியமானது.

தமிழ்நாட்டு முற்போக்கு விமர்சகர்[6] சிலர் "மீரா"வின் தொகுப்பினை இத்தகைய பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு பாராட்டியுள்ளதோடு, அன்னாரை முற்போக்குக் கவிஞராக இனங்காண்பதற்கும் அடிப்படையாக இவ்வாறுள்ள "மீரா"வின் கவிதைப் பகுதிகளே காரணமாக அமைந்துள்ளமை சுவாரஸ்யமான விடயமாகும். அது எவ்வாறாயினும் இத்தியாதி உவமைசார் வெளிப்பாட்டு முறை, நாற்பதுகளளவிலேயே (1940) ஈழத்துக் கவிஞர்களிடம் வெளிப்பட்டுள்ளது என்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயமாகின்றது !

மேற்கூறியவற்றை நோக்கும் போது, ஈழத்திலே மறுமலர்ச்சிக் காலம் என்ற ஒன்றை இனங்காண்கின்ற போது, முற்குறிப்பிட்ட இலக்கியச் சஞ்சிகைகளை மனங்கொள்வது மாத்திரமன்றி, "ஈழகேசரி" பத்திரிகையையும் கவனத்திற் கொள்ள வேண்டுமென்பது தெளி-வாகின்றது!

அடிக்குறிப்புக்கள்

1. சி. மௌனகுரு, எம்.ஏ. நுஃமான், மௌ.சித்திரலேகா (இணை ஆசிரியர்கள்), இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம், வாசகர் வட்டம், கல்முனை, 1976, பக் 19 - 20.
2. கார்த்திகேசு சிவத்தம்பி, ஈழத்தில் தமிழ் இலக்கியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, செப். 1987, பக். 187.
3. எடுத்துக்காட்டாக, மேற்குறிப்பிட்ட இரு நூல்களிலும் "பாரதி" சஞ்சிகை பற்றிக் குறிப்பிடப்படவில்லை.
4. இதுபற்றிய விரிவான விளக்கத்திற்கு, பார்க்க : செ.யோகராசா "ஈழத்து முற்போக்கு இலக்கியச் சஞ்சிகை "பாரதி", புதுமை இலக்கியம், இலக்கியப் பேரரங்கு, 2002, பக். 26 - 31.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இதுபற்றிய விரிவான விளக்கத்திற்கு, பார்க்க : செ.யோகராசா, "நெஞ்சில் நிலைத்துள்ள சில இதழ்கள்", மல்லிகை ஆண்டு மலர் தொகுப்பாசிரியர் டொமினிக் ஜீவா, மல்லிகைப் பந்தல், கொழும்பு, ஜூலை 2006, பக். 26 - 31.

6. மே.கு.நூ., பக். 28.

7. இது பற்றிய விரிவான விளக்கத்திற்கு, பார்க்க : செ.யோகராசா, "ஈழத்தில் வசனக்கவிதையின் ஆரம்ப காலம்", நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி நினைவு மலர், கொழும்பு, 1974, பக். 75.

8. நா.வானமாமலை, நூல் விமர்சனம் மீராவின் "கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்", ஆராய்ச்சி, இதழ் 6, 1972, பாளையங்கோட்டை.

உசாத்துணை நூல்கள்

1. "பாரதி" கொழும்பு இதழ்கள் 1-4, 1946 ஜனவரி - 1948 நவம்பர்.

2. "பாரதி" (மண்டூர்) : இதழ்கள் 1, 3, 7, 8 - 1948.

3. "ஈழகேசரி", யாழ்ப்பாணம் : 1940 - 1950 வரையான இதழ்கள்.

- நெய்தல் 2006.

4

ஈழத்தில் நவீன தமிழ்க் கவிதையின் தோற்றம்

மறுமதிப்பீடு

ஈழத்தில் நவீன தமிழ்க் கவிதையின் தோற்றத்தினை நாற்பதுகளளவில் முகிழ்த்த "மறுமலர்ச்சிக் குழு"வுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதே அண்மைக்காலம் வரையும் ஆய்வுலகின் வழக்கமாக இருந்து வந்துள்ளது. ஆயினும், இவ்விடயம் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்போது, ஈழத்தில் முப்பதுகளளவிலேயே நவீன தமிழ்க் கவிதை முகிழ்க்கத் தொடங்கியுள்ளமை தெளிவாகிறது. அஃது யாழ்ப்பாணம், மலைநாடு ஆகிய இரு பிரதேசங்களில் நிகழ்கின்றது.

முப்பதுகள் நாமனைவரும் அறிந்தது போன்று ஈழத்தின் அரசியலில் மட்டுமன்றி கலை, இலக்கிய, பத்திரிகை வளர்ச்சியிலும் முக்கியமானதொரு காலகட்டமாகும். பத்திரிகை என்று கவனிக்கும் போது யாழ்ப்பாணத்திலிருந்து ஈழகேசரி (1930), கொழும்பிலிருந்து தினகரன் (1932), வீரகேசரி (1930) மலைநாட்டிலிருந்து தேசபக்தன் (1929) முதலியன வெளிவரத் தொடங்கியமை கவனிப்புக்குரியதொரு விடயமாகும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையிலே ஈழகேசரி பத்திரிகையின் வரவு நவீன இலக்கிய வளர்ச்சியின் ஆரம்பத்தினைக் குறித்துநிற்கின்றது எனலாம். குறிப்பாக, ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் "ஈழகேசரி" எழுத்தாளர் பெற்றுள்ள முதன்மை இடம் நாமறிந்ததே. இவ்வாறே ஈழகேசரிக் கவிஞர்களும் எமது கவனத்துக்குரிய வராகின்றனர்.

ஈழகேசரியில் முப்பதுகளளவில் கவிதை எழுதியோர் பட்டியல் அல்வையூர் மு.செல்லையா, மனுப்புலியார், மு.நல்லதம்பி, அகிலேஸ்வர சர்மா, "உண்மைவிளம்பி", "சத்தியநாதன்" (சற்றுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பட) யாழ்ப்பாணன், வேந்தனார், "சாரதா" என்றவாறு நீண்டு செல்கிறது. இவர்களது கவிதைகள் இரு விதங்களில் முக்கியம் பெறுகின்றன.

மேற்கூறிய இரு விதங்களிலொன்று, ஈழத்தில் அரசியல் கவிதைகளின் முகிழ்ப்பு இவர்களுடன் ஆரம்பித்தமை. இது பற்றி சிறிது விரிவாகப் பேச வேண்டும். ஈழத்தில் முப்பதுகளளவில் டொனமூர் குழுவினரின் சிபார்சு காரணமாகச் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை, ஈழச் சமூகத்தில் அரசியல் விழிப்புணர்ச்சி பரவலாக ஏற்பட வழிவகுத்தது. ஆயினும், ஈழத் தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகத்தைப் பொறுத்தவரையில், இவ்வேளையில் இந்திய, தமிழக அரசியலில் காந்தி தலைமையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் வழிவந்த சிந்தனைகளே கூடுதலான பாதிப்பினை ஏற்படுத்தின. காந்தீயச் சிந்தனைகள் இங்கு ஈழகேசரியூடாகவும், யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் ஊடாகவும் பரவின. இந்திய, தமிழக அரசியல் பிரமுகர்கள் அடிக்கடி இங்கு விஜயம் செய்தனர். இத்தகு சூழலில், "ஈழகேசரி" கவிஞரது தேசிய உணர்வு "இரட்டைத் தேசிய" உணர்வாக விளங்கியது. இவர்கள் ஈழத்து விடுதலையையும், இந்திய விடுதலையையும் ஒன்றாகவே அல்லது இரு கண்களாகவே கருதினர். இந்திய தேசியத் தலைவர்களைப் போற்றிய அதேவேளையில், ஈழத் தேசியத் தலைவர்களையும் போற்றினர். கவிஞர் யாழ்ப்பாணன் கவிதைகள் இதற்குச் சிறந்த சான்றுகளாகின்றன.

ஈழகேசரி காலக் கவிதைகளின் மற்றொரு முக்கியத்துவம், ஈழகேசரி கவிஞர்கள் சமூகச் சீர்திருத்த நோக்குடைய கவிதைகளை இயற்றியுள்ளமையாகும். இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலே பாவலர் துரையப்பாபிள்ளையும் அத்தகைய பாடல்கள் சிலவற்றைப் பாடியுள்ளமை நாமறிந்ததுதான் ஆயினும், அவரது காலத்தில் சமூகச் சீர்திருத்த உணர்வு பரவலாகவோ பிரக்ஞை பூர்வமாகவோ ஏற்படவில்லை என்பதனை நாம் கவனிக்க வேண்டும். இப்போது நிலைமை வேறு. காந்தீயத் தாக்கம், ஈழகேசரி பத்திரிகையின் செல்வாக்கு, யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் செயற்பாடுகள் என்பன காரணமாக சமூகச் சீர்திருத்த உணர்வு பிரக்ஞை பூர்வமாக இப்போது ஏற்படலாயிற்று. இத்தகைய சமூகச் சீர்திருத்த விடயங்களுள் சாதிப் பிரச்சினை முக்கியமானதொரு இடத்தைப் பிடித்திருந்தது. இக்காலகட்டத்தின் இத்தகைய கவிதைப் போக்கினை அறிந்து கொள்வதற்காக, "சத்தியநாதன்" என்பவர் எழுதிய கவிதையொன்றின் ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது:

மானுட ரென்று வாழ்வீர் - நீங்கள்
மந்தைக ளானீரோ?
ஞானமு னிவன் சொல்லை - நீங்கள்
நயம்பட வுணரீ ரோ?

தீண்டப்ப டாதாரென்று - உலகில்
திசைமுகன் செய்ததுண் டோ?
வேண்டப்ப டுவதீ தோ? ஐயோ
வீண்கதை பேசுகி றீர்

உரிமை உரிமை யென்பீர் - உங்கள்
எளியச கோதரர் தங்கள்
உரிமை உரிமை யென்றால் - வேத
ஏடுவிரிப் போமென் பீர்
.....

(ஈழகேசரி, 21.03.1934)

முப்பதுகளில் மேற்கூறியவாறான நவீன கவிதையின் தோற்றம் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி மலைநாட்டிலும் இடம் பெற்றுள்ளது. பெருந் தோட்டங்களிலே வேலை செய்யும் பொருட்டு மலைநாட்டிலே வந்து குடியேறிய தென்னிந்தியத் தொழிலாளர் மத்தியில் தொழிற்சங்கங்கள் உருவாகின. அவர்களது உரிமைகளுக்காக, போராடின. அத்தகைய தொழிற்சங்கவாதிகளுள் கோ.நடேசய்யர் குறிப்பிடத்தக்கவர். அவர் தொழிற்சங்கங்கள் நிறுவியதோடு (எ-டு: அகில இலங்கை தோட்டத்தொழிலாளர் சம்மேளனம்) பத்திரிகைகள் சிலவற்றையும் (எ-டு: தேசபக்தன்) நடத்தி வந்துள்ளார். தோட்டங்கள் தோறும் தொழிலாளர் முன்னிலையில் பிரச்சாரக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. இத்தகைய செயற்பாடுகளில் அவருடன் அவரது துணைவியாரான மீனாட்சியம்மாள் நடேசய்யரும் இணைந்து செயற்பட்டார். இவர்களிருவரும் தொழிலாளர் பற்றிய பாடல்கள் இயற்றியுள்ளனராயினும், மீனாட்சியம்மாள் நடேசய்யரே இவர்களுள் முதன்மை இடம் பெறக்கூடியவர். தொழிலாளரது வாழ்க்கைப் பிரச்சினைகள், போராட்டங்கள், சுரண்டல் என்பன பற்றிப் பேசும் இவர்களது பாடல்கள் பின்வரும் இரு விதங்களில் குறிப்பிடத்தக்கன :

அ) எதிர்ப்புக் குரல்களாக உள்ளன. அதாவது, அன்றைய அரசினரின் செயற்பாடுகளை எதிர்ப்பன.

ஆ) பொது மக்கள் மத்தியிலே செல்வாக்குற்று விளங்கிய நாட்டார் பாடல் வடிவங்களிலும் ஜனரஞ்சகம் பெற்று விளங்கிய பாடல் மெட்டுகளிலும் அவை வெளிப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது உள்ளடக்கத்திற்கேற்ப உருவத்தைப் பெற்றிருந்தன. இன்னொரு விதமாகக் கூறின், பொது மக்களை நோக்கிய அவர்களுக்கேற்றவாறான - பாடல்களாக அவை அமைந்துள்ளன. (இது ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.) எடுத்துக்காட்டாக, மீனாட்சியம்மாள் நடேசய்யர் எழுதிய பாடலொன்றின் பகுதி, இதுவாகும்:

சிங்கள மந்திரிகள் கூற்று - மிக
சீர்கெட்ட தென்று சாற்று
சங்கடமே நேருமென தோற்று - திந்திய
சமூகம் நெருப்பாய் வரும் காற்று

நன்றி கெட்டுப் பேசும் மந்திரிமாரே - உங்கள்
நியாய மென்ன சொல்லுவீரே
இன்றி யமையாத வொரு போரே - செய்ய
இடமுண் டாக்குகிறீர் நீரே

ஆக, இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நினைவு கூரும்போது, ஈழத்திலே நவீன தமிழ்க் கவிதையின் தோற்றத்திற்கு நாற்பதுகளுக்கு முன்பே - முப்பதுகளளவிலேயே கால்கோளிடப்படுகின்றது என்பதும், அஃது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மட்டுமன்றி மலைநாட்டிலும் இடம் பெறுகின்றது என்பதும் தெளிவாகின்றது எனலாம்.

- 'தடம்', 2000.

5

ஈழத்தில் புதுக்கவிதையின் தோற்றம்

ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முனைப்பான சில மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள் நாற்பதுகளில் தோன்றிய மறுமலர்ச்சிக் குழுவினர் என்பது இப்போது ஓரளவு உணரப்பட்டு வருகிறது. பழைய செய்யுள் மரபில் நவீன கவிதைக்குரிய இயல்புகளை - உருவம், உள்ளடக்கம், நடை ஆகியவற்றில் - புகுத்திச் சாதனை புரிந்த மறுமலர்ச்சிக் குழுவினருள் சிலரே ஈழத்தின் புதுக்கவிதை ஆரம்பகர்த்தாக்களுமாவர். அவர்களுள் இவ்விடத்தில் வரதர் (தி.ச.வரதராசன்), சோதி (சோ.தியாகராசா), விஜயன், 'தங்கம்' முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்; வாழ்க்கைமுறை, கல்வி முறை முதலியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களும் சஞ்சிகைகளின் தோற்றமும், தமிழகச் சஞ்சிகைகளின் வரவும் நவீன சிந்தனைகளின் தாக்கமும், புதுமை வேட்கையும், இளமைத் துடிப்பும் ஒன்றுபட்டு இம்மறுமலர்ச்சிக் குழுவிடம் நவீன இலக்கியத்தில் ஈடுபாட்டினை ஏற்படுத்தின. இத்தகைய ஈடுபாட்டின் பரிசோதனைத் தாகத்தின் வெளிப்பாடே புதுக்கவிதையை எழுதிப் பார்க்கவும் தூண்டிற்றெனலாம்.

இவர்களது புதுக்கவிதை முயற்சிக்குச் சமகாலத் தமிழ்நாட்டுக் கவிதைப் போக்கும் பெரிதும் உந்துசக்தியளித்தது. ஏலவே, 'மணிக்கொடி' புதுக்கவிதை முயற்சியைத் தொடக்கி வைத்திருந்தது. (1936இல் மணிக்கொடியில் முதற் புதுக்கவிதையை எழுதிய) ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா.முதலியோர் மூலம் மணிக்கொடி 'பெற்ற' புதுக்கவிதைக் குழந்தை, 'சூறாவளி' (1939)யில் வளர்ந்தது. புதுக்கவிதை பற்றிய (க.நா.சு.வின்) விவாதங்களும் சூறாவளியில் வெளிவந்தன. ஆயினும் 1942 அளவில் வெளிவந்த 'கலாமோகினி'யிலேயே புதுக்கவிதை வெள்ளம்போற் பெருக்கெடுத்து ஓடிற்று, 1943இல் 'கிராம ஊழிய'னும் வெளிவரத் தொடங்கிற்று. கிராம ஊழியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவரத் தொடங்கிய காலத்திலேயே ஈழத்திலும் யாழ்ப்பாணத்தில் மறுமலர்ச்சிச் சங்கம் (1943) தோன்றியது. மறுமலர்ச்சிச் சங்கத்தினர் வெளியிட்ட 'மறுமலர்ச்சி'யிலும்; 'பாரதி'களிலும், 'ஈழகேசரி'யிலும் எழுதிவந்த படைப்பாளிகட்கு கலாமோகினி, கிராம ஊழியன் ஆகியவற்றோடு நெருங்கிய உறவு ஏற்பட்டது; ஈழத்தவர் படைப்புக்களும் அவற்றில் வெளிவந்தன. 'கலாமோகினி'யில் வெளிவந்த புதுக்கவிதை பற்றிய விவாதங்களிலும் ஈழத்தவர் பங்குபற்றினர்.

ஆரம்பகாலப் புதுக்கவிதைகள் பெரும்பாலும் வாழ்க்கை பற்றிய பல்வேறு சிந்தனைகளையும், இயற்கை பற்றிய அனுபவங்களையுமே உள்ளடக்கமாகக் கொண்டிருந்தன. 13.06.43இல் வெளிவந்த ஈழகேசரியில் 'ஓர் இரவினிலே' என்ற தலைப்பில் சற்று நீண்ட 'வசனகவிதை' யொன்றை எழுதியிருந்தார் வரதர்; ஈழத்தில் வெளிவந்த முதற் 'புதுக்கவிதை' இதுவாகும்.

இருள்! இருள்! இருள்!
இரவிலே நடு ஜாமத்திலே
என் கால்கள் தொடும் பூமிதொடங்கி
கண்பார்வைக் கெட்டாத மேக மண்டலம் வரை
இருள்! இருள்!
பார்த்தேன்,
பேச்சு மூச்சற்று
பிணம் போல கிடந்தது பூமி

என்று தொடர்ந்து செல்லும் அந் நீண்ட கவிதை.

இயற்கையின் கூத்தை வர்ணித்துச் செல்லும் இக்கவிதை வெளிவந்த காலப் பகுதியிலே ந.பிச்சமூர்த்தியும், 'மழைக்கூத்து' என்றொரு கவிதையினை கலாமோகினியில் பின்வருமாறு எழுதியிருந்தார் :

பார்த்தீரோ அதிசயம்
கேட்டீரோ அதிசயம்
நேற்று நள்ளிரவில்
நடைபெற்ற நடிப்பினை
யானை இடிகள்
அதிர்ந்து நடந்திட
எட்டுத்திசையும் இடிந்து விழுந்திட
பார்த்தீரோ அதிசயம்

வரதரின் கவிதை இயற்கையின் கூத்தினை அச்சங்கலந்த அனுபவ உணர்ச்சியுடன் வெளிப்படுத்த, 'ந.பி.'யின் கவிதை வியப்புணர்ச்சியினை வெளிப்படுத்துகிறது. 'ந.பி.'யின் மழைக்கூத்து வரதரின் கவிதைக்குத் தூண்டுதல் அளித்திருக்கக் கூடுமாயினும் இவ்விரு கவிதைகளும் தத்தம் மளவில் வேறுபட்ட உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளே.

'சோதி' எழுதிய புதுக்கவிதைகளில் ஒன்று 'வாழ்வுத்திரையில்' என்பது. அது இவ்வாறு தொடங்கும்:

முகை அரும்பி மலர்ந்து கீழே விழுகிறது நாம் அறிகின்றோமா?
காய்கனிந்து கீழே உதிர்கிறது; பார்க்கின்றோமா?
இளமை முற்றி, கனிந்து முழுமையாக வாடுகிறது; கவனிக்கின்றோமா?

'பாரதியில்' (நவ.1947) 'க' என்பவர், 'எதுவயோதிபம்' என்ற தலைப்பில் எழுதிய கவிதையொன்று வெளிவந்திருந்தது:

உடலின் அழகு குறைவதா?
கண்களின் ஒளி மங்கலா?
வனப்பின் மெருகு தேய்வா?
வடிவின் மலர்ச்சியும் சக்தியும்
தேய்ந்து மாய்ந்து போவதா?

என்று தொடங்குகிறது அக்கவிதை. 'சோதி'யியும் 'க'வும் வாழ்க்கை நிலையாமை பற்றிய ஒத்த சிந்தனையுடன் இருக்கும்போது, வாழ்க்கை பற்றிய நம்பிக்கைக் குரலெழுப்பினர் 'பாரதி'யில் எழுதிய 'விஜயன்', தங்கம், ராம் முதலியோர்.

நீலக்குமிழ் விடும் ஆழமான நதிகள்
நவமான செல்வமணி திரளும் கனிகள்
இவற்றின் மேல் புதுயுகம் பூத்தது
அதன் சிகரம் உயர்ந்துயர்ந்து
உழைப்பும் வியர்வையும் இனிது
என்று முழக்கம் செய்கின்றது
சிரஞ்சீவிக் குரல் கொண்டு

என்று 'ராம்' 'சிரஞ்சீவிக் குரல்கொண்டு' என்ற தலைப்பில் எழுதினார். உலகத்தை இன்பச் சுரங்கமாகக் கண்டு கவிதை படைத்தார் 'தங்கம்'.

வெட்ட வெளியாகத் தெரிந்த இடம் இன்று
விண்ணையெட்டும் சொர்ண பூமியாகத் தெரிகிறது
அந்தகாரத்தின் குகையிலே அதிசயதீபம்
அதன் ஒளியிலே அகிலமே இன்பச்சுரங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தொடரும் அக்கவிதை. இவ்வாறே கு.ப.ரா.வின் கவிதைகளும் வாழ்க்கை பற்றியும் வாழ்க்கை இன்பங்கள் பற்றியும் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக,

வாழ்க்கை ஒரு வெற்றி ஒரு துடிப்பு
ஒரு காதற்பா ஒரு இசை

என்று தொடங்கும் கவிதையை இங்கே குறிப்பிடலாம்.

இவ்வாறு ஈழத்தின் ஆரம்பகாலப் புதுக்கவிதையாளர் பெரும்பாலும் 'இயற்கை'யையும் 'வாழ்க்கை'யையும் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. தமிழகப் புதுக்கவிதையாளராகிய ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா. முதலியோரும் ஆரம்பத்தில் இவற்றைப் பொருளாகக் கொண்டு எழுதியிருந்தமை ஈழத்துப் புதுக்கவிதையாளரையும் பாதித்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

'பாரதி'யில் கவிதை எழுதியோருள் ஒருசாரார் சமுதாய நோக்குடைய புதுக்கவிதைகள் சிலவற்றை எழுதியிருந்தமையை அவதானிக்கமுடிகிறது. அ.ந.கந்தசாமி மரபுவழிக் கவிதையில் தொழிலாளர் பற்றியும், போராட்டங்கள் பற்றியும் எழுதியிருந்தமை போன்று 'வித்யா' முதலியோர் புதுக்கவிதை வடிவில் அவற்றை வெளிப்படுத்தினர். 'வேலை நிறுத்தம்' என்ற தலைப்பில் வித்யா எழுதிய,

ஜில் எனக் குளிர்ந்த ஆழமிகுந்த ஆறு
அதன் கரையில் அசையாத சமாதிபோல
தன்னந்தனியே நிற்கும் தொழிற்சாலைக்
கட்டிடம் உதவாத சிமிந்திக்கூடு
எத்தனை ஜன்னல்கள் அர்த்தமற்ற வீண்வெளிகள்
ஒளிகெட்ட ஓணான்கண் போலத் திருதிரு
என்று விழிக்கின்றன. புகைமண்டி மண்டி
வேகமாகக் கனிந்த இருள் மூட்டம்
நர்த்தனம் செய்யும் புகைக்கூண்டு
இன்று மத்தியானச் சங்கு ஊதவில்லை
அப்பா வேலைக்குப் போகவில்லை வேலைநிறுத்தமாம்.

என்று நீண்டு செல்லும் கவிதை இவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஆயினும், ஈழத்தில் இவ்வாறு பிறந்து வளர்ந்த புதுக்கவிதைக் குழந்தை சில ஆண்டுகளின் பின்பு சோர்ந்துபோய் ஆழ்துயில் கொள்ளத் தொடங்கிற்று. இதற்குச் சில காரணங்களுண்டு.

ஈழத்தின் ஆரம்பகாலப் புதுக்கவிதைப் படைப்பாளிகட்கு 'புதுக்கவிதை' அல்லது வசன கவிதை எழுத வேண்டும் என்ற ஆர்வம் பிரக்ஞை பூர்வமாகத் தோன்றிய ஒன்றல்ல; புது முயற்சி என்ற விதத்தில் 'மேலெழுந்த வாரியாக'த் தோன்றிய ஆர்வத்தின் வெளிப்பாடு என்று கூறுதலே பொருந்தும்.

இன்னொரு விதமாகவும் இதனை விளக்கலாம். "மனதிற்கு வினோதமான ஒரு இயல்பு உண்டு. எந்த நிலையில் அது இயங்கி வருகிறதோ அதற்கு நேர் எதிரிடையான முறையில் இயங்க வேண்டுமென்ற நுண்அவா மனதில் எழுவதுண்டு. அந்த முறையில் செயல்படுவதும் உண்டு. இந்த மாதிரி எதிரிடையான தூண்டுதல் என்னுள் ஏற்பட்டதும், அப்பொழுதே மரபான முறையிலும் கவிதையை அமைத்துப் பார்க்கலாமே என்று தோன்றிற்று; அதன் விளைவாக யாப்புக்கிணங்க கவிதைகளும் புனைந்தேன்" என்று ந.பிச்சமூர்த்தி தான் மரபு வழிக்கவிதை எழுதியமைக்குக் கூறும் ஒரு காரணமிருக்கிறதே அதனைச் சற்று மாற்றி, அதாவது "மரபுரீதிக்கு மாறான முறையிலும் கவிதையை அமைத்துப் பார்க்கலாமே" என்ற அவாவினால் உந்தப்பட்டு, ஈழத்துக் கவிஞர் சிலர் புதுக்கவிதையை எழுதிப்பார்த்தனர் என்று கூறலாம்.

இந்நிலையில், வெளிவந்துகொண்டிருந்த இலக்கியச் சஞ்சிகைகளும் தொடர்ந்து வெளிவராமல் தற்கொலை செய்து கொள்கின்றன. அது மட்டுமன்றித் தமிழகப் புதுக்கவிதையாளர்களிடம் புதுக்கவிதை எழுதுவதில் ஒருவித உற்சாகமற்ற போக்கு சில வருடங்களாகத் தொடர்ந்து நிலவிற்று. 'சரஸ்வதி' முதலிய சஞ்சிகைகள் புதுக்கவிதை முயற்சிகளில் ஆர்வம் காட்டவில்லை. புதுக்கவிதை முன்னோடிகளில் ஒருவரான ந.பிச்சமூர்த்தி கூட ஏறத்தாழ பதினாறு வருடங்களாக (1946-1961) இலக்கிய முயற்சிகள் எதிலுமே ஈடுபடவில்லை. ஆரம்பகாலங்களில் புதுக்கவிதை முயற்சிகளுக்கு அவ்வளவு தூரம் வரவேற்பிருக்கவுமில்லை. "சிறுகதையை ரசிப்பதற்கு எப்படிச் சிலகாலம் சென்றதோ, அதேபோல இப்புதுக்கவிதையையும் ரசிக்க சில காலம் போக வேண்டி இருக்கலாம்" என்று நண்பரொருவருக்கு 1945 அளவில் எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டிருந்தார் ந.பிச்சமூர்த்தி. தமிழகத்திலே இவ்வாறான நிலை காணப்பட்டபோது ஈழத்திலும் புதுக்கவிதை முயற்சிகள் அருகியமை வியப்புக்குரியதன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும் இவ்வாரம்பகால ஈழத்துப் புதுக்கவிதை முயற்சிகளில் அவதானிக்கத்தக்க சில பண்புகளுண்டு. படிமம், குறியீடு, சொற்சிக்கனம் முதலிய தனித்துவ இயல்புகள் சிறப்பாக இடம்பெறும் 'புதுக்கவிதை'யின் பரிணாம வளர்ச்சி, மினிக்கவிதை என்ற நிலையை இன்று எய்தியுள்ளது. அது தவிர்க்க முடியாததே. ஆயின், இத்தகைய புதுக்கவிதையின் தொடக்க நிலை மரபு வழிக்கவிதைகளிலிருந்து முற்றாக விடுபடாததும், வசன நடைக்குரிய சில தன்மைகளைக் கொண்டதுமான 'வசன கவிதை'ப்போக்காகும். 'இரட்டையர்' மொழியில் கூறுவதானால் "பிஞ்சுமாகாது பழமுமாகாது செங்காய் என்று சொல்வார்களே அந்த நிலைதான்". 'எழுத்துச் சஞ்சிகை தோன்றிய பின்பே புதுக்கவிதை, வசனகவிதைப் போக்கிலிருந்து 'புதுக்கவிதை' என்ற உரிய நிலைக்கு மாறிற்று. அதுவரையும் தமிழகத்திலே புதுக்கவிதை 'வசன கவிதை'யாகவே பெரும்பாலும் விளங்கிற்று. ஈழத்திலும் ஆரம்ப காலத்தில் இப்போக்கே காணப்பட்டது எனலாம். 'பிணம்போல் கிடந்தது பூமி', 'மின்னல் - ஆகாயத் தேவன் பூமிக்கனுப்பிய தங்கக்கொடி', 'தொழிற்சாலைக் கட்டிடம் உதவாத சிமிந்துக் கூடு', நிகழ்காலம் என்னும் 'சுடுசிறை' முதலிய செம்மையுறாத படிமம், குறியீடு முதலியனவே ஈழத்துப் 'புதுக்கவிதை'களில் இடம்பெற்றுள்ளன.

இன்று மீரா, நா.காமராஜன், மேத்தா முதலிய புதுக்கவிதை-யாளரிடம் சிறப்பாகக் காணப்படும் அடுக்கடுக்கான, புதிய, புதுமையான உவமைத் தொடர்கள் முதலியன அன்றைய ஈழத்துப் புதுக்கவிதைகளில் சிலவற்றில் அரும்பியிருந்தன என்று கூறலாம். உதாரணமாக, 'சோதி'யின் புதுக்கவிதையொன்றில் இடம்பெறும்,

> சூரியன் வந்த வேலையைச் செய்யட்டும் கூட்டுபவளைப்போல
> பணக்காரன் ஏழையை வதைக்கட்டும் அரிவாளைப்போல
> உடம்பெடுத்தவன் உயிரோடு போராடட்டும் நண்பர்களைப்போல

என்ற அடிகள் மீராவின் புதுக்கவிதை அடிகள் சிலவற்றை நினைனவுபடுத்துவதனை இங்கு எடுத்துக்காட்டலாம்.

முன்பு குறிப்பிட்ட மந்தமான நிலை மாறி அறுபதுகளில் எழுத்துச் சஞ்சிகையுடன் தமிழகத்தில் புதுக்கவிதை வீறும் எழுச்சியும் பெற்று வளரத் தொடங்கிற்று என்று கூறலாம்; சுருங்கக் கூறின் 'வசனகவிதை' 'புதுக்கவிதை' ஆயிற்றெனலாம். 'எழுத்து', ஈழத்தவர் பலரைப் புதுக்கவிதையில் ஈடுபாடு கொள்ளச் செய்தது; முதலாவது படிம, குறியீட்டுப் புதுக்கவிதையாளராக தருமு அரூப் சிவராம் அமைந்தார். ஏனைய ஈழத்துப் புதுக்கவிதையாளர் பெரும்பாலும்

பழைய தடத்திலேயே- சற்று மெருகிட்டுக் கொண்டு- சென்றனர்; அதாவது வசனகவிதைக்குரிய பண்புகளே அவர்களது புதுக்கவிதை-களில் அமைந்தன. ஆரம்பகால தமிழகப் புதுக்கவிதைகளுக்கும், ஈழத்துப் புதுக்கவிதைகளுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடுகளுள் இது மிக முக்கியமானது.

- 'ஈழத்தில் புதுக்கவிதையின் தொடக்க காலம்',
அனைத்துலக நான்காவது தமிழராய்ச்சி மாநாட்டு
நினைவு மலர் (இலங்கைக்கிளை),
யாழ்ப்பாணம், ஜனவரி 1974.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

'ஈழகேசரி'க் கவிதைகள்

நவீன இலக்கிய வளர்ச்சி என்பது இலக்கிய சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றுடன் பிணைந்துள்ளதொன்று. ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிப் போக்கிலும் இதனை நன்கு அவதானிக்க முடிகின்றது. இவ்விதத்தில் ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் ஈழகேசரிப் பத்திரிகை முக்கிய பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக்கு அதன் ஆரம்ப நிலையில் அது பிரசுர களமாக விளங்கியமை நாமறிந்ததே. அதேவேளையில், ஈழத்து நவீன கவிதை வளர்ச்சிக்கும் இது கணிசமான பங்காற்றியுள்ளது.

ஈழகேசரி

ஈழகேசரிப் பத்திரிகை 1939 தொடக்கம் 1958 வரை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்துள்ளது. காந்தியவாதியும் அரசியல் நாட்டமும் கொண்டவரான நா.பொன்னையா என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை, 1946ம் ஆண்டில் "மறுமலர்ச்சி" சஞ்சிகை முதலியனவும் 1947இல் சுதந்திரனும் வெளிவரத் தொடங்கும் வரை ஈழத்து எழுத்தாளர்களதும் கவிஞர்களதும் முக்கியமான பிரசுர களமாகவும் இளந்தலைமுறையினருக்கான வளர்ப்புப் பண்ணையாகவும் கோலோச்சி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழகேசரிக் கவிஞர்கள்

இவ் ஈழகேசரியில் கவிதை எழுதியோர் மனுப்புலியார், அகிலேஸ்வரசர்மா, மு.நல்லதம்பி, அல்வையூர் மு.செல்லையா, நவாலியூர் நடராசன் (சத்தியநாதன்), யாழ்ப்பாணன், சோமசுந்தரப்

புலவர், வேந்தனார், (பிற்காலத்தில்) மஹாகவி, வரதர், அ.ந.கந்தசாமி சாரதா எனப் பலராவர்.

ஈழகேசரிக் கவிதைகள்

மேற்கூறிய கவிஞர்களது கவிதைகள் அவர்தம் நோக்கத்திற்கும் காலச் சூழலுக்கும் ஏற்பப் பல்வகைப்பட்டிருந்தன.

சமூகச் சீர்திருத்தம் இவர்கள் சிலரது கவிதைகளில் முக்கிய இடம் பெற்றிருந்தது. இவ்விதத்தில் சாதி, மதுபானம் அருந்துதல், கோயில் பலியீடு முதலியன முதன்மை பெற்ற விடயங்களாய் இருந்தன. பின்வருவது "சத்தியநாதன்" எழுதிய சாதிப் பிரச்சினை பற்றிய கவிதையொன்றின் பகுதி. எ-டு :

தீண்டப்ப டாதாரென்று - உலகில்
திசைமுகன் செய்ததுண் டோ?
வேண்டப் படுவதீ தோ? - ஐயோ,
வீண்கதை பேசுகிறீர்?

உரிமை உரிமை யென்பீர் - உங்கள்
எளிய சோதரர் தங்கள்
உரிமை உரிமை யென்றால் - வேத
ஏடுவிரிப் போமென்பீர்!

சாத்திரங் கள்கற்றீர் - நல்ல
சமயக் கலைகள் கற்றீர்
சூத்திரங் கள்கற் றீர் - போதும்
தூய உண்மை காண்பீர்.

பண்டி தராவீரே - யன்றிப்
பகுத்தறி வுடையா ராகீர்
நொண்டிக் குழந்தையைத் - தூக்க
நூல்விதி பாரென் பதோ?
.....

சமூக முன்னேற்றம் வேறு சிலரது கவிதைகளின் பொருளாகியது. பொருளாதார நோக்குச் சார்ந்து குடிசைக் கைத்தொழில் உணவு பயிரிடல் முதலிய விடயங்கள் இவ்விதத்தில் முக்கியம் பெற்றிருந்தன. எ-டு : மனுப்புலியார் எழுதியவை. "தேசியம்" பற்றியும் ஈழகேசரிக் கவிஞர்கள் பாடியுள்ளனர். பின்வரும் பாடல் அல்வையூர் மு.செல்லையாவின் பாடலொன்றின் பகுதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலங்காதேவி'

தேர்ந்திடும் இலங்கா
தேவி நின் வாழ்வு
தினமுங் குறைந்திடுதல்
மைந்தர் செய்யும் தாழ்வு

சார்ந்திடும் சிங்களரும்
தக்கத மிழ்ச் சனமும்
சகோதர நேயம் பெறல்
என்று வரும்?

பாரத நாட்டினைக்
கண்டு பகர் தொண்டு
தீரமுடன் கைக்கொண்டு
திகழுத லென்று?
.....

எனினும், இவர்களது "தேசியம்" என்பது ஒருவகையான "இரட்டைத் தேசியம்" என்று கூறத்தக்கது. ஏனெனில் இலங்கைத் தேசியம் பற்றிப் பாடிய எமது இலங்கைத் தமிழ்க் கவிஞர்கள் அதற்குச் சமமாக இந்திய / தமிழக தேசியம் பற்றியும் சிலாகித்துப் பாடியுள்ளனர்; ஒரு நிலையில் இலங்கைத் தேசியம் பற்றிச் சிந்திப்பவராகவும் இன்னொரு நிலையில் அதற்குச் சமமாக இந்திய / தமிழக தேசியம் பற்றிச் சிந்திப்பவராகவும் காணப்பட்டனர். அவர்களால் ஆறுமுகநாவலரைப் போற்றவும் மகாத்மா காந்தியை வாழ்த்தவும் முடிந்தது. "ஈழத்தவர் பாரதத் தாயை மறக்கலாமா?" என்று கேட்கவும் முடிந்தது.

"ஈழகேசரி"யில் நவீன பிரபந்தங்களும் அவ்வப்போது வெளிவந்துள்ளன. இவ்விதத்தில் நவாலியூர் நடராஜன் இயற்றிய மருதக் கலம்பகம் குறிப்பிடத்தக்கது. இது கொழும்பிலுள்ள களனி கங்கைக் கரையோரத்தில் - சேரியில் - வாழ்கின்ற ஏழை மக்கள் பற்றியது. அதன் ஒரு பகுதி :

களனிக்குப் புல்லுவெட்டப் போக வேண்டாம் - மச்சான்
காமாட்சி வந்தால் நின்று பார்க்க வேண்டாம்
பழனிப் பெரியான் வந்தாற்சேர வேண்டாம் - மச்சான்
பாழாகிக் கள்குடித்து மாளவேண்டாம்.

நாற்பதுகளில் ஈழத்தில் பரிசோதனை நோக்குடன் புதுக்கவிதை முயற்சி இடம்பெறுவதற்கும் ஈழகேசரி வழிவகுத்துள்ளது. எ-டு :

'ஓர் இரவினிலே'

இருள்! இருள்! இருள்!
இரவிலே நடு ஜாமத்திலே
என் கால்கள் தொடும் பூமி தொடங்கி
கண்பார்வைக்கெட்டாத மேக மண்டலம்வரை
இருள்! இருள்!
பார்த்தேன்
பேச்சு மூச்சற்று
பிணம்போல் கிடந்தது பூமி
..... - வரதர்

மேலும் ஆரம்பத்திலே குறிப்பிட்டது போன்று, பின்னர் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் முக்கிய இடம் பெற்றுள்ள மஹாகவி, அ.ந.கந்தசாமி, நாவற்குழியூர் நடராசன், சாரதா முதலானோரின் வளர்ப்புப் பண்ணையாகவும், அவர்கள் வளர்ந்த பின்னர் அவர்களது பிரசுர களங்களிலொன்றாகவும் ஈழகேசரி திகழ்ந்தமை மனங் கொள்ளத்தக்கது.

ஈழகேசரி, பாரதிதாசன், நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை ஆகியோர் பாடல்களை மறுபிரசுரம் செய்ததனூடாக, ஈழத்து இலக்கிய ஆர்வலர் மத்தியில் அவர்கள் நன்கறியப்பட வழிவகுத்துள்ளது. குறிப்பாக, பாரதியார் பாடல்களை பெருமளவு பிரசுரித்ததனூடாக, ஈழத்தில் பாரதியார் புகழ் பரப்பியதில் ஈழகேசரிக்கு முக்கியமான பங்குள்ளது என்பது பலருமறியாததொன்று. அவ்விதத்தில் சமகால ஈழத்துக் கவிஞர்கள் மத்தியில் பாரதியாரின் செல்வாக்குக் கணிசமானது; பன்முகப் படுத்தப்பட்டது. எ-டு : பாரதியார் கவிதை ஒன்றின் நேரடிச் செல்வாக்கிற்குட்பட்ட கவிதைப் பகுதி இங்கு இடம்பெறுகின்றது :

'கொடிதாங்குவோம்'

ஆட்சிப் படைபெறு மாங்கில ராட்சியை
அஞ்சிடோம் - இனித் - துஞ்சிடோம்
மாட்சி கொளிலங்கை வாழச் சுதந்திரம்
வாங்குவோம் - கொடி - தாங்குவோம்
.....

- வேந்தனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீடு

எவ்வாறாயினும் 'ஈழகேசரி'யில் வெளியான (வரதர், அ.ந.க., மஹாகவி முதலானோர் தவிர்ந்த பிறர் எழுதிய) மேற்குறிப்பிட்ட கவிதைகள் எவ்வளவு தூரம் நவீன கவிதைகளாக முடியும் என்றொரு கேள்வி எழுவதற்கு இடமுண்டு. உண்மைதான், ஈழகேசரியில் வெளியான அனைத்தும் முழுமையான நவீன கவிதைகளன்று. எனினும் இவை நவீன கவிதைக்குரிய சில அம்சங்கள் கொண்டவை என்று கூறுவதில் தவறில்லை.

எவ்வாறாயினும், ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியின் ஆரம்பகால வரலாறு ஈழகேசரிக் கவிதைகளைக் கவனத்திற் கொள்ளாமல் முழுமையடையாதென்பது தெளிவானது. ஏனெனில், வெவ்வேறு நோக்கும் போக்கும் கொண்ட இருதலைமுறை சார்ந்த (ஒருசாரார் பழைமையிலும் புதுமையிலும் ஈடுபாடுள்ளவர்; மற்றொரு சாரார் புதுமையில் மட்டும் ஈடுபாடுள்ளவர்.) கவிஞர்களுக்கு ஈழகேசரி களமமைத்துக் கொடுத்துள்ளமை மறுதலிக்க முடியாததொன்றாகும்!

- "ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியின் ஆரம்பகால வரலாற்றில் ஈழகேசரிக் கவிதைகள்", ஞானம், ஜூலை 2004.

III முன்னோடிகள்/ஆளுமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

ஈழத்தின் முதற் பெண் கவிஞர்: மீனாட்சியம்மாள் நடேசய்யர்

பெண்நிலைவாத நோக்கிலான ஆய்வுகள் முனைப்புற்றுள்ள இக்காலப் பகுதியில் ஈழத்தின் முதற்பெண் கவிஞர் பற்றிய தேடலும் தவிர்க்க இயலாததாகின்றது. இத்தகைய தேடல் முயற்சி முதல்நிலையில் ஈழத்து நவீன கவிதையின் தோற்றம் பற்றிச் சிந்திக்கச் செய்கிறது.

ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றம் பிரக்ஞை பூர்வமாக (சென்ற நூற்றாண்டில்) நாற்பதுகளின் பிற்பகுதியில் ஆரம்பமாயினும் அதற்கான கால்கோள் முப்பதுகளிலேயே உருவாகிவிட்டது என்று அண்மைக்கால ஆய்வுகளால் தெரியவருகின்றது. இத்தகைய உருவாக்கம் இரு வேறு பிரதேசக் கவிஞர்களிடம் முகிழ்த்தது. இவர்களுள் ஒரு சாரார் யாழ்ப்பாணப் பிரதேசம் சார்ந்த ("ஈழகேசரி"க்) கவிஞர்கள். மறுசாரார், மலையகத்தைச் சார்ந்த கவிஞர்கள். மலையகம் சார்ந்த குறிப்பிடத்தக்க இரு கவிஞருள் (மற்றொருவர், கோ.நடேசய்யர்) ஒருவரான மீனாட்சியம்மாள் நடேசய்யரே ஈழத்தின் முதற் பெண் கவிஞருமாகின்றார்.

மேற்குறிப்பிட்ட "ஈழகேசரி"க் கவிஞர்கள் தேசியம், சமூகச் சீர்திருத்தம் முதலானவற்றைப் பாடுபொருளாகக் கொண்டிருந்தனர். எனினும், சமூகச் சீர்திருத்தம் பற்றிப் பாடிய இவர்கள் பெண்களின் பிரச்சினைகள் பற்றி, குறிப்பாக, சீதனப் பிரச்சினை பற்றிப் பாடியுள்ளமை அரிதே. இவ்வாறே மலையகத்தைப் பொறுத்தவரையிலும் கூட பெண்களது பிரச்சினைகள் கவனத்திற்குள்ளாகவில்லை. மாறாக, தேசியம், தொழிலாளர் வாழ்க்கை என்பன பற்றிய கவிதைகளே உருவாகின. (இவ்விரு விடயங்களும் ஒன்றுடனொன்று தொடர்பு பட்டிருந்தன.) மீனாட்சியம்மாள் நடேசய்யரின் கவிதைகளும் அத்தகையனவாகவே விளங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேசியம்" என்பது அவ்வக்காலச் சூழலுக்கேற்ப வெவ்வேறு பரிமாணம் பெறுகின்றதொன்றாகும். இக்காலப் பகுதியில் அது தேச விடுதலை சார்ந்த இரட்டைத் தேசியமாகக் காணப்பட்டது. அதாவது, இந்திய தேசியம், ஈழத் தேசிய[illegible]ரண்டும் ஈழத்தவரால் இக்காலப்பகுதியில் முதன்மைப்படுத்[illegible]பட்டன. மீனாட்சியம்மாள் நடேசய்யரின் பாடல்களிலும் இவை வெளிப்பட்டன.

எ-டு : 1

பராசக்தி நம் பாரததேவியைப் பணிந்து நித்தம் பாடுவோம்
பக்தி நமக்கு மெத்த சித்தி யுண்டாக்கு மின்னம் முத்தி
தருமெனக் கொண்டாடுவோம்

எ-டு : 2

லங்கா மாதா நம்ம தாய்தான் - இந்த
நாட்டினி லெல்லோரும் அவளுக்குச் சேய்தான்

மீனாட்சியம்மாள் நடேசய்யர் எழுதியவற்றுள் பெரும்பாலானவை தொழிலாளர் பற்றியவை. அதாவது தொழிலாளர்க்கு இழைக்கப்படும் அநீதி, தொழிலாளர் ஒற்றுமை, தொழிலாளர் உரிமைகள், அவர்களது கடந்த கால வரலாறு முதலியன சார்ந்தவை. பாட்டு - 3ன் ஒரு பகுதி, பின்வருமாறு:

பாய்க்கப்பல் ஏறியே வந்தோம் - அந்நாள்
பலபேர்கள் உயிரினை யிடைவழி தந்தோம்
தாய்நாடென் றெண்ணி யிருந்தோம் - இவர்கள்
தகாத செய்கையைக் கண்டு மனமிக நொந்தோம்.

புலிகள் தான் வாழ்ந்திட்ட காடு - அதுஇப்போ
பொழில் சூழும் அழகிய சிங்கார நாடு
பலியிதற் கிந்திய ராடு களைப்போல
பல்லாயிரம் பேர்கள் உயிரிதற்கீடு

இவற்றை நோக்கும் போது, தொழிலாளர் பற்றி பிரக்ஞை பூர்வமாக முதன் முதல் பாடியவரும் இவரேயாகின்றார்.

இன்று மீனாட்சியம்மாள் நடேசய்யரின் பாடல்கள் அனைத்தையும் தொகுத்துப் பார்க்கின்ற போது, உள்ளடக்க ரீதியில் இரு சிறப்புகள் வெளிப்படுகின்றன. இவை, அரசியல் சார்ந்த எதிர்ப்புக் குரலாக விளங்கியமை ஒன்று (இலக்கியத்தை எதிர்ப்பு இலக்கியம் - Resistance Literature) என்று நோக்கும் அணுகுமுறை 60களில் உருவானது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, பாடல் 9ன் சில பகுதிகளைத் தரலாம் :

சிங்கள மந்திரிகள் கூற்று - மிக
சீரு கெட்ட தென்று சாற்று
சங்கடமே நேரிடுமென தோற்று - திந்திய
சமூகம் நெருப்பாய் வரும் காற்று

நன்றி கெட்டு பேசும் மந்திரிமாரே - உங்கள்
நியாய மென்ன சொல்லு வீரே
இன்றி யமையாத வொரு போரே - செய்ய
இடமுண் டாக்குகிறீர் நீரே

கட்டைக்குயிர் கொடுத்தால் போலேவுங்கள்
காரியங்கள் இந்தியரி னாலே
வெட்ட வெளிச்சமான தாலே இப்போ
விரட்ட நினைத்தீர்மனம் போலே

சத்யா க்ரகமே யெங்கள் அம்பு அது
சரிசெய்யு மென்பதையே நம்பு
வித்யா விவேகியிடம் வம்பு செய்தால்
வீணிவழிந்து போகும் தெம்பு

தொழிலாளர்களைப் போராட்டத்திற்குத் தூண்டுவனவாக விளங்குகின்றமை, மற்றொன்று. இது பற்றி தனது தொகுப்பு முன்னுரையிலும் கவிஞர் குறிப்பிட்டுள்ளார்:

..... இந்தியர்களைத் தூக்கத்தில் ஆழ்ந்துவிடாது தங்களது உரிமைகளை நிலை நாட்டுவதற்குத் தீவிரமாகப் போராடும்படி அவர்களை இப்பாட்டுக்கள் தட்டியெழுப்ப வேண்டுமென்பதே எனது அவா

இதனாலேயே இவரது பாடல்கள் உணர்ச்சி மிகுந்தனவாகவும் வெளிப்பாட்டு முறையில் வித்தியாசமானவையாகவும் அமைகின்றன எனலாம்.

வெளிபாட்டு முறையிலான வித்தியாசங்களுள் முக்கியமானது, பெரும்பாலான பாடல்கள் கூத்து அல்லது சினிமாப் பாடல் மெட்டுகளில் அமைந்துள்ளமையாகும். எ-டு :

"ஆடுபாம்பே என்ற மெட்டு" (பாடல் 4)
"நந்தவனத்தில் ஓர் ஆண்டி" (பாடல் 3)
"தங்கக் குடமெடுத்து" (பாடல் 6)
"ஜெய மாயாவதாரனே" (பாடல் 1)

நவீன கவிதையின் உத்தியாக இசை, மெட்டு என்பனவற்றைக் கையாளுதல் என்று சிந்திக்கும் போது நவீன கவிதையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதாமகனான பாரதியின் நினைவு எழுவது தவிர்க்க இயலாததாகி விடுகின்றது. ஏனெனில், பாரதியே நவீன கவிதையில் இத்தகைய உத்திகளை முதன்முதல் கையாண்டவன். அதற்குக் காரணமுண்டு. ஆண்டவன் குரலாக, ஆள்பவன் குரலாக, அறத்தின் குரலாக, வித்துவத்தின் குரலாக ஒலித்த கவிதையை மக்கள் குரலாக்கியவன் பாரதியல்லவா? "இரண்டொரு வருஷத்து நூற்பழக்கமுள்ள" பொதுஜனங்களுக்காக, "பொதுஜனங்கள் விரும்பும் மெட்டுக்களை" அவன் கையாண்டமை இயல்பானதே.

ஈழத்தில் குறிப்பாக மலையகத்தில் பாரதி புகழ் பரப்பிய முன்னோடிகளுள் ஒருவரான மீனாட்சியம்மாள் நடேசய்யரின் கவிதைகளும் மேற்கூறியவாறு பாரதியார் கவிதைகளின் ஓரிரு அம்சங்களைப் பெற்றுக் கொண்டமை வியப்பிற்குரியதன்று.

ஆக, ஈழத்தின் முதற் பெண் கவிஞராகத் திகழும் மீனாட்சியம்மாள் நடேசய்யர், ஈழத்தின் நவீன கவிதை முன்னோடிகளுள் ஒருவராகவும் காணப்படுகின்றமை கண்கூடு. இது அவர் மலையகத் தோட்டங்கள் தோறும் பாடிய ஏனைய பாடல்களும் சேகரிக்கப் படுவதன் அவசியத்தை வற்புறுத்தி நிற்கின்றது!

- 'ஈழத்தின் முதற் பெண் கவிஞர்',
இளங்கதிர், 2000/ 2001.

8

நவீன கவிதை முன்னோடி : "சாரதா"

I

ஈழத்து நவீன இலக்கியம் சார்ந்த ஆய்வுகள், தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டே நடைபெற்று வந்துள்ளன; நடைபெற்று வருகின்றன. படைப்பாளி ஒருவரது தொகுப்பு காலந்தப்பி வெளிவருகின்ற போது அதனை ஆய்வுக்குட்படுத்தின் முன்னர் குறிப்பிட்ட கருத்துக்கள் மாற்றமுறவோ விரிவு பெறவோ வாய்ப்பு ஏற்படுவதுண்டு. சிறுகதை எழுத்தாளர் பித்தனது கதைத்தொகுப்பு இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகவுள்ளது. கவிதையைப் பொறுத்தவரையிலேகூட ஈழகேசரி மறுமலர்ச்சிக் கவிஞருள் ஒருவராகிய "சாரதா" வின் கவிதைத் தொகுப்பு (காலச்சுவடு) காலங்கடந்தே (1993) வெளியானது. இதனாலேயே, "இவர்களுள் நாவற்குழியூர் நடராசன், அ.ந.கந்தசாமி, மஹாகவி ஆகிய மூவரும் இக்காலப் பிரிவில் தோன்றிய முக்கியமான கவிஞர்களாவர்" என்ற அபிப்பிராயம் எழலாயிற்று. எனினும், இன்று சாரதாவின் கவிதைத் தொகுப்பினைக் கவனிக்கின்ற போது, அவரும் அக்காலப் பிரிவிலே தோன்றிய முக்கியமான கவிஞரென்பது புலப்படுகின்றது. இதுபற்றி சுருக்கமாக எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

II

சாரதாவின் இயற்பெயர் வித்துவான் அ.சர்வணமுத்து என்பதாகும். ஏனைய மறுமலர்ச்சிக் காலக் கவிஞர்களுக்கு முன்னரே எழுதத் தொடங்கிய "சாரதா" அவ்வேளையில், அவர்களைவிட தமது கவிதா ஆற்றலை வெளிப்படுத்தியவர் என்று கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்திலுள்ள "கலாமோகினி", "கிராம ஊழியன்" என்பவற்றிலே கூட அவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இவ்விதத்தில், பலருமறிந்திருக்க முடியாத சுவாரஸ்யமான விடயமொன்றினைக் குறிப்பிடுவது பயனுடையது. புதுமைப் பித்தனுக்கும் தமிழகத்திலிருந்த கவிஞரென்று தம்மைப் பிரபலப்படுத்திக் கொண்ட ஒருவருக்கு மிடையில் இலக்கியச் சர்ச்சையொன்று ஏற்பட்டபோது ஈழத்தவரான "சாரதா" புதுமைப் பித்தனுக்குச் சார்பாக,

ஓய் காணும்! வர்த்தகரே
உமக்கேனித் தலைக்கிறுக்கு
நாய் போலக் குரைக்கின்றீர்,
நல்லவரோ நீர் சொல்லும்

என்று ஆரம்பிக்கும் கவிதையொன்றினை கிராம ஊழியனில் எழுதியிருந்தமையே அவ்விடயமாகும்.

மேலும் மஹாகவி, அ.ந.கந்தசாமி முதலான சமகாலக் கவிஞர்களுடனும் சாரதா நெருக்கமான உறவு கொண்டிருந்தமையும் கவனத்திற்குரிய விடயமாகும்.

III

சாரதா, சமகாலக் கவிஞர்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது, சமூக நோக்குடைய கவிதைகளை அதிகம் எழுதியுள்ளமை புலப்படுகின்றது. இத்தகைய சமூக நோக்கு ஆரம்ப நிலையில் "ஈழகேசரி"க் கவிஞர்கள் போன்று குடி. உயிர்ப்பலி, ஆங்கில ஆட்சியாலேற்பட்ட விளைவுகள் (ஆங்கில மொழி ஆதிக்கம், நாகரிக ஆதிக்கம்), பழம்பெருமை முதலியன பற்றியனவாக வெளிப்படினும், கால ஓட்டத்தில் மாற்றம் பெறலாயிற்று. எடுத்துக் காட்டாக "துயிலெழுச்சி"யின் ஒரு பகுதி கவனத்திற்குரியது :

பழந்தமிழர் அது செய்தார், இதுவும் செய்தார்
பண்ணாத தவர்கணக்கில் இல்லை" என்று
குழந்தைமொழி வழங்களிலோர் கொள்கையில்லை
குவலய மெல்லாம் புரட்சிக் கூச்சல் கேட்டும்
விலங்குகளாய் உணர்விழந்து அறிவும் மங்கி
வேதாந்தம் பேசுகிறோம்; விழல் வேதாந்தம் !
இளந்தமிழா! எழுத்துலகம் எல்லாம் சுற்றி
எங்கள் நிலை கண்டுநவ எழுச்சி காண்பாய்

இங்கே, பழந்தமிழ்ப் பெருமையானது அகக் கலப்பின்றி ஆக்கபூர்வமான நிலையில் அணுகப்படுவது கவனிக்கத்தக்கது.

பெண்கள் நிலைபற்றி சாரதா கவிதைகளில் "வண்ணாரக் குலத்துதித்தும் வடிவழகால் வாலிபரைப் புண்ணாக்கி மனம் பறிக்கும் புதுமையளோர் போக்கிரிப் பெண்", தன்னிடம் முத்தங்கேட்ட "பெண்ணாசைப் பித்தனொருவனுக்குப் பதிலடி கொடுப்பதை விவரிக்கும் "சூடுகண்ட பூனை" கவனத்திற்குரியதொன்று. எனினும், இவ்வாறான கவிதைகளைவிட, காவியப் பெண்களான சீதை (நியாயவாதம், பரதன் சீற்றம்) சகுந்தலை முதலானோர் நிலை பற்றியெழுந்த கவிதைகள் கவனத்திற்குரியன. "சீதையைக் காட்டுக்கனுப்பியது தவறு" என்று இராமனிடம் சீறுகின்றார், வான்மீகி:

மாடாடு வாங்கி விற்கும்
வழக்கமென, மங்கையரை
சோடாக வைத்து இன்பந்
துய்த்துமனங் கைத்துவிட்டால்
கூடாதென் றோட்டுதற்கோர்
கொள்கையுண்டோ ஆடவர்க்கு?
.....

சகுந்தலை, துஷ்யந்தனிடம் இவ்வாறு எடுத்துரைக்கின்றாள் :

மன்னவனே உண்மைகளை
மறைப்பதென்றால், மற்றவர்கள்
என்னசெய்யார்? என்னையொத்த
ஏழைகளுக் கெங்குபுகல்?
பெண்குலமே காமுகராற்
பீடழியப் போகுதையோ?
என்ன செய்வேன்? நம்பினதற்(கு)
இரண்டகம் செய் திட்டனையோ?

சமகாலப் பிரச்சினைகள் சில (எ-டு: பட்டதாரிகளின் வேலையற்ற நிலை, நகர வாழ்வின் அலங்கோலம்) சாரதாவினால் இனங்-காணப்பட்டுள்ளன. அரசியல் மாற்றங்கள் கவனத்திற்குள்ளாகின்றன. பழைய "கவுன்சில்" கலைந்து, புதுத் தேர்தல் நடக்கின்ற சூழ்நிலை உருவானபோது கவிஞர் பாடுகின்றார் :

கத்தை கத்தையாகக் காசு
கட்டிக் கொண்டுநீர் - பெருங்
கணக்குவிட்டுத் திரிகிறீர்
கடையைக் கட்டுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்த வீரம் பேசியென்ன
வெட்டி விழுத்தினீர்? - வெளி
வேஷமெல்லாம் போதும், வீட்டை
விட்டு விலகுங்கள்

இரண்டாவது உலக யுத்த காலச் சிந்தனை இதுவாகும் :

இருபது சதத்துத் துணிக்குவிலைபார்
இரண்டு ரூபாயாம்
சரிசரி அதுவும் வருவது இன்று
சட்டென நின்றுவிட்டால்!..... (கட்ட)

எடுத்ததற் கெல்லாம் அன்னியர் கையை
எதிர்பார்த் தேங்காதே,
கெடுத்திடும் இந்தக் கேவலபுத்தி;
கேள்கேள் தூங்காதே!..... (கட்ட)

அற்பமானவை என்று பிறர் கருதுகின்ற விடயங்கள் சிலவும் சாரதாவின் கவிதைகளுக்குப் பொருளாகியுள்ளன. அன்புடன் வளர்த்த ஆடொன்று அகால மரணமடைந்தமை பற்றியும் (விதியிழைத்த சதி), வீட்டைக் காவல் காக்கின்ற நாய்கள் (காவல்) பற்றியும் பாடியுள்ளவை இவ்விதத்தில் கவனத்திற்குரியவை.

சாதாரண அனுபவங்களும் கவிஞரால் வெளிப்படுத்தப்-பட்டுள்ளன. "தெகியங்கை" என்ற இடத்திற்குச் சென்றுவந்த நினைவுப் பகிர்வினை வெளிப்படுத்தும் போது இவ்வாறு ஆரம்பிக்கின்றார் :

பிரயாணஞ் செய்வதென்றால் எனக்கோர் ஆசை
பேசாமற் போய் வருவேன், எங்கென்றாலும்
அரைநாளின் மேலாக ஒருவர் வீட்டில்
ஆறநிற்ப தென்னியல்புக் கடுக்காதப்பா,
சிரந்தாழ்த்தி வணங்கிடவுஞ் செய்வேன், ஆனால்
செட்டுவிடும் முட்டர்களைச் சேர மாட்டேன்,
பிரவேசப் பரீட்சையிலே கண்டேன், உங்கள்
பிரமாத அடக்கமெல்லாம், பிறப்புவாசி!

வரவேற்றீர், உபசரித்தீர், வளைத்துப்பேசி
வந்த கருத் தாளாளாய் வலிந்து கேட்டீர்
பரதேசம் வந்தொருநாள் ஆவதற்குள்
பாசத்தாற் பிணிப்பதற்கும் பார்த்தீர், உங்கள்
பிரதேசம் முழுவதையும் கூட்டிக் காட்டிப்
பிடிப்பறிய ஏதேதோ பிரித்துக் கேட்டீர்,

உரமான மனமுடைய பெரியோர்க்கென்றும்
உவமான மாயொளிரும் மலையும் உண்டே!

ந.பிச்சமூர்த்தி, தாம் எழுதுவதை நிறுத்திவிட்டதாகக் கலைமகளில் எழுதியபோது அதனைத் தாங்கவியலாது பதிலெழுதுகிறார், சாரதா:

கலைமகளிற் சிலநாளின் முன்னர்தான்,
"நீர்க் காக்கை" யெனுந் தலைப்பிலொரு கடிதங் கண்டேன்,
புலமையுள்ளம் படைத்த நண்பர் பிச்சமூர்த்தி
புதிர்போட்டு எழுதி வைத்தார் - புதிய செய்தி!
"எழுதுவதை நிறுத்தி விட்டேன், இனிமேற் சும்மா
இருப்பதிலே சுகங்காண இருக்கின்றே"னாம்,
முழுவதையும் படித்த பின்னர், நண்பர் செய்த
முடிவெமக்குப் பெருங்கவலை மூட்டிற்றன்றே!
....."
ஆனாலும் அவரொன்றை மறந்துவிட்டார்,
அவரெழுத்தை அனுபவிக்கும் அன்பர் வேறு,
தானாகப் "பிடிக்கவில்லை" என்று சொல்லித்
தனதுகலா சிருஷ்டிகளைச் சாம்பராக்க
ஏனாக்குந் துணிந்திட்டார்? இந்தச் செய்தி
இலக்கிய நண்பர்களுக்கு இடிபோலத்தான்
வீணாக, அவர் செய்ததைப்போல், வேறு
மேதைகளுஞ் செய்துவிட்டால், மிச்சமேது.

சாரதாவின் கவிதை உள்ளடக்கம் மேற்கூறியவாறெல்லாம் அமைய, கவிதை வெளிப்பாட்டு முறைபற்றியும் முக்கியதொரு குறிப்புரைக்க வேண்டும். ஏனைய ஈழகேசரி / மறுமலர்ச்சிக் கவிஞர்கள் போன்று ஆரம்பத்தில் மரபு சார்ந்த ஓசை, சந்தம் என்பவற்றுக்கு முதன்மை கொடுத்தாலும் அவர்கள் சிலர் போன்று பின்னர் பேச்சோசைப் பாங்குடைய கவிதைகளையும் சாரதா எழுத முற்பட்டார். ஆரம்பத்திலே குறிப்பிட்ட, புதுமைப் பித்தனுக்குச் சார்பாக எழுதப்பட்ட கவிதையும், இறுதியாக மேலே குறிப்பிட்ட, ந.பிச்சமூர்த்திக்குச் சார்பாக எழுதப்பட்ட கவிதையும் இதற்குச் சிறந்த உதாரணங்களாகின்றன!

IV

இதுவரை கூறியவற்றை நினைவு கூர்கின்றபோது, மறுமலர்ச்சிக் காலக் கவிஞருள் "சாரதா"வும் கவனத்திற்குரியவரென்பது ஓரளவு புலப்படலாம். சில விதங்களில், மஹாகவியோடும் ஒப்பிடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவராகலாம். மஹாகவியின் கவிதைகளில் ஐம்பதுகளின் பின்னர் அதிகளவு முகிழ்க்கின்ற சில நவீன கவிதைப் பண்புகள் ஐம்பது-களுக்கு முன்பே சாரதாவிடம் முகிழ்த்திருக்கலாம் - எனினும், இவை யாவும் சாரதாவின் கவிதைகள் முழுமையாகத் தொகுக்கப் பட்ட பின்பே உறுதி செய்யப்பட வேண்டியவை. ஆயினும், கவனிக்கப்பட வேண்டிய, ஈழத்து முன்னோடிக் கவிஞர்களுள் "சாரதா"வும் ஒருவரென்பதை இவ்வேளை உறுதி செய்ய முடியுமென்றே கருதுகின்றேன்!

- "சாரதா" - கவனிக்கப்படாத கவனிக்கப்பட வேண்டிய நவீனகவிதை முன்னோடி", ஞானம், டிசெம்பர், 2004.

9

ஈழத்து முற்போக்குக் கவிதை முன்னோடி: அ.ந.கந்தசாமி

ஈழத்துத் தமிழ்க் கவிதைப் போக்கில் ஏறத்தாழ நாற்பதுகள் தொடக்கமே நவீனப் பண்புகள் இடம்பெறத் தொடங்கின. இத்தகைய பண்புகள் மறுமலர்ச்சிக் குழுவினர் முதலானோரால் தோற்றுவிக்-கப்பட்டன. முதன் முதலாகத் தம் அக அனுபவங்களைக் கவிதை மூலம் வெளிப்படுத்தியோரும், அவற்றை வெளிப்படுத்த 'கவிதை' என்ற ஊடகத்தின் முதன் முதலாகக் கையாண்டோரும் இவர்களே என்பது ஈழத்துக் கவிதை வளர்ச்சி வரலாற்றினை நோக்கும் போது புலப்படுகின்றது. இன்னொரு விதமாகக் கூறுவதாயின், இதுகால வரையிலான 'புலவர்' ஆதிக்கம் 'கவிஞர்' களிடம் செல்வதையும், 'செய்யுள்', போய் 'கவிதை' செல்வாக்குப் பெறுவதையும் இவர்களது வருகை குறித்து நிற்கின்றது. 'மறுமலர்ச்சி', 'பாரதி' முதலிய சஞ்சிகை-களும் (இவற்றின் பாதிப்புக்குட்பட்ட) 'ஈழகேசரி' யும், இவர்களது ஆக்கங்களுக்குக் களமமைத்துக் கொடுத்தன. இம் மறுமலர்ச்சிக் குழுவினருள் அ.ந. கந்தசாமி (கவீந்திரன்). 'மஹாகவி' (உருத்திர-மூர்த்தி), 'சாரதா' (இ.சரவணமுத்து) முதலியோர் விதந்துரைக்கத் தக்கோராவர். இவ்விடத்தில் 'அ.ந.க.'வின் கவிதைகள் பற்றிச் சில குறிப்புக்கள் கூறுவது பொருத்தமாகும்.

'வாலிபத்தின் வைகறையிலே பள்ளி மாணவனாக யாழ்ப்பாண நகரக் கல்லூரிக்கு வந்துவிட்டு மாலையில் கிராமத்தை நோக்கிப் புகைவண்டியில் செல்லுகையில் சில சமயம் தன்னந் தனியாக ரயில் வண்டியிலிருப்பேன். அப்போது என் கண்கள் வயல் வெளிகளையும். தூரத்துத் தொடுவானையும் உற்று நோக்கும்..... உள்ளத்திலும் உடலிலும் சுறுசுறுப்பும் துடிதுடிப்பும் நிறைந்த காலம். உலகையே என் சிந்தனையால் அளந்துவிட வேண்டுமென்று பேராசை கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம். காண்பதெல்லாம் புதுமையாகவும். அழகாகவும் வாழ்க்கை ஒரு வானவில் போலவும் தோன்றிய காலம். மின்னலோடு உரையாடவும் தென்றலோடு விளையாடவும் தெரிந்த காலம்' இவ்வாறு தன் இளமைக்கால உலகை நினைவு கூர்கின்றார் கவிஞர். உண்மை தான்! சமுதாயம் தவிர, தொடுவானமும் மின்னலும் வயல்வெளிகளுங்கூட இவரது ஆரம்ப காலக் கவிதையுலகின் ஒரு பகுதியை ஆக்கிரமித்தன. ஆயினும் இவையும் புதிய நோக்கில் புதுப் புதுச் சிந்தனைகளையும், முற்போக்கான கருத்துக்களையும் வெளிப்படுத்தின என்பதுவே கவனிக்கத்தக்கது.

இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவும். அ.ந.க.வின் கவிதைகளின் ஒரு பகுதியை இனங்கண்டு கொள்வதற்கும் அடிப்படையாகவும் அமைகிறது 'சிந்தனையும் மின்னொளியும்' என்ற கவிதை; அக்கவிதையின் இறுதிப் பகுதி இவ்வாறு முடிகின்றது:

ஜனனப் படுக்கையிலே ஏழைமின்னல் தன்னுடைய
மரணத்தைக் கண்டு துடிதுடித்து மடிகின்ற
சேதி புதினமன்று; அச்சேதியிலே நான்காணும்
நீதி பெரிதாகும்; நிலைகலங்கும் உலகினிற்கு
சோதி கொடுத்துச் சோபித்ததைச் செய்துவிட்டு
ஒடி மறைகிறது; வாழும் சிறுகணத்துள்
தேடி ஒருசேவை செகத்தினிற்குச் செய்ததுவே.
சேவை யதன் மூச்சு; அச்சேவை யிழந்தவுடன்
ஆவி பிரிந்து அகல்வானிற் கலந்ததுவே.
என்னே இம் மின்னல (து) எழிலே என்றிருந்தேன்
மண்ணின் மக்களுக்கு மின்னல் ஒருசேதி சொல்லும்
வாழும் சிறுகணத்துள் வையமெல்லாம் ஒளி தரவே
நாளும் முயற்சிசெய்யும் நல்லசெயல் அதுவாகும்.
இந்தவாறாகச் சிந்தனையில் ஆழ்ந்து விட்டேன்
புத்தி நடுங்கப் புரண்டதோர் பேரிடி; நான்
இந்த உலகினிற்கு வந்தடைந்தேன்; என்னுடைய
சிந்தனையால் இச் சகம்தான் சிறிது பயன் கண்டிடுமோ?

அ. ந. க. வின் முதற் கவிதையாகிய இது அவரது இலட்சியக் கொள்கை வெறியையும் வெளிப்படுத்துகிறது. இம் மின்னல் கூறும் சேதி தமிழ்க் கவிதையுலகைப் பொறுத்தவரை கூட புதுமையானதே. இதுவரையும் மின்னலில் வாழ்வின் நிலைமையையே கண்டு வந்தனர் புலவர். இதற்கு மாறாக, நம்பிக்கையூற்றினை இயற்கை நிகழ்வுகளில் கண்டார் இக் கவிஞர். இத்தகைய புதிய சிந்தனைகள் ஈழத்து நவீன

கவிதைப் போக்கின் புதிய சிந்தனை வளர்ச்சியினைக் குறித்து நிற்கின்றன.

இன்னொரு விதத்திலும் அ. ந. க. வின் கவிதைகள் குறிப்பிடத்தக்கன. சமுதாயம் பற்றி - குறிப்பாக உழைக்கும் மக்களது அவல வாழ்வு, போராட்ட உணர்வு முதலியன பற்றியும் முதன் முதலாகப் பிரக்ஞை பூர்வமாகப் பாடியவர் இவரே. 'தேயிலைத் தோட்டத்திலே', 'முன்னேற்றச் சேனை' கவிதைகள் இவற்றிற்கு எடுத்துக் காட்டாகும். உழைக்கும் மக்களது அவலம் நீங்க எல்லோருக்கும் எல்லாமும் என்பதுதான் புதியதோர் உலகம் பற்றிக் கனவு கண்டார் கவிஞர். 'ஒளிமிகுந்த அப் புதிய உலகம் பற்றியும், அது எவ்வாறு அமையும் என்பது பற்றியும் மட்டுமன்றி, அக்கனவினை நனவாக்க முன்னேற்றச் சேனை ஒன்றையும் அமைத்து அதில் சேருமாறு அனைவரையும் அழைக்கின்றார்:

அடிமையது அழுகையோடு
ஆண்டையது அதட்டலும்
அங்கெழுந்து மறைந்ததுவே!
வியர்வை வெள்ளம் பாய்ச்சித்தன்
உடலதனை எருவதாக்கி
விளைவு செய்து பின்னரும்
உணவிலாது மடிந்தொழியும்
ஊமை மகன் இல்லையே!
படியில் நாடு தம்மிடையே
பதுங்கிச் சுரண்டல் என்பது
பழங்கதையாய் இருக்கும்
அந்தப்புனிதலோகம்'தோற்றிடும்
கடமை தாங்கி எழுந்து செல்லும்
சேனை தன்னை வாழ்த்துவோம்
காளையீர்! நீரும் அந்தச்சேனையோடு சேருவீர்!

இவ்விதங்களில், அதாவது கவிதை உள்ளடக்கத்தைப் பொறுத்த-வரையில் சமுதாயச் சார்புடைய கவிதைகளை பிரக்ஞை பூர்வமாக முதலிற் பாடியவரென்ற விதத்திலும், அடிப்படையில் முற்போக்குக் கவிதை மரபினைத் தொடக்கி வைத்தவரென்ற விதத்திலும் அ. ந. கந்தசாமி விதந்துரைக்கப்பட வேண்டியவராகின்றார்.

இத்தகைய புதிய சிந்தனைகள் - சமுதாயச் சார்பு, முற்போக்குக் கருத்துக்கள் என்பன - புதிய புதிய கற்பனைகளையும் கொண்டிருந்தன. உதாரணமாக 'இரவு' என்ற கவிதையினை இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் காட்டலாம். விண்மீன்கள் நிரம்பிய வானத்தை இருவர் பார்க்கின்றனர். ஒருவன் கவிஞன். அவன் கூறுகின்றான்:

வானத்துக் கம்பளம் பார்த்தையோ - எண்ணில
வயிரங்கள் சிதறிக் கிடந்தன !
மோனத் தவம் அவை செய்தவோ - ஒரு
மூச்சுமிலா தவை ஓய்ந்தன.
மல்லிகைப் பூக்கள்! இவைகளை - ஒரு
மாலையாக இங்கு கட்டியே - நெஞ்சக்
கள்ளி, என் காதலிக் கீந்திட - நான்
கருதினேன்! ஆயின் கைகூடுமோ?'
பாட்டாளி பாடுகிறான்:
வானத்துக் கின்றம்மை வார்த்தது - எந்தன்
வள்ளியைப் போலுடல் மீதெலாம்
காண வெறுத்திடும் கொப்புளம் - இங்கு
கணக்கில்லையே அவை தோன்றின!

எந்தன் உடலினில் தோன்றிய - சுடும்
இரத்த வியர்வைத் துளிகளோ?
அந்தோ! இவ்வானத்தைப் பார்த்திட
ஆவி யெல்லாம் வெந்துருகுதே!

சுருங்கக் கூறின், ஈழத்து நவீன கவிதை மரபின் முன்னோடிகள் என்ற விதத்தில் அ. ந. க. விற்கும் முக்கிய பங்குண்டு என்பது வலியுறுத்தப்பட வேண்டியதொன்றாகும்.

- "நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சியில் அ.ந.கந்தசாமியின் பங்கு", மல்லிகை, 1975.

10

தனித்துவமான மொழி உணர்ச்சிக் கவிஞர் : ஆரையூர் அமரன்

ஈழத்து நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சியில் ஏறத்தாழ 1950 தொடக்கம் 1965 வரையான காலப்பகுதி மொழியுணர்ச்சிக் கவிதைகள் மிகுதியாக வெளிவந்த காலப்பகுதியாம். பிரதேச நிலைப்பட்ட அசமத்துவ வளர்ச்சி கொண்ட ஈழத்து இலக்கிய வளர்ச்சிப் போக்கில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம், வன்னி எனப் பல பிரதேசக் கவிஞர்களும் ஈழத்து நவீன கவிதை ஓட்டத்தில் முதன் முதலாக இணைந்து கொண்ட காலப் பகுதியும் இதுவேயாம்.

இன்று பின்நோக்கிப் பார்க்கின்றபோது, மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்தே அதிக எண்ணிக்கையிலான (மொழியுணர்ச்சி சார்பான கவிதைகள் பாடிய) கவிஞர்கள் உருவாகியுள்ளமை தெரிய வருகின்றது. இராஜபாரதி, ஜீவா ஜீவரத்தினம், எருவில் மூர்த்தி, நீலாவணன், ஆரையூர் அமரன், புரட்சிக்கமால், பாண்டியூரன், திமிலைத்துமிலன் என இவர்களது பட்டியல் நீண்டது. இவர்களுள் காசி ஆனந்தன், புரட்சிக்கமால், ஆரையூர் அமரன், ஜீவா ஜீவரத்தினம் ஆகியோர் தவிர ஏனையோர் கவிதைகள் இன்றுவரை நூலுருப் பெறவில்லை என்பது கவனத்திற்குரியது. எவ்வாறாயினும், இத்தகைய கவிஞர் வரிசையில் ஆரையூர் அமரனின் கவிதைகள் தனித்துவமானவையாகவுள்ளன. எனினும் பலரது கவனத்திற்கு முள்ளாகாத இவரது கவிதைகள் பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆரையூர் அமரனின் கவிதைகள் முக்கியமாக இருவிதங்களில் எமது கவனத்திற்குரியனவாகவுள்ளன. இவற்றுளொன்று, உள்ளடக்கம் சார்ந்தது. இதுபற்றிக் கவனிக்கமுன், இது தொடர்பில், மொழியுரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகள் பற்றி நினைவு கூர்வதவசியமாகின்றது. காலி முகத்திடல் சத்தியாக்கிரகம், சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டம், திருமலை யாத்திரை, கச்சேரி - மறியல் போராட்டம் என்ற விதங்களில் தமிழரசுக் கட்சியின் அத்தகைய செயற்பாடுகள் அமைந்திருந்தன. இத்தொடர்பில், ஆரையூர் அமரனின் கவிதைகள் முதற்கண் முக்கியம் பெறுகின்றன. இதுபற்றி எழுத்தாளர் வ.அ.இராசரத்தினம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது; "இன்று ஈழத்துத் தமிழர் நடத்தும் மொழியுரிமைப் போராட்டம் சில குறிப்பிட்ட தலைவர்களுடையது மாத்திரமல்ல. இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த போராட்டமே. இந்தப் போராட்டத்தின் அவசியத்தைச் சாதாரண மனிதனுக்கும் தெளிவுபடுத்தி, அவனுக்கு உணர்வைக் கொடுக்கும் வகையில் இப்பாட்டுக்கள் அமைந்திருந்தன."

முற்குறிப்பிட்ட போராட்டங்களுளொன்றான "சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டம்" பற்றி ஆரையூர் அமரன் எழுதிய பாடலின் ஒருபகுதி இது:

மெட்டு : "காட்டுக்குள்ளே கண்ட பூவு"

"மோட்டார் தன்னில் போட்ட "சிறி"
நாட்டைக் கலக்குது - இந்த
நாட்டைக் கலக்குது - அதன்
சலசலப்பு வேஷங்கண்டு
சந்தி சிரிக்குது - இந்த
சந்தி சிரிக்குது"

திருமலை யாத்திரை பற்றிய பாடலொன்றின் ஒருபகுதி பின்வருமாறு ஆரம்பிக்கின்றது :

புறப்படு - புறப்படு - புறப்படு
அறப்போர் செய்யப் புறப்படு
அணிவகுத்து நின்றிடு
இறக்க வேண்டி நேரினும்
ஈட்டி போலப் பாய்ந்திடு (புறப்படு)

வடக்கும் கிழக்கும் சேர்ந்தது
வலிவு பெற்று நிற்குது
அடக்கு முறையை அடக்கிட
ஆணும் பெண்ணும் சேர்ந்திடு (புறப்படு)

படைகள் சீறிப் பாயினும்
தடைகள் நூறு போடினும்
மடை திறந்த வெள்ளமாய்
மக்கள் ஒன்று கூடிட (புறப்படு)

ஆட்சிபீடம் அதிர்ந்திட...
அடியில் வீழ்ந்து பணிந்திட...
ஆட்சிவேடம் கலைந்திட...
தொடர்ந்து போரை நடத்திட... (புறப்படு)

சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டம் பற்றி முற்குறிப்பிட்டுள்ள பாடலின் மெட்டு ஒன்று தரப்பட்டுள்ளதல்லவா? இத்தியாதி பண்பு - ஆரையூர் அமரனின் பெரும்பாலான பாடல்களில் வெளிப்பட்டுள்ளது. அதாவது அப்பாடல்கள் திரைப்படப் பாடல் மெட்டுக்களில் அமைந்துள்ளன. அமரன் கையாண்டுள்ள வேறு சில மெட்டுக்கள் பின்வருமாறு :

"நிலவே நிலவே ஆடவா"
"துன்பம் நேர்கையில்...."
"கண்ணிலே இருப்பதென்ன..."
"வறுமையே போனாலும்..."
"சிற்பி செதுக்காத பொற்சிலையே...."
"உன்னைக் கண்டு நான் ஆட..."

இங்குதான் ஆரையூர் அமரனின் பாடல்களின் இன்னொரு சிறப்பினை அவதானிக்கின்றோம். ஏகாம்பரம் (பா.உ) அவர்கள் தமது மதிப்புரையில் குறிப்பிட்டது போன்று, "இன்று திரைப்பட உலகில் பிரபல்யம் அடைந்திருக்கும் இசைகளில் இவர் இப்பாடல்களை அமைத்திருப்பதன் மூலம் தமிழ் பேசும் இல்லங்களில் இசை முழக்கம் ஒலிக்க" வழி சமைத்திருந்தமையே அதுவாகும்.

இவ்வேளை இடைப்பிறவரலாக பொருத்தம் கருதி, இன்னொரு விடயத்தைக் குறிப்பிடுவது பயனுடையது. மக்கள் மத்தியிலே தமது பாடல்கள் செல்ல வேண்டுமென்பதற்காக, பாரதியார் தமது பாடல்கள் சிலவற்றை அன்று பிரபல்யம் பெற்றிருந்த பாடல் மெட்டுக்களிலே அமைத்திருந்தார். இவ்வாறே, 1930களில் மலையகக் கவிஞரான மீனாட்சியம்மாள் நடேசய்யரின் பாடல்களும் அன்று பிரபல்யமடைந்திருந்த பாடல் மெட்டுக்களில் அமைந்திருந்தன. எண்பதுகள் தொடக்கம் ஈழத்தில் போராட்டம் தொடர்பான கவிதைகளில் கணிசமானவை மெல்லிசைப் பாடல்களாக விளங்கி பொதுமக்கள் மத்தியிலே செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளமை நாமறிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு விதமாகக் கூறின், பொதுமக்கள் மத்தியில் கவிதைகள் செல்ல வேண்டுமாயின் அவை இசைப்பண்பினைப் பெற்றிருப்பதும், மெட்டுக்களில் அமைவதும் அவசியமாகின்றதென்ற உண்மை, இவ்வழி வெளிப்படுகின்றதெனலாம்.

நிற்க, ஆரையூர் அமரனது கவிதைகளின் பிறிதொரு சிறப்பு - மிக முக்கியமானதுங்கூட - விதந்துரைக்கப்பட வேண்டியதொன்று. இதுபற்றி அன்றைய நூல் மதிப்புரையாளரொருவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளதை மனங்கொள்வது பொருத்தமானது. "ஆரையூர் அமரனின் பாட்டுக்கள் ஆழம் பாய்ந்தவை - சுதந்திர உணர்வை ஊட்டுபவை. திருமலை நோக்கி தமிழ் பேசுமினத்தவர் செய்த சுதந்திர முக்கியத்துவம் வாய்ந்த யாத்திரையில் ஆரையூர் அமரனின் பாடல்கள் முக்கிய பங்கெடுத்து இதய தாகத்தை அதிகரிக்கச் செய்த நிகழ்ச்சி இன்றும் புதுப் பொலிவுடன் ஞாபகத்திற்கு வருகின்றது"

மேற்கூறியவாறான தனித்துவ அம்சங்கள் கொண்டுள்ள ஆரையூர் அமரனின் பாடல்கள் (ஐந்து தொகுப்புகளாக - திருமலைக்குரல், இதயக்குமுறல், வெற்றிக்குரல், உரிமைக்குரல், அறப்போர்க்குரல்) அன்று வெளிவந்துள்ளன. அவ்வாறிருந்தும், மொழியுணர்ச்சி சார்ந்த கவிதைகள் இயற்றிய கவிஞர்களின் வரிசையில் அன்னாரது பெயர் இன்றுவரை இடம்பெறாமை துரதிர்ஷ்டவசமானதே.

தவிர, ஆரையூர் அமரன் இன்னொரு விதத்திலும் முக்கியமான ஒருவர். மட்டக்களப்பு பிரதேச சிறுவர் பாடல் முன்னோடிகள் வரிசையில் இடம்பெற வேண்டியவராகவும் அவருள்ளார். அரவது சிறுவர் பாடல்களுள் சில, தமிழ் நாட்டுச் சிறுவர் இதழான "அம்புலிமாமமா"வில் அன்று பிரசுரமாகியிருந்தன.

துள்ளித் துள்ளிப் பாயாதே
வெள்ளை ஆட்டுக் குட்டியாரே.
பள்ளம் மேடு இருக்குமே
பாய்ந்தால் கால்கள் உடையுமே

என்பது அம்புலிமாமாவில் (மே. 1951) வெளிவந்த சிறுவர் பாடலொன்றின் பகுதியாகும். ஆரையூர் அமரனின் மொழியுணர்ச்சிக் கவிதைகள் இன்று கிடைக்காவிடினும் நூலுருப் பெற்றிருந்தன. மாறாக அன்னாரது சிறுவர் பாடல்கள் தொகுப்பு பற்றிய விளம்பரத்துடன் நின்று விட்டமையை என்னென்பது?

- "கவனிக்கப்படாத, கவனிக்கப்பட வேண்டிய கவிஞர் ஆரையூர் அமரன்", ஞானம், மார்ச் 2004.

11

ஈழத்து நவீன கவிதையின் மற்றொரு முன்னோடி நுஃமான்

I

ஏறத்தாழ அறுபது (1960) தொடக்கம் கவிதை எழுதிவரும் நுஃமானின் கவிதைத் தொகுப்புகளாக இன்றுவரை வெளிவந்துள்ளவை:

i. **சுய ஆக்கம்:**
   - தாத்தாமாரும் பேரர்களும் (1977)
   - அழியா நிழல்கள் (1982)
   - மழை நாட்கள் வரும் (1983)

ii. **மொழி பெயர்ப்பு:**
   - பலஸ்தீனக் கவிதைகள்
     (1ஆம் பதிப்பு : 1981, 2ஆம் பதிப்பு : 2000)

மேற்கூறியவற்றுள் நுஃமானின் சுய ஆக்கக் கவிதைகள் பற்றி முதலிற் கவனிப்போம். இவ்வாறு கவனிப்பதற்கு முன்னர் நுஃமானிற்கு முற்பட்ட ஈழத்து நவீன கவிதை வளர்ச்சிப் போக்குப் பற்றி நினைவு கூர்வது அவசியமாகின்றது.

ஈழத்திலே நவீன தமிழ்க் கவிதையின் தோற்றம் நாற்பதுகளில் (1940) நிகழ்கின்றது. இக்காலகட்டக் கவிஞர்களுள் முக்கியமானவர் மஹாகவியாவார். மஹாகவி ஈழத்து நவீன கவிதை வளர்ச்சிப் போக்கில் ஏற்படுத்திய முக்கிய மாற்றங்களாக பின்வரும் விடயங்கள் கையாளப்பட்டமையைக் குறிப்பிடலாம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. **உள்ளடக்க ரீதியில் :** காதல், இயற்கை, கிராமம், அன்றாட வாழ்க்கை அனுபவங்கள், நகர வாழ்க்கை, மனிதாபிமானம், சாதிப் பிரச்சினை.

ii. **வடிவ ரீதியில் :** பேச்சோசை, உணர்ச்சி முனைப்பிற்கேற்ப செய்யுள் அடி அமைப்பு மாற்றம், யதார்த்தப்பாங்கு, காட்சிப்படுத்துதல், சிறுகதை அமைப்பு.

ஐம்பதுகளுள் உருவான இரண்டாவது தலைமுறைக் கவிஞர்களுள் நீலாவணன், இ.முருகையன் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்களுள், நீலாவணன், மஹாகவியை விட ஆத்மார்த்த ரீதியான விடயங்ககள் சிலவவற்றை முதன் முதல் கையாண்டவராக விளங்குகின்றார். முருகையன் கவிதைகளிலே சமூகப் பிரச்சினைகளோடு, விஞ்ஞான, கலை, இலக்கிய விடயங்கள் வெளிப்பட்டன. கவிஞர்களின் கவிஞராகவும் அவர் விளங்கினார். வாசகரோடு நெருங்கி உறவாடும் தன்மை பேச்சோசை, முதலான தன்மைகள் இயல்பான முறையில் அவரிடம் வெளிப்பட்டன.

அறுபதுகளில் (1960) முகிழ்த்த மூன்றாவது தலைமுறை கவிஞர்களுள் முக்கியமான ஒருவரே நுஃமான். இக்காலப் பகுதியில் முக்கியம் பெறும் ஏனைய கவிஞர்களாக தா.இராமலிங்கம், மு.பொன்னம்பலம், சண்முகம் சிவலிங்கம் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களுள் தா.இராமலிங்கம் யாழ்ப்பாணப் பிரதேச சாதிப் பிரச்சினை, ஆணாதிக்கம் முதலான விடயங்களை புதுக் கவிதையூடாக வெளிப்படுத்திய வகையில் கவனிப்பிற்குள்ளானவர். மு.பொன்னம்பலம், மனித இருப்பிற்கான விடுதலை பற்றியும், விடுதலைக்கான மனித இருப்பு பற்றியும் ஆத்மார்த்த தளத்தில் எழுதுபவர்.

மேற்குறிப்பிட்ட அறுபதுகளைச் சேர்ந்த முக்கியமான கவிஞர்கள் மத்தியில், நுஃமானின் ஆரம்பகால - (நுஃமானின் வார்த்தைகளில் கூறினால்) "சித்தாந்த வெறுமை நிலவிய கால" - கவிதைகளுள் கணிசமானவை காதல், இயற்கை, பிரிவு, (மதம் சார்ந்த) ஆன்மீகம் அன்றாட வாழ்க்கை அனுபவங்கள் முதலியன பற்றியெழுந்த தன் உணர்வு (Personal) சார்ந்த கவிதைகளாகும். சித்தாந்த வெறுமை அகன்ற பின்னர், அதாவது மார்க்சிய சித்தாந்தத்திற்காட்பட்ட பின் சமூக, அரசியல் பிரச்சினைகள், வர்க்க முரண்பாடுகள், வர்க்க மேலாதிக்கம், (முதலாளி, போடிமார், மதவாதி), சாதி, தொழிலாளர், விவசாயிகள் வாழ்க்கை, மனித நேயம், சமுதாய விமர்சனம், ஒடுக்குமுறை முதலியன பற்றியனவாக

வெளிப்பட்டன. மொழி பெயர்ப்புக் கவிதைகளுள் பெரும்பாலானவை (பின்னர் எழுதப்பட்டவை) இன ஒடுக்குமுறை சார்ந்தனவாக விளங்கின.

வடிவ ரீதியில் நுணுகி நோக்கும் போது, ஆரம்பக் கவிதைகளில் இருவகைப் போக்குகள் வெளிப்படுகின்றன. மரபு சார்ந்த செய்யுள்களாக, ஓசைப்பாங்குடனும், இறுக்கமாகவும் வெளிப்பட்டமை ஒரு நிலை. செய்யுளடிகள், உணர்ச்சி முனைப்பு வேறுபாடுகளுக்கேற்ப மாறி நெகிழ்ச்சியுற்றும் வெளிப்பட்டமை மற்றொரு நிலை. எ-டு :

நீண்ட நெடும்பாதை
நெடுஞ்சோ சுமை கனக்கும்
பாண்டம்
அதற்குப் பரிகாரம் தேடுவதற்கு
வேண்டி நடக்கின்றேன்.
.....

நுஃமானின் பிற்காலக் கவிதைகளில், மேற்கூறிய இரண்டாவது நிலைப்பட்ட வடிவவெளிப்பாட்டைக் காணமுடிகின்ற அதேவேளையில், புதுக்கவிதை வடிவஞ் சார்ந்த வெளிப்பாட்டையும் அவதானிக்க முடிகின்றது. (இதுபற்றி, பின்னர் விளக்கமாகக் கூறப்படும்). அத்துடன், காட்சிப்படுத்தல், நாடகப்பாங்கு, அடிகள் திரும்பத் திரும்ப வருதல் முதலான உத்தி முறைகளின் பயன்பாடு அதிகரித்துச் செல்வதையும் கவனிக்கலாம்.

அடுத்து, மதிப்பீட்டு நிலை நின்று நுஃமான் கவிதைகளின் முற்கூறியவாறான உள்ளடக்கத்தையும் வடிவஞ்சார்ந்த பண்புகளையும் பற்றி அவதானிக்க வேண்டியுள்ளது. இத்தகைய அவதானிப்பிற்கு வரலாற்றுப் பின்புலமும் ஒப்பீட்டு முறையும் அடிப்படையாகவுள்ளன.

நுஃமானின் ஆரம்பகால காதல், இயற்கை, பிரிவு முதலான தனி உணர்வு சார்ந்த கவிதைகள், அவைபற்றி எழுதிய நீலாவணன், மஹாகவி ஆகியோரின் கவிதைகளிலிருந்து வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, நீலாவணனின் காதல் கவிதைகளில் விரக வேதனை மிகுந்திருக்கும்; அங்கவர்ணனை முக்கியம் பெறும். மஹாகவியின் காதல் கவிதைகளில் ஓசை ஒங்கியிருக்கும். இவற்றிலிருந்து வேறுபட்ட மனோரதியப் பாங்கு அருகி யதார்த்தப் பாங்கு மிகுந்த நுஃமானின் காதல் கவிதைகளின் தன்மைக்கு உதாரணமாக பின்வரும் கவிதை அமைகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர்த் துளியில் கருத்தென்ன
என் இனிய பெண்ணே?
வசந்தப் பெருநிலவில்
வெள்ளிகளை
நோக்கி எதற்கிந்த நெடுமூச்சு?
நுண் உணர்வைத்
தேக்கும் உனது சிறுநகையில்
என் உயிரைக்
கட்டி இழுத்த அக்காலத்தை உன்நினைவு
வட்டமிடல் கூடும்.
எனினும் மனம் வெதும்பித்
துன்பத்தில் கண்ணீர் உகுக்கும் துயர் எதையும்
அன்பே, அதில் நான் அறியேனே :

உன்மீதென்
நெஞ்சில் விளைந்து நிறைந்த முழு அன்பினையும்
துஞ்சும் பொழுதும் உறுதி தொலையாத
நம்பிக்கையோடும் பிணைந்து,
நறுமலரின்
தும்பியாய்ப் பாடித் துதித்தேன்
எனினும் நீ
எல்லாம் நடிப்பென்றே எண்ணுவையோ!

இல்லையெனில்
சொல்லுக என் அன்பே
துயர் நிறைந்த, சந்தேகக்
கல்நிறைந்த பாதையில் நீ

கால் நோகச் செல்லாதே
மெல்லிய உன் பாதத்தில் வீழ்ந்து,
என் தனி இயல்பைக்
காணிக்கை செய்யென்று, அக்
கண்ணீரைக் காட்டாதே,
நாணம் நிறைந்த நறைவிழியில்
நம்பிக்கை அங்குசமாய் நின்றால்
அடுத்துன் துயரெல்லாம்
எங்கோ மறையும்.
இருவர் இதயத்தும்
செம்பொன் சுடர்ந்து
செழுமை பெற வேண்டில்
நம்பிக்கை வேண்டும் நமக்கு.

இன்னொரு காதற்கவிதையின் ஒரு பகுதியை இங்கே எடுத்தாள்வதனூடாக, இக் கவிஞனின் காதல் உள்ளம் எத்தகையதென்பதையும் தெளிவாக உணர முடிகின்றது.

நீ மட்டும் இவ்வுலகாய் இருப்பாயானால்
நிழல் வீசும் பாதையிலே நடப்பதைப் போல
சாமட்டும் துயரத்தைக் காணாதவாறு
சந்தோசமாய்
நானும் வாழ்தல் கூடும்
நீ மட்டும் இல்லையடி உலகம்
இங்கே, நிதமும்
நான் சந்திக்கும் மனித மூச்சால்
பூ மொட்டு விரிந்தது போல் பூத்த நெஞ்சப்
பூவினிலே புழுதிபடும் கதை சொன்னேன் நான்

நுஃமானின் காதற் கவிதைகளில் மேற்கூறியவாறான தன்மைகளை சமகால ஈழத்துக் காதற் கவிதைகளிலோ, தமிழகக் கவிதைகளிலோ காண்பதரிது. ஏனைய காதற் கவிஞர்களின் கவிதைகள் காதலியை உடலால் நெருங்கிச் செல்ல, நுஃமானின் காதற் கவிதைகள் உள்ளத்தாலும் உன்னத உணர்வுகளாலும் நெருங்கிச் செல்வனவாக வெளிப்படுகின்றன என்று கூறுவதில் தவறில்லை!

இனி மார்க்சிய நோக்கமுடைய முற்போக்குக் கவிஞரான நுஃமானின் கவிதைகளுக்கு வருவோம். இவ்வழி, சமகால முற்போக்குக் கவிஞரான சுபத்திரன், முற்பட்டவரான பசுபதி ஆகியோரது கவிதைகளையும் ஒப்புநோக்கில் கவனிப்போம். பொருத்தம் கருதி, தொழிலாளர் பற்றிய பசுபதியின் கவிதையையும் நுஃமானின் கவிதையையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

"பாட்டாளி துயரம்" பற்றிய பசுபதியின் கவிதையொன்றின் ஒருபகுதி பின்வருமாறு:

பஞ்சுபடும் பாடுபடும் அவர்தம் உள்ளம்!
பாடுபட்டுப் பலனிழந்து நிற்கும்போது
நஞ்சனையார் அவருள்ளம் காண்பதில்லை!
நலன் தனது சுயநலத்தை நாடி நிற்கும்
வஞ்சனையார் வாழுகின்றார் வாய்ப்ப வர்க்கு!
வளமூட்டும் வினைஞர்க்கு வாழ்வு இல்லை;
வெஞ்சினமே கொள்ளுதடா! வீணர் கூட்டம்
விளங்கவில்லை! அவர் துயரம் சொல்லப் போமோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே, தொழிலாளர் துயரம் பற்றிய கருத்துக்கள் சார்ந்த வெளிப்பாடே இடம் பெறுகின்றது. நுஃமானின் பின்வரும் கவிதை அத்தகையதன்று : காட்சிப்படுத்தலாகவும், தொழிலாளர் துயரம் (பட்டினி) உள்ளமைந்து - வெளிப்படுவதாகவும் காணப்படுவது கவனத்திற்குரியது:

'அவர்களும் பூனைகளும் நாய்களும்'

கார்கள் எல்லாம் போனபிறகு
ஹோட்டல் கதவுகள் மூடிய பிறகு
விளக்குகள் எல்லாம் அணைந்த பிறகு
அவர்கள் வருவர்.....
தினமும் வருவர்.....

சப்பி எஞ்சிய இறைச்சிச் சவ்வுகள்
கை துடைத்த கடதாசித் துண்டுகள்
கோழி முட்டைகள்
நண்டுக் கோதுகள்
காய்கறி அரிந்த கழிவுகள்
நூடுல்ஸ்
ஃப்றைற் றைஸ்
தென்னந் தும்புகள்
தேங்காய்ப் பூத்துகள்
குப்பைத் தொட்டியில் குவிந்து கிடக்கும்.

அவர்கள் வருகையிலே
நின்று சுவைத்த
பூனைகள், நாய்கள்
பொறாமையோடு விலகிச் செல்லும்
தொலைவில்
அவர்கள் முகத்தைப் பார்த்தவாறே
உட்கார்ந்திருக்கும்
ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு நாளும்.....

இவ்வாறே, சுபத்திரனின் சாதிப் பிரச்சினை பற்றிய "நெஞ்சை நிமிர்த்திடுவாய்" என்ற கவிதை, பாளை சீவுகின்ற தோழரின் வல்லமை பற்றிக் கூறி, ஆலயப் பிரவேசம் செய்யுமாறு போதனைத் தொனியில் பிரச்சாரப் பாங்கில் அவர்களைத் தூண்டுவதாக வெளிப்படும்.

கோயிற் கதவுகள் மூடிக் கிடப்பது
கண்டு எழுந்திடுவாய் - மத
வாயிற் கதவினைக் காலப்பெருங்கடல்
வந்து அடிக்குதடா - எழு
பாயிற் கிடந்தது போதும் உனதணிப்
பாசறை வென்று வரும் - மத
நோயிற் பிடித்தது போரில் முறிந்தது
நெஞ்சை நிமிர்த்திடுவாய்

மாறாக, நுஃமானின், "கோயிலின் வெளியே" நாடகப் பாங்கில் வெளிப்படுகின்றது. அந்நெடுங் கவிதையின் ஆரம்பப் பகுதிகள் பின்வருவன:

(1)

கோயிலின் வெளியே கூச்சல் கேட்டது
பூட்டிய கதவின் புறமாய் நின்ற
மக்கள் பெரிதாய்ச் சத்தம் இட்டனர்.

இரும்புக் கதவை இழுத்துப் பூட்டிய
குருக்கள்
உள்ளே குத்து விளக்கினை
ஏற்றி வைத்தே இறைவனைத் தொழுதார்.

கோயிலின் வெளியே கூச்சல் கேட்டது
பூட்டிய கதவின் புறமாய் நின்ற
மக்கள் பெரிதாய்ச் சத்தம் இட்டனர்.
குருக்களே நாங்கள் கும்பிட வந்தோம்.
கதவைத் திறவும்
கதவைத் திறவும்
கடவுளை நாங்கள் காண வந்தோம்
கதவைத் திறவும்
கதவைத் திறவும்

மக்களின் குரல் அம்மதில்களின் மீதும்
கடவுள் இருந்த கருவறை உள்ளிலும்
மோதி மோதி
முன்புறம் திரும்பிக்
காற்றில் ஏறிக் ககனம் சென்றது.

ஆரவாரம் அதிகரித்ததும் அக்
கோபுரத்தில் நின்ற குருவிகள்
கத்திக் கொண்டு கலைந்து பறந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2)

இரும்புக் கதவை இழுத்துப் பூட்டிய
குருக்கள்
உள்ளே குத்து விளக்கினை
ஏற்றி வைத்தே இறைவனைத் தொழுதார்.
ஆண்டவா,
இந்தத் தீண்டத் தகாத
பாவிகள் உன்னைப் பார்க்கத் தகுமோ?
இவர்கள் மேனியின் வியர்வை நாற்றமும்
அழுக்கிலே புரண்ட அவர்கள் பாதமும்
தொழத்தகும் உனது தூய்மையான
வாயிலைக் கடந்து வரத்தகுந்ததுவா
ஐயனே பெரிய அபச்சாரம் இது
ஐயனே பெரிய அபச்சாரம் இது!

குருக்கள் தலையிலே
குட்டிக் கொண்டார்
மணியை அடித்தொரு
வாழ்த்திசை பாடினார்.

(3)

வாயிலில் நின்ற மனிதரின் கூச்சல்
கடவுள் இருந்த கருவறை உள்ளில்
மோதி மோதி எதிரொலி செய்தது.
வெளியிலே மெதுவாய் இருள் கவிகிறது
மேற்கிலே சூரியன் விழத் தொடங்கியது.
காற்று மெதுவாய் அசைந்ததும் - அங்கே
புழுதிப் படலம் எழுந்து கலைந்தது.

காய்ந்த உடலும் கசங்கிய உடையும்
வியர்வை நாறும் மேனியுமாக
நின்ற அம்மக்கள் நெருங்கி வந்தனர்.

கோயிலின் உள்ளே கூடி நின்ற
தர்மகர்த்தாக்களும் சத்தம் இட்டனர்
கோப வெறியில் மேனி கொதித்தனர்
கண்கள் சிவந்து கனிந்து கிடந்தன.

நாய்களே,
உள்ளே நாங்கள் தொழுகையில்

பேய்கள் போலப் பிதற்றுகின் றீர்களா?
ஒன்றும் அறியாப் பன்றிக் கூட்டம்
அழுக்கிலே புரளும் அற்ப சனங்கள்
நீங்கள் எம்முடன் நிகராய் நிற்பதா?
நாங்கள் வணங்கும் கடவுளின் எதிரே
நீங்கள் வந்து நிற்கவும் தகுமா?
போங்கள் அப்பால்
போங்கள் அப்பால்.....

கோயிலின் உள்ளே கூடி நின்ற
தர்மகர்த்தாக்கள் சத்தம் இட்டனர்
நீறுபூசிய நெற்றியில் கசிந்த
வியர்வையைப் பட்டுச் சால்வையால் வீசினர்.

பூட்டிய கதவின் புறமாய் நின்ற
மக்கள் பெரிதாய்ச் சத்தம் இட்டனர்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாகக்
கோயிலை எங்கள் குறுக்கே நிறுத்திய
அந்த நாட்கள் அகன்று விட்டன

உங்கள் வாழ்க்கை உயர்வதற் காக
கோயிலை எங்கள் குறுக்கே நிறுத்திய
அந்த நாட்கள் அகன்று விட்டன.

கலிமுற்றியது, கலிமுற்றியது!
தெய்வ நியதியைப் பொய்யாக் கிடவும்
தெய்வத் தலத்தைத் தீட்டுப் படுத்தவும்
பாபாத் மாக்கள் பயப்பட வில்லை
அபச்சாரம் இது
அபச்சாரம் இது!

குருக்கள் தலையிலே குட்டிக் கொண்டு
வெளியிலே வந்து வீதியை நோக்கினார்.
.....

இ.முருகையன் தான் எழுதிய "கோபுர வாசல்" என்ற நாடகத்திற்கு நுஃமானின் மேற்கூறிய நெடுங்கவிதை பயன்பட்டுள்ளதாகக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

சுருங்கக்கூறின், சமகாலத்திற்குரிய, ஈழத்தினதும் தமிழகத்தினதும் முற்போக்குக் கவிதைகளில் இடம்பெற்றுள்ளதான குறைபாடுகள் (பிரச்சாரம், போதனை, கோஷம், வாய்ப்பாட்டுத் தன்மை முதலியன)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகன்று போவதையும் புதிய உத்தி முறைகளுடனும் (காட்சிப்-படுத்தல், நாடகப்பாங்கு, சிறுகதைத் தன்மைகள், கவிதையடிகள், திரும்ப வருதல் முதலியன) கலாபூர்வமான முறையிலும் முற்போக்குக் கவிதைகள் முகிழ்ப்பதையும் முதன்முதலாக நுஃமானின் கவிதை-களில் பரவலாகக் காணமுடிகின்றமை கண்கூடு. (முந்தைய தலைமுறை சார்ந்த முருகையன் கவிதைகளிலும் சமகாலம் சார்ந்த சண்முகம் சிவலிங்கத்தினது கவிதைகளிலும் அத்தகைய இயல்புகள் ஓரளவு இடம்பெற்றிருப்பதையும் மறுப்பதற்கில்லை).

மேலும் பேரினவாத ஒடுக்குமுறை சார்ந்து எழுதுகின்ற ஈழத்து இளந்தலைமுறையினர் அன்றாட வாழ்க்கை அனுபவத்துடன் பொருத்தி தமது அத்தகைய அனுபவங்கள் வெகு இயல்பான விதத்தில் வெளிப்படுத்தி வருவது யாமறிந்ததே இவ்விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கவிஞர்களுள் முக்கியமான ஒருவராகவும் நுஃமான் உள்ளார்.

கவிதை வெளிப்பாட்டு முறையிலே நுஃமான் ஏற்படுத்திய முக்கியமான மாற்றமொன்று பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் அடுத்து எடுத்துரைப்பது அவசியம். அதாவது, ஆரம்பத்தில் மரபுவழிக் கவிதைவடிவங்களைச் சிறப்பாகவும், பின்னர் செய்யுளடிகளைக் கருத்து வேறுபாடுகளுக்கேற்ப மாற்றியும் பயன்படுத்திய நுஃமான், அதன்பின்னர், இன்னொரு நிலையில் "புதுக் கவிதை" வடிவத்தைக் கையாளத் தொடங்குகின்றார். இத்தகைய மாற்றம் 1960 களில் நிகழ்கின்றது. பின்வரும் கவிதையுடன் அது ஆரம்பிக்கின்றதென்றும் கூறத் தோன்றுகின்றது.

'ஹோசிமின் நினைவாக'

i

வேட்டை விமானம் விண்ணில் இரைந்தன
விசப்புகைக் குண்டுகள்
வீழ்ந்து வெடித்தன
எகிறிப் பறந்தன
பீரங்கிக் குண்டுகள்
சடசடத்தன மெஷின் துப்பாக்கிகள்.

ஓலம் அழுகை
கூக்குரல் ஒலிகள்
ஓலம்.....
அழுகை.....
கூக்குரல் ஒலிகள்.....

வயற்புறங்களிலும்
வாசற்படியிலும்
ஓடிய இரத்தம் உறைந்து கிடந்தது.

புகைந்து கொண்டிருந்தன குடிசைகள்.
கரும்புகை
மிக மெதுவாக விண்ணிற் கலந்தது.....

ii

அடர்ந்த காட்டில் அமைதி துயின்றது.
இடைக்கிடை எங்கோ இருண்ட பகுதியில்
காட்டுப் பூச்சிகள் கத்திக் கேட்டது.
மூங்கிற் புதர்கள் மூடிய ஆற்றின்
கரையில் மெதுவாய்க் காற்று வீசியது.

தண்ணீர்ப் பையில் தண்ணீர் நிரப்பிய
வீரன் நிமிர்ந்து மேலே நோக்கினான்.....
மூங்கிலில் வண்ணப் பூச்சிகள் மொய்த்தன.

துங்கி இருந்த படையினை நோக்கி
முதுகுச் சுமையுடன்
மரங்களின் கீழே
மடியில் வளர்த்திய
துவக்குடன்
ரொட்டியைச் சுவைத்தவாறு
வீரர் இருந்தனர்.....

மிகமெதுவாக
வானொலிக் கருவி வழங்கிய மெல்லிசை
நின்றது.....
சிறிது நீண்டது மௌனம்.....
ஹனோய் வானொலி கம்மிய குரலில்
ஒலிபரப்பியது.....
'ஹோசிமின் இறந்தார்.....'

ரொட்டித் துண்டுகள் மண்ணில் விழுந்தன.
நிசப்தமான மரங்களின் நிழலில்
மௌன அஞ்சலி நீண்டு வளர்ந்தது.....

உன் நரம்புகளில் ஓடிய உணர்வின்
சிறுதுளி எனினும் சேர்க எம் குருதியில்.....
இன்னும் இன்னும் இழக்கிலோம் எங்கள்
மண்ணிலே சிறிய மணலையும் நாங்கள்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொமாண்டர் அடங்கிய குரலில் கூறினான்.
காட்டுப் பறவைகள் கத்திப் பறந்தன.
மீண்டும் வேட்கை விமானம் இரைந்தன.
அடர்ந்த காட்டின் மரங்களின் அடியில்
விசப்புகைக் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.....
பதுங்கி இருந்த படையினர் கரங்களின்
மெஷின் துப்பாக்கிகள் வெடிக்கத் தொடங்கின.....

ஓங்கி வளர்ந்த உயரமான
மூங்கிற் புதர்கள் மூடிய இருளில்
மீண்டும் விமானம் வீழ்ந்து நொறுங்கின.

மேலே உள்ள கவிதை புதுக்கவிதை வடிவத்திலே (நும்மான் நோக்கில் அது புதுக்கவிதை சார்ந்த வடிவமன்று) வெளிப்பட்டுள்ளதென்பதைவிட, அது அரசியல் சார்ந்த உள்ளடக்கத்தைக் கொண்டிருப்பதே கவனத்திற்குரிய நிலையாகும். சமகால ஈழத்துப் புதுக் கவிஞருள் அவ்வடிவத்தை அரசியலுக்கு முதன் முதல் பயன்படுத்தியவர் நும்மான் என்றே கூறத்தோன்றுகின்றது. அவ்வாறாயின் எழுபதுகளில் ஈழத்திலே உருவான இளந்தலைமுறையினர் சிலரிடத்தும் அவ்விதத்தில் பாதிப்பை ஏற்படுத்தியவருள் நும்மான் முதன்மையானவராகின்றார். முதற் தலைமுறை சார்ந்த மஹாகவியினதும், இரண்டாவது தலைமுறை சார்ந்த நீலாவணனதும் பாதிப்பிற்குள்ளான நும்மான், விரைவில் அதிலிருந்து விடுபடுகின்றார். விடுபட்ட பின்னர் தனது ஆளுமைகளை அடுத்த தலைமுறையினரிடம் தொற்ற வைக்கின்றார். இவ்வழி, கலாபூர்வமான முற்போக்குக் கவிதைகள் எழுதியவரென்ற விதத்திலும், அரசியல் கவிதைகள் எழுதியவரென்ற விதத்திலும் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சிப் போக்கில் மடைமாற்றம் ஏற்படுத்தியவராகின்றார்!

மேற்கூறியவாறு நும்மானால் ஏற்படுகின்ற மடைமாற்றம் தமிழ் நாட்டுக் கவிதை வளர்ச்சிப் போக்கிற்கும் ஏற்புடையதே. எழுபதுகளில் "வானம்பாடிக் குழுவினர்", குறிப்பாக மார்க்சிய அணியினர் புதுக்கவிதையில் முற்போக்கு அம்சங்களை இடம் பெறச் செய்தனரென்பதும் அவ்வழி, புதுக்கவிதையை ஜனரஞ்சகப்படுத்தினரென்பதும் உண்மை, எனினும் இவர்களது கவிதை வெளிப்பாட்டு முறை எத்தயகையது? அதனூடாக வெளிப்படும் பலவீனங்கள் யாவை? என்பதனை ஓரளவு புலப்படுத்துவதற்காக, வானம்பாடிக் குழு சார்ந்த கவிஞர் ஒருவரின் கொள்கைப் பிரகடனத்தின் ஒரு பகுதியை இவ்விடத்தில் எடுத்தாள்வது அவசியமானது:

வானம்பாடிகள் நாங்கள்.....
வசந்த மின்னல்கள் நாங்கள்!
மலர்மொக்கு வாய்திறந்து
மதுரயுகம் வருகுதென்று
மண்ணின் புழுதிக்கு
மந்திரங்கள் பாடுகின்ற
வானம்பாடிகள் நாங்கள்
வசந்த மின்னல்கள் நாங்கள்
மழையருவி அகங்காரம்
மறுக்கின்ற கல்லணைகள்
நித்தம் புது மோனங்கள்
நிர்மிக்கும் பிரும்மாக்கள்
இருண்ட நெடுஞ்சரித்திரத்தில்
எதிரொலிக்கும் காலடிகள்
மரபுச் சமவெளி மேல்
விம்முகின்ற ஜீவநதிப் பிரவாகம்
சரிகின்ற பழமையின்மேல்
தளிர்த்த புதுக்குருத்துக்கள்
இதயவயல் வண்டல்களில்
உயிர்நடவுப் பயிர்க்குலைகள்
உமது ஜீவநதிக் கவிதைக்குத்
தானாக இலக்கணக் கரைகள்
உருவாகின்றன.
.....
கனைத்து கறுத்த சேரிப் புறங்களுக்காக
எமது புல்லாங் குழல்களால்
கீதாஞ்சலிகள் புனைந்து கொடுப்போம்.
.....
முப்பது முக்கோடி தேவர்களிருக்கும்
அந்த வானத்தை
நாங்கள் ஆராதிக்கவில்லை!
எங்களுக்கு மேலே
அகண்டகாரமாய் விரிகின்றது
சோசலிச வானம் - அதன்
மணிநீல வீதிகளில் - எம்
ஜோதிச் சிறகுகள் விரிகின்றன.....
வானம்பாடிகள் நாங்கள்.....
வசந்த மின்னல்கள் நாங்கள்.....

- சிற்பி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம்பாடிக் குழுவினரின் பலவீனங்களைக் காட்டும் மேற்கூறிய கவிதையை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்கின்றபோது, ஈழத்து முற்போக்குக் கவிதைகளின் பலமும் அவ்வழி நுஃமான் கவிதைகளின் சிறப்பும் அவ்வழி தமிழ் நாட்டுக் கவிதைகளுட்பட ஒட்டுமொத்தமான முற்போக்குக் கவிதை வளர்ச்சியில் ஈழத்து முற்போக்குக் கவிஞரின் பங்களிப்பும் பற்றி மனங்கொள்வது அவசியமாகின்றது!

நிற்க, முற்கூறியவாறு ஈழத்து நவீன கவிதை வளர்ச்சிப் போக்கிலே நுஃமான் ஏற்படுத்திய மடைமாற்றம் அல்லது முன்னோடித் தன்மை என்பது அவரது சுயமான கவிதைகளூடாக மட்டுமன்றி மொழி பெயர்ப்புகளூடாகவும் வளமும் வலுவும் பெறுகின்றமை பற்றி எடுத்துரைப்பது அவசியமே. இவ்விதத்தில் "பலஸ்தீனக் கவிதைகள்" இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் நுஃமான் பின்வருமாறு கூறுவது கவனத்திற்குரியது :

> பலஸ்தீனக் கவிதைகள் வெளிப்படையான அரசியல் சார்புடையவை. இது பலஸ்தீனப் படைப்பாளிகளின் வாழ்நிலை அனுபவத்தின் அடிப்படையில் அமைவது. அவர்களின் ஒவ்வொரு உயிர்க்கணுவும் அன்றாட அரசியல் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளது. அவர்களால் அதிலிருந்து தப்ப முடியாது..... கவிதையை, இலக்கியத்தை சமூக அரசியல் இயக்கங்களிலிருந்து வேறுபிரித்து அதைத் தன் உள்ளுணர்வின் குரலாகப் பூஜிக்கும் சில தமிழ் நாட்டுப் படைப்பாளிக்கு, விமர்சகர்களுக்கு இந்தக் கவிதையின் குரல் ஒரு நெருடலாக, கவிதைக்குப் புறம்பான வெற்றுக் கோசமாகக் கூடத் தோன்றக்கூடும்..... இதற்கு மறுதலையில் ஈழத்துப் படைப்பாளிகள், வாசகர்களைப் பொறுத்தவரையில் இது அவர்களின் உணர்வின் குரலாக, அவர்களின் சொந்த வாழ்க்கை அனுபவத்தின் வெளிப்பாடாகவே அமைகின்றது. கடந்த இருபது ஆண்டுகளுள் பலஸ்தீனக் கவிதை சமகால ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபுக்குள் உள்வாங்கப்பட்டதன் பின்னணி இதுதான். உலகின் எந்த ஒரு மூலையிலும் எல்லாவிதமான அடக்கு முறைகளையும் எதிர்த்துப் போராடும் மக்களின் குரலாகவும் பலஸ்தீனக் கவிதையின் குரல் ஒலிக்கின்றது எனக்கூறுவது தவறல்ல.

மேலே ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று, "கடந்த இருபது ஆண்டுகளுள் பலஸ்தீனக் கவிதை சமகால ஈழத்துக் தமிழ்க் கவிதை மரபுக்குள் உள்வாங்கப்பட்டமைக்குச் சில உதாரணங்களை இவ்விடத்தில் எடுத்தாள்வது பொருத்தமானது:

அவர்கள் அவனைச்
சுட்டுக் கொன்றபோது
எல்லோரும் பார்த்துக் கொண்டு
நின்றார்கள்.
இன்னும் சரியாகச் சொன்னால்
அவன் சுடப்படுவதைக்
காண்பதற்காகவே
அவர்கள் நின்றனர்.....

என ஆரம்பிக்கும் பலஸ்தீனக் கவிதைக்கும்

அவனது வாயில் அவர்கள்
சங்கிலிகளைப் பிணைத்தனர்
மரணப் பாறையுடன் இறுகக் கட்டினர்
பின்னர் கூறினர்
நீ ஒரு கொலைகாரன் என்று.....

என ஆரம்பிக்கும் ஈழத்துக் கவிதைக்கும் ஓரளவு ஒற்றுமையுள்ளது. மேற்கூறிய கூற்றில் சேரனின் கவிதை எது, மஹ்மூட்தர்வீஷ் கவிதை எது என்று கூறமுடியாது. (மஹ்மூட்தர்வீஷ் கவிதையை வாசித்தவுடன் சேரன் தனது கவிதையை எழுதினார் என்பது இதன் பொருளன்று). மஹ்மூட்தர்வீஷின் "வாக்குமூலம்" இவ்வாறு ஆரம்பமாகின்றது:

எழுதிக் கொள் இதனை
நான் ஓர் அராபியன்
.....

போராளிக் கவிஞர் கப்டன் வானதியின் கவிதையொன்று பின்வருமாறு தொடங்கும்:

எழுதுங்களேன்
நான்
எழுதாது செல்லும்
என் கவிதையை
எழுதுங்களேன்
.....

சமீஹ் அல் காசிமின் "சிறையிலிருந்து எழுதும் கடிதம்" என்ற கவிதைப் பாணியையும் புதிய தலைமுறையினர் சிலர் பின்பற்றியுள்ளமை நினைவிற்கு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II

ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் நுஃமானின் ஆளுமை மேற்கூறியவாறு சுய கவிதைகள், மொழி பெயர்ப்புக் கவிதைகளூடாக மட்டுமன்றி பிறிதொரு தளத்திலும் நடைபெற்று வந்துள்ளது. இவ்வழி பின்வரும் விடயங்கள் கவனிப்பிற்குரியனவாகின்றன :

i. கவியரங்கக் கவிதைகள்: கவிதையை மக்களிடம் கொண்டு செல்கின்ற சாதனமாக, ஐம்பது, அறுபதுகளில் (1950, 60) ஈழத்தில் கவியரங்குகள் முதன்மை பெற்று விளங்கின. பொது மேடைகளும் வானொலியும் இதற்குக் களமாயின. எனினும், காலஅடைவில் இக்கவியரங்குக் கவிதைகளிலே குறைபாடுகள் ஏற்படலாயின. அவை "சொற்பொழிவு"களாகவும், மலினமான பகிடிகளுக்கான இடமாகவும், சிலசமயம் சங்கீத மேடைகளாகவும் மாறலாயின. இத்தகைய ஆரோக்கியமற்ற போக்கிலே மஹாகவி, நீலாவணன், இ.முருகையன் முதலானோர் போன்று மாற்றங்களை ஏற்படுத்தியோர் வரிசையில் நுஃமானுக்கும் முக்கிய இடமுள்ளது. நுஃமானின் "தாத்தாமாரும் பேரர்களும்" தொகுப்பிலுள்ள ஐந்து நெடுங்கவிதைகளுள் நான்கு கவியரங்கக் கவிதைகளாக இருப்பதொன்றே இதற்குப் போதிய ஆதாரமாகும்.

ii. கவிதா நிகழ்வு : கவியரங்கக் கவிதைகள் தளர்ச்சி கண்ட நிலையிலே எண்பதுகளளவில் (1980) குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் "கவிதா நிகழ்வு" (கவிதைகளை மேடையிலே "நிகழ்த்திக் காட்டுதல்") பரிசோதனை முயற்சியாக அறிமுகமாகியது தொடங்கியது. ஒரு குறிப்பிட்ட காலம் விடுதலை இயக்கங்கள் சார்ந்த மேடைகளிலும் செல்வாக்குப் பெற்று விளங்கிய கவிதா நிகழ்வு (காலகட்டத்தில் தளர்ச்சி கண்டாலும்) உருவாக்கத்திலும் நுஃமானுக்கு முக்கிய இடமிருந்தமை பலராலும் அறியப்படாததொரு விடயமாகும்.

iii. கவிஞன் : ஈழத்து நவீன கவிதை வரலாற்றில் "தேன்மொழி" (1955) "நோக்கு" (1964) என்றவாறு அவ்வப்போது கவிதைக்கான சஞ்சிகைகள் தோன்றி மறைந்துள்ளன. இவ்வழி, நுஃமானை தொகுப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த "கவிஞன்" (1969) இதழ் கவிதையின் சமூகப் பெறுமானம், கலைத்தரம் ஆகிய இரண்டு அம்சங்களையும் முக்கியமாக வலியுறுத்தியது. ஆசிரியத் தலையங்கங்கள் ஊடாகவும், காத்திரமான கட்டுரைகள் ஊடாகவும் அதனைச் சாத்தியமாக்கியது. இவ்வழி, புதிய தலைமுறையினருக்கு களமமைத்துக் கொடுத்ததுடன், கவிதையின் படைப்புத் திறன் பற்றிய தெளிவையும் அவர்கள் மத்தியில் ஓரளவு ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக, கிழக்குப் பிரதேசக் கவிஞர்கள் மத்தியில் "கவிஞன்" ஏற்படுத்திய தாக்கம் இன்று பின்நோக்கிப் பார்க்கும் போது தெளிவாகப் புலப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

iv. நூல் வெளியீடுகள் : கல்முனை வாசகர் சங்கத்தினூடாகவும் வேறுவிதங்களிலும் குறிப்பாக கவிதைத் தொகுப்பு அவ்வப்போது வெளிவந்ததிலும் நுஃமானுக்கு முக்கிய பங்குள்ளது. இவ்வழி மஹாகவியின் கவிதைத் தொகுப்புகள் பலவற்றை வெளியிட்டு ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் சரியான விதத்தில் பொருத்தமான காலப் பகுதியில் மஹாகவியை இனங்காட்டச் செய்தமை விதந்துரைக்கப்பட வேண்டிய விடயமாகும்.

v. தொகுப்பு முயற்சிகள் : நுஃமானை இணையாசிரியராகக் கொண்ட ஈழத்துப் பதினொரு கவிஞர்கள் (1984) என்ற தொகுப்பு நூல் இவ்விதத்தில் முக்கியமானதொரு முயற்சியாகும். ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியைப் பற்றி, ஆதாரங்களுடனும் காத்திரமான ஆய்வு முன்னுரையுடனும் குறிப்பாக தமிழ் நாட்டினருக்கு எடுத்துக் காட்டிய முக்கியமானதொரு தொகுப்பு அது என்பதில் தவறில்லை.

vi. கவிதை விமர்சனம் : நுஃமானின் விமர்சனஞ் சார்ந்த கட்டுரைகளும், விமர்சன நோக்கு இழையோடும் முன்னுரைகளும், நூல்களும் பல கிளைப்பட்டனவாயினும் இவற்றுள் கவிதை விமர்சனஞ்சார்ந்த வெளிப்பாடுகள் முக்கியமானவை. இலக்கியத்திற்கும் அரசியலுக்குமிடையிலான உறவு பற்றியும் இலக்கிய முழுமை பற்றியும் (தனி உணர்வும் சமூகப் பிரச்சினைகளும்) இலக்கியத்தின் அழகியல் பெறுமானம் பற்றியும் வெளியிட்டு வந்த கருத்துக்கள் தமிழகச் சூழலிலும், ஈழத்துச் சூழலிலும் முக்கியமானவையும், அவசியமானவையுமாகின்றன. இவை பலவும் கவிதைகளை அடிப்படையாகக் கொண்டே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வழி நுஃமான் கவிஞராக மட்டுமன்றி, கவிதை விமர்சகராகவும் மேற்கிளம்புகின்றமை வற்புறுத்தப்படவேண்டியதொன்று. ஏனெனில், குறிப்பாக ஈழத்தைப் பொறுத்தவரையில் ஈழத்து முன்னோடி விமர்சகர்களான பேராசிரியர்கள் கைலாசபதியும், சிவத்தம்பியும் நாவல், சிறுகதைத் துறைகளில் கவனஞ் செலுத்திய அளவிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைத் துறையில் கவனஞ் செலுத்தியிருக்கவில்லை. இத்தகைய நிலை நின்று நோக்கும் போது கவிதை விமர்சகர் என்ற விதத்திலான நுஃமானின் பல்வேறுமட்டச் செயற்பாடுகளும் இன்று பின்நோக்கிப் பார்க்கும் போது முக்கியத்துவம் மிக்கனவாகின்றன. கவிதை பற்றிய அவரது விமர்சனக் கருத்து வெளிப்பாடுகளுக்கு அவரது படைப்புகளே முன்னுதாரணமாகின்ற போது இன்னொரு விடயமும் எமது கவனத்தை அவாவி நிற்கின்றது. ஈழத்து முன்னோடி விமர்சகர்கள், விமர்சகர்களாக மட்டுமே இருக்கின்றனரே தவிர, படைப்பாளிகளாக இருக்கவில்லை என்ற குறை நுஃமானூடாக நீங்குகின்றதென்பதே அதுவாகும்!

- "நுஃமானும் கவிதையும்",
முற்போக்கு இலக்கியத்தில்
கவிதைச் சுவடுகள், 2006.

12

எழுபதுகளின் ஆளுமைகள் : வில்வரத்தினம், சிவசேகரம்

I

ஈழத்து நவீன கவிதை வளர்ச்சிப் போக்கிலே முக்கிய இடம் பெறுகின்ற கவிஞர்கள் பற்றிய ஆய்வுகள் குறைவாகவே இடம் பெற்றுள்ளதாயினும் ஓரளவாவது 1970கள் வரையான கவிஞர்கள் பற்றி உதிரியாகவும் (உ-ம்: மஹாகவி, நீலாவணன், நுஃமான்) பதினொரு ஈழத்துக்கவிஞர்கள் என்ற தொகுப்பிலே (1984) சுருக்கமாகவும் இடம்பெற்றிருப்பதனை இலக்கிய ஆர்வலர்கள் அறிந்திருப்பர். எனினும் 1970களுக்குப் பிற்பட்ட கவிஞர்கள் பற்றி அவ்வாறான முயற்சிகளெவையும் நடைபெற்றிருப்பதாகக் கூறமுடியாது. இந்நிலையில் 1970களில் உருவான முக்கியமான கவிஞர்களுள் சு.வில்வரத்தினம், சிவசேகரம் ஆகிய இருவரும் பற்றி நோக்குவது அவசியமாகின்றது. (இவர்கள் ஒவ்வொருவரினது தனித்துவமும் தமிழ்க் கவிஞர்களுள் இவர்க்குரிய முக்கியத்துவமும் தனித்தனியாகவே இங்கு கவனிக்கப்படவுள்ளன).

எழுபதுகளின் பிற்பகுதியிலிருந்து ஈழத்தில் பேரினவாத ஒடுக்குமுறை உச்சம்பெறத் தொடங்கியது. இச்சூழலில் 'தமிழ்த் தேசியம்' முகிழ்ப்புற்று முனைப்புறத்தொடங்கியது. தமிழ்த்தேசிய உணர்ச்சியால் உந்தப்பட்ட கவிஞர்கள் பலர் உருவாகத் தொடங்கினர். இவர்கள் (போராளிக் கவிஞர்களைத் தவிர்த்து) முக்கியமானவராகவும் முதன்மையானவருமாக விளங்குபவர் வில்வரத்தினம். ஆரம்பகாலக் கவிதைகளுள் சில தவிர இவரது பெரும்பாலான கவிதைகள் பேரினவாத ஒடுக்குமுறையின் -போரின்-பன்முக அவலங்களையும் மண்மீதான பற்றினையும் விடுதலை மீதான வேட்கையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துவனவாகவுள்ளன. (தொகுதிகளின் தலைப்புகள் 'காலத்துயர்' 'காற்றுவழிக்கிராமம்' 'நெற்றிமண்' 'உயர்த்தெழும் காலத்திற்காக' என அமைந்துள்ளமையை நோக்குக). அவரே ஒரு தடவை இவ்வாறு குறிப்பிட்டார்:

> தமிழீழ தேசியப்போராட்ட காலத்தில் கலை, இலக்கிய சக பயணித்துவத்தில் முக்கிய பங்கு அலைக்கு உண்டு) ஆயின் இன்றுவரை எனது கவிதைகளுக்கும் அது உண்டு. எனது கவிதை-களின் தொகுதி வெளிவந்த காலம் தொட்டு இந்தத் தொகுதி வரையுள்ள கால வரன்முறைப்படி கணிப்பீடு செய்தால் முதலாம் ஈழப்போர், இந்திய அமைதிப் படையின் யுத்த காலம், இரண்டாம், மூன்றாம் ஈழப்போர் என ஒவ்வோர் காலத்தின் நிகழ்வுகள், அனுபவங்கள் சார்ந்ததான ஒரு போராட்ட வரலாற்றின் போக்கு, அதன் விளைவுகள், உபவிளைவுகள் எனப் பலவற்றையும் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் காணலாம்...

மேற்குறித்த விடயங்கள் வேறு கவிஞர்களாலும் பாடப்பட்டுள்ளன-வாயினும், வில்வரத்தினத்திடம் இவை தனித்துவமான முறையில் வெளிப்பட்டுள்ளன. அதாவது, ஆத்மார்த்த நிலையில் வெளிப் பட்டுள்ளன. ஆத்மார்த்தம் என்பது சமயம் சார்ந்ததன்று. கவிஞனும் பொருளும் உணர்ச்சிபூர்வமாக இரண்டறக் கலந்து விடுகின்ற நிலையாகும். இத்தகைய அபூர்வமான ஆற்றலுடன் கவிதை பற்றிய தேடலும் தமிழ்க் கவிதைப் பாரம்பரியம் பற்றிய ஆழமான அறிவும் கொண்ட வில்வரத்தினத்திடம் தமிழ்க் கவிதை என்பது வேறெந்தக் கவிஞர்களிடமும் காண முடியாதவிதத்தில் தனித்துவமான முறையில் வெளிப்பட்டுள்ளது எனலாம். எடுத்துக்காட்டாக பின்வரும் கவிதையைக் குறிப்பிடலாம்:

'விடுதலைக் குருவியும் வீட்டு முன்றிலும்'

பாரதி
விடுதலை அவாவிய நிலை
சிட்டுக்குருவி
எங்கள் வீட்டு முற்றத்திலும்
மேய்தல் கண்டேன்.

விடுதலைத் தாகத்தின் துடிப்புன் குரலென்றால்
அதன் இதழ்களிலும்
'விடு விடு' என்ற அதே துடிப்புத்தான்
.....

தலையை உருட்டுதலில்
சிறகைக் கோதுதலில்
காற்று வெளியில் 'ஜிவ்' வென்ற சிறகுதைப்பில்
அதே துடிப்பு! சதா துடிப்பு!
நீ நேசித்த தேசத்திலும் அதன்
ஒவ்வோர் அங்கங்களிலும்
பெண்மையில், ஆண்மையில், பிறக்கின்ற காதலில்
மொழியில், இசையில், கவிதையில், உரைநடையில்
அரசியலில், தொழிலில், ஆன்மீகத்தில் -
இதே துடிப்பை நீ உடுக்கொலித்தாய்.

'குடு குடு குடு நல்லகாலம் வருகுது' என்று
நாட்டுக்கு நல்ல குறி சொல்ல
தூக்கிய நின் உடுக்கின் ஒவ்வொரு முழக்கிலும்
விடுதலைக் குருவியின் வீச்சு நிகழ்ந்தது.
'கொட்டு முரசு' வின் அதிர்விலும் அதே
விட்டு விடுதலையாகும் வீச்சேதான்
தூக்கம் எங்கெங்கு கௌவிற்றோ அங்கெல்லாம்
துயிலெழுப்ப இந்தத்
துடிப்புக் குருவியை நீ தூதுவிட்டாய்
உயிர்த்துடிப்பின் உன்னத படிமம்
நின் விடுதலைக்குருவி
அந்த விடுதலைக் குருவி
எங்கள் வீட்டு முற்றத்திலும்
மேய்தல் கண்டேன்
.....

விடுதலைக் குருவியோடு
'சடுகுடு' ஆடும் சிறுவரின் கூத்து
விட்டேன் விடுதலை விட்டேன் விடுதலை
என்றந் நாளில்
'சடுகுடு' ஆடிய இனிமையின் வேகம்
என்னுள் நடை பயிலும்
விடுதலைக்குருவி!
வீடு தேடி வந்தாய் நீ வாழி!

நின் அலகிதழ் முனையில் எம்
இருள் துயரெல்லாம் கிழிபடுகிறது
மூலை முடுக்குகள் நாடி நரம்புகள் தோறும்
விடுதலை வீச்சோட்டம் நிகழ்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டுக்குரு வீ!
எட்டுத்திக்கும் பறந்தொரு சேதிசொல்
விட்டு விடுதலையானோம் நம்
கட்டுகள் யாவும் அறுந்தன வாமென்று
குறி சொன்னானே அந்தக்
குடுகுடுப்பைக் காரன்!
அவன்
காதிலும் மெல்ல இச் சேதியைப் போடு

வில்வரத்தினத்தின் கவிதைகள் பலவும் ஒரே விடயத்தைத் திரும்பத் திரும்ப எடுத்துரைப்பனவாகவுள்ளன என்று கூறப்படுவதுண்டு. இது குறைபாடாகவும் கருதப்படுவதுண்டு. எனினும் இது பற்றி ஆழ்ந்து சிந்திப்பதவசியம். இவ்வேளை பலஸ்தீனக் கவிதைகள் பற்றி ஆய்வாளரொருவர் கூறிய பின்வருப் கூற்றே நினைவிற்கு வருகிறது:

> பலஸ்தீனக் கவிதைகள் வெளிப்படையான அரசியல் சார்புடையவை. இது பலஸ்தீனப் படைப்பாளிகளின் வாழ்நிலை அனுபவத்தின் அடிப்படையில் அமைவது. அவர்களின் ஒவ்வொரு உயிர்க்கணுவும் அன்றாட அரசியல் சங்கிலியால் பிணிக்கப பட்டுள்ளது.
>
> பலஸ்தீனக் கவிதைகளை ஒருமித்துப் படிக்கும்போது அவை எல்லாமே ஒரே பொருளை வெவ்வேறு குரலில் பேசுவதுபோல் நமக்குத் தோன்றக்கூடும். அடக்குமுறைக்கு அடிபணிய மறுக்கும் நாடற்று அகதியாக்கப்பட்டவர்களின் அவலமும் ஆவேசமும் அவ்வாறுதான் ஒலிக்கும் போலும். கவிதையை இலக்கியத்தைச் சமூக, அரசியல் இயக்கங்களிலிருந்து வேறு பிரித்து அதைத் தன் உள்ளுணர்வின் குரலாகப் பூஜிக்கும் சில தமிழ் நாட்டுப் படைப்பாளிகளுக்கு, விமர்சகர்களுக்கு அல்லது வாசகர்களுக்கு இந்தக் கவிதையின் குரல் ஒரு நெருடலாக, கவிதைக்குப் புறம்பான வெற்றுக் கோசமாகக் கூடத் தோன்றக் கூடும். இதற்கு மறுதலையில் ஈழத்துப் படைப்பாளிகள், வாசகர்களைப் பொறுத்தவரை இது அவர்களின் உணர்வின் குரலாக அவர்களின் சொந்தவாழ்க்கை அனுபவத்தின் வெளிப்பாடாகவே அமைகின்றது....

மேற்கூறியுள்ள விடயங்கள் பலவும் வில்வரத்தினத்தின் கவிதைகளுக்கும் பொருந்துமென்றே கூற வேண்டும். அவ்வாறாயின் இவ்வழி இவ்வாறான ஈழத்து கவிதைகள் மூன்றாமுலக நாடுகளின் கவிதைகளுக்குச் சமமாக ஈழத்துக் கவிதைகளையும் கொண்டு செல்கின்றன என்பதிலும், தவறில்லை.

இவ்விடத்தில், வில்வரத்தினத்தின் கவிதையொன்றினை பலஸ்தீனப் பெண் கவிஞரான பதுவா துகானின் கவிதையொன்றுடன்

ஒப்பிட்டு தமிழக ஆய்வாளரொருவர் எழுதியிருப்பதையும் இங்கு எடுத்தாள்வது பொருத்தமானது. அது பின்வருமாறு:

"இவரது அழிக்கப்பட்ட கிராமங்கள் எனும் கவிதை ஈழத்துக் கவிஞர் சு.வில்வரத்தினத்தின் காற்றுக்கு வந்த சோகம் கவிதையை நினைவூட்டுகின்றது. இவ்வேளை அவ்விருவரது கவிதைகளையும் எடுத்தாள்வது பயனுடையது. அழிக்கப்பட்ட கிராமங்கள் என்ற, பதுவா துகான கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு:

வீடுகளே பிரச்சினைகள் உங்களை
என்ன செய்துவிட்டன
உங்களில் வசித்தவர்கள் எங்கே?
அவர்கள் பற்றிய செய்தி
கிடைத்ததா? அவர்கள் இங்கிருந்து
பழகியவர்கள்
கனவு கண்டவர்கள்
வருங்காலத் திட்டங்களை வகுத்தவர்கள்
அந்தக் கனவும் வருங்காலமும் இப்பொழுது
எங்கே?
அவை எங்கே சென்று விட்டன?
இடிபாடுகள் மௌனமாயிருந்தன
வெறுமையைத் தவிர எதுவுமேயில்லை

இக் கவிதை போன்றே,

அட சாவிலும் கூட ஒரு வாழ்விருந்த
கிராமம் இது
காற்றுப் பரிதவித்தது
எங்கே போயின இந்த உறவுகள்
ஒன்றும் விளங்காமல் அந்தரித்தது;
அதற்கெங்கே தெரியும்?
காற்றுறங்கும் அகாலத்தில் தான்
மூட்டை முடிச்சுகளோடு மக்கள்
கிராமத்தை விட்டுப்போன கதை
.....

வீதியில் தலை நீட்டிய முட்செடியொன்றை
வேலியோரமாய் விலக்கியபடியே
மெல்ல நடந்தது காற்று
சொல்லிக் கொள்ளாமல் போகும்
புதல்வரைத் தேடும்
சோகந் தாளாத தாயைப்போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வில்வரத்தினத்தின் கவிதை வரிகளும் புலப்பெயர்வால் வெறிச்சோடிப் போகும் கிராமங்களின் வெறுமைகளை, அந்த வெறுமையின் கனத்தைச் சுமந்து இடம்பெயரும் மக்களின் ஆறாத வேதனையை உணர்த்துகின்றன. பலஸ்தீனமோ ஈழமோ புலம் பெயர்தலின் சோகமும் அலைவும் மாறாத ரணமாய்க் கொல்லும் என்பதை கவிதை சொல்லில் வடிக்கிறது..."

நிற்க, வில்வரத்தினத்தின் கவிதை வெளிப்பாட்டு முறை தொடர்பாகவும் குறிப்பிடுவதவசியம். ஏறத்தாழ, 2000 ஆண்டுக் காலத்தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தின் சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், தேவார, திருவாசகம், ஆழ்வார் பாடல்கள், கம்பராமாயணம், தனிப்பாடல்கள், பாரதி, பாரதிதாசன் கவிதைகள் முதலியனவற்றை - தமது கவிதைகளிலே பயன்படுத்தியுள்ளார் வில்வரத்தினம். அவை, பாடலடிகளாக,பின்புலமாக, படிமங்களாக, குறியீடுகளாக, உருவகம் உவமை என்பனவாக தகவல்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்க கால இலக்கியங்கள் குறிப்பிடும் சம்பவமொன்றினை அடிச்சாடாகக் கொண்டெழுந்துள்ளது, பின்வரும் கவிதை:

'நிலவின் எதிரொலி'

பறம்புமலை
பாரி மறைந்து
பெரிதும் மறைந்த இருளில்
அகதிகளாயினர்
அங்கவையும் சங்கவையும்
வென்றெறி முரசம் வீழ்ந்த கையோடு
குன்றிலே
தொய்ந்த முழுநிலவின் சோகம்
படர்கின்ற ஒற்றையடிப் பாதையினூடே
பாரி மகளிர் நடந்தனர்
மலையின் இறங்கிப் பெயர்ந்து
தானும் தளர்நடை நடந்தது நிலவும்
தள்ளாத வயதின் கபிலர் துணைபோல,
நடந்து இளைத்து தேய்ந்து
நரை விழுந்து போனது
வெண்ணிலவும் தான்
கபிலரும் தான்
பாரிமகளிரும் தான்

பறம்புமலை வாழ்வும் தான்
வாழ்விளைத்த மகளிரை
ஔவையிடம்
பவ்வியமாகக் கையளித்துவிட்டு
கபிலர் மறைந்தார்
பயணம் தொடர்ந்தது
கூழ் குடித்த சேரியெல்லாம் ஔவையோடு
கூடவே நடந்தனர் பாரி மகளிர்
நின்று நிதானித்து
நிலவும் நடந்தது
அதியமான் கொடுத்த நெல்லிக் கனியீந்த
ஆயுட்காலம் முடிவிற்கு வந்ததோ
ஔவை அவசரப்பட்டு விட்டாள்
தன்னைப் போல் தமிழ் செய்த மகளிரை
பறம்புமலை வாழ்வை அழித்தவர்க்கே
தாரை வார்த்துக் கொடுத்தாள்
காலந் தாழ்த்திய திறைப்பொருளாக
கூழோ கஞ்சியோ வார்த்தவர்
குடியில் கொடுத்திருந்தாலும்
பாரியின் ஆன்மா பரவசப்பட்டிருக்கும்
பாவம் அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்
பறம்பு மலைக்குன்றும்
வென்றெறி முரசும்
அந்தப்புரத்து அடிமைகளாகிவிட்ட
அங்கவையும் சங்கவையும்
இரங்கி அழுதவையெல்லாம்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவிலும்
எதிரொலிக்கின்றனவே

மேற்கூறிய கவிதையை ஆழ்ந்து வாசிக்கும் போது தான் சங்ககாலத்தில் நடைபெற்ற சம்பவமொன்று எழுப்பும் உணர்ச்சியலைகளின் ஈர்ப்பையும் இறுதிப்பகுதி கவிதையின் உயிராக அமைவதையும் மறுபடி வாசிக்கத் தூண்டப்படுவதையும் நன்குணரலாம்.

மேற்கூறியவாறு எழுத்திலக்கியப் பாரம்பரியத்தை மட்டுமன்றி வாய்மொழிப் பாடற் பாரம்பரியமும் வில்வரத்தினத்தின் கவிதைகளில் பயன்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

"சற்று முன்பு வரையில் இது பறவைகளின் சரணாலயமாகத் தான் இருந்தது" என்ற பின்வரும் கவிதை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காக்கா கண்ணுக்கு மை கொண்டுவா'
காக்கைகள் மைவண்ணம் கொணர்ந்தன
'குருவீ கொண்டைக்குப் பூக்கொண்டுவா'
குருவிகள் வண்ணப்பூக்கள் கொணர்ந்தன
'பச்சைக்கிளியே பழங்கொண்டுவா'
தின்னப் பழங்கொண்டு கிளிகள் தந்தன.

மழலைகள் பறவைகளாகின.
சிறகடித்தன. சீர்வரிசைகள் பேணின.
மாலைகள் கோத்தன. மைவண்ணம் பேசின.
பாடின; கைவீசி விளையாடியிருந்தன.
சற்று முன்பு வரையிலும்
வேண்டாப் பறவை ஊடுருவிற்று
விழுந்து வெடித்தன ராட்சத முட்டைகள்
காற்றிலெங்கும் செட்டைகள் சிதறின
உதிரக்குஞ்சுகளின் உயிர்கள் துடித்தன
அந்தர வெளியில் அறுந்தறுந்து தொங்கின
அவை இசைத்த பாடல்கள்;
கூட்டிசைத்த குரல்களும், யாழும்
கூட்டுமொத்தமாய்த் தோற்றே போயின.
மைவண்ணம், மலர்வண்ணம்
மழலையின் மெய்வண்ணமெல்லாம்
இரத்த வண்ணத்தில் ஏகமாய்த் தோய்ந்தன
இவை காக்கைகளினவை
இவை குயில்களினவை
இவை குருவிகளினவை
இவை பசுங்கிளிகளினவையென
இனம் பிரித்தறிய இயலாமல்
இறக்கைகளின் சிதறலாய்ப்போன இவ்விடம்
நம்புங்கள் சற்று முன்பு வரையிலும்
பறவைகளின் சரணாலயமாய்த்தானிருந்தது
பாட்டுகள் ஒலிக்க.

வாய்மொழிப் பாடலடிகள் ஆரம்பத்தில் இடம்பெறுவதும் அதனடியாகக் கவிதை வளர்ந்து செல்வதும் குதூகல உணர்ச்சி வளர்ந்து செல்வதும் பின்னர் சடுதியாக ஏற்படும் மாறுபாடான உணர்ச்சியும் ஒட்டுமொத்தமான அவலமும் மனதைத் தொட்டுவிடும் ஆற்றல் வாய்ந்தவாகவுள்ளன.

மேற்கூறியவாறான புதிதான கவிதை வெளிப்பாட்டுமுறை பற்றி வில்வரத்தினம் இவ்வாறு குறிப்பிடுவது மனங்கொள்ளப்பட-வேண்டியது :

> நான் செரித்துக் கொண்டதை ஆங்காங்கு எனது கவிதைகளினிடை அடையாள வரிகளாய் இடைப்பெய்து நீண்ட எமது பாரம்பரிய பண்பாட்டு அடையாளங்களை படிமப்படுத்திக் காட்ட முயல்வது எனது கவிதை ஆக்கத்தில் ஒரு பகுதி போலாகிவிட்டது. இதை நான் தெரிந்தே, தேவைகருதியே, பிரக்ஞைபூர்வமாகவே கையாள்கிறேன். இதனூடாக எனது வாசகன் தமிழின் வழிவழி ஓட்டத்தைத் தரிசனம் பண்ணுவதோடு அத் தரிசன ஒளியில் எனது கவிதை வேரோட்டவளத்தின் புதிய முகத்தையும் காணட்டும் என்கின்ற வேணவாவும்தான். அகங்களும் முகங்களும் தொகுப்பி-லிருந்து இந்த நெற்றிமண் தொகுப்பு வரையிலும் அத்தகைய அடையாளப்படுத்தலை இனங்காணலாம். 'எழுந்திருபிள்ளாய் இது விடுதலைப் பொழுது' என அகங்களும் முகங்களும் தொகுப்பில் இடம்பெற்ற விடுதலைப்பொழுது கவிதையின் வரிகளிலும் இத் தொகுப்பில் இடம்பெறும் கவிதை ஒன்றில் வரும் 'வெள்ளைவிளிசங்கின் பேரரவம் போலும் ஓர் விடியல்' எனும் வரிகளிலும் ஆண்டாளின் குரல் ஒளி விழுத்திச் செல்வதை உதாரணமாகக் காட்டலாம்..... எனகவிதைகள் சமகாலப் பிரச்சினைகள் பற்றிப் பேசும் பொழுதும் தமிழின்ஆதிக்குரலை ஆங்காங்கு மீட்டிச் செல்வதைக் காணலாம். யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதை நினைவுகூரும் இத் தொகுப்பில் வரும் கவிதையிலும் தமிழ்க்கவிதைப் பாரம்பரியத்தின் தொட்டிலாக அதை உருவகப்படுத்திக் காட்டுகிறேன். துய்யதான சங்கமென்னும் தொட்டிலில் வளர்ந்தபிள்ளை எனும் பாரதிதாசன் வரிகளை ஞாபகப்படுத்தி 'சங்கப்பலகையில் சரிக்கட்டி வைத்த தொட்டில்' எனத் தொடங்கி, தொட்டிலிலே கண்வளர்ந்திருந்தவை குழலும் தான்; யாழும் தான்; முழவும் தான்; மனித முயல்வின் திறன் முழுதுந்தான்; எனத் தொடர்கின்ற அக்கவிதை ஒரு பண்பட்ட தமிழ்த் தேசியத்தின் தொட்டிலின் குரல் என்பதை யாவரும் அடையாளம் காணவேண்டும். தமிழக விமர்சகர் இந்திரன் நுண்கலை இயக்கத்தினூடே தேடுகின்ற தமிழ் அழகியல் என்னும் பார்வை எனது கவிதையின் ஊடே தான் முகம் காட்டுகிறது என்பது என் அபிப்பிராயம்.

மேற்கோள் நீண்டுவிட்டதாயினும் முக்கியமான பல விடயங்கள் புலப்படுத்தப்பட்டிருப்பதனை ஊன்றிக் கவனித்து மனத்திருத்திக் கொள்வது அவசியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இத் தொடர்பில் இன்னொரு விடயத்தையும் எடுத்துரைப்பது பொருத்தமானது. ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க படைப்பாளிகள் தொன்மங்களையும், வாய்மொழி மரபுகளையும் தமது படைப்புகளிலே பயன்படுத்தி வளம் சேர்ப்பது போல் தமிழ்ப் படைப்பாளியான வில்வரத்தினம் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தினைப் பயன்படுத்தி நவீன தமிழ்க் கவிதைக்கு வளமும் வலுவும் ஊட்டுகின்றாரென்பது கவனத்திற்குரியதொன்று.

அத்தகைய வளத்தினதும் வலுவினதும் பிறிதொரு வெளிப்பாடாக பாரதிக்குப் பிறகு வில்வரத்தினம் புதிய சொற்கள், சொற்றொடர்களை நவீன தமிழ்க் கவிதைப் பரப்பினுள் கொண்டு வந்துள்ளமையையும் இறுதியாக நினைவு கூரலாம். இவ்வழி பின்வரும் உதாரணங்களைக் குறிப்பிடலாம்: காலத்துயர், காலப்புற்று, உறவென்னும் ஒளிக்கயிறு, கிராம தேவதா, உயிர்த்துவம், ஒளிக்கனி, தளீரீ, மூன்றாம் பிறை நகை, சிறுவம், உயிர்த்தண்ணி, பொட்டுமேகம், காலத்தின் உதடுகள், ஒளிவிரல்கள், இருளின் கூச்சல், பீதியின் காடு, ஆலைக்கனல், மொட்டைக்கனவு, குருதிக்காடு, அசோகவனத்துயர், அசோகவனத்தவம், உயிர்த்தவம், சருகுதிர்த்த நினைவுகள், அந்தரத்தில் தொங்கும் அவலங்கள்.

II

ஈழத்தில் நவீன கவிதை பிறப்பெடுத்த 1940களின் பிற்பகுதி தொடக்கமே மார்க்சிய நோக்குடைய கவிஞர்களும் உருவாகினர். காலத்திற்குக் காலம் புதிய தலைமுறையினரும் இணைந்துகொண்டனர். இவ்வரிசையில் 1970களில் ஈழத்துக் கவிதையுலகில் காலூன்றத் தொடங்கியவரே சிவசேகரம். எனினும், ஏனைய மார்க்சிய நோக்குடைய பெரும்பாலான கவிஞர்களின் கவிதைகளிலிருந்தும் வேறுபட்டு தனித்துவமான இயல்புகளுடன் கவிதைகள் எழுதிவருபவராக அவர் விளங்குகின்றார்.

மேற்கூறியவாறு சிந்திக்கின்றபோது சமகால ஈழத்தின் அரசியற் பிரச்சினைகள் (இன ஒடுக்குமுறை, இயக்கங்களின் போராட்டம், பாராளுமன்ற அரசியல் முதலியன), சமூகப்பிரச்சினைகள் (சாதியம், ஆணாதிக்கம், மூடநம்பிக்கை வாழ்க்கைமுறை மாற்றங்கள் முதலியன), இலக்கியப் பிரச்சினைகள் (விமர்சன நிலை, பின் நவீனத்துவம் முதலியன), உலக அரசியல் விவகாரங்கள் (ஏகாதிபத்திய அரசுகள்; ஆட்சி மாற்றங்கள் முதலியன) எனப் பல விடயங்களையும் பற்றி கவிதைகள் எழுதி வருகின்ற மார்க்சிய நோக்குடைய கவிஞராக இவர் மட்டுமே உள்ளமை புலப்படுகின்றது.

மேற்கூறியவாறு பல விடயங்கள் பற்றியும் எழுதிவருவதை விட முக்கியமான விடயம் அவையாவுமே மார்க்சிய விமர்சனநோக்கில் எழுதப்படுவதாகும். "என் சமூக விமர்சனங்களைக் கட்டுரைகளில் மட்டுமன்றிக் கவிதைகளிலும் முன்வைத்து வருகிறேன்" என்று கவிஞரே ஓரிடத்தில் எழுதியுள்ளமை இவ்வேளை நினைவிற்கு வருகின்றது.

மேற்கூறியவாறு மார்க்சிய விமர்சன நோக்கில் எழுதிவருவதை விட முக்கியமான விடயம் ஏனைய பல கவிஞர்கள் போன்று பிரச்சார நோக்கிலோ வெற்றுக் கோஷமாகவோ அவற்றை எழுதாமல் கலாபூர்வமான முறையில் எழுதிவருவதாகும். "ஈழத்துக் கவிஞர்களின் வரிசையில் மக்கள் நலனுக்கும் கவித்துவத்தின் அழகியல் அடிப்படை அம்சங்களுக்குமிடையில் சமநிலைகண்டு சமூக மாற்ற நோக்கில் கவிதை படைக்கும் கவிஞர் சிவசேகரம்" என்று ஆய்வாளரொருவர் குறிப்பிட்டிருப்பது புறக்கணிக்கக் கூடிய கூற்றன்று.

மேற்கூறியவாறான அழகியல் அம்சங்கள் காலத்திற்குக் காலமோ கவிதையின் உள்ளடக்கத்திற்கேற்பவோ பல்வேறு விதங்களில் இடம்பெறுகின்றமை சிவசேகரத்தின் கவிதைகளில் காணப்படுகின்ற முக்கியமான பிறிதொரு சிறப்பம்சமாகும். இதனால், முக்கியமான ஏனைய சில கவிஞர்கள் போன்று (எ-டு : வில்வரத்தினம், சோலைக்கிளி) கவிதைகள் ஒரே பாணியில் அமைகின்ற குறைபாட்டிற்குள்ளாகாமல் 'பொருள் புதிது சுவை புதிது' ஆக வெளிப்படுகின்றன.

மேற்கூறிய விதத்தில் சிந்திக்கின்றபோது ஆரம்பகாலக் கவிதைகள் ('நதிக்கரை மூங்கில்' தொகுப்பு) பலவற்றிலும் சங்ககாலக் கவிதைகள் போன்று 'இயற்கை வர்ணனை' முக்கிய இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. ('தமிழ்க் கவிதை பற்றிப் பேசுவோர் சங்கக் கவிதைகளைக் குறிப்பிடாமல் ஒரு முழுமையான சித்திரத்தை வரைய முடியாது' என்று குறிப்பிட்டுள்ளார் சிவசேகரம்) எனினும், சங்காலக் கவிதைகள் போன்று இயற்கை, பாத்திரங்களின் உணர்ச்சி வெளிப்பாடாகவோ, உரையாடல் உத்தியாகவோ அன்றி குறியீடாக இவரது கவிதைகளில் அமைவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய கவிதைகளுள் ஒன்றினை இங்கே எடுத்தாளலாம். அது பின்வருமாறு:

'நெல்'

முளைத்து எழுந்து தளிர்த்து வளர்ந்து
செழித்து விளைந்து சரிந்து விழுந்து
இறந்து கிடந்த நெல்லின் தலையில்
இருந்தன நாளைய பரம்பரை நூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறியவாறான இயற்கை வர்ணனை போன்ற கவிதைகள் பற்றி தமிழ்நாட்டு ஆய்வாளரொருவர் (அவர் கவனத்திற் கொடுத்துள்ளது முற்குறிப்பிட்ட கவிதையை அன்று) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது:

> இலையுதிர் கால அரசியல் நினைவுகள் என்ற சிவசேகரத்தின் கவிதைத் தலைப்பு மாத்திரமே 'அரசியல்' என்ற பிரயோகத்தைக் கொண்டுள்ளது. ஆனால் மேலோட்டமாய் படிக்கும் வாசகனுக்கு இது சிறந்த Lyric கவிதையாகக் கூடும். இயற்கை நிகழ்வுக்கான ஆழ்ந்த பிரக்ஞையும் பருவகால மாறுதல்களைப் பதிவு செய்யும் கவனமும் இக் கவிதையின் ஸ்தூலமான சித்திரிப்புக்களைத் தந்துள்ளன. பருவ மாறுதல்களும் கால மாறுதல்களும் சமூக மாறுதல்களை உணர்த்தும்படி இயல்பாய் எழுதப்பட்டிருக்கின்றன.
>
> மீண்டும் மலர்கள் மண்ணைப் பெயர்க்க
> பறவைகள் மெல்லப் பாடத் தொடங்க
> அணில்கள் தாவ வசந்தம் வந்தது
> மரங்கள் மீது இலைகள் போர்த்தன
> இலையுதிர்காலம் கொடியது தானோ?
>
> கடைசி வரியின் கேள்வி நம்மை மீண்டும் வரிவரியாகப் படிக்கச் செய்து, தலைப்புக்குக் கவனம் தாவி, மீண்டும் வரிவரியாகப் படிக்கச் சொல்கிறது. அரசியல் கவிதைகள் வரட்டுத்தன்மையாகத்தான் இருக்க வேண்டும் என்கிற கட்டாயமில்லை என்பதைச் சிவசேகரத்தின் 'நதிக்கரை மூங்கில்' தொகுதி நிரூபணம் செய்கிறது.

பழந்தமிழ் இலக்கியப் பாடலடிகள் தலைப்புகளாக பயன்படுத்தப்படுவதையும் சிவசேகரம் கவிதைகளில் அவதானிக்கலாம். இன்றைய தமிழ்ச் சமூகம் பற்றிய விமர்சனம் சார்ந்த கவிதையொன்றிற்கு 'யாது ஊரே' என்ற புறநானூற்றுப் பாடலடி தலைப்பாக தரப்பட்டிருப்பதன் முக்கியத்துவம் பின்வரும் கவிதையூடாக வெளிப்படுகிறது:

> போர்த்துக்கேயரும் டச்சுக்காரரும்
> ஆங்கில நாட்டரும் ஆற்றிய கொடுமை
> கொலனி ஆட்சியின் கொள்ளையடிப்பு
> மரபைப் பேண வகுத்த தடைகள்
> மொழியைப் பேச விதித்த தண்டம்
> மதத்தை மாற்றப் புனைந்த சதிகள்
> பழங்கதை என்றா மறந்து போனோம்?
> பேரினவாதம் இழைத்த இன்னல்
> இந்திய நண்பர் இயற்றிய வஞ்சனை

> எல்லாம் முடிந்தன என்றா மறந்தோம்?
> இல்லை இல்லை உண்மை ஏதெனில்
> நாமே நமக்குப் பகையென ஆனோம்
> நம்மை நாமே அழித்திட உறுதி
> பூண்டனம் அதனால்
> எம்மூர் தவிர்ந்த யாதும் ஊரே
> எம்மவர் தவிர்ந்த யாவரும் கேளிர்
> தீதும் அழிவும் பிறர்தர வேண்டா.

சில கவிதைகளில், இடைக்காலத் தமிழ்க் கவிதைகளின் சொற் பிரயோகம் கற்பனை, உத்தி முறைமை என்பன பயன்படுத்தப்பட்டு, இன்றைய சமூக நிலைமை விமர்சிக்கப்படுகின்றது. எ-டு :

> நாராய் நாராய் செங்கால் நாராய்
> பழம்படு பனையின் கிழங்கு பிளந்து
> பயன்மிகு அறிந்த பனைசெறி நாட்டார்
> வழிபல சென்றே பல திசை பரந்தார்
> வருகுவ தெந்நாள் அறிவையோ நாராய்
> திரைகடல் ஓடித் தம்முயிர் பேணத்
> திரிந்தவர் தமக்கோ எங்கணும் அவலம்
> கரியவர் அயலார் எனவசை கேட்போர்
> கவலைகள் நீயும் உணர்வையோ நாராய்
>
> அகதியின் வாழ்வின் இழிநிலை தாங்கி
> அந்நிய மண்ணில் அண்டிக் கிடந்து
> மிக நலி மாந்தர் தம்நகர் மீளும்
> வகையென ஒன்றேன் மொழிவையோ நாராய்
>
> பெருங்குளிர் வருமுன் கடல் பல தாண்டி
> புலம்பெயர் புள் நீ கிளையுடன் மீண்டும்
> வருகுபவை நின்மண் தவறுதல் இன்றி
> பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
> நாராய் நினக்கோ யாதும் ஊரே
> நாராய் நின் இனம் யாவருங் கேளிர்
> பாராய் எங்கள் மனிதரின் நிலையை
> நாராய் நமக்கோர் நல்வழி கூறாய்

ஈழத்துக் கவிஞர்கள் இதிகாச, புராணத் தொன்மங்களைப் பயன்படுத்துவது குறைவாகும். இவ்விதத்தில் வெவ்வேறு நோக்கில் தமது கவிதைகளில் தொன்மப் பயன்படுத்துகிறார் சிவசேகரம். அகலிகை 'ஏகலைவ பூமி எங்கள் குருஷேத்திரம்' 'மகேசருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்தது' 'தேவி எழுந்தாள்' காளி பத்தாவது, 'ஸம்பவாமி யுகே யுகே' முதலான கவிதைகள் இத்தகையவை; 'பிரம்படி' என்ற கவிதை பின்வருவது :

'பிரம்படி'
(இரண்டு கவிதைகள்)

1. பிட்டுக்கு மண் சுமந்த
பிரான் மீது பட்ட அடி
அணையைக்
கட்டிமுடிக்காத பிழைக்காக
பிரம்பெடுத்த ஆள்மீது
பிரானை அடித்ததற்காக
ஆணையிட்ட பாண்டியன்மேல்
பிரம்பு அவனது என்பதற்காக
வாதவூரன் மீது
நொந்தழுது வெள்ளத்தை
வரவழைத்ததற்காக
வாணிச்சி மீது...
பிட்டு உதிர்ந்தற்காக
ஊரார் மீது...
அடிக்க ஒரு பிரம்பு இருந்ததற்காக.

2. துரோகி எனத் தீர்த்து
முன்னொரு நாட் சுட்ட வெடி
சுட்டவனைச் சுட்டது
சுடக்கண்டவனைச் சுட்டது
சுடுமாறு ஆணை
இட்டவனைச் சுட்டது
குற்றஞ் சாட்டியவனை
வழக்குரைத்தவனைச்
சாட்சி சொன்னவனைத்
தீர்ப்பு வழங்கியவனைச் சுட்டது
தீர்ப்பை ஏற்றவனைச் சுட்டது
எதிர்த்தவனைச் சுட்டது
சும்மா இருந்தவனையுஞ்
சுட்டது.

நாட்டார்கதை சார்ந்த உத்திமுறையில் எழுதப்பட்ட கவிதைகளுமுள்ளன. 'ஒரு சமகாலச் சிறுவர் கதை' 'சுற்றாடல் பற்றி' 'களவாடப்பட்ட முத்துக்கள்' 'சமாதானப் புறாக்கள்' 'சமாதானம் பற்றிய ஒரு அநீதிக்கதை' முதலானவை இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கவை.

நாட்டார் வழக்காறுகள் நாட்டார்ப் பாடல் மரபுகள், அதிகளவு பயன்படுத்தப்படாவிடினும், பயன்படுத்தப்பட்ட ஒருசில கவனத்திற்குரியன. 'பலி' என்ற கவிதையை இவ்வேளை எடுத்தாள்வது பொருத்தமானது :

பூசாரி கூவுகிறான்
தின்பண்டங் கொண்டுவா
திரவகை கொண்டு வா
என்னுடைய சாமி
பசியாற வேண்டுமே
இன்னமும் நீ நிற்பதேன்
சொன்னதெல்லாம் கொண்டுவா
பூசினியின் காய் அறுத்தோம்
பலகாரம் பழவகைகள்
பற்பலவும் நாம் படைத்தோம்
பொங்கல் உலைவைத்தோம்
பால்மோரும் இளநீரும் போதாத சாமிக்குச்
சாராயம் கள்வகைகள் சீராக நாமீந்து,
கோழி அறுத்தோம் ஆடும் பலி தந்தோம்
காசு பணம் தந்தோம், கட்டிடவும் துணி தந்தோம்
உரக்க உடுக்கடித்துப் பூசாரி கூவுகிறான்
'திண் பண்டங் கொண்டுவா
திரவகை கொண்டுவா'
இலட்சக் கணக்கான மானிடரின் உடலங்கள்
வெட்டி வழிந்த வெங்குருதி குடக் கணக்காய்க்
கொட்டிக் கறுத்த தரைமீது நின்றபடி
பறையொலி போல் வேட்டதிர, அழுகை ஒலி சங்கூத
வெறியோடிச் சிவப்பான விழிகள் கனல் கக்க
உடுக்கடித்துப் பூசாரி உருஆடிக் கூவுகிறான்
கோழிகளும் ஆடுகளும் கொண்டு பசி தீருவதோ
சாராயங் கள்ளருந்தித் தாகம் தணிகுவதோ
பத்தாயிரம் உயிர்கள் பலிகேட்கும் தெய்வ மீது
ரத்தத்தைக் கொண்டுவா, நரபலியைக் கொண்டுவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழடு பட்ட தசை வேண்டாம்
இளைய பரம்பரையின் இனியதசை கொண்டு வா
பட்டம் பதவி பல அதிகாரம் பணமுடையோர்
பெற்றெடுத்த பிள்ளைகளின் ஊளைத்தசை வேண்டாம்
சிங்களத்தின் ஏழைகளின் சிறுவர்களைக் கொண்டுவா
பச்சை கறுப்போடு பழுப்பாடை அணிவித்து
ஒட்ட முடி நறுக்கித் தொப்பி தலைக்கேற்றி
சப்பாத்துக் கால்களுடன் போர்ச்சாமி சந்நிதியில்
வெட்டிச் சரிக்கப் பத்தாயிரம் புதல்வர்
கட்டி இறுகக் கயிற்றாற் பிணைத்தெனினும்
கட்டாயமாய் எனது களத்தினுக்குக் கொண்டு வா

மேற்கூறியவை தவிர, காட்சிப்படுத்தல் பாடல் முதலான உத்திகள் சார்ந்த கவிதைகள் பல எழுதப்பட்டுள்ளன. வெளிப்பாட்டு ரீதியிலான பரிசோதனை முயற்சிகள் என்று சொல்லும்படியான கவிதைகளும் எழுதப்பட்டுள்ளன. இவ்விதத்தில் 'பச்சோந்தி' .....பற்றிப் பேசாதிருத்தல் (தணிக்கை உத்தரவிற்கமைய கவிதை எழுதுதல்) முதலியவை கவனத்திற்குரியவை. இத் தொடர்பில் போரும் அமைதியும் (ஒரு நவீனத்துவப் பின்வாசிப்பு) என்ற கவிதையும் முக்கியமானது. அது பின்வருமாறு:

போரென்று ஒன்று இல்லாத போது
அமைதியென்று ஒன்று பொருளற்று விடுகிறது
எனவே/எனவோ/எனினும்/எனுமாறு/எவ்வாறும்
போர் மூலம் அமைதி எனவும்
அமைதிக்கான போர் எனவும்
போரும் அமைதியும் வாசிக்கப்படுகின்றன.

மேலும் கட்டுடைப்பின்
ஈற்றில்
அமைதியெனின் போரென்றும்
போரெனின் அமைதியென்றும்
மீள வாசிக்கலாம்
மெய்யாக, இன்னும்
எதையும் அதுவாக அன்றி
வேறு எதுவாகவும்
வேண்டின் எவரும்
(எவரும் எனின் எவரும் என்னற்க)
எவ்வாறும் வாசிக்கலாம்.
இதுவரை எவரும்

போரையும் அமைதியையும்
கட்டுடைத்து
அமைதி மூலம் போர் எனவும்
மீள வாசித்ததில்லை
(வாசித்து மீளவில்லை எனவுங்கொள்க)
வாசிப்புகளின் வரையறையின்மை கருதி
இனியும் அவ்வாறு இருக்க வேண்டியதில்லை
ஆதலின்,
இதையும்
அமைதிக் போருக்
சகு/கும்/குரிய/கோ/கே/காக/காக்கா
என்று எவ்வாறுங்
கொள்க
கொள்ளற்க.

இதுவரை கூறியவற்றை நோக்கும்போது பல்வேறு வித்தியாசமான வெளிப்பாட்டு முறைகளில் சிவசேகரத்தின் கவிதைகள் அமைந்துள்ளமை புலப்படுகின்றது. இத்தொடர்பில், அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை கவனத்திற்குரியது. "ஒரு கவிதை மனதில் எழும் சூழ்நிலையும் கவிதையை எவ்வாறு வெளிப்படுத்தின் அதன் தாக்கம் அதிகமாயிருக்கக் கூடும் என்ற எண்ணமும் கவிதை வடிவத்தின் தெரிவுக்குக் காரணமாகின்றன...ஒரு கவிதை வடிவத்தைத் தெரிந்தெடுப்பது அவ்வடிவத்துடனான பரிச்சயம், ஈடுபாடு, பரீட்சித்துப் பார்க்கும் முனைப்பு போன்ற காரணங்களின் விளைவானதாகவும் இருக்கலாம்..."

III

தொகுத்து சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின் எழுபதுகளில் உதித்த இவ்விருகவிஞர்களும் நவீன தமிழ்க்கவிதைப் பரப்பில் முக்கியமான இரு ஆளுமைகள் என்பதும் அவ்வழி, வில்வரத்தினத்தின் கவிதைப்-பொருள் ஒன்றேயாயினும் 'சொற்புதிது சுவை புதிது வளம் புதி'தாகவுள்ளன என்பதும் சிவசேகரத்தின் கவிதைப் பொருளும் உத்திகளும் பன்முகப்பட்டதாகவும் அவை 'சுவை புதிது வளம் புதிது' ஆகவுள்ளன என்பதும் மனங்கொள்ளப்பட வேண்டியனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

சோலைக்கிளியின் கவிதைகள்

ஓர் அறிமுகம்

எண்பதுகளளவில் ஈழத்துக் கவிதையுலகினுட் பிரவேசித்த சோலைக்கிளியின் கவிதைகள் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சிப் போக்கில் மட்டுமன்றி, பொதுவான நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சிப் போக்கிலேகூட முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. இவற்றைச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகின்றது.

சோலைக்கிளியின் கவிதைகள் உள்ளடக்க ரீதியில் ஏனைய கவிஞர்களது கவிதைகள் போன்று,

இன்றைய காலத்திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத்தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத்திழுப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத் திக்கட்டுக்கள்

பற்றிப் பேசுவனவாகும். எனவே, இவரது தனித்துவம் வெளிப்பாட்டு முறை சார்ந்ததாகவேயுள்ளது.

சோலைக்கிளியின் ஆரம்பகாலக் கவிதைகளில் அவரது வெளிப்பாட்டுத் திறனைக் காட்டுவனவாக அமைந்தவை, அவர் கையாண்ட படிமங்களாகும். இத்தகைய படிமங்கள் பிரமிப்பூட்டு-வனவாகவோ புதுமையானவையாகவோ அதிர்ச்சியூட்டுவனவாகவோ பயங்கரமானவையாகவோ அமைந்திருக்கலாம். அவை எத்தன்மையன என்பதைக் கவிதையின் உணர்வுத்தளமே தீர்மானிக்கின்றது. சமகாலச் சமூகத்தின் அச்சநிலை வன்முறை சார்ந்த நிலை அவரது கவிதைகளில் அதிர்ச்சியூட்டும் படிமங்களாக வெளிப்படுவதனைப் பின்வரும் கவிதைப் பகுதி காட்டுகின்றது.

தொப்பி
காற்சட்டை, சப்பாத்து
இடுப்பில் ஒரு கத்தி மீசை
அனைத்தோடும் பிள்ளைகள் கருப்பைக்குள்
இருந்து
குதிக்கின்ற ஒரு காலம் வரும்.
சோளம் மீசையுடன் நிற்காது.
மனிதனைச் சுட்டுப் புழுப்போல குவிக்கின்ற
துவக்கை ஓலைக்குள் மறைத்து வைத்து ஈனும்
பூ மரங்கள் கூட
..... துப்பாக்கிச் சன்னத்தை
அரும்பி அரும்பி
வாசலெல்லாம் சும்மா தேவையின்றிச்
சொரியும்
குண்டு குலைகுலையாய் தென்னைகளில்
தூங்கும்
வற்றாளைக் கொடி நட்டால்
அதில் விளையும் நிலக்கண்ணி

- தொப்பி சப்பாத்துச்சிசு

இவ்வாறே காதலுணர்வும் காதல் தோல்வியின் துயரமும் ஆரம்ப காலத்தில் காதல் கிறுக்கில் மூழ்கியிருந்த நாட்களும் நினைவு கூரப்படும் போது அவை இத்தகைய படிமங்களாக வெளிப்-பட்டுள்ளன :

வால் மினுங்கும் வெல்வெட்டுப்பறவை
அது மூக்குத் தொங்கலில் எச்சம் அடித்தாலும்
அந்நேரம் மணம்தான்
அது ஒரு காலம்
காதல் கிறுக்குத் தலையில் இருந்த
நாம் பெருவிரல் நடந்த நேரம்
அப்போது வானம்
எட்டிப் பிடித்தால் கைக்குப்படுகின்ற
ஒரு முழ இரு முழத் தூரத்தில் இருந்தது.
ஏன் உனக்குத் தெரியுமே
அண்ணாந்து நீ சிரித்தால்
நிலவிற்குக் கேட்கும்
வானுக்கும் உச்சியெல்லாம் பூப்பூக்கும்

- அந்த வெல்வெட்டுப் பறவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோலைக்கிளியின் ஆரம்ப காலக் கவிதைகளில் மட்டக்களப்பு பேச்சுவழக்கு, குறிப்பாக முஸ்லிம் மக்களது பேச்சுவழக்குகளும் பிராந்திய மரபுத் தொடர்களும் வேறெந்த மட்டக்களப்புப் பிரதேசக் கவிஞர்களையும் விட பெருமளவு இடம்பெற்றிருந்தன. "மழைப் பழம்", "பேய் நெல்லுக் காயவைக்கும் வெயில்" என்பன இதற்கு உதாரணங்களாகும். இவை பிராந்திய வழக்குகளாக அமைய, எட்டாவது நரகம் முதலியன சமயச் சார்ந்த பண்பாட்டு வழக்குகளாக அமைந்துள்ளன. இவற்றில் கையாளுகை கவிதையின் உணர்வுத் தளத்திலிருந்து விட்டுவிலகாமல் அதனுடன் இரண்டறக் கலந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

மேற்கூறியவற்றைவிட காலப் போக்கில் சோலைக்கிளியின் கவிதைகளில் ஏற்பட்ட சில மாற்றங்களே அவரைத் தனித்துவமுடைய அவ்விதத்தில் முன்னுதாரணமற்ற கவிஞராக்கின. சமகாலச் சமூக நிகழ்வுகளை மாற்றங்களை அஃறிணைப் பொருட்களூடாகக் கண்டு கொள்வதே அத்தகைய வெளிப்பாட்டு மாற்றங்களுள் முதன்மையானதாகின்றது. இவ்விதத்தில் சோலைக்கிளியின் பின்வரும் கூற்று இங்கு எடுத்தாளத்தக்கது. அவர் எழுதுகின்றார்.

"இயற்கைகளைப் புசித்து கவிதைகளோடு தினமும் ஐக்கியப்பட்டுப் போகின்ற ஒருவனுக்கு உலகில் உயிரற்ற பொருட்கள் என்று எதுவும் இருக்க முடியாது.

கல்லுக்கும் கண்ணும் மூக்கும் வாயும் ஆத்மாவும் இருப்பதை நானும் இப்போதுதான் காண்கின்றேன். மண்ணுக்குள் மணமும், மனமும் இருப்பதைப் போல இரத்தமும் ஓடுகின்றது.

இப்படியான புரிதல்கள் வந்த பின்னர் நான் ஒன்றை உணர்கிறேன். அதுதான் உலகிலுள்ள எந்தப் பொருட்களின் ஆத்மாவின் குரலும் மொழியும் எனக்கும் விளங்கிப் போகிறது.

இல்லையென்றால் தோணியும் தோணியும் காதல் செய்வதைப் பற்றி நானிங்கு எழுதியிருக்க முடியாது. அஃறிணைப் பொருட்களெல்லாம் உயர்திணைகளாக மாறுவது தவிர்க்க முடியாது. ஏனென்றால், பாசமும் நேசமும் நிறைந்த ஒரு மனிதனாக கவிஞன் பூமிக்கும் வானத்திற்கும் இடையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அஃறிணை வேறு, உயர்திணை வேறு என்று அவனால் பிரிக்க முடியாது. எந்தப் பொருட்களையுமே அவன் இந்த உயிருள்ள ஸ்தானத்தில் வைக்கத் தொடங்கிடுவான்.

சூரியனைத் தூக்கி தன் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு ஒரு கவிஞன் திரிவது இதனால் சாத்தியமாகிறது. வண்ணத்துப் பூச்சி அவனுக்கு வாகனமாகிப் போவதும் இதனால்தான். முழு உலகமுமே

ஓர் உயிருள்ள பண்டமாக அவன் அனுபவிக்கத் தொடங்கித் தொடங்கி அவன் வேறு பிறவேறு என்று அவனால் பிரித்துப் பார்க்க முடியாததாகி விடுகின்றது". (அடிக்கோடு எம்மால் இடப்பட்டது - பனியில் மொழி எழுதி - முன்னுரை) மேற்கோள் நீண்டதாயினும் சோலைக்கிளியின் கவிதைகளின் வளர்ச்சி நிலையினையும் உணர்வுத் தளத்தின் அடிப்படையையும் உணர்த்தி நிற்கின்றன. ஆதாரமாகப் பல கவிதைகள் மேற்கோளாகத் தரப்படுவதைத் தடுத்து விடுகின்றன.

ஆயினும் ஒரு சில கவிதைப் பகுதிகள் அவசியம் கருதி இங்கு தரப்படுகின்றன:

எ-டு : 1

அருமை
அற்புதம்
அழகு
ஒரு நாயின் தோளில் ஒரு காகம் பயணம்
இந்த மனிதன் வெட்கப்பட வேண்டும்
மனிதம் இவைகளிடம் இருக்கிறது
பொருந்த முடியாத இரு ஜீவராசிகள்
பொருந்திக் கொண்ட வியப்பில்
சேவலுடன் கூடிவிட்டுக்
குளிக்க முடியாமல்
நீரின்றி இருந்த குருவி
ஆனந்தக் கண்ணீர் விட்டே
அதனை நீராட்டிக் கொள்கிறது
காக்கை நாய்ச் சவாரி

எ-டு : 2

நிலவுக்கு வேலியிடு
சூரியனையும் பங்கு போட்டுப் பகிர்ந்து கொள்
வெள்ளிகளை எண்ணு
இன விகிதாசாரப்படி பிரி
நாகரீக யுகத்து மனிதர்கள் நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலை அளந்து எடு
வானத்தைப் பிளந்து துண்டாடு
சமயம் வந்தால் காற்றைக் கடத்து
எறும்புக்கும்
இன முத்திரை இடு
மரத்திற்குக் கூட
சாதி சமயத்தைப் புகட்டு
புறா முக்கட்டும்
இன்னொரு இனத்தை நகைத்து
'என் இனத்துப் பேனா யாரால் அழுதது'

எ-டு : 3

புல்லை இனி நான் உண்கிறேன்
கோடி வேலியிலே தழைத்துள்ள சிறுசிலியாக்
கம்பை இனி நான் காருகிறேன்
ஆலங் கொத்தைப் புசிக்கிறேன்
யார் கையை நீட்டினாலும்
துள்ளுகிறேன்
குதிக்கிறேன்

எவரும் தூக்கினால்
இரண்டு கைகளுக்குள்ளும் இருந்து
மே என்கின்றேன்
என் ஆட்டுக்குட்டி!
என் ஆத்மா!

(ஆட்டுக் குட்டிக்கு அஞ்சலி)

எ-டு : 4

இன்று அவன் சொன்ன ஒரு பொய்க்கு
நான்கு தலை
பதினெட்டுக் கண்கள்
வால் இருபத்து மூன்று
கழுத்துகள் பதினாறு.

அந்தப் பொய்தான் எனது பற்களிலும்
கெட்டியாய் ஒட்டியது
யாவரும் இங்கு சமமென்ற பழைய
பெரும் பொய்யைப் போல
நாற்றத்துடன் (பல்லில் ஒட்டிய பொய்)

எ-டு : 5

மாமி
என்னைத் தெரிகிறதா உங்களுக்கு?
நான்தான்
வெயில் மங்கி நிலா விதைக்க, இருள்
வானம் உழும் நேரம்
ஊர் இருந்து பறந்து வந்து
இந்தப் பெருங் கொப்புள் குந்தியிருக்க
தினம் வரும் குருவி
நீங்கள் என்னைக் கக்கத்தில் இடுக்கி
இருப்பது போல இருக்கும்

உங்கள் கொப்புக்குள் இருந்தால் நான்
பார்ப்போர்க்கு
மாமி
ஆமி வந்து உங்களைத் தமது
படை வளவுள் சிறைப்படுத்த
அறுந்தது நமது தொடர்பு
ஆரம்பத்தில்
காற்றில்
இரண்டொரு கடிதம்
பூக்கேட்டு
வேரில்
சப்பாத்துக் காலால் உதைக்கிறான் என்று
சொல்லி
அழுதெல்லாம்
பின் காற்றும் இறந்தது.
நாம் காற்றும் எழுதி வாசிக்கும் எழுத்துகளும்
மறந்தன
மாமி என்னைத் தெரிகிறதா உங்களுக்கு?

(படைபோன பிறகு கண்ட என் அலரிமர மாமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ-டு : 6

உனது நான்
ஓங்கி நிற்கிறது
மலையார்
தேயிலை நடுவதற்கு
மிகச் சிறந்த இடம்
உனது நான்

உனது நானில்
ஓர் அருவியும் ஓடினால் மிக அழகாக
இருக்கும்

நண்பா, உனது நானில்
சிலர்
வீடு கட்ட வருவார்கள்
மிகவும் அடிவாரத்தில் கட்டிக் கொள்ள
வைக்காதே

அவர்களை
உனது நான் சரிந்தால்
சந்தித்தால்
அவர்கள் அழிவர் இல்லையா?

(நண்பரின் நான்)

மேலுள்ள கவிதைப் பகுதிகளை ஆழ்ந்து கவனிப்பின் சோலைக்கிளியின் கவிதைகளில் அஃறிணை உயர்திணைக் கலப்பு, அவற்றுடனான உறவு, உணர்வுக் கலப்பு என்பன எவ்வெவ் விதங்களில் பரிணாமம் பெற்று வந்துள்ளன என்பது தெளிவாகின்றது.

சோலைக்கிளியின் அண்மைக்காலக் கவிதைகள் நுண்மன உணர்வுகளை வெகுநுட்பமாக வெளிப்படுத்துவதனை அவதானிக்க முடிகின்றது. பின்வரும் கவிதை அத்தகையது :

கிண்டியெடு
உன்னுடைய படைவீட்டை
ஆட்டி அசைத்துப் பிடுங்கி.
இந்தக் கடற்கரையில் சுமார் ஆறு ஆண்டுகளாய்
முளைந்திருந்த இந்தப் படைவீட்டின்
கிழங்கைக் கூடத் தோண்டு.

மழை வந்தால்
பொச்சென முளைக்காத விதமாய்
நான் வாய்க்குள் போடும் சீனி மணல்
கடற்கரை இது.
தென்றல் தனது கரங்களில் ரோஜாப்
பூவை
ஒவ்வொரு மாலையிலும் இந்தக் கடற்
கரையில்
வைத்துக் கொண்டே வருவோரை
தடவிக் கொடுத்து
இதயத்தின் கோளாறு திருத்தி
வழியனுப்பி வைக்கும்
தொழில்நுட்ப மேதை.
அந்த மேதையை நீ மீண்டும் அழைத்துத்
தந்துவிட்டுப் போ போர்வீரா!
நீ இந்தப் பால் நிலத்தில் வந்து குடியிருந்த
காலம் முதல்
என் இதயம் இயங்கவில்லை.
அதன் சக்கரங்கள் காற்றுப் போய்
நசிந்து கிடக்கின்றன நெஞ்சங்கள் விரைவாய்
உன் படைவீட்டைப் பிடுங்கு
இது இருந்த இடத்தின் மேல் இருந்த
வான் கூட
உன் உடுப்பின் நிறத்தில்
மாறி இருக்கின்றது

(மூடப்படும் கடற்கரைப் படைவீடு)

இறுதியாக இன்னுமொறு கூறவேண்டும். சோலைக்கிளியின் ஈழத்துக் கவிதைகளின் பின்பே. நவீன தமிழ்க் கவிதையுலகினுள் சர்றியலிசப்-பாணிக் கவிதைகளின் வரவு ஆரோக்கியமான விதத்தில் இடம் பெறத் தொடங்கின என்பதே அதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூல்கள்

சோலைக்கிளி, நானும் ஒரு பூனை, கல்முனை, 1991.

சோலைக்கிளி, காகம் கலைத்தகனவு, சுவடுகள் பதிப்பகம், சென்னை, 1991.

சோலைக்கிளி, ஆணிவேர் அறுத்த நான், ஆசியா வெளியீடு, பிரான்ஸ், 1993.

சோலைக்கிளி, பாம்பு நரம்பு மனிதன், தேசிய கலை இலக்கியப் பேரவை, சென்னை,1995.

- 'நவீன தமிழ்க்கவிதைப் பரப்பில் சோலைக்கிளியின் கவிதைகள் : சில அறிமுகக் குறிப்புகள்', சிந்தனை.

IV பிரதேச அடிப்படைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

ஒப்புநோக்கில் மலையகக் கவிதை

தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டு மலையக நவீன தமிழ்க் கவிதையின் வளர்ச்சி நிலைப்பற்றி அவதானிப்பது -அவ்விதத்தில் மலையக நவீன தமிழ்க் கவிதையின் தனித்துவங்கள் பற்றி கவனிப்பது - முக்கியமான தொன்றாகவுள்ளது.

மலையகத்தை பொறுத்தவரையில் நவீன தமிழ்க் கவிதை மீனாட்சியம்மன் நடேசஐயர், கோ.நடேசய்யர் ஆகியோரின் முயற்சிகளினால் 1930 களில் முகிழ்த்தாலுங் கூட ஏறத்தாழ 1960 வரை அம்முயற்சி பரவலாகவோ ஆழமாகவோ வேரூன்றியதாகக் கூறமுடியாது. அவ்விருவரையும் தொடர்ந்து வாய்மொழிக் கவிஞர் குழாத்திடம் மலையகக் கவிதை சென்று விடுகின்றது. மக்கள் கவிமணி சி.வி.யை ஆங்கிலத்தில் எழுதிய கவிஞராகவே கருத வேண்டும். 1940 களின் பின் கூறிலே இடம் பெற்ற கே.கணேஷின் நவீன கவிதை முயற்சிகள் தொடரவில்லை என்பதோடு காலம் அவரை மொழிப் பெயர்ப்புக் கவிஞராகவே உருவாக்கி விட்டது. 1950 களில் உருவானவர்கள் மலையகம் பற்றிப் பாடினரென்பதனை விட, அக்காலப் பகுதியிலே பிரதான போக்காக இருந்த (மொழி வழித்) தேசிய உணர்வு சார்ந்த கவிதைகளையே படைத்தனர் என்பதே பொருத்தம். சக்தி அ.பாலையாவின் படைப்புகள் இதற்குச் சிறந்த உதாரணமாகின்றன. (ஆதாரம்: சொந்த நாட்டிலே தேசிய கீதங்கள், சுதந்திரன் அச்சகம், 1961) 1960 களிலேயே இத்தகைய போக்கில் மாற்றமேற்படுகின்றது. தமிழோவியன், குறிஞ்சிநாடன் முதலானோரின் பிரவேசம் நிகழ்கின்றது. மலையகம் பரந்த தளத்திலே அவர்களது கவிப்பொருளாகின்றது. 1960 தொடக்கம் இன்று வரையான மலையக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கவிதை வளர்ச்சியின் தனித்துவங்கள் யாவை என்பதே எமது கேள்வி.

மேற்கூறிய விதத்தில் நோக்கும் போது முதலிற் குறிப்பிடத்தக்க தனித்துவப் பண்புகளாக விளங்குவது, மலையகக் கவிஞர்களின் சமூக உணர்வு ஆகும். அதாவது, ஏனைய பிரதேசக் கவிஞர்களுடன் ஒப்பிடும் போது, இப்பண்பு இங்கு முதன்மைப்பட்டிருக்கிறதென்பது ஒன்று. மறுதலையாக இயற்கையையும், காதலையும், கவிதையையும், தெய்வத்தையும் பெருமளவு பாடவில்லை என்பது மற்றொன்று. ம.சண்முகந்தனின் கவிதைகள் பற்றி "ஓங்கி வளர்ந்த உச்சி-மேட்டினின்று தொலைநோக்கி, அழகு காட்டும் கதிர்காமக் குன்றையும், சிங்கராஜப் பெருங்காட்டின் சிங்காரத்தையும், சமனளவாவியின் வளத்தையும் வருணனை செய்ய முன்வரவில்லை". என்ற கே.கணேஷ் குறிப்பிடுவது (கவனத்திற்குரிய) மலையகக் கவிஞர்கள் அனைவர்க்கும் பொருந்துகின்றது என்பதில் ஐயமில்லை.

மேற்கூறிய சமூக உணர்வு என்பது நாம் நன்கு அறிந்தது போன்று, "கதிரவனுக்கு முன்னெழுந்து, உணவு சமைத்து, பெரட்டுக்-களம் சென்று குளிரைச் சகித்து மலையேறிக் கொழுந்து பறித்தும், கவ்வாத்து வெட்டியும், கான்போட்டும், முள் குத்தியும் மாலை வீடு வந்து துயிலும்" மலையகத் தொழிலாளர்களின் பல்வேறு வகையான அவலங்களை அதிகளவு சித்திரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு நான் கூறவருவது, இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் உள்ள தொழிலாளர்களது வாழ்க்கையை அவ்வப் பிரதேசக் கவிஞர்கள் கண்டும் காணாதிருக்கும் போது, மலையகக் கவிஞர்கள் அவ்வாறு வாளாவிருக்கவில்லை என்பதே. ஆக, மலையகக் கவிதைகளின் மற்றொரு தனித்துவம் தொழிலாளர்கள் பற்றி அதிகம் பாடப்படு-வதாகும்.

மேற்கூறிய பண்பினை நுணுகி நோக்கும் போது, அதனூடே இன்னொரு தனித்துவம் மேற் கிளம்புகின்றது. அதாவது, தொழிலாளர்-கள் தமது அவலங்களைத் தாமே வெளிப்படுத்தி வருகின்றனர். இவ்விதத்தில் பலர் இருப்பினும் குறிஞ்சித் தென்னவனும், மல்லிகை சி.குமாரும் உடன் நினைவிற்கு வருகின்றனர் "துன்பம் தொலையவில்லை, துயரக் கதையோ முடியவில்லை" என்று தொழிலாளியான குறிஞ்சித் தென்னவன் பாடுவதற்கும், தொழிலாளர் வர்க்கம் சாராத பிறக்கவிஞர் பாடுவதற்குமிடையிலான உணர்வுத்தனம் வேறு என்பதனை அழுத்தி உணர்த்த வேண்டியது அவசியமன்று.

இனி மலையகக் கவிதைகளின் வடிவம் பற்றியும் சிலவற்றைக் கூற வேண்டியுள்ளது. எமது இலங்கைக் கவிஞர்கள் எமது மரபிலிருந்து

உறிஞ்ச வேண்டியவை பல உள்ளன. நாட்டார் பாடல் வடிவங்களைப் பயன்படுத்துவதென்பது இவற்றுள் ஒன்று. இவ்விதத்தில் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது, மலையகக் கவிதைகளில் இப்பயன்பாடு அதிகமுள்ளமை கவனத்திற்குரியதாகின்றது.

மட்டம் சரியாப் போடு மாரியாயி - தேயிலை
மாரெடுத்துக் கீழே போடு மருதாயி
சட்டப்படி வேலை செய்யும் மூக்காயி - மலைக்குச்
சங்கூதுது முன்னம் வாடி மூக்காயி
என்று அறுபதுகளின் கவிஞர்கள் மட்டுமன்றி

என்ன மச்சான் சிவராசா
சில்லறையா எண்ணுறியே
கோடியா நீ ஒழைச்சும்
கோவணமும் மிஞ்சலையா?

ஒழைச்சுக் கொடுத்த நாங்க
பிச்சை எடுத்த காலம்
மலையேறிப் போகுமடி
மச்சானோட வாருமடி

என்று எண்பதுகளின் கவிஞர்களும் பாடுவது குறிப்பிடத்தக்கது. (அதே வேளையில், இவ்விருக்கால கட்டக் கவிஞர்களின் பார்வை வேறுபாடுகளும் மேற்கூறிய பகுதிகளிலிருந்து புலப்படுவதை அவதானிக்குக). மலையகத்தில் குறும்பா வடிவமும் சமூக உணர்வு மீதுர பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூறத்தோன்றுகின்றது. எ-டு குறிஞ்சித் தென்னவன் :

குப்பன் வாழ் லயத்தினது கூரை
குளமாக்கும் வீட்டை மழைத்தாரை
தப்பாது இங்கு வந்த
தகரமெல்லாம் ஓரிரவில்
அப்போதே அடையும் கொழும்பூரை.

ஆயினும் குறிஞ்சித் தென்னவன் எழுதியதாகக் கூறப்படும் குறும்பா அனைத்தும் தொகுக்கப்பட்ட பின்பே இதனை உறுதி செய்ய முடியும்.

இலங்கையின் ஏனைய பிரதேசக் கவிதைகளில், எண்பதுகள் புதிய பாய்ச்சல்களை ஏற்படுத்தியது போன்ற நிலைமை மலைய-கத்திலும் நிகழ்கின்றது. முன்னையோரைவிட தேடலும், வாசிப்பும், வேகமும் கொண்ட இளந்தலைமுறையொன்றின் வரவு இங்கு நிகழ் கின்றது. முரளிதரன் பின்வருமாறு இதற்கு எடுத்துக் காட்டுகின்றார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் டன் டனக்
டன் டன் டனக்
பழனியப்பா - நீ
பூமியினின்று கவ்வாத்து
செய்யப்பட்டு விட்டாயோ
டன் டன் டனக்
டன் டன் டனக்

என்ற புதிய ஒலிகள், மலையகமெங்கும் எதிரொலித்து இளந்தலை-முறையின் மத்தியில் எழுச்சி அலைகளை ஏற்படுத்துகின்றது. இவ்விதத்தில் உள்ளடக்கம் மட்டுமன்றி, புதுவடிவப் பயன்பாடு, முதன்முதலாக கலாபூர்வமாக பிரக்ஞை பூர்வமாக இவரூடாக வெளிப்பட்டதென்பதும் நினைவுபடுத்த வேண்டியதாகின்றது. கூடவே, ஹைக்கூ வடிவத்தின் வரவும் இவரது கூடைக்குள் தேசத்திலிருந்து அறிமுகமாகின்றது.

எண்பதுகளிலேற்பட்ட இன்னொரு பரிணாமம் மார்க்சிய நோக்கிலான முற்போக்குக் கவிஞர்களின் எழுச்சியாகும். இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் இக்குழாத்தினர் தளர்ச்சி காண்கின்ற போது, மலையகத்தில் அதற்கு மாறான நிலை காணப்படுகின்றது. இவ்விதத்தில் இ.தம்பையா, சிவ ராஜேந்திரன், எஸ். பன்னீர்செல்வம் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆகின்றனர். இத்தகையோருள், பன்னீர்செல்வத்தின் கவிதைகள் அழகியல் பெறுமானம் மிக்கவை.

இன்று நிதானித்து நோக்கும் போது, அறுபதுகளின் கவிஞர்கள் மலையகச் சமூகத்தைப் பாடியதற்கும், எண்பதுகளின் கவிஞர்கள் பாடுவதற்குமிடையில் முக்கிய வேறுபாடொன்றுள்ளது. அதாவது, எண்பதுகளில் பிரவேசித்த கவிஞர்களிடம் சமூகம், அரசியல் பற்றிய கூர்மையான விமர்சனம் காணப்படுகின்றமை அழுத்தி உரைக்கப்பட வேண்டியதே.

அதே வேளையில், இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலே குறிப்பாக, வன்னி, அம்பாறை பிரதேசம் சார்ந்த இளந்தலைமுறைக் கவிஞர்கள் இலங்கையின் நவீன கவிதை வளர்ச்சியை வளம்படுத்தி வருவது கண்கூடு. மலையக இளந்தலைமுறைக் கவிஞர்கள் இவ்விதத்தில் பின்தங்கியுள்ளமையை மதுரத் தமிழ் (2000), தேட்டம் (2000), விருட்சப் பதியங்கள் (2000) ஆகிய தொகுப்புகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. மூத்த தலைமுறை கவிஞர்களும், விமர்சகர்களும் இது பற்றிச் சிந்திப்பது காலத்தின் தேவையாகின்றது. எனினும், மொழி பெயர்ப்புக் கவிதைத் துறையில், மலையகத்தின் பங்களிப்பு கணிசமானதென்பது நாமறிந்ததே. (எடு: கே. கணேஷ்)

இறுதியாக, ஒன்று கூறவேண்டும். இலங்கையின் நவீன கவிதை முன்னோடிகளுள் ஒருவரான மீனாட்சியம்மாள் நடேசய்யர் இலங்கையின் அனைத்துக் கவிஞர்களுக்கும் சொல்லாமற் சொல்லியுள்ள இரு செய்திகள் எமது கவனத்திற்கு உரியனவாகின்றன. அவை:

i கவிதை அடிநிலை மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டும். அதாவது, கவிதையின் செயற்பாட்டுத்தளம் கவனத்திற்குரியது.

ii கவிதையின் உள்ளடக்க உருவ பிணைப்பு மனதில் கொள்ளப் படல் வேண்டும் என்பனவாகும்.

- மத்தியமாகாண தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர், 2003.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21

தமிழிலக்கியப் பரப்பில் ஈழத்து நவீன கவிதை

பேராசிரியர் வி.செல்வநாயகம் "தமிழ் இலக்கிய வரலாறு" எழுதிய காலப்பகுதியிலே "தமிழ் இலக்கிய வரலாறு" என்பது தமிழ்நாட்டு இலக்கிய வரலாறாகவே அமைந்திருந்தது. இப்போது நிலைமை வேறு. பல்வேறு நிலைகளிலும் ஈழத்து இலக்கிய வரலாறு இன்றித் தமிழிலக்கிய வரலாறு பூர்த்தி அடைய முடியாது என்பது உணரப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில் தமிழிலக்கிய பரப்பில் ஈழத்து நவீன கவிதை பெற்றுள்ள இடம் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது அவசியமானதென்று கருதுகின்றேன்.

தமிழிலே நவீன கவிதை 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே பாரதியாருடன் தோற்றம் பெற்றது என்பது இலக்கிய ஆர்வலர் பலரும் அறிந்தவிடயமே. தமிழ்க்கவிதையை பிரக்ஞைபூர்வமாக, சமூகத்துடனும் அவ்வழி அரசியலுடனும் இணைத்தமை பாரதியாரின் முக்கிய சாதனையாகிறது. "இரண்டொரு வருஷத்து நூற்பழக்கமுள்ள பொதுஜனங்களை" அவன் மனங்கொண்டமையினால் கவிதையின் (மேற்கூறியவாறான) உள்ளடக்கம் மட்டுமன்றி வடிவம், வெளிப்பாட்டு முறை என்பனவும் அவன் கவனத்திற்குள்ளாகின. பாரதிக்குப் பின்னர் அவன் தாசனான பாரதிதாசனிடம் தீவிரமான தமிழ்த்தேசியம், சமூகச்சீர்திருத்தம், பகுத்தறிவுச்சிந்தனை முதலியன வெளிப்பட்டன. இதே காலப்பகுதியில் 30களில் தமிழ்நாட்டில் புதுக்கவிதை முயற்சிகளில் மணிக்கொடிக் குழுவினரான ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா. முதலானோர் ஈடுபட்டனர்.

ஆயினும் பின்னர் நவீன கவிதை பாரதிதாசன் பரம்பரையினரிடம் ஓசை ஒலிக்கோலமாயும் அலங்காரப்பந்தலாயும் புதுக்கவிதையாளரிடம் தனிமனித உணர்வுகளுக்கு தன்மை-

மேற்கூறியவாறு இளங்கவிஞர்களுக்குப் போதனை செய்கின்ற புலவர் மணி, வெறும் போதனையுடன் மட்டும் நின்றாரல்லர். அவ்வப்போது தமிழ்ச் சமூகத்தின் சிறுமைகள் கண்டு பொங்கி எதிர்ப்புக் குரல் எழுப்புபவராகவும் காணப்பட்டார்.

மட்டக்களப்புப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் கோயில்கள் பெற்றுள்ள முக்கியத்துவமும், அவ்வழி கோயில் நிர்வாகத்திலே வண்ணக்கர் பெற்றுள்ள உயர் அந்தஸ்தும் யாவருமறிந்ததே. ஏதோவொரு சந்தர்ப்பத்திலே அத்தகைய வண்ணக்கர்மார் சிலரைச்சாடி, புலவர் மணி இவ்வாறு பாடியுள்ளார்:

> கோயில்நிலங்கொடுத்துக் குத்தகையை வாங்கித்தம்
> வாயிலிடும் வண்ணக்கு மார்த்தலைமேல் - போயிடிதான்
> வீழாதோ? சுற்றம் மிடியும் பிணியுமுற்றுத்
> தாழாதோ? தெய்வமிருந்தால்.

இவ்வாறே வன்னிமை நியமனத்தில் ஒருதடவை அநீதி இடம்பெற்ற போது மனங்குமுறிய புலவர் மணி தமது குமுறலை இவ்வாறு வெளிப்படுத்துகின்றார்:

> கல்வியறிவில்லாக் கசட்டுமனக் காமுகற்கு
> நல்வன்னி மைப்பதவி நல்கிடிலென் - தொல்லை
> படிமுழுதுஞ் சென்று பழுதுரைத்துநாளும்
> குடிமுழுதும் கொன்று விடும்
>
> மான மணியிழந்த வஞ்சகனைக் கூவி அபி
> தான மணியமெனச் சாற்றினர் காண் - ஆனதனால்
> சிற்றினங்க ளோங்கும் சிறப்புடைய
> நல்லினங்கள்
> முற்றும் நசிந்து கெடும்

அற்ப சொற்ப சலுகைகள் பெறுவதற்காக தம்மை விற்கமுனைகின்ற மனிதர்களையும் சாடுகின்றார், புலவர்மணி :

> சலுகை சலுகையென்று சாற்றுகின்றார் நாட்டில்
> சலுகை உரிமையன்று தம்பி - சலுகைக்காய்
> பின்செல்வார் பேடியர்காண் பிற்சந்த திக்கிவரால்
> என் சொல்வேன் எய்தும் இழுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கப் பாடசாலை ஆசிரியராக விளங்கிய புலவர் மணிக்கு திணைக்கள அரச ஊழியர்களுடன் அடிக்கடி தொடர்புகொள்ளும் வாய்ப்பு ஏற்படுவது இயல்பானதே. இத்தகைய சூழலில் ஒருதடவை, யாழ்ப்பாணத்திற்கு ஒரு மாநாட்டுக்குத் தலைமை தாங்கச் செல்வதற்காக, தனது பென்சனை ஒரு நாள் முந்தித்தரும்படி அதிகாரியொருவரைக் கேட்க நேர்ந்தது. அவ்வேளை, அதிகாரி மறுத்த நிலையில் பின்வருமாறு பாடினார் புலவர்மணி:

சட்டமுடன் மனிதத் தன்மையறியாக் கயவன்
சிட்டர் பதவிகளைச் சேர்ந்தாலென் - முட்டும்
எருமையவ னுக்கெவரு மொன்றே பெரியோர்
அருமை யறியா னவன்

பாரதியார் பாடியது போன்ற "வேடிக்கை மனிதரின் செயல்களும் புலவர் மணியின் கண்டனத்திற்குள்ளாகத் தவறவில்லை. பின்வருவது, கோழிக் கறிக்குப் பதிலாக மரக்கறி சமைத்து போதகருக்கு விருந்து படைத்த ஒருவர் பற்றியதாகும்:

கட்டி வைத்த கோழி காற் கட்டறுத்துக் கொண்டோடி
விட்டதாற் பாவி விரைந்து பற்றி - வெட்டியே
பூனை கறி சமைத்துப் போதகரை உண்பித்த
ஈனனுமு ளான் சமூகத்தில்

ஏனைய மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர் பலர் போன்று புலவர் மணியும் தமிழர் - முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்திப் பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அப்பாடலுளொன்று இது:

இருதயத்தின் ஈரிதழ்போல் இங்குதமிழ்முஸ்லிம்
ஒருவயிற்றுப் பாலக போ லுள்ளோம் - அரசியலிற்
பேராசை கொண்டோர் பிரிந்து நமைவேறாக்கி
ஆராயார் செய்வா ரழிவு

புலவர்மணி இளமைக் காலத்திலே கல்வி பயிலும் பொருட்டு யாழ்ப்பாணம் சென்று வாழ்ந்தவர். இது காரணமாக, யாழ்ப்பாணப் பிரதேசம் சார்ந்த சமூகப் பிரச்சினைகள் சிலவும் அவரது பாடு பொருளாயின. சாதிப் பிரச்சினை இறுக்கமாகக் காணப்படாத மட்டக்களப்புப் பிரதேசத்திலிருந்து சென்ற புலவர்மணியின்

கவனத்தை யாழ்ப்பாணச் சாதிப் பிரச்சினை ஈர்த்துக் கொண்டதிலே வியப்பில்லை. அங்கிருந்தபோது, அன்னார் "தீண்டத்தகாத"வருடன் பழக முற்பட்டார். அத்தகையவருளொருவரான ஆறுமுகம் என்ற ஒருவரது நினைவு மலருக்கு அவர் பாடல் எழுத நேர்ந்தபோது, யாழ்ப்பாணச் சாதிப் பிரச்சினை பற்றியும் குறிப்பிடத் தவறவில்லை. அத்தகைய பாடல்களுளொன்று இங்கு தரப்படுகின்றது:

ஒழுக்கத் துயர்குலமாம் ஓங்கு புகழுண்டாம்
இழுக்கத் திழிகுலமாம் என்றே - விழுப்பத்து
நூற்குலத்தை யெல்லாம் நுணுகியறிந் தாறுமுக ன
மேற்குலத்த னானான் விரைந்து

(ஏனைய பாடல்களெவையும் கிடைக்கவில்லை) இங்கு வற்புறுத்தப்பட வேண்டிய விடயமொன்றுள்ளது. யாழ்ப்பாணச் சாதியத்திற்கெதிரான யாழ்ப்பாணக் கவிஞரது எதிர்ப்புக் குரல் 1930 களிலே ஒலிக்க, புலவர் மணியின் எதிர்ப்புக் குரலோ 1923இல் இடம் பெற்று விட்டது. முற்குறிப்பிட்டது போல், சாதிப் பிரச்சினை மிக நெகிழ்ச்சியாகவுள்ள மட்டக்களப்பினைச் சார்ந்தவரிடமிருந்து அத்தகைய குரல் வெளிவருவது வியப்பிற்குரியதன்று.

எனினும் பின் நாளிலும் புலவர் மணியின் மேற் குறித்தவாறான எதிர்ப்புக் குரல் எழுந்துள்ளமை கவனத்திற்குரியது. யாழ்ப்பாணச் சாதிப் போராட்ட வரலாற்றிலே மாவிட்டபுர ஆலயப் பிரவேசப் போராட்டம் முக்கியமானது. இதுபற்றி புலவர் மணி எழுதியுள்ள கவிதைகள் உள்ளடக்கத்தால் மட்டுமன்றி, கவிநயத்தாலும் குறிப்பிடத்தக்கவை. பின்வரும் பாடல்கள் இதற்குச் சான்றாகின்றன:

கோயிலைக் கண்டு கும்பிடப் போனோம்
குருக்களும் முகாமையும் குறுகி
வாயிலைப் பூட்டி வேலியும் போட்டு
வளைத் துனைக் காவலில் வைத்தார்.
காய்கறித் தோட்ட மோ முருகா நீ
கால் நடை யோசிறி யேங்கள்
வாயிலை முகாமை மனத்தினைத் திறந்தெம்
மனக்குறை தீர்த்தருள் பரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தியி னிடத்தைச் சுந்தரர் பிடித்து
நடுநின்று மறைத்தெமதைத் தடுத்தார்
எந்தையே உனது தரிசன மின்றி
இராப்பகலா இரங்கி நிற் கின்றோம்
மந்திரமூலத் தானம்நின் பிரிவால்
வறிது பாழாகிட வெளியே
வந்தெமக் கருளி மாவைவேல் முருகா
வழிவழி எமைபுரந் தருள

நவீன கவிதைக்குரிய பிறிதொரு இயல்பாக அமைவது அரசியற் சார்பாகும். புலவர்மணி இத்தகைய நோக்குடைய கவிதைகளையும் எழுதியிருக்கின்றார். இலங்கையின் சனநாயக ஆட்சிப் போக்கினை விமர்சிப்பன, இவை :

பல்லினமும் பல்மொழியும் பல் மதமும் வாழ்நாட்டில்
வல்ல பெரும்பான்மை வகுப்பாட்சி - பொல்லாது
மற்றதுபோ தாமல் மதச்சார்பும் கூடுமேல்
மற்றினங்கட் கேதுசம வாழ்வு

பேதாய், வகுப்புப் பெரும்பான்மை ஆட்சியினை
ஏதோ சனநா யகமென்பாய் - மாதே
ஒரு வகுப்புக் கேனை வகுப்பு ழியம்செய்
கருமமன்றி யேதுரிமை காண்

பின்வரும் பாடல், "தலை வீக்கமுள்ள ஓர் அரசியல்வாதி தாங்கமுடியாத தலைப் பாரத்தாற் சாவுற்ற போழ்து பாடியது? என்று கருதப்படுகிறது:

முழங்காலில் நின்று முறையே எமக்கு
வழங்குமன்னிப் பென்று வணங்கி அழுங்காலம்
தூரத்தி லில்லையென்றான் தூக்க முடியாததலைப்
பார்த்தால் வீழ்ந்தான் பதைத்து

சுருங்கக்கூறின், புலவர்மணியின் கவிதைகளும் பாடல்களும் முற்றுமுழுதாக அல்லாவிடினும் நவீன கவிதைக்குரிய சிற்சில அம்சங்களையாவது கொண்டிருப்பது மேற்கூறியவற்றிலிருந்து தெளிவாகின்றது. எனவே, மட்டக்களப்புப் பிரதேச நவீன கவிதை உருவாக்கத்தின் ஊற்றுக் கால்களுள் ஒருவராக - முதல் ஊற்றுக்காலாக

புலவர்மணியினைக் குறிப்பிட முடிகின்றது. என்னும், ஐயந்திரிபற இதனை நிறுவுவதற்கு, அன்னாரின் கவிதைகள் முழுமையாகத் தொகுக்கப்படுவது அவசியமாகின்றது. அத்தகைய தொகுப்பு மூலபாடத் திறனாய்வு நோக்கிலமைவது மிக அவசியமானது!

இறுதியாக முக்கியமான விடயமொன்றினை வற்புறுத்த வேண்டும். 20ம்நூற்றாண்டில் நவீனகவிதையை உள்ளடக்கம். வடிவம் என்ற அடிப்படைகளில் பார்ப்பது தவிர்க்கவியலாத தொன்று. இவ்விதத்தில், உள்ளடக்கரீதியிலேயே புலவர் மணியின் கவிதைகள் நவீன கவிதையின் பண்புகள் பெறுகின்றன; வடிவரீதியில் அவை செய்யுள்களே!

- 'புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை : மட்டக்களப்பு பிரதேச நவீனகவிதையின் ஊற்றுக்கால்', தேனகம், 2004.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

தமிழ்த் தேசியமும் மட்டக்களப்புப் பிரதேசக் கவிஞர்களும்

ஈழத்தின் தமிழ்த் தேசிய வளர்ச்சி - வரலாறு இருநிலைப் பட்டதென்பது பொதுவாக அறியப்பட்டதொரு விடயமே. அதன் ஆரம்பநிலை (1950 - 1975) மொழிவழிப்பட்டதாக விளங்கியது. தமிழ் மொழிக்குரிய உரிமை, தமிழ் மொழிப் பயன்பாடு என்பன மறுக்கப்பட்ட போது அதற்கெதிரான போராட்டமாக அது பரிணமித்தது. அதன் அடுத்த நிலை (1975ன் பின்) அரசியல் சித்தாந்தச் சார்புடையதாகி தமிழ் ஈழக் கோரிக்கையாக உருவெடுத்தது. இவ்விதத்தில் வசதி கருதி முதற்கால கட்ட தமிழ் தேசியக் கவிதை வளர்ச்சியில் மட்டக்களப்புப் பிரதேச கவிஞர்களது நிலைபற்றி இங்கு கவனிப்போம்.

அவ்வாறு முதற்கால கட்டம் பற்றி நோக்குவதற்கான அவசியமொன்றுள்ளது. அதாவது, இம் முதற் கட்டத்தில் பல்வேறு காரணங்களினால் ஏனைய பிரதேசங்களை விட மட்டக்களப்புக் கவிஞர்கள் இத்தகைய கவிதைகள் இயற்றுவதில் கூடிய பங்களிப் பினை நல்கியுள்ளமை இன்று பின் நோக்கிப் பார்க்கும் போது தெளிவாகின்றது. குறிப்பாக, மட்டக்களப்பு இளைஞர்கள் பலரை தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகள் கவர்ந்திருந்தன. இன்னொரு விதமாகக் கூறின், தமிழரசுக் கட்சியும் அத்தகைய நோக்குடன் செயற்பட்டது என்று கூறுவதில் தவறில்லை. மறுபுறம், தமிழ்நாட்டுத் திராவிட முன்னேற்றக் கழக நூல்களும், பாரதிதாசன் கவிதைகளும் இங்கு நன்கு பரவியிருந்தன. இக்கால தமிழரசுக் கட்சி ஏடான சுதந்திரனின் செல்வாக்கும் இங்கு பரவலாக காணப்பட்டமையும் மறுக்கப்பட முடியாததே.

மேற்குறித்த ஆரோக்கியமான அரசியல் / இலக்கியச் சூழலில் மட்டக்களப்புப் பிரதேசக் கவிஞர்கள் பலர் "தமிழ்த் தேசிய" உணர்விற்குட்பட்டமை வியப்பிற்குரியதன்று. இவ்விதத்தில் நீலாவணன், ராஜாபாரதி, ஆரையூர் அமரன், ஜீவா ஜீவரத்தினம், எருவில் மூர்த்தி, புரட்சிக்கமால், காசி ஆனந்தன், திமிலைத்துமிலன் ஆகியோர் நினைவிற்கு வருகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவிதத்தில் கவனத்திற்குரியவர்களாகின்றனர்.

ராஜபாரதியின் தமிழ் உணர்ச்சிக் கவிதைகள் ஏனைய பிரதேசக் கவிஞர்களின் தமிழ் உணர்ச்சிக் கவிதைக்கு நிகரானவையாக விளங்கின.

கோடையில் எரிவெயிலிற் காயும் போது
கொப்பளித்து தமிழ் வெள்ளம் தோய வேண்டும்.
வாடைதரு முதலிலே நடுங்கும் போது
வயந்த தமிழ்க் கதிரென்னைக் காயவேண்டும்.

பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போது
பைந்தமிழின் அழுமோசை கேட்க வேண்டும்.
ஓடையிலே என் சாம்பர் கரையும் போது
ஒண்தமிழே சலசலத்து ஓய வேண்டும்

என்று அவர் பாடுகின்ற போது இதே காலப் பகுதியில் இத்தகைய கவிதைகள் எழுதிய யாழ்ப்பாணப் பிரதேசக் கவிஞர்களில் முக்கியமானவரான சச்சிதானந்தன் நினைவிற்கு வருவது தவிர்க்க இயலாததாகின்றது.

நீலாவணன், தீவிர மொழி உணர்ச்சி கொண்டவராக விளங்கினார். அவரது அத்தகைய தீவிரம் அவரது கவிதைகளின் தரத்தைக் குறைக்குமளவிற்கு வெளிப்பட்டது என்பதிலும் தவறில்லை. இத்தகைய கவிதையொன்றின் ஆரம்பம் பின்வருமாறு:-

எண்ட எண்ட
எதிர்மான சிங்க(ள)மே
பண்டெங்கள் பட்டிருப்பின்
பாவத்தால் வந்துதித்த
சண்டாளி.....

எருவில் மூர்த்தி இன்னொரு விதத்தில் கவனத்துக்குரியவர். (அக்கால மொழி உரிமைப் போராட்டத்தின் முதற் "களப்பலி"யான அவர், அக்காலப் பகுதியில் ஒருதடவை யதேச்சையாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டிற்குட்பட்டே கண்பார்வை இழந்தவர்) குறிப்பாக சிங்கள மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதற்கெதிராக அவர் எழுதிய கவிதைகளால் ஈர்க்கப்பட்ட சிலர் சிங்கள மொழி கற்காது விட்டனரென்ற விதத்தில் அவரது கவிதைக்கொரு பலமுண்டு. மொழி உரிமைப் போராட்டம் அக்கால முஸ்லிம் கவிஞர்களையும் ஆட்கொண்டிருந்தது. அதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குபவர் புரட்சிக்கமால். அவர் பாடிய அத்தகைய கவிதைகளுள் ஒன்று இவ்வாறு அமைகின்றது.

புலிநிகர் இளைஞரின் பொனிலா மகளிர்
பொங்கி எழுந்து புயலெனக் கிளர்ந்து
எங்கும் உணர்வை ஏற்றுக, திரள்க

மேற்கூறிய கவிஞர்களுள் தனித்துவமானவர் ஆரையூர் அமரன். அவரது கவிதைகளுள் கணிசமானவை ஊர்வலங்களின் போது மக்களால் நன்கு பாடப்படுமளவிற்கு நன்கு பரவியிருந்தன அவை. இதற்கு எடுத்துக்காட்டாக இங்கு ஒரு பாடலைத் தருவது பொருத்தமானது.

'அழைப்பு'
(வழிநடைச் சிந்து)

புறப்படு - புறப்படு - புறப்படு
அறப்போர் செய்யப் புறப்படு
அணிவகுத்து நின்றிடு
இறக்க வேண்டி நேரினும்
ஈட்டி போலப் புறப்படு! (புறப்படு)

வடக்கும் கிழக்கும் சேர்ந்தது
வலிவு பெற்று நிற்குது
அடக்கு முறையை அடக்கிட
ஆணும் பெண்ணும் சேர்ந்திடு! (புறப்படு)

படைகள் சீறிப் பாயினும்
தடைகள் நூறு போடினும்
மடைதிறந்த வெள்ளமாய்
மக்கள் ஒன்று கூடிட! (புறப்படு)

திடுதிடுத்து வெடியது
திசைகள் எட்டும் பாயினும்
திடம் படைத்த நெஞ்சோடு
திரண்டு நின்று எதிர்த்திட! (புறப்படு)

குண்டாந்தடி கொண்டு நம்
குருதிபாய அடிக்கினும்
தொண்டர் பொறுமை தாங்கியே
நின்று வலிமை காட்டி! (புறப்படு)

அவரது பாடல்கள் அக்காலம் பிரசித்தி பெற்றிருந்த சினிமாப் பாடல் மெட்டுகளில் அமைந்திருந்தமையினால் அவை பொது மக்களை மிக எளிதாக கவர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கு எடுத்துக்காட்டாக, இத்தகு பாடலொன்றினைத் தருவது பொருத்தமானது :

மெட்டு: 'காட்டுக்குள்ளே கண்ட பூ'

மோட்டார் தன்னில் போட்ட சிறி
நாட்டைக் கலக்குது - இந்த
நாட்டைக் கலக்குது - அதன்
சலசலப்பு வேசங்கண்டு
சந்தி சிரிக்குது - இந்த
சந்தி சிரிக்குது
.....
உலையைப் போல உளமிருந்து
உறுமிக் கொதிக்குது - எங்கும்
உறுமிக் கொதிக்குது - மொழி
உணர்ச்சி மீறி உயிரைக் கொடுக்க
உளமும் நாடுது - எங்கள்
உளமும் நாடுது
.....

மொழி உரிமைப் போராட்டம் தொடர்பாக, "சுதந்திரன்" பத்திரிகை அவ்வேளை வாரந்தோறும் நடத்தி வந்த வெண்பாப் போட்டிகளிலும் ("நண்டெழுத்து வேண்டாம் நமக்கு" என்பது போட்டித் தலைப்பு களிலொன்று.) மட்டக்களப்பு கவிஞர்கள் பலர் பங்கு பற்றியுள் ளமையும் இவ்விடத்தில் நினைவிற்கு வருகின்றது!

முற்கூறிய கவிஞர்களுள் இருவர் தொடர்ந்து அடுத்த காலகட்டத்திலும் தமிழ்த் தேசியம் பற்றிப் பாடினர். இது காரணமாக - இவர்களுள் ஒருவரான பாண்டியூரான் அகால மரணத்தைத் தழுவிக் கொண்டமை பலருமறிந்ததே.

மற்றொருவர் காசி ஆனந்தன். பாரதிதாசனின் "சீடரான" காசி ஆனந்தன் உணர்ச்சிக் கவிஞரென ஈழத்தில் மட்டுமல்ல, தமிழ் நாட்டிலும் நன்கறியப்பட்டவர். அறுபதுகளிலேயே தமிழ் ஈழம் பற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவு கண்டவர். "தமிழன் கனவு" என்ற காவியம் அதன் வெளிப்பாடு. பின்வருவது அதிலுள்ளதொரு பாடலாகும் :

மண்ணில் அரசுடன் நிற்கவும் - தமிழ்
மக்கள் படையுடன் வாழவும்
விண்ணிடை ஊர்தி செலுத்தவும் - நம்
வில்கயல் வேங்கை பறக்கவும்
அன்னியர் கண்டு கலங்கிட - தமிழ்
ஆயுதச்சாலை விளங்கவும்
கண்ணிடைக் கண்ட கனவுகள் - என
காலத்தில் இங்கு நடக்குமோ

காசி ஆனந்தன் தமிழ் தேசிய கவிதை வளர்ச்சியின் இரு காலகட்டங்களிலும் முக்கிய இடம் பெறுபவராகத் திகழ்வது இங்கு கவனத்திற்குரிய விடயமாகின்றது. குறிப்பாக இரண்டாவது காலப் பகுதியில் முக்கிய சொல்நெறியாக தமிழீழ எழுச்சி நோக்கிலான மெல்லிசைப் பாடல்கள் உருவாகின்ற போது, அதில் காசி ஆனந்தனுக்கும் முக்கிய இடமுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொகுத்து நோக்கும் போது ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று தமிழ் தேசியக் கவிதை ஓட்டத்தில் குறிப்பாக முதற் காலப்பகுதியில் மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர்களின் பங்களிப்பு கணிசமாயிருந்தமை தெளிவாகின்றது. இது விரிவான - ஆழமான - ஆய்வை அவாவி நிற்கின்றது.

- 'தேனகம்', 2002.

V கோட்பாடு நோக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

இருபதாம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகளில் பெண்களும் பெண்கவிஞர்களும்

மேற்கூறிய தலைப்பிலான ஆய்வின் அடிநாதமாகவே மூன்று விடயங்கள் இழையோடுகின்றன. அவையாவன :

அ) ஈழத்துக் கவிதைகளில் இடம்பெறும் பெண்களது பிரச்சினைகளும் அவற்றின் கருத்துநிலைத்தளமும்.

ஆ) ஈழத்துக்கவிஞரின் பெண்கள் பற்றிய நோக்கு.

இ) ஈழத்துக் கவிதைகளில் பெண்களது உணர்வுகள்.

இத்துடன் ஈழத்துக் கவிதை வளர்ச்சிப் போக்கினை மனங்கொண்டும் முக்கிய கவிஞர் சிலரை முதன்மைப்படுத்தியும் இவ் ஆய்வு இடம்பெறும்.

இவ்வாய்வு இருபதாம் நூற்றாண்டினையே மையப்படுத்தினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்திலிருந்து ஆய்வினை ஆரம்பிப்பது பொருத்தமானதென்று கருதுகிறேன். ஏனெனில் ஈழத்துக் கவிதைகளில் பெண்கள் பிரச்சினைகள் முதன் முதலாக இடம்பெறத் தொடங்குவது அக்காலப் பகுதியிலிருந்தே (1892). திருகோணமலை தி.த.சரவணமுத்துப்பிள்ளை எழுதிய "தத்தைவிடுதூது" என்ற பிரபந்தத்தையே இங்கு கவனத்திற் கொள்கின்றேன். இப்பிரபந்தம் கவிஞரின் காதற்தோல்வியின் வெளிப்பாடாயினும், சமகாலப் பெண்களது நிலைபற்றி பேசமுற்-படுகிறது. தான் விரும்பிய ஆடவனை மணக்க முடியாத பெண்ணின் நிலை (ஆடவன் முறைமாப்பிள்ளை; நன்கு படித்தவன்) பண ஆசைகாரணமாகத் தாம் முன்னர் (அவனது பெற்றோருக்குக்) கொடுத்த வாக்குறுதியை மீறியும், பெண்ணின் சம்மதம் கேளாமலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தம் பார்க்காமலும் பெண்ணிற்குத் திருமணம் செய்யும் பெற்றோரின் நிலை, தனது உள்ளக்கிடக்கையையும், எதிர்ப்பையும் காட்டமுடியாத பெண்ணின் நிலை முதலியன பற்றிக் "தத்தை விடுதூது" கவிநயம் மிளிர வெளிப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. கவிஞரின் கருத்து வெளிப்பாட்டுத் திறனையும் கவித்திறனையும் அறிந்துகொள்ள பின்வரும் பாடல் உதவுகின்றது :

தம்மனைக்கோர் பசுவேண்டில் தாம் பலகாற் பார்த்திருந்தும்
பின்னும் துணிவிலராய்ப் பேதுறுதல் மாந்தர்குணம்
என்னே, மணவினையே இமைப்பொழுதிலே முடிப்பார்
சின்னப் பதுமைகொடு சிறார்செய்மணம் போலும் அரோ

முற்கூறியது போன்று தமது காலப் பெண்கள் நிலைபற்றிக் கவிஞர் நன்கறிந்தாலுங்கூட, தான் விரும்பிய பெண் பெற்றோர் சொற்கேட்டுத்தனக்குத் தீங்கு செய்துவிட்டதாக ஒரு கட்டத்தில் குற்றஞ்சாட்டுவதும், பின்னர் மனந்தெளிவுற்று அப்பெண்ணின் பரிதாபநிலைக்காக இரங்குவதும் கவனத்திற்குரியது. அந்த ஒரு கட்டத்தில் கவிஞர் ஆணிற்குரிய இயல்பான மனநிலையினை வெளிப்படுத்தி நிற்கிறார் போலும்.

தவிர, பெண்கள் முன்னேற்றம் பற்றித் தமிழில் முதன் முதலாகச் சிந்தித்த மாயூரம் வேதநாயகம் பிள்ளைக்கும் ஆழமாகவும், முற்போக்குநிலைநின்றும் அணுகிய பாரதியாருக்கும் இடைப்பட்டவர் சரவணமுத்துப்பிள்ளை என்பதும், அவ்விருவரும் சமூகநிலைநின்று சிந்திக்க, இவர் தனிமனித -'சொந்த'- உணர்வுநிலை நின்று அது பற்றிப் பாடினார் என்பதும் போகிற போக்கில் நினைவுகூரத்தக்கன.

இனி இருபதாம் நூற்றாண்டிற்கு வரும் போது ஆரம்ப தசாப்தங்களில் முக்கிய கவனிப்பிற்குரிய ஒருவர் பாவலர் துரையப்பாபிள்ளை (1872 - 1929) மட்டுமே. சமூகச்சீர்திருத்தம் பற்றி அதிகம் சிந்தித்தவரான பாவலர் துரையப்பாபிள்ளை பெண்கள் தொடர்பான நான்கு விடயங்கள் பற்றி அதிகம் வற்புறுத்தியுள்ளார். அவை, பெண்கல்வி, சீதனம், நவீனநாகரிகமோகம், நகையணிதல் என்பனவாம். இவைபற்றி சற்று விரிவாகக் கவனிப்பது அவசியமானது.

குண்டான் வழித்திடும் பெண்களுக்குக் கல்வி
கூடாதெனச் சொன்னதக் காலம்

என்றுகூறி, பெண்கல்வி கற்பதனை வரவேற்றார் பாவலர். அதே வேளையில் பெண்கள் பீ.ஏ.,எம்.ஏ போன்ற உயர்கல்வி கற்பது அவருக்கு ஏற்புடையதன்று. பெண்கள் உயர் உத்தியோகம் பார்ப்பதும் அவரால் விரும்பப்படவில்லை. இதற்கு பெண்களது இயல்புகளும் (உடற்பலவீனமும், உளப்பலவீனம், பயம்), குடும்பப் பொறுப்பும்

(முற்கூறிய செயல்களிலீடுபடின் குடும்பத்தைச் சரிவர நடத்த இயலாது) அவரால் காரணமாக்கப்படுகின்றன. இன்னொரு விதமாகக் கூறின் பெண்கள் வீட்டு நடப்பிற்குரிய சமையற்சாத்திரம், வைத்தியம், தையல், சித்திரம், சங்கீதம் முதலியனவற்றைக் கற்றுக்கொண்டாற் போதுமானது என்கிறார் பாவலர். இன்னும் தெளிவாக அவர் வார்த்தைகளிற் கூறின்,

பெண்கள் படித்தறி வெய்தி யில்லங்களைப்
பேணிக் கணவர்க் குறுதுணையாய்ப்
பண்புடன் வாழுத லோவர் வேலை
பறித்திடலோசரி சங்கமின்னே

சீதனம் வாங்கும் வழக்கம் பாவலரால் கண்டிக்கப்படுகின்றது. கொடுப்பதற்கியலாத நிலையும் குடும்ப ஐக்கியக் குலைவும் இதற்குக் காரணங்களாகக் கூறப்படுகின்றன. இக்காரணங்கள் வரவேற்கக் கூடியன. அதேவேளையில் இன்னொரு காரணமும் முன்வைக்கப் படுகிறது.

கல்வியின் அழகைப் பாராமல் - ஸ்தீரீக்காம்
கற்பு நெறிதன்னைத் தேராமல்
நல்லவளோ வென்ன ஓராமல் - பணத்தை மாத்திரம்
நம்புகிறீர் அன்பு கூராமல்

என்கிறார் அவர். முற்கூறிய காரணங்கள் ஆசிரியரது முற்போக்கான எண்ணங்களைப் புலப்படுத்த பிற்கூறிய காரணம் தமிழ்ப்பண்பாடு பேணுகின்ற அவரது சிந்தனைப் போக்கினை வெளிப்படுத்துகின்றது என்பது நமது கவனத்திற்குரியது. நவீன நாகரிக மோகத்தினால் பெண்கள் கவரப்படுவது பாவலரது கண்டனத்திற்கும் ஏளனத்-திற்குமுள்ளாகிறது. அவ்வேளை,

நாண மட மச்சம் பயிர்ப்பென வான்றோர்
நவிலுமரும் லட்சணங்கள் சற்றும்
பூண்டிலராய்ச் சில நவீன ஸ்திரீகள்
புரிசெயல் கேளடி சங்கமின்னே

என ஓரிடத்தில் பாடியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

பெண்கள் நகை அணிதலால் ஏற்படும் தீமைகள் பற்றி மாயூரம் வேதநாயகம்பிள்ளை போன்று பாவலரும் ஆழமாகச் சிந்திக்க முற்பட்டுள்ளார். நகைசெய்வதற்காகக் குடும்பம்படும் கஷ்டங்கள், தட்டார் ஏமாற்றுதல், தட்டார் வீட்டில் தங்குவதால் ஏற்படும் அவதூறு முதலான காரணங்கள் அவரால் முன்வைக்கப்படுகின்றன. மேலும் நகை இருப்பது சேமிப்பாக இருக்கமாட்டாதென்றும் கஷ்டவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் அவை பயன்படப்போவதில்லையென்றும் (இவற்றுக்கான காரணங்கள் கூறப்படவில்லை) குறிப்பிடுகிறார். இறுதியாக குறிப்பிட்ட விடயங்கள் எவ்வளவு தூரம் பொருத்தமுடையன என்பது கேள்விக்குரியதாகிறது. ஏனெனில் பொருளாதார நெருக்கடிக் குள்ளாகும் வேளைகளில் பெண்கள், அதிலிருந்து மீள்வதற்கு நகைகள் பயன்படுவதை நடைமுறைவாழ்விலே அவதானிக்க முடிகின்றது. அது உண்மையெனில் பெண்களின் வாழ்நிலையை உணரமுடியாத ஆண்களின் குரல் பாவலரது குரலுடன், சேர்ந்தொலிக்கிறதென்றே கூறவேண்டும்.

பாவலர் துரையப்பாபிள்ளையை விட, முப்பதுகளில் செல்வாக்குற்ற "ஈழகேசரி"க் கவிஞர்கள், பிரக்ஞைபூர்வமாகச் சமூகச் சீர்திருத்தம் பேசியவர்கள். ஏலவே இருபதுகளில் உருவான யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் சீர்திருத்தச் செயற்பாடுகள், காந்தீயச் செல்வாக்கு என்பன அவ்விதத்தில் இவர்களுக்கு உந்துசக்தியளித்திருந்தன. ஆயினும் இவர்களிடம் அரிதாகவே பெண்கள் பற்றிய சிரத்தை வெளிப்படுகிறது. எனது ஆய்வுக்கெட்டிய வரையில் "யாழ்ப்பாணனி"டம் மட்டும் "புதுமைப்பெண்" ஒருத்தியின் குரல் கேட்கிறது. இப்புதுமைப்பெண் பாரதியின் பாதிப்பினாலேயே பிறந்திருக்க வேண்டும். ஆயினும் இவளது சிந்தனைகள் புதுமையும் ஆழமும் அகலமும் கொண்டனவல்ல. இவள், பெண்களது மடைமையைப் போக்குவது பற்றி பேசினாலும் கூட அடிப்படையில் இவளை எத்தகையவள் என்பது,

சீதையி னம்சமே திரௌபதி யம்சமே
திறன்மிகு நமனைத் திகைத்திட வைத்த
சோதியாஞ் சாவித்திரி யவளம்சமே

என்று கவிஞர் விளிப்பதிலிருந்து அறிய முடிகின்றதல்லவா?

இவ்வாறு நோக்கும்போது சென்ற நூற்றாண்டின் பிற் கூற்றிலிருந்து இந்நூற்றாண்டின் நாற்பதுகள் வரையிலான காலப்பகுதியில் ஒருசில கவிஞர்களே பெண்கள் நிலை பற்றிச் சிந்தித்துள்ளனர் என்பதும் இவர்களது சிந்தனை நல்ல குடும்பமும் தமிழ்ப்பண்பாடும் என்ற கருத்துநிலை சார்ந்ததாகவிருந்ததென்பதும் பெறப்படுகின்றன. நாற்பதுகளுக்குச் செல்லுமுன்னர் மறுபடி முப்பதுகள் பற்றி நினைவுகூர வேண்டியுள்ளது. இக்காலப்பகுதியில் மலையகத்தில், ஈழத்தின் முதற் பெண்கவிஞரொருவரைச் சந்திக்கின்றோம்.

அவரே மீனாட்சியம்மாள் நடேசய்யர். இவர் பெண்கள் பற்றி எதுவும் பாடியதாக அறியமுடியவில்லை. ஆயினும், ஈழத்து நவீன கவிதைவளர்ச்சியில் இவருக்கு முக்கிய இடமொன்றுள்ளது. முதன்முதலாகப் பிரக்ஞைபூர்வமாகத் தொழிலாளி வர்க்கம் பற்றிச் சிந்தித்தவரென்பதும் (அரசியல்) எதிர்ப்புக்கவிதை பாடியவரென் பதுமே அவருக்குரிய முக்கிய இடமெனலாம்.

ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றம் நாற்பதுகளென்பது பலருமறிந்ததொன்று. உயர்ச்சியினதும் அனுபவத்தினதும் வெளிப்பாடாகவும் நவீன உள்ளடக்கங்களைக் கொண்டதாகவும் கவிதை அப்போது மாற்றங்கண்டது.

இத்தகைய மறுமலர்ச்சிக் காலக் கவிஞர்களுள் இவ்வாய்வு நோக்கில் முக்கிய இடம்பெறுபவர்கள் இருவர். ஒருவர் மஹாகவி மற்றொருவர் சாரதா (சரவணமுத்து). ஈழத்துக் கவிதைப் போக்கில் காதல், குடும்பம் என்பன முதன்முதலாகக் கவிதைப் பொருளாவது இவர்களிடமே. இவர்களது காதற் கவிதைகளில் ஆண்களது மனஉணர்வுகளே - பிரிவுத்துயர், காதல்உணர்வு முதலியன பெருமளவு வெளிப்பட்டன. மஹாகவியின் கவிதைகளில் கிராமியக்காதலும் இடம் பெற்றிருந்தது. மஹாகவி தொடக்கம், பின்னர் நீலாவணன், ஜீவா ஜீவரத்தினம் அண்ணல்வரை வள்ளி, பொன்னி என்று விளிப்புடன் கிராமியப் பெண்கள் பற்றிய காதல் கவிதைகள் பாடுகின்றனர். சிலவேளை கிராமியப் பெண்களின் உழைப்புத்திறனும் வெளிப்பட்டன. உழைப்பு என்றதும் இடதுசாரிச் சிந்தனையுடைய மறுமலர்ச்சிக்காலத்துக் கவிஞரான அ.ந.கந்தசாமி முதன்முதலாக மலையகத்துத் தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளரது அவலமான வாழ்க்கை பற்றி உருக்கமாகப் பாடியது நினைவுக்கு வருகிறது.

ஈழத்து நவின கவிதை முன்னோடியான மஹாகவி பெண்களது மன இயல்புகளை சரியாகப் புரிந்து கொண்டாரோ என்ற சந்தேகமும் சில கவிதைகளைப் படிக்கும் போது ஏற்படுவதுண்டு. செத்துப் பிறந்த சிசு, என்ற கவிதை இத்தகையது. குழந்தை செத்துப் பிறந்ததை தங்கள் ஏழ்மை காரணமாக அங்கீகரிக்கும் ஒரு குடும்பத்தை இக்கவிதையில் காண்கிறோம். தந்தையின் மனநிலையில் இத்தகைய காரணத்தை ஏற்கமுடியுமாயினும் ஒரு தாயின் மனநிலை அவ்வாறு நினைக்க இடம்கொடுக்குமென்று கருதுவது நடைமுறை வழக்கிற்குப் பொருந்தாதென்றே கூறவேண்டும். தவிர நகைப்பினை ஏற்படுத்து வதற்கு வேறு வழிகளின்றி பெண்களின் (பருமனான) உடல் தோற்றத்தை மஹாகவி முதன்மைப்படுத்தி குறும்பா எழுதியுள்ளதும் நினைவுக்கு வருகிறது. அது இது தான் :

வள்ளியைப் பெண் தூக்கிய" வழக்கு
வந்துள்ள தூர் முற்றவும் இதற்கு
தள்ளுபடி என்றனராம்
தக்கபடி நீதியர் ..... பெண்
பிள்ளைகள் உயர்நிறைக் கிழுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இக்குறும்பாவிற்கு ஓவியர் "செள" வரைந்த படங்கள் நகையுணர்வை மேலும் மிருவிக்கின்றன.

மஹாகவி கவிதைகளிலேயே நகரத்துப் பெண்களும் முதன்முதலாக இடம்பெறுகின்றனர். நகரத்துப் பெண்களின் நாகரீகக் கோலம் இவரது கண்டனத்திற்குள்ளாகின்றது. கொழும்பு நகரவாழ்க்கையை இவர் வெறுப்பதற்கு,

முலை இளம் முளைகள் முனைந் தெழுவதனை
கலை குறைத்து அணியும் கன்னியர் காட்டலும்

கூட ஒரு காரணமாகிவிடுகின்றது.

புகையிரதவண்டியில் ஆடவரைக்கவரப் புது உத்தியைக் கையாளும் பெண் ஒருத்தியையும் படம்பிடிக்கின்றார் கவிஞர். வறுமைகாரணமாக உட்லைவிற்கும் பெண்களை மனிதாபிமான நோக்கில் பார்க்கும் கவிஞர். ஒரே வேளை,

காசைக் கண்டந்தக் காந்தள் பிரியுமோ
கற்பெனச் சொல்லும் வெற்பும் சரியுமோ

என்றும் பாடிவிடுவார்.

சாரதாவும் பெண்களது மேலைத்தேய நாகரிக மோகத்தைப் பலமாகக் கண்டிக்கிறார். இது பற்றிய கவிதையில் பெண்களது புத்திபிசகும் தன்மை, பொய்யான காதல், "வேசைத்தனம்" (இது கவிஞரது சொல்லாட்சியே) முதலிய இயல்புகள் கவிஞரால் விதந்துரைக்கப்படுகின்றன. தாசியர் நடனம், (பேராதனைப் பூந்தோட்டத்தில் ஒரு தாதி) சோரம்போதல் என்பனவும் கவிஞரால் கண்டிக்கப்படுகின்றன. இவற்றின் அடிநாதமாக, ஆணின் பார்வையே இழையோடுகின்றன.

சாரதாவின் கவிதைகளுள் விதந்துரைக்கத்தக்கதொன்று "சூடுகண்ட பூனை" வண்ணாரப் பெண் ஒருத்தி, சேட்டை விட முற்பட்ட இளைஞனொருவனுக்கு பதிலடி கொடுப்பதாக அமையும் இக்கவிதையில், ஈழத்தில் முதன்முதலாகப் பெண் எதிர்ப்புக் குரலினைக் கேட்கின்றோம்.

சாரதா, மஹாகவி இருவரும் இதிகாச, காவியப் பெண் பாத்திரங்களை நவீன கண்ணோட்டத்தில் ஓரளவு அணுக முற்பட்டுள்ளதை அவதானிக்கலாம். சாரதாவின் கவிதைகளில் சீதை நாடு கடத்தப்பட்டமை தொடர்பாக, வான்மீகி, பரதன் ஆகியோர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சீதைக்குச் சார்பாக இராமனிடம் வாதிக்கின்றனர். இன்னொரு கவிதையில் சகுந்தலையின் மனத்துயரம் நுணுக்கமாக வெளிப்படுத்தப்படுகிறது. மஹாகவி, அகல்யையின் செயலினை அகல்யை பக்கம் நின்று உளவியல் ரீதியில் அணுக

முற்படுகின்றார். எவ்வாறாயினும் சாரதா இலட்சிய - குடும்பப் பெண்ணையே காண விழைந்து நிற்கின்றார்.

அன்பு பெருக்கி அறம் வளர்த்து கொஞ்சம்
ஆசைக்குழந்தைகளை யளித்து
இன்ப உருவாய் துன்பிருட்டும் மங்கா
இல்லச் சுடராம் அவள்வாழி

என்கிறார். அடிப்படையில் நவீனகவிதை முன்னோடியாம் மஹாகவியும் இதற்கு விதிவிலக்கானவரல்லர். பெண்ணுக்கு "இல்லத்து ஆட்சியே உகந்தது" என்று அதுவும் வீரகேசரி மாதர்பகுதியில் கவிதை எழுதியிருக்கின்றார். (அக்கவிதைக்குச் சில்லையூர் செல்வராசன் மறுப்புக்கவிதை எழுதியமை பற்றி பின்னர் கூறப்படும்).

இனி, ஐம்பதுகள் பற்றி அவதானிப்பின், மொழிவழித் தேசிய உணர்வு முகிழ்க்கத் தொடங்கிய இக்காலகட்டம் பொதுவான ஈழத்துக் கவிதைவளர்ச்சியில் முக்கியம் பெறினும் இவ்வாய்வினைப் பொறுத்தவரையில் அவ்வாறன்று. ஆயினும் இக்காலப் பகுதிக் கவிஞருள் மூவர் கவனிப்பிற்குரியவர்கள் அவர்கள் நீலாவணன், சில்லையூர் செல்வராசன், புரட்சிக்கமால் ஆகியோர். மேற்கூறியவருள், நீலாவணன், ஈழத்தில் காதற்கவிதைகள் அதிகம் பாடியவர். அவற்றுள் பெரும்பாலானவை உணர்ச்சித் தீவிரங்கொண்டவை, சில சந்தர்ப்பங்களில்,

தயவுசெய்து சிரியாதே
தளிருடல் நெளியாதே - மேலாடை
கிழியுமெனில் எறிவாய் என்
ஹிருதயமும் அது போலா?

என்று பாடும் போது பெண்கள் பற்றிய அவரது பார்வையின் மலினத்தன்மை வெளிப்படுவதுபோற் தெரிகிறது.

தவிர பெண்களின் காதல் உணர்வுகள் முதன்முதலாக, அதிக கவிதைகளில் வெளிப்பட்டது இவரிடமே. இவற்றுள் கணிசமானவை, விரகதாபத்தினையே வெளிப்படுத்துகின்றன. இவற்றிலும்,

என் கடைவாயில் உன்இதழ் ஊட்டிய
ஈரம் காயவில்லை - எழில்
மின்னிடும் என்ற மென்முலைதானும்
பின்னே சாயவில்லை

என்று ஒரு பெண் தன் மனஉணர்வுகளை வெளிப்படுத்தும் போது, கூடவே ஓர் ஆணின் அடிமன உணர்வுகளும் கலந்து வெளிப்-படுவதாகவேபடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குடும்பம்" பற்றி மஹாகவி சாரதா ஆகியோர் பாடியிருப்பினும் நீலாவணன் அதனை, வெவ்வேறு பரிமாணங்களில் நின்று மகன் - மருமகளை வாழ்த்துதல், முதுமை நிலை, மரணநிலை என நோக்குவது குறிப்பிடத்தக்கது. (முருகையனின் கவிதைகளிலும் குடும்ப அந்யோன்னியம் நயமுற வெளிப்படுவதுண்டு) சாதி, சீதனம் என்பன காதலின் வெற்றிக்குத் தடையாயிருப்பது பற்றியும் சிந்தித்துள்ளார் நீலாவணன். அவர் கவிதைகளின் தனித்துவப்பண்பான சமூக அங்கதம், பறைமகளைச் தேடிச்சென்று அவளது "முடிச்சவிழ்க்கும்" உயர்சாதியினர், அவளை முறைப்படி மணந்தால் என்ன? என்று கேட்கும் கவிதையில் நன்கு பளிச்சிடுவது குறிப்பிடத்தக்கது.

அரசியல் அங்கதக் கவிதைபாடுவதிலும் அநாயாசமாகப் பேச்சுமொழியைக் கையாள்வதிலும் தன்னிகரற்றவரான சில்லையூர் செல்வராசன், ஆரம்பகாலத்தில் கவனிப்பிற்குரிய ஒரு சில கவிதைகள் இயற்றியுள்ளார். இவ்விதத்தில் "மஹாகவிக்கு மறுப்பாக வீரகேசரி மாதர்பகுதியில் (14.07.1954) அவ்வேளை இப்பகுதிப் பொறுப்பாளர் அவரே எழுதிய கவிதை குறிப்பிடத்தக்கது. அதன் ஒரு பகுதி பின்வருமாறு :

ஊரை அரசுசெய்ய நாங்கள் வருவோம்
உலையில் அரிசியிட நீங்கள் வரலாம்
ஏரை எடுத்து உழவுமோ தயங்கோம்
எழுதிப்பிழைக்க முயல்வோம்! விழிகளில்
நீரை வடித்து நின்று கெஞ்சுதல் விட்டே
நெற்றி வியர்வை சிந்த நாமும் உழைப்போம்

தவிர, இவரது அகல்யை பற்றிய கவிதை நாடகமும், உளவியல் நோக்கில் அகல்யைப் பற்றிப்பார்க்க முற்பட்டுள்ளது. எனினும், சில்லையூரானின் பிற்காலக்கவிதைகள், குறிப்பாக "ஊரடங்கப் பாடல்கள்" கொழும்பிலுள்ள பெண்கள் பற்றிய பிற்போக்கான சிந்தனைகளை முன்வைப்பவை. (எடு :- எப்போதும் மாறுவன காற்று, காசு, காரிகை. ஆண் காட்டுவது : அந்தஸ்து, அழகு, ஆஸ்தி. பெண் காட்டுவது : கண்).

ஆயினும் பெண்கள் பற்றிய இத்தகைய முரண்பட்ட இருநிலைப்பார்வை சில்லையூராரிடம் மட்டுமல்ல அன்று தொடக்கம் இன்று வரையான பெரும்பாலான ஈழத்துக் கவிஞர்களிடம் வேரோடியிருப்பது இவ்விடத்தில் அழுத்தியுரைக்கப்பட வேண்டிய-தொரு விடயமே. (இவ்விடயம் தனி ஆய்வுக்குரியது)

இஸ்லாம் மார்க்க விடயங்களுக்கே முதன்மை கொடுத்துவந்த முஸ்லிம் கவிஞர்கள் நவீன கவிதை உலகிற்கு வருவது புரட்சிக்-கமாலுடன் தான். புரட்சிக்கமால் பின்தங்கிய முஸ்லிம்களது

சமூகநிலை பற்றி முதன்முதலாக (முதன் முதலாக மட்டுமன்றி, இன்று வரைகூட) உரத்த குரல் எழுப்பியவர். இவ்விடயத்தில் மாதிரிக்கு ஒரு கவிதை மட்டும் தரலாம்.

முக்காட்டுச் சிறையுனக்கு வெல்லமாடி?
மூலையிலே இருட்டுலகில் கிடக்கின்றாயே!
செக்காட்டும் மாட்டுக்கே உணர்ச்சியுண்டு!
செயலிழந்தாய் .....

அறுபதுகள் காலப்பகுதி ஈழத்துக்கவிதை வரலாற்றில் இருவிதங்களில் முக்கியமானது. முற்போக்குக்கவிஞரின் வரவு ஒன்று; "புதுக்கவிதை" யின் முகிழ்ப்பு மற்றொன்று. இக்கால முற்போக்குக் கவிஞர்களுள் பசுபதி, சுபத்திரன், நுஃமான்; வரதபாக்கியான், சண்முகம் சிவலிங்கம் ஆகியோர் இவ்விடத்தில் கவனத்திற்குரியவர்களாகின்றனர்.

சுபத்திரன் பெண்கள் பற்றி எதுவும் பாடமுற்படவில்லை. பசுபதி, புதியஉலகம் பற்றிச் சிந்திக்கும் போதுமட்டும், அந்தப் புதிய உலகத்தில் "கற்பதனை விலைகூறும் கன்னியரில்லை" என்கிறார். (கவனத்திற்கொள்ளப்பட்டவை தொகுப்புக்கள் மட்டுமே) மென்மைமிகு காதல்உணர்வுகளை நளினமாகவும் வெகுஇயல் பாகவும் பாடியவரென்ற விதத்தில் நுஃமான் முக்கியமானவரே. மாறாக, வரத பாக்கியானின் காதற்கவிதைகள் இன்றைய திரைப்படப்பாடல்களைக்கூட வெல்லுந்தகையன. எ-டு :

போதுமென அவள் துடிக்க வேண்டும் - நான்
பூமகளைப் போட் டுலுப்ப வேண்டும்

அதுமட்டுமன்று, பெண்களது உழைப்புப்பற்றியோ கவிதா நோக்குப் பற்றியோ பாடும் போதுகூட, கவிஞர் பெண்களது கவர்ச்சியினை நினைவுகூர மறப்பதில்லை.

..... அடுத்த வீட்டுச்
சந்திரா அவளின் மார்புச்
சதை வெளி தெரியும் போது
சிந்திடும் அழகுதன்னைச்
சிறப்புடன் கவிதை செய்யும்
மந்திரம் எதுவும் கற்று
மலிந்திடாக் கவிதைக்காரர்

என்பார் அவர். தவிர பெண் எதிர்ப்புக் குரலினைக் கவிநயத்துடன் வெளிப்படுத்தும் சண்முகம் சிவலிங்கத்தின் "ஆலம் இலை" என்ற கவிதையும், பெண் உழைப்பினை சிறப்புற வெளிப்படுத்தும் நுஃமானின் "இலைக்கறிக்காரி"யும் யோகராசாவின் நல்லம்மாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்புச் சட்டியும் இவ்விடத்தில் நினைவுக்குவரும் குறிப்பிடத்தக்க கவிதைகளாகும். எவ்வாறாயினும் முற்போக்குக் கவிஞர்குழாம் பெண்கள் நிலைபற்றி அதிகளவு அலட்டிக் கொள்ளாமை கவலைக்குரியது, விரிவான ஆய்வுக்குரியது.

அறுபதுகளின் குறிப்பிடத்தக்க புதுக்கவிஞருள் முதன்மையானவரான தா.இராமலிங்கம் இவ்வாய்விற்கும் வேண்டப்பட்டவராகின்றார். யாழ்ப்பாணச் சமூகப் பண்பாட்டின் மூடுதிரையினையும் பெண்களது வாழ்வின் அவலங்களையும் அவர் போன்று ஆக்ரோஷத்துடனும் கவிதாவுணர்வுடனும் யதார்த்தப் பாங்கில் வெளிப்படுத்தியவர் வேறெவருமில்லையென்று கூறுவதே பொருத்தமானது. விதவைப் பெண் ஒருத்தியின் தொல்லைகள் மத்தியில் அவளால் வளர்க்கப்பட்ட பருவம் வந்த அவளது மகளினதும் வாழ்க்கைப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் "பலி" என்ற அவரது கவிதையின் சில பகுதிகள் பொருத்தம் கருதி இங்கு எடுத்தாளப்படுகின்றன:

நேற்றுக் கன்றீன்ற மாடு!
மடியினைக்
காகம் கொத்தித்
துவாலை இறைக்கிறது!
பாவம்!
வாயில்லாச் சீவன்
சுற்றிவரக் காகம்
எழும்பு
ஒன்றுபிடி! கொல்லு!
செட்டை உரி தூக்கிவிடு!
பால்கறக்க முடியாமல்
பாழ்பட்ட காகம்
அநியாயம் பண்ணுகுது!
யார் உதவி எங்களுக்கு?
தாலிதான் பேருக்குக்
கழுத்திலே தொங்குகுது
பெற்ற பொழுதே, மகளே

உன் தகப்பன்
விட்டுவிட்டுப் போய்விட்டான்
நான் பட்ட பாடு
.....
ஓர் இரவு நடுயாமம்!
வீட்டுக்கோடியிலே
மெய்புகழ்ந்து மெய்தொட்டு
நாணம் உரித்துவிட்டுச்
சுளை தின்னத் தெரியாது
கசக்கும் என அறியான்
தோலோடு சப்பி விட்டான்
பூட்டைத் திறப்பதற்குத்
திறப்பினைத்
தேர்ந்தெடுக்கான்
இடித்துப் பிளந்துவிட்டான்
இரத்தம் கசிந்ததம்மா
மறு இரவும்
முதல் இரவின்
துன்பியல்தான்
தொடர்ந்து நடந்ததுவே!
என்ன அநியாயம்!
கொத்திய புண் மீது
மீண்டும் கொத்துவதோ
காகம்!
எழும்பு
ஒன்றுபிடி
செட்டை உரி!
அய்யய்யோ!
துடி துடித்தாள்!
பெரும் பாடு

மெதுவாய் அடிவைத்தல்
கேட்டு நான் போய்ப்பார்க்க
பனங்காயை நாம்பன்
பிய்த்துத் தின்னுகுது!
.....
வரன் தேடிக்
குறுக்கு வழி நடந்துவிட்டன்
இறந்துவிட்டாய்!
என் மகளே
சாகும் போது என்னைச்
சபித்துப் புலம்பினையோ?
முதல் இரவு
இறைக்காதோ எனப்
புலம்பித் தவங்கிடந்தாள்
ஓமக்கிடங்கில் தீ
சுவாலை விட்(டு)
எரிகிறதே
.....
சம்மதிக்கவில்லை மகள்
சண்டை தொடங்கியது
என் மகளே
சாகும் என்னைச்
சபித்துப்புலம்பினையோ?

கணவன் என்ற கவசந்தாங்கி குடும்பம் என்ற இரும்புத்திரை மறைவில் பெண்ணுக்கெதிராக ஆண் நடத்தும் பாலியல் வன்போரின் கொடுமை உணர்ச்சி பாவத்துடன் மேற்கூறிய கவிதையில் வெளிப்படுகின்றதல்லவா?

இக்காலகட்டத்தில் - அறுபதுகளில் மலையகக் கவிதை வளர்ச்சிப் போக்கும் புத்தெழுச்சியுறுகின்றது. இவ்விதத்தில் பெண் தொழிலாளர்பற்றி பலர் பாடியிருப்பினும் குறிஞ்சித்தென்னவன் பாடியவை மனங்கொள்ளப்பட வேண்டியவை. ஏனெனில் சாதாரண தொழிலாளி வர்க்கத்தினரான அவரது கவிதைகள் உள்ளத்தின் உள்ளேயிருந்து வெளிப்பட்டனவாகின்றன.

புதுக்கவிதை எழுபதுகளிலேயே ஈழத்தில் பரவலாகச் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இக்கால கட்டத்தில் கவிதையுலகினுள் நுழைந்த கவிஞருள் வ.ஐ.ச.ஜெயபாலன், சிவசேகரம், சௌமினி ஆகியோர் கவனிக்கப்பட வேண்டிய வர்களாவர்.

ஜெயபாலன் கவிதைகளில் கிராமத்துப் பெண்கள், கிராமத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கும், நகரத்திற்கும் வரும் பெண்கள், சிங்கள, மேலைத்தேயத் தோழிகள் இடம் பெறுகின்றனர். இவர்களுடனான உறவுகள், உணர்வுகள், நினைவுகள் ஊடாக கவிஞர் பலவற்றைச் சொல்ல வருவது போலிருப்பினும், நுணுகி நோக்கும் போது ஆழமாக, எதுவும் வெளிப்படுத்தப்படுவதாகக் கூறுவதிற்கில்லை. மாறாக வெறும் நினைவுகூர்தலிலும் வர்ணிப்பதிலும் விளிப்பதிலுமே கவிஞர் அதிகம் ஈடுபாடுகாட்டுகின்றார். எடுத்துக்காட்டாக :

செவ்விளநீர் மேனி பொதிந்து
நடை பயிலும் தேவதையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஆசை மீதூர பல்கலைக்கழகப் பெண்ணொருத்தியை விளிப்பவர், அவர்களுக்கு உருப்படியாகச் சொல்ல வருவதென்ன? வயலில் வேலைசெய்யும் பெண்களை,

சேலைகள் தூக்கி
செவ்வாழைக்கால் துலங்கும்
பூங்கொடியாள்

என வர்ணிப்பது எவ்வளவு தூரம் வியப்பிற்கும் நகைப்பிற்குமுரியது! இவ்விடத்தில் "வயலில் வேலை செய்யும் பெண் வேர்த்து விறைத்துக் களைத்த நிலையில் ஜெயபாலனுக்கு எப்படிப் பூங்கொடியானாள்? செவ்வாழைக்கால்களுடன் பூங்கொடிகள் தமிழ்ச் சினிமாவில் தான் வருவார்கள்" என்ற ஔவையின் கூற்றுத்தான் நினைவிற்கு வருகின்றது.

ஈழத்துக்கவிஞருள் பெண்கள் பற்றி பெண்ணடிமைநிலை, பெண்விடுதலை பற்றி அதிகம் சிந்தித்தவர் சிவசேகரமே. (ஆயினும் இவரது இத்தகைய கவிதைகளுள் கணிசமானவை எண்பதுகளுக்குப் பிற்பட்டவை, பெண் நிலைவாதச் சிந்தனைகள் பரவிய காலத்திற் குரியவை) இவ்விதத்தில் மூன்று கவிதைகள் மலையகப் பெண்கள் விடுதலை பற்றிய குன்றத்துக்கும்மி, அன்னையர் முன்னணி ஊர்வலம் பற்றிய "தேவி எழுந்தாள்", "பெண்விடுதலையின் விலை" என்பன விதந்துரைக்கப்பட வேண்டியனவாகும். தொழிலாளர் விடுதலையின் பின்பே உண்மையான பெண்விடுதலை கிடைக்கும் என்று கூற முனையும் இறுதிக் கவிதையை நினைவுகூரும் போது கூடவே அண்மைய கருத்தரங்குத் தலைப்பொன்றும் "முற்போக்குவாதமும் பெண்நிலைவாதமும்" நினைவுக்கு வருகின்றது. அவ்விதத்தில் இக்கவிதை விவாதத்திற்குரியது. எனினும் சிறப்புடமை கருதி, தேவி எழுந்தாள் என்ற கவிதையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகின்றது. கவிதை யாழ்ப்பாண அன்னையர் முன்னணி ஊர்வலம் பற்றிய தாயினும் பொதுவான மாதர் எழுச்சி பற்றியமைவது கவனிக்கற் பாலது. "காளி" அதன் குறியீடாவதும், கிராமப்புறப் பாடல்களுக்குரிய அதன் ஓசையும் குறிப்பிடத்தக்கன.

தாயென்றும் சேயென்றும் தேவியிருந்தாள்
தாரமென்றும் தங்கையென்றும் தேவியிருந்தாள்
பல்வேறு நாமங்களில் தேவியிருந்தாள்
பல்வேறு ரூபங்களில் தேவியிருந்தாள்
வீதிதோறும் வீடுகளிற் சிறையிருந்தாள்
ஓர் உறவு காவலிட உறைந்திருந்தாள்
தெய்வம் அவள் செல்வம் அவள் என்று புகழ்வார் - படி
தாண்டாத பத்தினியர் மேன்மைகள் சொல்வார்

காதலிதென்பார் - எண்ணிக்
காசு கறப்பார்
கற்பெனச் சொல்வார் - பிற
பெண்ணைத் தொடர்வார்
பண்பாடு பேணுபவள் பெண்ணென்றுரைப்பார் - நம்
பழமையின் மேன்மைகள் பேசிக் களிப்பார்
பழந்தமிழ் மறமகள் வீரம் வியப்பார் - பெண்கள்
தனிவழி போக தடைநூறு விதிப்பார் தனிமையில்
வாடுகின்ற பெண்ணைப்பழிப்பார் - நல்ல
துணையொன்று தேடுகின்ற பெண்ணை வதைப்பார்
ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் நீதியுரைப்பார் - அதற்
காதாரம் நால்வேதம் ஆகமமென்பார்
சாத்திரம் சொல்வார் - பல
சான்றுகள் சொல்வார்
மாற்றியுஞ் செல்வார் - வழி
மாறியுஞ்சொல்வார்
விடிவென்று வருமென்று தேவியிருந்தாள்
காலமொன்று வருமென்று தவமிருந்தாள் - அது
தானே கனிவதில்லை என்று தெரிந்தாள்
சிறைப்பட்டு அலுத்திட்ட தேவி எழுந்தாள் - இன்றே
சிறுமைகள் அழித்திடத் தேவி எழுந்தாள்

ஈழத்தில் பெண்நிலைவாதச் சிந்தனைகள் பரவுவதற்கு முன்பே பெண்களின் மன உணர்வுகளைக் கவிதைகளில் வெளிப்படுத்திய கவிஞர் சௌமினியே. இவ்விதத்தில் ஈழத்தின் முதற் பெண்கவிஞர் (இன்றுவரையான என் ஆய்வு நிலையில்) இவர் என்று கூறுவதில் தவறில்லை. "கனவுப் பூக்கள்" என்ற அவரது தொகுப்பிலுள்ள கவிதையொன்றின் ஒரு பகுதியை இங்கு எடுத்தாள்வது பொருத்தமே. இது இது தான் :

நாம் பாட நினைத்து
வாய் திறந்தால்
எம்மைச் சூழ உள்ள
கூண்டின் கம்பிகள்
எம்மை ஊமையாக்குகின்றன
நாம் ஆடவென்று
உடலசைத்தால்
அச்சுறுத்தும் பல விழிகள்
எம்மை விழுங்குகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பதுகள் ஈழத்துக்கவிதை வரலாற்றில் முக்கிய காலகட்டமென்பது இலக்கிய ஆர்வலர் பலருமறிந்த விடயமாகும். நான்கு புதிய போக்குகள் இக்காலப்பகுதியில் வெளிக்கிளம்புகின்றன. அவை:

1. போரினவாத ஒடுக்குமுறைக்கெதிரான குரல்
2. இனரீதியான தமிழ்த்தேசியம்
3. புகலிட அனுபவங்கள்
4. பெண்விடுதலை

இவற்றுள் பெண்விடுதலை பற்றி விரிவாகக் கவனிப்பதற்கு முன்னர்! ஆரம்பத்தில் மூன்று விடயங்களை நினைவுகூர வேண்டும்.

அ) பெண்விடுதலை பற்றிய பிரக்ஞை, பெண்நிலைவாதச் சிந்தனைப் பரம்பலுடன் தொடர்புபட்டுள்ளமை.

ஆ) அதன் உடன் விளைவாக பெண் கவிஞர்கள் உருவாகியமை.

இ) இப்பெண் கவிஞர்கள் பெண்விடுதலை பற்றி மட்டுமன்றி ஏனைய விடயங்கள் பற்றியும் பாடியமை.

மேற்கூறிய விடயங்கள் பற்றிக் கவனிப்பதற்கு முன்னர், எண்பதுகள் வரை கவிதைத்துறையில் பெண்கள் பெருமளவு ஈடுபடாமைக்கான தளைகள் பற்றிச் சிந்திப்பது பொருத்தமானதென்று நினைக்கின்றேன். இவ்விதத்தில் பின்வரும் விடயங்கள் முக்கியமானவையாகும் :

1. **உயர்கல்வி கற்கும் பெண்கள் தொகை குறைவாக இருந்தமை:** (நவீன இலக்கிய வளர்ச்சிக்கும் கல்விப் பரம்பலுக்கும் தொடர்புள்ளது. தமிழகத்தில் எண்பதுகளில் தலித் இலக்கியம் தோற்றம் பெற்றமையும், தலித் மக்கள் கல்வி நிலை அவ்வேளை அதிகரித்தமையும் கண்கூடு).

2. **பெண்களது வாழ்க்கைநிலை :** பெண்கள் வாழ்க்கையில் நிலவும் இறட்டைச்சுமை இலக்கிய முயற்சிகளுக்குத் தடையாக இருந்து வந்துள்ளது.

3. **தமிழ்ச் சமூக மனோபாவம் :** பெண் எழுத்தாளர் படைப்புக்களை அவர்களது சொந்தவாழ்வுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் மனோநிலை தமிழ்ச் சமூகத்திடம் காணப்படுகின்றது. இந்நிலையில் தன்னுணர்ச்சிகளைச் சிறப்பாக வெளிப்படுத்தும் கவிதை வடிவத்தைப் பயன்படுத்தப் பெண் கவிஞர்கள் விரும்பவில்லை.

4. **கவிதை பற்றிய நோக்கு :** தமிழ்க்கவிதை. யாப்பிற்கு முக்கியமளித்து வளர்ந்துள்ளமையால், கவிதை எழுதுவதென்பது கடினமானதாகக் கருதப்பட்டுவந்தது.

மேற்கூறிய நிலைமைகள் எண்பதுகளில் பின்வருமாறு மாற்றமுறுகின்றன :

அ) உயர் கல்விகற்கும் பெண்கள் தொகை அதிகரிக்கின்றது.

ஆ) பெண்நிலைவாதச் சிந்தனைகள் பரவத்தொடங்கின. விளைவாக, பெண்கள் அமைப்புகள் பெண்சஞ்சிகைகள், கலை இலக்கியப் படைப்புகள் பிறப்பெடுத்தன.

இ) தமிழீழ விடுதலை இயக்கங்களில் பெண்களும் சேர்ந்து கொள்கின்றனர். இவ்வியக்கங்கள் சமூக விடுதலையிலும் ஆர்வங்காட்டுகின்றன.

ஈ) புதுக்கவிதை எழுபதுகள் தொடக்கம் செல்வாக்குப் பெற்ற வடிவமாகியிருந்தது. இயல்பான ஓசைக்கு இடம் கொடுத்துள்ளன. புதுக்கவிதையை எழுதுவதற்கு யாப்பறிவு தேவையற்றதெனக் கருதப்பட்டது. (புதுக்கவிதை எழுதுவோர் தொகை புற்றீசல் போற் பெருகியமைக்கு இதுவுமே காரணம்)

ஆக மேற்கூறிய ஆரோக்கியமான சமூக, அரசியல், கல்வி, கலை, இலக்கியமாற்றச் சூழலில் பெண் கவிஞர்கள் பலரை தமிழ் நாட்டிற்கு முன்னரே ஈழத்துக் கவிதையுலகம் கண்டுகொண்டது. இவர்கள், இதுவரை தமிழ்க்கவிஞர்கள் எவருமே சொல்லாத சேதிகளை வெளிப்படுத்தினர். இத்தகைய முன்னோடிக் கவிஞர்களுள் அ.சங்கரி, சிவரமணி, சன்மார்க்கா, ஒளவை, ஊர்வசி, ரங்கா, மசூறா ஏ. மஜீட், மைத்ரேயி, பிரேமி, ரேணுகா, நவரட்ணம் ஆகியோர் அடங்குகின்றனர். இவ்விதத்தில் இவர்களது சொல்லாத சேதிகள் என்ற கவிதைத் தொகுப்பின் வரவு மிக முக்கியமானது. ஏனெனில் தமிழில் "பெண்" என்ற நிலையிலிருந்து பெண்களின் உணர்வுகளையும் கருத்துக்களையும் (பெண்கவிஞர்கள்) புலப்படுத்திய முதற் தொகுப்பு இதுவேயாகும்.

சொல்லாத சேதிகளின் தாற்பரியத்தை விளங்கிக்கொள்ள இத்தொகுப்பிலுள்ள அ.சங்கரி எழுதிய முதற்கவிதையை இங்கு எடுத்தாள்வது அவசியமானது :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பார்வையில்

எனக்கு
முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை
அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன.
சமையல் செய்தல்
படுக்கையை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே எனது கடமைகள் ஆகும்.
கற்பு பற்றியும்
மழைபெய்யெனப் பெய்வது பற்றியும்
கதைக்கும்
அவர்கள்
எப்போதும் எனது
உடலையே நோக்குவர்
கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்

மேலுள்ள கவிதையில் இறுதி அடிக்கு முன்னர், அதாவது "கடைக்காரன் வரைக்கும் அதுவே வழக்கம்" என்பதற்கிடையில் கவிஞர் வரைக்கும் என்றொரு அடியைச் சேர்ப்பது கூடப் பொருத்தமாகலாம். ஏனெனில், ஆண்களது "அத்தகு பார்வை" பன்னூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டதென்பதும் அது இப்போதுதான் பெண்களால் உணரப்படுகிறதென்பதும் அவ்வுணர்வு இப்போதுதான் கவிதையில் வெளிப்படுகிறதென்பதும் உண்மையல்லவா? இப்பின்னணியில் நின்று நோக்கும்போது இக்கவிதை முக்கியமான படைப்பன்றோ!

இனி, இதுவரை கவிதையில் சொல்லாத சேதிகள் எவையெனக் கவனிப்பின், அவை ஆணாதிக்கம், பண்பாட்டு ஒடுக்குமுறை, அடிமைவாழ்வு, குடும்பச்சுமைகள், காதல் முதலியனவாகின்றன. இறுதியாகக் குறிப்பிட்ட காதல் என்பது பற்றிச் சிந்திப்பின்

தமிழ்க்கவிதைப் பாரம்பரியத்தில் இது இடம்பெற்றிருக்கவில்லையா என்றொரு கேள்வி எழக்கூடும் எனில் ஆண்டாள் பாடல்களில் மட்டும் - அதுவும் பக்திப் போர்வையினுள் காதலுணர்வு வெளிப்பட்டுள்ளது என்பதே அதற்குரிய விடையாகிறது. மீண்டும் இப்போதுதான் அது மெல்லிய குரலாய் வெளிப்படுகிறது. எவ்வாறாயினும் பெண்களது பிரச்சினைகளை குறிப்பாக கல்வியின்மை, சீதனம் முதலியனவற்றை அதிகளவில் பேசுவதே வழக்கமாயிருந்த கவிதை உலகில் இவை சொல்லாத சேதிகள்தாம் என்பதில் ஐயமில்லை.

புகலிடப் பெண்கவிஞர்களது பெண்நிலைவாதக் கவிதைகள் இன்னொரு பரிமாணநிலையினைச் சுட்டுகின்றன. அவர்கள் வாழ்கின்ற சூழலிலுள்ள மேலைத்தேயப் பெண்களது சமத்துவநிலை, தமிழ்ப்பெண்களது குரலை உரத்தொலிக்கச் செய்கிறது. அதேவேளையில் அத்தகைய மேலைத்தேயச் சூழலில் ஆணாதிக்கம் வலுப்பெற அவ்வெதிர்ப்புக்குரல் இரு மடங்காகி விடுகின்றமை கவனிக்கத்தக்கது. இவ்விதத்தில், பிரான்ஸிலிருந்து வெளிவந்த மறையாமறுதபாதி (1993) தொகுப்பு குறிப்பிடத்தக்கது. (இத்தொகுப்பிலுள்ள கவிஞர்கள் : மல்லிகா, கோசல்யா, சொர்ணலிங்கம், கல்யாணி, நிருபா, பாமினி, மைத்ரேயி, பிரியதர்சினி, சா.ஜெயந்தி, உமையாள், சுகுணா, சுமி, கலிஸ்ரா, பானுபாரதி, புஷ்பா, கிறிஸ்ரி)

மேலும் இப்பெண்கவிஞர்கள் பெண் என்ற நிலைநின்று தம் உணர்வுகளை வெளிப்படுத்தியவர்கள் மட்டுமன்று, பரினவாத ஒடுக்குமுறைகள் (எ-டு: ஊர்வசி, ஔவை) ஈழவிடுதலைப் போராட்டம், இயக்கங்களின் செயற்பாடுகள் பற்றிய விமர்சனம் (எ-டு : சிவரமணி, செல்வி) என்றவாறு சமகால அரசியல் போக்குகள் பற்றியும் எழுத முற்பட்டனர். அனைத்தையும் விட போராளிகள் (எ-டு : மேஜர் பாரதி, கப்டன்கள் வானதி, கஸ்தூரி) போர்க்கள அனுபவங்களை-உணர்வுகளை வெளிப்படுத்தியமை விதந்துரைக் கற்பாலது. இவ்விடத்தில் மேஜர் பாரதியின் கவிதையொன்று நினைவுக்கு வருகின்றது. அது இவ்வாறு ஆரம்பிக்கின்றது.

எனது இனிய தேசமே
குறிப்பெடுத்துக்கொள்
எரியுண்டு
சிதைந்து போன
என் தேசத்தின்
காப்பகழி ஒன்றில்
எழுகின்ற
உணர்வு அலைகளைக்
குறிப்பெடுத்துக்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே புகலிடப் பெண்கவிஞர்களும் பெண் நிலைசாராத புகலிட அனுபவங்களை வெளிப்படுத்துகின்றனர். நிறவாதம் அத்தகைய அனுபவங்களுள் முதன்மையானது. தப்பாவின் கவிதையொன்றின் ஒரு பகுதி அது :

போதை ஏறிய சனிநாள் ஒன்று
மாலையோரம் ஐரோப்பிய வீதியில்
சொர்க்கம் காணும் வெண் மனிதர்கள்
.....
கற்றுக்கொள், கறுப்புநாயே
சாகப் பிறந்த பன்றியே
தொழுவத்தை விட்டு ஏன் வந்தாய் வெளியே?
கறுப்பு அழிந்தால் மட்டும்
புனிதமடையும்
.....
நெற்றி பிளந்து
பிடரி தெறித்து
கொட்டிப் பரவியது இரத்தம்!

அதே வேளையில் நிறவாதம் பற்றி நிருபா,

".....
அம்மா
நாங்கள் ஏன் அகதிகளானோம்?
என் தாய் நாடு எங்கே?
என் தாய் மொழி எது?
நாங்கள் ஏன் கறுப்பர்களாயிருக்கிறோம்?
அவர்களால் ஏன்
ஒதுக்கப்படுகின்றோம்
துருக்கித்தோழி ஏன் எரிக்கப்பட்டாள்?

என்று பாடும் போது அவரது குரல் தமிழருக்கான குரலாக மட்டுமன்றி வெள்ளையர்களால் ஒடுக்கப்படும் அனைவருக்குமான குரலாக ஒலிக்கின்றது. இவ்வேளை நவீன தமிழ்க்கவிதை, உலகக்கவிதைப் போக்குடன் கலந்து விடுகின்றதன்றோ!

இக் கவிஞர்களின் கவிதை வெளிப்பாட்டு முறை பற்றியும் சில கூற வேண்டும். பின்வரும் இரு விடயங்கள் இவ்விதத்தில் முதன்மை பெறுகின்றன :

1. பெரும்பாலான படைப்புகள் தன்னுணர்ச்சிக் கவிதைகளாக அமைகின்றன. இதனால் உணர்ச்சி வெளிப்பாடு இயல்பாக இடம்பெற வாய்ப்பேற்படுகின்றது. பல்லாண்டு அடக்கப்பட்ட

உணர்வுகள் "நான்" என்ற தோரணையுடன் வெளிப்படும் போது ஊடே பெண் என்ற பிரக்ஞையும், தன்னம்பிக்கையும், மன உறுதியும், பெருமிதமும், ஞானச் செருக்கும் இணைந்தொலிப்பதை இனங்காணமுடிகிறது.

2. பொருத்தமான குறியீடுகளும் படிமங்களும் உவமைகளும் பெறுகின்றன. முறையே எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு :

அ) "எனது
ஓராயிரம் சிறகுகளை
விரிக்கவும்
விண்ணில் பறக்கவும்
ஏங்கினேன்
.....
ஆனால்,
காலிற் பிணைத்த
இரும்புக் குண்டுகள்
அம்மியும் பானையும்
தாலியும் வேலியும்
என்னை
நிலத்திலும்
நிலத்தின் கீழே
பாதாள இருட்டிலும்
அழுத்தும்"

(அ. சங்கரி)

ஆ) "ஒரு சிறிய குருவியினுடையதைப் போன்ற
அவர்களின் அழகியகாலையின்
பாதைகளின் குறுக்காய்
வீசப்படும் ஒவ்வொரு குருதி தோய்ந்த
முகமற்ற மனித உடலும்
உயிர் நிறைந்த
அவர்களின் சிரிப்பின் மீதாய்
உடைந்து விழும் மதிற்சுவர்களும்
காரணமாய்
எங்களுடைய சிறுவர்கள்
சிறுவர்களாயில்லாது போயினர்"

(சிவரமணி)

இ) "இது வரை காலமும்
நிரந்தர மாக்கப்பட்ட சகதிக்குள் கிடந்து
வெளியே எடுத்து வரப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறிய கல்லைப் போன்று
நான்
என்னைக் கண்டெடுத்துள்ளேன்
.....
கண்களைப் பொத்திக் கொள்ளும்
உங்கள் விரல்களிடையே
தன்னைக் கீழிறக்கிக் கொள்ளும்
ஒரு குட்டி நட்சத்திரத்தைப் போன்று
எனது இருத்தல் உறுதி பெற்றது
.....
தூக்கியெறிய முடியாத கேள்வியாய்
நான்
பிரசன்னமாயுள்ளேன்

(சிவரமணி)

மேற்கூறியவாறு ஈழத்திலும், புகலிட நாடுகளிலும் பெண்-கவிஞர்களின் எழுச்சியும் சொல்லாத சேதிகளும் பதிவு செய்யப்பட்டு தமிழ்க்கவிதையுலகில் சில சாதனைகள் நிகழ்ந்து கொண்டிருந்த எண்பதுகளின் பிற்காலத்தில் ஆண்கவிஞர்கள் எவ்வாறு தங்களை இனங்காட்டிக் கொள்கின்றனர் என்பது பற்றி ஓரளவு அவதானிப்பது அவசியமாகிறது. இவ்வாறு நோக்கும் போது புதிய தலைமுறைக் கவிஞர்களுள் சேரன், சோலைக்கிளி ஆகியோரும் தொடர்ந்து எழுதும் முற்பட்ட தலைமுறையினருள், வில்வரத்தினம், வ.ஐ.ச.ஜெயபாலன், சிவசேகரம் ஆகியோரும் கவனிக்கப்பட வேண்டியவர்களாகின்றனர். (இவர்களுள் இறுதி இரு கவிஞர்கள் பற்றி ஏலவே கூறப்பட்டுள்ளது. இங்கு அதனை நினைவு கூர்வது போதுமானது).

மேற்குறிப்பிட்ட புதிய தலைமுறைக் கவிஞர்கள் இருவருட்பட ஏனைய பலரும் பொதுவாக சமகால அரசியல் பிரச்சினைகளுக்கே முதன்மைகொடுக்கின்றனர். தமிழில் அரசியல் கவிதைகளுக்கு புதிய பரிமாணம்கொடுத்த சேரன் பெண்கள் பற்றிப்பேசியது அரிதே. (அவ்வாறு பேசத்தான் வேண்டுமென்றில்லை) பெண்பற்றிப் பேசிய ஒரு கவிதையிற்கூட ஔவை கூறுவது போல, பெண்ணின் பிடரிமயிரினை பூனைமயிர்க்கற்றையாகக் காண முனைகின்ற கவிஞரின் அக்கறையே வெளிப்படுகின்றது.

நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சிப்போக்கினை ஆரோக்கியமான மற்றொரு தளத்திற்கு இட்டுச்சென்ற சோலைக்கிளியின் கவிதைகளும் அவரது பெண் பற்றிய பார்வையைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. இவ்விதத்தில் (ஔவை எடுத்துக்காட்டிய "இன்றிரவுகட்டிலுடன்", "கல்விழுங்கிமனம்", "குடுக்கைவைச்சான்", "காக்கை" கவிதைகளை

மீண்டும் எடுத்துக்காட்டுவதை தவிர்த்துவிட்டு) இரு கவிதைகள் நினைவுகூரத்தக்கன. "பெட்டையாய்ப் பாடல்கள்" என்ற கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு :

வேண்டுமென்றால்
பெட்டையாய் பாடல்களைப் பிரசவிப்பேன்
போசாக்கே இல்லாது
.....
இதற்குள்ளே நான்
ஆரோக்கியமான
ஆண்பாடல் செய்வது எப்படி?

மேலுள்ள கவிதைப்பகுதிக்கு விளக்கம் வேண்டியதன்று. தவிர "பிள்ளைத்தாய்ச்சி கவிஞன்" என்ற கவிதையில் வரும் பின்வரும் பகுதி அவசியந்தானா என்றொரு கேள்வி எழுகின்றது.

.....
என் தாயே
கவிஞனும் ஒரு பிள்ளைத்தாச்சிதான்
என் இதயத்தின் பெண்குறி
நன்றாக விரிந்து விட்டது
.....

வில்வரத்தினத்தின் கவிதையொன்றில் "கைம்மை பூண்ட பெண்ணாக எங்கள் மண்" என்று வருவது பொருத்தமுடையதன்று. ஏனெனில் ஔவை கூறுவது போன்று கைம்மை பூண்ட பெண் எனும் போது எங்கள் முன் வெள்ளைச் சேலையுடுத்த, பொட்டின்றி, வரண்ட, கணவனை இழந்த ஒரு பெண்தான் நினைவுக்கு வருகின்றாள். இன்று எமது சமூகத்தில் எவ்வளவு மாற்றங்களைக் கணவனை இழந்த பெண்களில் காண்கிறோம். ஏன் பழமையான சிந்தனை முறையுடன் கூடிய கைம்மையைச் சொல்ல வேண்டும் என்ற கேள்விகேட்க இடமுண்டு. எண்பதுகளில் இனங்காணப்பட்ட பெண்நிலைவாதக் கவிஞர்களின் எழுச்சி அலைகள் தொண்ணூறுகளின் ஆரம்பமளவில் சற்று வீச்சுக் குன்றத்தொடங்கின. "சொல்லாத சேதிகள்" தொகுப்பிலிடம் பெற்ற கவிஞருள் பலர் எழுத்துலகிலிருந்து காணாமல் போய்விடுகின்றனர். புதிதாக, சுல்பிகா போன்ற ஒரு சிலரே வந்திருந்தனர். இயக்க முரண்பாடுகள், உள்நாட்டு யுத்தக்கெடுபிடிகள், அரசியல் மாற்றங்கள், இடப்பெயர்வுகள் எனப்பல காரணங்கள் இதற்குப் பின்புலமாய் அமைந்திருந்தன. ஆயினும் கடந்த சில வருடங்களாக, சொல்லாத சேதிகளை இன்னும் ஆழமாயும், புதிதாயும் தரக்கூடிய இளம் பெண்கவிஞர் குழாமொன்று தம்மை இனங்காட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது. மைதிலி அருளையா, கொற்றவை, கலா, ரேவதி, ஆகர்ஷியா, ஆழியாள், பெண்ணியா, யாழ் ஆதிரை என வளரும் இப்பட்டியலுள் கணிசமானோர் கொழும்பினை மையமாகக் கொண்டுள்ளமை கவனிக்கத்தக்கது. பெண்நிலைவாதச் சிந்தனைகள் முகிழ்க்கத் தொடங்கியபோது முதற்குழாத்தினர் வெளிப்-பட்டனரென்றால், அச்சிந்தனைகள் பற்றிய ஆழமான காத்திரமான பார்வைகள் பரவிய சூழலில் இவர்கள் தம்மை வெளிக்காட்ட முற்படுகின்றனர். இவர்கள் கவிதைகளில் சில புதிய போக்குகள் இடம்பெற்றுள்ளன. அவையாவன :

1. **பெண்நிலைவாத நோக்கிலான ஆழமான தேடல் :** எடுத்துக்காட்டாக "பெண்மொழி" என்ற ஆழியாளின் பின்வரும் கவிதையைக் குறிப்பிடலாம் :

என் ஆதித்தாயின்
முதுகிற்பட்ட
திருக்கைச் சவுக்கடி
நான் காணும் ஒவ்வொருவனது
முகத்திலும்
தழும்பாய் தேமலாய்
படர்ந்து கிடக்கின்றது.

அடையாளந்தை
உணரும் போதெல்லாம்
வீரியங் கொண்ட
ஊழிச் சவுக்கின் ஒலி
மீளவும் என்னை
வலிக்கப் பண்ணும்

என்னைப் பிளந்து
ரத்த உடுக்கள்
வெடித்துப் பறந்து
தனித்துச் சிதறிக்கொட்டும்
தனித்து
அவை ஒவ்வொன்றும்
கிரகங்கள் என உருப்பெறும்

தன்னிச்சையாய் சுற்றிவரும்
தாள லயத்துடன்.

அங்கு
எனக்கென
ஓர் பிரபஞ்சம்
என்னால் உருவாகும்.
அப்போது உயிர்பெறும்
எனக்கான
வரிவடிவங்களுடன் கூடிய
என் மொழி.
அதன் பின்
தேமல் படர்ந்த எவனாயினும்
உரையாடட்டும் அப்போது
கூறுகிறேன் பதிலை
என் மொழியில்
என் ஆதித்தாயின்
பெண் மொழியில்
அது வரை நீ காத்திரு

முன்னர் எடுத்தாண்ட (அ.சங்கரியின்) "அவர்களின் பார்வையில்" என்ற கவிதை ஒரு பரிமாணத்தின் தொடக்கமென்றால், இது இன்னொரு பரிமாணத்தின் தொடக்கம் என்று கூறத் தோன்றுகிறது.

2. **நடைமுறைக்காதலின் சுதந்திரமான வெளிப்பாடு :** முன்னோடிக் கவிஞர்களது காதல் உணர்வு இப்போது இன்னொரு கட்டத்தினை அடைகின்றது. எடுத்துக்காட்டாக ஆழியாளின் "நிலுவை" என்ற கவிதையைக் குறிப்பிடலாம்.

நீ திருப்பித் தரலாம்
மணிக்கூட்டை
கைவிளக்கை, கத்தரிக்கோலை,
(கன்னிமீசை வெட்ட நீயாய்க் கேட்டது நினைவு)
கரும்பச்சை வெளிர்நீலக்
கோடன் சேட்டுக்களை
தரலாம் - இன்னும் மிச்சங்களை
இன்று பல்லி எச்சமாய்ப் போனவற்றை
உன் முகட்டில் சுவடாய்ப்
பதிந்த
என் காட்டு ரோஜா உணர்வுகளையும்
அள்ளியள்ளித் தெளித்து
பூப் பூவாய் பரவிய
திவலைக் குளிர்ச்சியையும்
எப்படி மறுதலிப்பாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த உருவில் திருப்பி அனுப்புவாய்?
கடிதத்திலா?
காகிதப் பொட்டலத்திலா?
இதில் நான்
உனக்கிட்ட உதட்டு முத்தங்களையோ
நீ எனக்குள் செலுத்திய
ஆயிரத்தெட்டுக் கோடி விந்தணுக்களையோ
நான் கணக்கில் எடுத்து
சேர்க்கவில்லை என்பது மட்டும்
நமக்குள்
ஒரு புறமாகவே இருக்கட்டும்

இங்கே காதல் கவிதை பற்றிய முன்னைய கற்பிதங்கள் சிதறி விடுதலைக் கவனிக்கின்றோம்.

போர்ச்சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் இயல்பான வெளிப்பாடு : எடுத்துக்காட்டாக கோணேஸ்வரி என்ற பெண், இராணுவவீரர்களால் மிகக் கோடூர முறையில் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதனை அடியொற்றி எழுந்த 'கலா'வின் "கோணேஸ்வரிகள்" என்ற கவிதையைக் குறிப்பிடலாம்.

.....
ஆகவே வாருங்கள்
உடைகளைக் கழற்றி
உங்களை நிர்வாணப்படுத்திக் கொள்ளுங்கள்
என் அம்மாவே, உன்னையுந்தான்
.....
உங்கள் யோனிகளைத் திறவுங்கள்
பாவம்
அவர்களின் வக்கிரங்களை
எங்கு கொட்டுதல் இயலும்
வீரர்களே வாருங்கள்
உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக்கொள்ளுங்கள்
.....
தீர்ந்ததா எல்லாம்
அவ்வளவோடு நின்றுவிடாதீர்
எங்கள் யோனிகளின் ஊடே
நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்
ஆகவே வெடி வைத்தே சிதறடியுங்கள்

ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டிஅள்ளிப்
புதையுங்கள்
இனிமேல் எம்மினம் துளிர்விட முடியாதபடி
சிங்களச் சோதரிகளே
உங்கள் யோனிகளுக்கு
இப்போது வேலையில்லை!

இக்கவிதை சரிநிகரில் வெளியானபோது, பெண்ணின் உடலுறுப்புப்பற்றிய சொல்லாட்சிகள் காரணமாகக் கடுமையான கண்டனத்திற்குள்ளான போதிலும், சொல்லொண்ணாத இம்சைக்குட்பட்ட பெண்ணொருத்தியின் அவலத்தைத் தாங்க முடியாத இன்னொரு பெண்ணின் ஆக்ரோஷமான உணர்வுகளை இயல்பான முறையில் வெளிப்படுத்துகின்றது என்ற விதத்தில் இக்கவிதை முக்கியமானதேயாகும்.

4. **முற்றிலும் புதிய விடயங்கள் உள்ளடக்கமாதல் :** எடுத்துக்காட்டாக, சரிநிகரில் நிஷா எழுதிய இரு லெஸ்பியன் கவிதைகள், அதில் ஒன்று பின்வருமாறு :

ஒரு மாலைப் பொழுது
அலைந்து திரிந்ததில்
இருவருமே களைத்திருந்தோம்
வியர்த்திருந்தோம்.

எனது மடியில்
தலை வைத்துப் படுத்திருந்த
அவளது கண்களினால் .....
அது என்ன?
வாழ்வில் முதன் முதலாக
எனது இதயத்தைத் துளைத்துச் சென்ற அம்பு
என்னை இன்று
சிறிது சிறிதாகக் கொலை செய்கிறது.

5. **புகலிடக் கவிஞர்கள் மத்தியில் முதிர்ச்சி ஏற்பட்டுள்ளமை:** எடுத்துக்காட்டாக ரஞ்சனியின் "இருப்பு" என்ற கவிதையைக் குறிப்பிடலாம்.

எனது இயக்கம்
எனது ஆற்றல்
எனது திறமை
அனைத்தும் எனக்கே
இருக்கக்கூடியவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரிடமாவது இருந்து
இவற்றைப் பெற்றால்
நான் பெண்ணாக
இருக்க முடியாது
நீங்கள் உருவாக்கிய பெண்மை
எனது அடையாளமல்ல
நான் பெண்
பிறக்கும் போதே

6. **புதிய முஸ்லிம் கவிஞர்கள் எழுத்துலகில் பிரவேசித்துள்ளமை:** எடுத்துக்காட்டாக 'பெண்ணியா' எழுதிய "படியோலையின் ஒரு குரல்" என்ற கவிதையைக் குறிப்பிடலாம்.

ஒரு இருட்டு எனைக்கொன்றது
நான் மிரண்டேன்
அல்லது மிரள வைக்கப்பட்டேன்
என் உறவுகள் வரையறுக்கப்பட்டன
ஆனால் என் இரவுகள்
என்னை விடுவதாயில்லை
என்னில் எழுந்தது அவ்வுணர்வு
அதிலிருந்து நான் மீள்வில்லை.
நான் கொல்லப்பட்டேன்
நான்கு வருடங்களுக்கு முன்
என் சுவாசம்
நல்லடக்கம் செய்யப்பட்டது
என் உடல் மட்டும் வாழ்கிறது
என்னில் எழும்
புது சுவாசத்துடனும்
புது உணர்ச்சியுடனும்
ஆனால் நான்
மீண்டும் ஒரு முறை
இறக்கப்போவதில்லை
என் புது உணர்வு எழுகின்றது
நான் வீழ்த்தப்படுவதையும்
நாங்கள் வீழ்த்தப்படுவதையும்
தகர்த்தெறிய

இளந்தலைமுறைப் பெண் கவிஞர்களின் போக்கு மேற்கூறியவையும், ஆண்கவிஞர்களின் போக்கு எவ்வாறிருந்தது என்று கவனிப்பின் பொதுவாக பெண்கள் பற்றிய அவர்களின் பார்வையில் எத்தகைய

மாற்றமும் ஏற்படவில்லை என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது. "சொந்தச்சுமைகள்" என்ற தொகுப்பினைத் தந்த நவதர்ஷிகள் என்ற இளங்கவிஞர்கள் பெண்களின் சுமைகள் பற்றி எதுவும் சிந்திக்காமை இவ்விடத்தில் நினைவுக்கு வருகின்றது.

இறுதியாகச் சில விடயங்கள் பற்றிக் கூறுவதற்கு முன் இதுவரை கவனிக்கப்படாத கவிதைப் பாரம்பரியமொன்று பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். கடந்த சில வருடங்களாக சமூகவியல், மானிடவியலாளரால் என்று அழைக்கப்பட்டு அவர்களது முக்கிய கவனிப்பிற்குள்ளாகி வரும் வாய்மொழி இலக்கிய பாரம்பரியம் பற்றியே இங்குகூற விழைகின்றேன். இன்றும் இத்தகைய பாரம்பரியம் மட்டக்களப்பிலும் மலை நாட்டிலும் உயிர்த்துடிப்புடன் இயங்கிவருகின்றது. இத்தகைய வாய்மொழிக் கவிதைப் பாரம்பரியம் பற்றியதேடல், பெண்நிலைவாத நோக்கில் அவசியமானது. நவீன கவிதைகள் எண்பதுகள் அளவிலேயே பெண்கள் குரல் உரத்தொலிக்க, இத்தகைய கவிதைகளில் நீண்டகாலமாகவே இது கேட்டுவருகின்றது. இவ்விதத்தில் மட்டக்களப்புப் பிரதேசக் கவிகள் சிலவற்றினை எடுத்துக்காட்ட முற்படுகின்றேன். இவை கல்வியறிவுள்ள ஒரு முஸ்லிம் பெண் எழுதியவை. பத்தாண்டுகளாக வாழ்ந்த பின்னர் குழந்தை இல்லை என்ற காரணத்தினால், கணவனால் கைவிடப்பட்ட அப் பெண் தன் உறவினருக்கு எழுதி அனுப்பியவை (இது பற்றி முதன் முதலாக வெளிப்படுத்தியவர் கவிஞர் நுஃமான்).

நன்றி மறந்தார்
நகமிருக்கச் சதையெடுத்தார்
கழுத்திலையும் கத்தி வைத்தார் - இனி ஓர்
காலமும் தான் பேச்சிருக்கோ

மலடி எண்டு சொல்லி
வசை பேசிப் போட்டாரு
படைத்த றகுமான் மாமி - என்னைப்
பதராக்கிப் போட்டாராக்கும்

உருகும் மெழுகானேன்
உள்ளம் மெழுகுக் கொம்பானேன்
கடுகு நிறமானேன் - மதனி இந்த
சுவலை வந்த நாள் தொடுத்து

பட்ட மரம் பழம் தரும்
பறவை இறகு தரும்
சந்திரனும் சலாமுரைக்கும் - என்ற
தன்மைகளைக் கேட்டவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலை மையாக்கி
கானகத்தைத் தாளாக்கி
எழுதி முடித்தாலும் மதனி
என் கவலை தீராது

கவலையுடன் பாடினேன் - என்ர
கண்ணால் நீர் ஓடியதால்
கொப்பி நனைஞ்சிருக்கு - அதைக்
கூர்மையுடன் பார் மதனி

பெண்ணொருத்தியின் அவல உணர்வுகள் அழகான முறையில் மேலுள்ள பாடல்களில் வெளிப்படும் பாங்கு அவற்றை ஆழ்ந்து வாசிக்கும் போதுதான் புலப்படும்.

மேலுள்ள வாய்மொழிப்பாடல்கள் சமகாலத்திற்குரியவை : படித்த குறிப்பிட்ட ஒரு பெண்ணினால் இயற்றப்பட்டவை. அதே வேளையில் தலைமுறை தலைமுறையாகப்பாடப்பட்டு வருகின்ற, இயற்றியவர் யாவரென அறியப்படாத பாடல்களும் வழக்கிலிருந்து வருகின்றன. மேலுள்ளவற்றை விட, அவை இவ்வாய்விற்கு அதிகம் பயன்படுவன. ஏனெனில் அவற்றுள் கணிசமானவை பெண்களின் பல்வேறு வகையான எதிர்ப்புக்குரல்களை வெளிப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, ஆண்வர்க்கத்தினால் பாலியல் வன்முறைக்குட் பட்ட பெண்களின் மனக்குமுறலை பின்வரும் கவிகள் நன்கு புலப்படுத்தி நிற்கின்றன :

போட்டோ வரம்பாலே
புறாமேஞ்சி போறதுபோல்
நாட்டாருக் கெல்லாம்
நடைவரம்போ என்சடலம்

வண்ணாரக் கல்லோ
வடக்கத்தி காளைமாடோ
சாராயக் குத்தகையோ, மச்சான்
தவறணையோ என் ஊடு

மேலுள்ள கவிதைகளிலிடம்பெறும் நடைவரம்பு, வண்ணாரக்கல், வடக்கத்திகாளைமாடு, சாராயக்குத்தகை "தவறணை" ஆகிய படிமங்கள் எவ்வளவு தூரம் பெண்ணின் மனஉணர்வுகளை - மனக்குமுறல்களை - வெளிப்படுத்துகின்றன என்பதனை ஆழமான வாசிப்பின்போதே உணரமுடியும்.

இவ்விடத்தில் ஆய்வாளர் ஆ.சிவசுப்பிரமணியனின் கூற்றொன்று நினைவுக்கு வருகின்றது. அவர் கூறுகிறார் :

> பாலியல் ஒழுக்கநெறியில் பிறழாது நின்ற பெண்டிரைக் குறித்து மட்டுமே செவ்வியல் இலக்கியங்கள் புகழ்ந்து பேசுகின்றன ஆனால் நாட்டார் வழக்காறுகளில்தான் இத்தகைய பாலியல் வன்முறை குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன

இறுதியாக இதுவரை கூறிய விடயங்களை பின்வருமாறு சுருக்கமாக நினைவு கூர்வது பொருத்தமானதென்று கருதுகின்றேன்:

1. இந்நூற்றாண்டின் மூன்றாம் தசாப்த வரையிலான கவிஞர்களுள் இருவரே பெண்கள் நிலை பற்றிச் சிந்தித்தனர். இவர்களுள் ஒருவர் (திருகோணமலை தி.த.சரவணமுத்துப்பிள்ளை) சொந்தவாழ்க்கை நிலை காரணமாக பெண்கள் பற்றிச் சிந்திக்க முற்பட்டார். தவிர்த்து நோக்கின் ஒருவர் மட்டுமே (பாவலர் துரையப்பாபிள்ளை) சமூகச்சீர்திருத்த நோக்கில் பெண்கள் பிரச்சினைகள் சிலவற்றைக் கூற முற்பட்டார்.

2. "நல்ல குடும்பமும் தமிழ்ப்பண்பாடும்" என்ற கருத்துநிலைத் தளத்திலிருந்து அவை கூறப்பட்டன.

3. சமூகச் சீர்திருத்த நோக்கு முனைப்பற்ற முப்பதுகளிற் கூட, பெண்கள்நிலை கவனத்திற்குள்ளாகவில்லை..

4. நவீன கவிதை தோற்றம் பெற்ற நாற்பதுகளின் காலகட்ட கவிஞர்கள் தமது அனுபவங்கள், உணர்வுநிலை என்பன வற்றினூடாக பெண்கள் பற்றிய எண்ணப்பதிவுகளை வெளிப்படுத்தினர். இவை காதல் குடும்பம் என்பன பற்றி அமைந்தன. (இவை மோகம், விரகவேதனை உணர்வுகளை வெளிப்படுத்தின. அன்றேல் இலட்சியவாதம் பேசின) அல்லது கிராம நகரப்பெண்கள் வாழ்க்கையின் சில கூறுகள் பற்றி நோக்கின. எவ்வாறாயினும் அடிப்படையில் ஆண்நிலைப் பார்வையே அவற்றில் இழையோடின.

5. பெண்கள்பற்றிய முரண்பட்ட "இரட்டைநிலைப் பார்வை" நவீன கவிஞர் பலரிடம் வெளிப்படுகின்றது.

6. எண்பதுகளின் பிற்கூற்றில் பெண்நிலைவாதச் சிந்தனைகள் பரவின. இவற்றின் செல்வாக்கிற்குட்பட்ட் பெண் கவிஞர்குழாம் உருவாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அண்மைக்காலந்தொடக்கம் பெண்கவிஞர்களிடம் புத்தெழுச்சி ஏற்பட்டுள்ளது.

8. மேற்கூறிய நவீன எழுத்திலக்கிய பாரம்பரியக் கவிஞர்களை விட இதுவரை கவனிக்கப்படாத, வாய்மொழிக் கவிதைப் பாரம்பரியக் கவிஞர்கள் தம் உணர்வுகளைச் சிறப்பாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

18

ஈழத்துக் கவிதையில் எதிர்ப்புக் குரல்கள்

அரசு, மதம், குடும்பம் முதலான நிறுவனங்கள், அவை சார்ந்த கருத்து நிலைகள் (Ideology) என்பனவற்றிற்கெதிராக, இலக்கியங்களுடாக எழுப்பப்படும் குரலே 'எதிர்ப்பு இலக்கியம்' என்று சுருக்கமாக வரையறை செய்யலாம். இவ்வாறான எதிர்ப்பு இலக்கிய முயற்சிகள் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றதாயினும் எதிர்ப்பு இலக்கியம் (Resistance Literature) என்ற விதத்தில் இலக்கியத்தை அணுகும் ஆய்வுமுறை, ஆய்வாளர் மத்தியிலே அண்மைக்காலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சனநாயக ஆட்சி முறைமை அல்லது அது பற்றிய சிந்தனைகள் நிலையூன்றிய பின்னரே இத்தகைய எதிர்ப்பு இலக்கியமுயற்சி முதன்மை பெற்றிருக்கும் என்பது வெளிப்படையானது. ஆயினும், அதற்கு முன்னர் மன்னராதிக்கம், மதநிறுவன ஆதிக்கம், நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் முதலியன இடம்பெற்றிருந்த காலகட்டங்களிலும் இலக்கியங்களுடான எதிர்ப்புக்குரல்கள் தனிமனிதக்குர்ல்களாக அவ்வப்போது வெளிப்பட்டுள்ளதனைப் பழந்தமிழ் இலக்கியங்களுடாக அறியலாம்.

மேலும், இவ்வெதிர்ப்புக் குரல்கள் எழுத்து இலக்கியங்களூடாக மட்டுமன்றி வாய்மொழி இலக்கியங்களுடாகவும் இடம்பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ்ச் சூழலில் இத்தகைய எதிர்ப்பு இலக்கியங்கள் பண்டு தொட்டுக் கிடைக்கவில்லையாயினும் அதன் எச்சசொச்சங்களாக இன்று கிடைப்பனவற்றை வைத்துக்கொண்டு அதன் முன்னைய நிலையினை ஓரளவு ஊகித்துக் கொள்ள முடியும்.

இவ் ஆய்வு ஈழத்திலே நவீன கவிதை தோற்றமுற்ற காலந்தொடக்கம் இன்றுவரையிலான காலப்பகுதிகளிலே நவீன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையிலும் அதே காலப்பகுதிகளில் வாய்மொழிப் பாடல்களிலும் எதிர்ப்புக் குரல்கள் எவ்வாறு இடம்பெற்று வந்துள்ளதென்பதனை கோடிட்டுக்காட்டும் முதன் முயற்சியாகும்.

ஈழத்திலே நவீன கவிதையின் தோற்றம் நாற்பதுகளின் தொடக்கமென்று கூறப்பட்டு வந்தாலும் அதற்கான கால்கோள் முப்பதுகளிலே இடப்பட்டுள்ளமை அண்மைக்கால ஆய்வுகளுடாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.[1] இவ்விதத்திலே யாழ்ப்பாணப்-பிரதேசம் சார்ந்த ஈழகேசரிக் குழுவினரும் மலைநாடு சார்ந்த மீனாட்சியம்மாள் நடேசய்யர், கோ.நடேசய்யர் ஆகியோரும் கவனத்துக்குரியவர்கள்.

ஈழகேசரிக் குழுவினர் கவிதைகளிலே ஆங்கில ஆட்சிக்கெதி-ரான எதிர்ப்புக்குரல் முதன்முதலாக ஓரளவு கேட்கின்றது.[2] எ-டு :

காட்டிக் கொடுத்திடும் கட்சிக் கிலங்கையும்
காணியோ - சொந்தப் -பூமியோ?
நாட்டிற் பிறந்திடும் நாங்க ளனைவரும்
நாய்களோ - பெல்லிப் - பேய்களோ?

ஆட்சிப் படைபெறு மாங்கில ராட்சியை
அஞ்சிடோம் இனித் - துஞ்சிடோம்
மாட்சி கொளிலங்கை வாழச் - சுதந்திரம்
வாங்குவோம் - கொடி தாங்குவோம்

அத்துடன் சமகால பல்வேறு சமூகக் குறைபாடுகளுக்கெதிரான குரல்களும் ஓரளவு இடம்பெறுகின்றன.[3] எ-டு :

தீண்டப்படாதாரென்று - உலகில்
திசைமுகன் செய்ததுண்டோ?
வேண்டப்ப டுவதீதோ - ஐயோ
வீண்கதை பேசுகிறீர்

உரிமை உரிமை யென்பீர் - உங்கள்
எளிய சோதரர் தங்கள்
உரிமை உரிமை யென்றால் - வேத
ஏடுவிரிப் போமென் பீர்
.....

மேற்கூறிய எதிர்ப்புக் குரல்களின் பின்னணியில் யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாண வாலிபர் காங்-கிரஸினர், ஈழகேசரி பொன்னையா முதலானோரின் செயற்பாடுகள் ஓரளவு இடம்பெற்றிருப்பினும் இந்திய/தமிழ்நாட்டு தேசிய விடுதலை

இயக்கம், கவிஞர் பாரதியார் முதலான தனிமனிதர் செல்வாக்கு என்பனவே அதிகமென்பது குறிப்பிடத்தக்கது. இன்னொருவிதமாகக் கூறின், ஈழத்து மத்திய தரவர்க்கத்தினர் ஆங்கில ஆட்சியிலிருந்து ஈழம், இந்தியா போன்று விடுதலை பெறுவதற்கான செயற்பாடுகளையோ அவற்றை பொதுமக்கள் மயப்படுத்துவதையோ விரும்பினாரல்லர். அத்துடன் குறிப்பாக யாழ்ப்பாண மத்தியதரவர்க்க மேட்டிமைக் குழுவினர் (Elite's) சீர்திருத்த அமைப்புக்களை தோற்றுவிப்பதிலும் ஆர்வம் காட்டினாரல்லர். அவ்வாறு தோற்றமுற்ற ஒரு சில அமைப்புகளும் அற்பாயுளிலேயே மடிந்துள்ளன.[4] அன்றைய யாழ்ப்பாணச் சமூகம், சமூகச்சீர்திருத்தத்தில் பெருமளவு நாட்டங்கொள்ளாத பழைமைபேண் சமூகம் என்று கூறுவது பொருத்தமாகப்படுகின்றது.

எனினும், மலைநாட்டில் நிலைமை வேறுவிதமானது. முப்பதுகளளவிலே தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள் அங்கு முனைப்புற்றிருந்தன. இவ்விதத்திலே கோ.நடேசய்யர், மீனாட்சி-யம்மாள் நடேசய்யர் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்களது பல்வேறுவிதத் தொழிற்சங்கச் செயற்பாடுகளுள் ஒன்றாகப் பாடல்களிலும் இலங்கை அரசாங்க சபை, இந்திய அரசு ஆகியவற்றிற்கெதிரான ஆக்ரோஷமான எதிர்ப்புக் குரல்களைக் கேட்கமுடிகின்றது.[5]

சிங்கள மந்திரிகள் கூற்று - மிக
சீருகெட்ட தென்று சாற்று
சங்கடமே நேருமென தோற்று திந்திய
சமூகம் நெருப்பாய் வரும் காற்று

நன்றி கெட்டுப் பேசும் மந்திரிமாரே - உங்கள்
நியாய மென்ன சொல்லு வீரே
இன்றி யமையாத வொரு போரே - செய்ய
இடமுண் டாக்குறீர் நீரே

மேற்கூறியவாறான பாடல்கள் இசைத்தன்மை, நாடகப்பாடல் மெட்டு என்பவற்றைக் கொண்டிருந்தமையும் தேயிலைத் தோட்டங்களில் மக்களுக்கு முன்னாலே பாடப்பட்டமையும் கவனத்திற்குரியன. இத்தகைய எதிர்ப்புக் குரலினை ஈழத்து நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சிப் போக்கிலே இப்போதுதான் பிரக்ஞை பூர்வமாகவும் முதன்முதலாகவும் கேட்கமுடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாற்பதுகளவில் நவீன கவிதை பிரக்ஞை பூர்வமாக இடம்-பெற்றபோது அம்முயற்சியில் ஈடுபட்டோர் மறுமலர்ச்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவினராவர். ஆயினும், இவர்களது கவிதைகளில் எதிர்ப்புக்குரல் அரிதாகவே இடம் பெற்றிருந்தது. இதே காலப்பகுதியில் ஈழத்துக்-கவிதையுலகினுள் முதன் முதலாகப் பிரவேசித்த மார்க்சியச் சார்புடைய கவிஞர்களிடம் (எ-டு: கே.கணேஷ், அ.ந.கந்தசாமி) முதலாளித்துவம், தொழிலாளர் துயரம், சாதிமை ஆகியவற்றிற்கெதி-ரான குரல்கள் பிரக்ஞைபூர்வமாக வெளிப்படுகின்றன. இவ்விதத்தில் அ.ந.கந்தசாமி எழுதிய 'வில்லூன்றி மயானம்' என்ற கவிதை முக்கியமானதொன்று. யாழ்ப்பாணத்தில் 1946 அளவிலே இடம்பெற்ற சாதிப் போராட்டத்துடன் தொடர்புபட்ட இக்கவிதையின் முக்கியமான பகுதி பின்வருமாறு:[6]

நாட்டினர் நீர் அறிவீர் வில்லூன்றி தன்னில்
நாம் கண்ட ஈமத்தீ வெறுந்தீ அன்று
கேட்டினிலே உளபிணத்தை உண்பதற்கு
கிளர்ந்தெழுந்த தீயன்று நெடு நாளெங்கள்
நாட்டினிலே கிளைபரப்பும் சாதி என்னும்
நச்சுமரவீழ்ச்சியினைக் காண்பதற்காய்
வாட்டமுற்று மக்களுளம் கனன்று பொங்கும்
வல்லதொரு புரட்சித்தீ வாழ்க அஃதது

இக்காலம் (1946) வெளிவரத் தொடங்கிய 'பாரதி' சஞ்சிகையில் இத்தகைய மொழிபெயர்ப்புக் கவிதைகளும் பிரசுரமாகியுள்ளன. ஆயினும் இவ்வாறான முற்போக்குக் கவிஞர்களது கவிதைகள் எண்ணிக்கையில் குறைந்தவை என்பது மனங்கொள்ளற்பாலது.

ஐம்பதுகளளவில் ஈழம் சுதந்திரம் பெற்ற வேளையிலேயே தமிழ்த்தேசிய உணர்வும் ஆரம்பித்து விட்டது. இதன் வெளிப்பாடே தமிழரசுக் கட்சியின் தோற்றம் ஆகும். எனினும், இச்சூழலில் உருவான தமிழ்த்தேசியம் மொழிவழித் தொடர்புடையது என்பது நாமறிந்ததே. இப்பின்னணியில் எழுந்த கவிதைகளில் 'சிங்கள' அரசுக்கெதிரான எதிர்ப்புக் குரல்கள் மிகுந்த ஆக்ரோஷமான முறையில் வெளிப்பட்டுள்ளன. இவ்விதத்தில் நீலாவணனின் ஆரம்பகாலக் கவிதைகள் கவனத்திற்குரியவை. இவ்விதத்தில் பின்வரும் கவிதைப் பகுதிகள் நினைவுகூரத்தக்கவை:[7]

'உரிமைக் குரலைத்திருகத் தகுமோ?'

சுழிமண்டைகளே செவி கொண்டிடுவீர்
விழி தேவையிலை வழிகாட்டிகள் நாம்
மொழிவேன் உமக்கு எனவே மொழியும்
இழிபெண் சிறிமா விழிமுன் தொடுபோர்"

'சிங்களக் கூலிகள்'

சிங்கள மொழியெனும் சிறுநரி, உன்னைத்
தின்ன வருவதோ நீ உரி

இதன் உச்சமாக, காசிஆனந்தனின் பிற்காலக் (அறுபதுகள்) கவிதைகள் உள்ளன. இத்தகைய கவிஞர் வரிசையில் பலருமறியாத ஆரையூர் அமரன் கவனத்திற்குரியவர். சினிமா மெட்டுகளிலமைந்த இவரது சிங்கள அரச எதிர்ப்புப் பாடல்கள் மேடைகளிலும் ஊர்வலங்களிலும் பாடப்பட்டுள்ளன.[8] எ-டு :

(மெட்டு : "வாழ்வது போனாலும் வறுமையே வந்தாலும்")

எடுப்பு

உடலது சாய்ந்தாலும் உயிரையே மாய்த்தாலும்
உன்நிலை தளராதே - தமிழா

பாட்டு

உடலது சாய்ந்தாலும் உயிரையே மாய்த்தாலும்
உன்நிலை தளராதே
சூழ்ச்சிகள் சூழ்ந்த ஆட்சியில் யாரும்
வீழ்ச்சியே காண்பாரே அதனால்

இக்காலப்பகுதியில் ஊற்றெடுத்த தமிழுணர்ச்சி முதன்முதலாகப் பல பிரதேசக் கவிஞர்களையும் ஒன்றுபடுத்தியது. எ-டு: (யாழ்ப்பாணம்) மஹாகவி, முருகையன்; (மட்டக்களப்பு) நீலாவணன், ராஜபாரதி; (மலைநாடு) சக்தி, அ.பாலையா; (திருகோணமலை) தாமரைத் தீவான். இவ்விதத்தில் 'தமிழ் எங்கள் ஆயுதம்' என்ற தொகுப்பும் குறிப்-பிடத்தக்கது.[9]

பின்வருவது 'தமிழ் எங்கள் ஆயுதம்' என்ற தொகுதியில் உள்ள 'மஹாகவி'யின் கவிதையின் இறுதிப்பகுதி:[10]

கரையிலாத் தமிழ் தெருக்கணிகை மாதெனவெறிக்
கயவரின் தயவிலாக் காலிடைப் படுவதா?
முறையிலா வழிகளில் முரடர் எம்
முடிவையே முயல, நாம் மூடியோர் மூலையில் துயில்வதா?
பறையெல்லாம் அதிர்க நம் பலமெல்லாம் திரள்கவே
பாதிநாடெங்களுக்காக வென்றெழுகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பதுகளளவில் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியிலே குறிப்பிடத்தக்க இன்னொரு மாற்றம் ஏற்பட்டது. ஈழத்தில் முஸ்லிம் கவிஞர்கள் நவீன கவிதைத் துறைக்குள் முதன்முதலாக வரத்தொடங்குகின்றனர். இத்தகைய கவிஞர்களின் முன்னோடியான புரட்சிக் கமால் முஸ்லிம் சமூகத்தினரின் குறிப்பாக முஸ்லிம் பெண்களின் மூடநம்பிக்கைகளுக்கெதிராக ஆவேசமான கவிதைகள் பல புனைந்தவர்;[11] எ-டு :

முக்காட்டுச் சிறையுனக்கு வெல்லமாடி?
மூலையிலே இருட்டுலகில் கிடக்கின்றாயே?
செக்காட்டும் மாட்டுக்கே உணர்ச்சியுண்டு
செயலழிந்தாய்; ஏ பெண்ணே ஒன்று கேட்பேன்;
எக்காலும் இந்நிலையே வாழ்க்கை என்றால்
என்னோடி கீழடிமைவெட்கம், வெட்கம்
இக்காலே உன்னுயிரைத் தீர்ப்பாய் நாளை
எழுகின்ற புத்துலகைப் பாழாக்காதே

(புரட்சிக்கமாலுக்குப் பின்னர் அவ்வாறு இன்றுவரை முஸ்லிம் சமூகம் பற்றி முஸ்லிம் கவிஞர் எவரும் விமர்சனம் செய்யவில்லை என்பது கவனிக்கற்பாலது.)

ஈழத்தில் அறுபதுகளளவிலேயே மார்க்சியச் சார்புடைய முற்போக்குக் கவிஞர்கள் பலர் உருவாகினர். இவர்கள் கவிதைகளில் வெளிப்பட்ட சாதிமை, முதலாளித்துவம் என்பனவற்றிற்கான எதிர்ப்புக் குரல்களில் இருவேறு தன்மைகளை இனங்காணலாம்.

அ) நேரடியாக வெளிப்படுத்தல் எ-டு: பசுபதி, (ஆரம்பகால)
சுபத்திரன் கவிதைகள்[12] எ-டு :

'காலம் நெருங்குதடா'

கோடித் தலையுடன் சீறி வருங்கடல்
கோபமுன் கோபமடா - தோழா
வாடி உழைத்திடும் போது எரிமலை
வாயின துள்ளமடா - குடில்
தேடிக் கிடந்திடும் துன்ப மிரிந்திடத்
தோழா எழுந்திடுவாய் - பல
கோடி புலியொரு யானையென உருக்
கொண்டது என்று நட

-சுபத்திரன்-

ஆ) காட்சிப்படுத்தல், நாடகப்பாங்கு முதலான விதங்களில் வெளிப்படல். எ-டு :

நுஃமான்[13], சண்முகம் சிவலிங்கம், (தேவைகருதி பின்வரும் கவிதை முழுமையாக இடம்பெறுகின்றது :

'துயில் கலைந்தோர்'

I

அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்
எந்தச் சிறுநிழலும் இல்லாத பாதையிலே
அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்
எங்களிடம் என்ன
இழக்க இருக்கிறது?
எங்களிடம் என்ன
இழக்க இருக்கிறது?
வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்
வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்

அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்
எந்தச் சிறுநிழலும் இல்லாத பாதையிலே
அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்
.....
காற்று இப் பெருங்குரலைக்
கை எடுத்துச் சென்றது
நாற்றிசையும் இக்குரலின்
நாதம் பரவியது
மண்ணின் புழுதி இவ்
வார்த்தைகளை ஏந்தியது
விண்ணில் முகிலில் இதை
மீண்டும் எழுதியது
அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்.
எந்தச் சிறுநிழலும் இல்லாத பாதையிலே
அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II

"யார் நீங்கள்"?
இந்த நடுமதிய வேளையிலே
போர்புரியும் நோக்கில் புறப்பட்டு வந்துள்ளீர்
"யார் நீங்கள்"?
"யார் நீங்கள்"?
மாலிகையில் நாங்கள் களைப்பாறும்
வேளையிலே
கோப, வெறியை வெளிக்காட்டிப்
போர்புரியும் நோக்கில்
புறப்பட்டு வந்துள்ளீர்.
யார் நீங்கள்...?
.....

ஆளும் குரல்கள்
அதிகாரக் குரல்கள்
சூழும் குளிர்ந்த நிழலில் சுகங்காணும்
ஆளும் குரல்கள்
அதிகாரக் கூக்குரல்கள்
சுங்கான் புகையின்
சுகந்த மனத்திடையே
யானைப் பிளிறல் போல்
நாற்றிசையும் கேட்டன.

III

நாங்கள் யார்?
நாங்களே இந்நாட்டின் உழைப்பாளர்!
நாங்கள் யார்?
நாங்களே இந்நாட்டின் வறியவர்கள்!
.....
எங்களிடம் என்ன இழக்க இருக்கிறது?
வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்
வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்
காற்று இப்பெருங்குரலைக்
கையெடுத்துச் சென்றது

நாற்றிசையும் அக்குரலின்
நாதம் பரவியது
.....

இவர்களதும் இவர்கள் வழிவந்த பிற்கால முற்போக்குக் கவிஞர்களான சிவசேகரம் முதலானோரதும் கவிதைகள் இன்றைய தமிழ்நாட்டு ஆய்வாளர்களால் பாராட்டப்படுகின்றமை இவ்விடத்தில் நினைவு-கூரத்தக்கது.[14]

யாழ்ப்பாண உயர் மத்தியதர வர்க்கத்தினரின் மூடுண்டபண்-பாட்டின் மறுபக்கங்கள் சிலவற்றை புனைகதைகளூடாக வெளிப்-படுத்தியவர்கள் டானியல், எஸ்.பொன்னுத்துரை முதலானோர். தமது புதுக்கவிதைகளூடாக அத்தகையோரின் பண்பாட்டிற்கெதிரான குரல் முதன்முதலாக தா.இராமலிங்கத்தினூடாக இக்காலப் பகுதியில் வெளிப்படுவது விதந்துரைக்கப்பட வேண்டியது.[15] எ-டு :

'தூக்கட்டும் தூக்கட்டும்'

".....

கற்புக்கரசியாய்

வாழ் என்று வாழ்த்திச்
சிலப்பதிகாரமும்
சீதனம் தந்தார்
பாத்தி பிடிப்பார்
அள்ளி இறைப்பார்
பிஞ்சு மாதுளை
வெள்ளை மணிகளில்
இரத்தம் பிடித்திடும்
பொதிந்த ஆசைகள்
முற்றும் பலித்திடும்
என்ற கனவுடன்
கைப்பிடித் தேகினேன்
புகுந்த புதுமனையில்
கறந்த மனப்பாலைக்
காய்ச்சி உறிஞ்சுதற்கு
ஈர விறகு தந்தார்
புகை குடித்து அடுப்பூதிப்
புகைச் சூண்டபால் குடித்தான்
காலம் கழிந்ததன்றிக்
கனவு பலிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ள இறைவனிடம்
காணாமல் ஒடிவிட்டேன்
வாய்முழுவதும்
தணல் கொட்டி
அடக்கிடுவேன்
ஊன் கொழுப்பு
அடக்கிடுவேன்
என்று இரைந்தெழும்பக்
கள்ள இறைவனிடம்
காணாமல் ஒடிவிட்டேன்
.....
உருதி வந்தான்
ஓங்கிய கத்தியோடு!'
ஓங்கிய கத்தியை உருவி எறிந்ததும்
திருகிய கைகளை முறுக்கி விலக்கியும்
முகத்தில் அறைந்து நிலத்தினில் வீழ்த்தி
நெஞ்சில் இருந்து நெரிக்க முயல்கையில்
ஓலமிட்டேன் நான்!
ஓலமிட்டேன் நான்!
ஓடிவந்தயல்
விளக்குப் பிடித்து வேலியால் பார்த்து
விலக்குப் பிடிக்க எவருமே வந்திலர்
உலக்கை கிடந்தது!
வலக்கை துடித்தது!
உச்சந்தலை அடி
ஓங்கி ஒரே அடி!
விளக்கு உடைந்தது.....
வெள்ளம் பாய்ந்தது.....
ஊடுபத்தி ஒளியும் அணைந்தது
நாய்கள் படலையில் கூடிக்குலவின
நெஞ்சில் மணிக்கூடு வேகமாக ஓடிற்று!
அவன் கட்டிய தாலியை அறுத்தெறிந்தேன்
எள் காதலன் மடியினில் கிடந்தழுதேன்!
நீடிய சிறையினில் பட்ட துன்பம்
ஈடுசெய் இன்பம் தந்து விட்டான்.
....

எனினும், யாழ்ப்பாணம் சமூம் பற்றி இத்தகைய எதிர்ப்புக் குரல்கள் (கவிதையூடாக) பின்னர் எழுப்பப்படவில்லை.

இந்த அறுபதுகளளவிலேயே மலைநாட்டுத்தமிழர் மத்தியில் 'தேசிய' உணர்ச்சி ஏற்படுகின்றது. இதனைத் தொடர்ந்து தோட்ட நிருவாகத்திற்கெதிரான எதிர்ப்புக் குரல்களும் மலைநாட்டுக் கவிஞர் மத்தியில் ஓரளவு ஒலிக்கத் தொடங்கின எனலாம். (எ-டு: குறிஞ்சித்தென்னவன், அல்அஸுமத்). குறிஞ்சித் தென்னவன் கவிதையொன்றின் ஒரு பகுதி, பின்வருவது:[16]

பஞ்சமும் நோயும் பட்டினிச்சாவும்
பாட்டாளி எங்களுக்கோ? தினம்
கொஞ்சிக் குலவிக் கூத்தாடி மகிழ்வதெம்
கூட்டாளி என்பவரோ?

பொங்கிடு! பொங்கிடு! பொங்கி யெழுந்திடு
புத்துலகம் சமைப்போம் - நாம்
இங்கு படுந்துயர் மங்கி மடிந்திட
பொங்கி எழுந்திடு வோம்

மட்டக்களப்பில் நிலவுகின்ற சமூகக் குறைபாடுகளுக்கெதிரான எதிர்ப்புக்குரல்கள் மார்க்சியச் சார்பில்லாத முற்போக்கு கவிஞர்களாலும் எழுப்பப்பட்டு வந்துள்ளன. இத்தகைய கவிஞர் வரிசையில் முன்னோடி என்று கூறத்தக்கவர் ஜி.எம்.செல்வராஜ் என்பவர். போடிமார்களுக்கெதிரான அவரது கவிதையின் ஒரு பகுதி, இது:[17]

ஏழைகளைக் கூப்பிட்டு ஏசிப்பேசி
ஏலாத வேலைகளைச் செய்துவிட்டு
'நாளைவா' கூலிதர என்று சொல்லி
நாட்டாண்மை காட்டி எந்நாளும் தங்கள்
பேழையிலே நிரப்பிட்ட பணத்தைக் கொண்டு
பெருமையுடன் ஊரறியப் பொங்கலிட்டு
வாழையிலை வெட்டியதில் புக்கைகட்டி
வறியவர்க்கு வழங்குவதும் பொங்கலாமோ?

ஆயினும் இவ்வரிசைக் கவிஞர்களுள் விதந்துரைக்கப்பட வேண்டியவர் நீலாவணன். சாதிமை, சுரண்டல், ஊழல் எனப்பல-விடயங்கள் தொடர்பாக அதிகம் எழுதியிருப்பவர் அவர். பின்வருவது இத்தொடர்பிலான அவரது கவிதையின் சில பகுதிகள்:[18]

அடிபறை அடிபறை அடிசடையா - ஊர்
அரள்க, அரள்கவென அடிசடையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம் போல தலையை முன்னால் நீட்டு கையை
முன்னும் பின்னும் காலைத்தூக்கி
உன்னி யுன்னித் தாளந்தீர்த்து

தங்கமென்றால் எங்கள் முதலாளி - தானத்
தருமத் தண்ணீர் நிறைந்துபொங்குங்கேணி
தங்கக் காசின் ஓரமாகத்
தங்கி வாழும் நீதி! தூசு

அடிபறை அடிபறை அடிசடையா - ஒரு
அவசரமில்லை இனி அடிசடையா

குப்பையோடு உண்மையையும் கூட்டிபாவம்
கொளுத்த வென்றோ போகிறீர்கள் -
காட்டில்
எப்படிக் கொளுத்துவீர் மெய்
எரிக்க நின்று சிரிக்கும் என்று

அடிபறை அடிபறை அடிசடையா - ஒரு
அவசரமில்லை இனி அடிசடையா

ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர்களிடம் இத்தகைய எதிர்ப்புக் குணம் அதிகமுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈழத்து இலக்கிய ஆய்வாளர் பலருமறிந்தது போன்று எண்பதுகள் ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் குறிப்பாக கவிதை வளர்ச்சியில் மிகமுக்கியமானதொரு காலப்பகுதியாகின்றது. 'ஈழத்துக் கவிதையில் எதிர்ப்புக் குரல்கள்' என்று நோக்கும்போது அத்தகைய முக்கியத்துவம் முதன்மை-பெற்றுக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இவ்விதத்தில் மூன்று விடயங்கள் முனைப்புறுகின்றன.

இவற்றுளொன்று, அரசியல் சார்ந்த எதிர்ப்புக்குரல்கள் முதன்முதலாக பிரக்ஞை பூர்வமாகவும் பரந்துபட்ட ரீதியிலும் இடம்-பெறுகின்றமையாகும். எழுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து ஏற்பட்ட அரச/இராணுவ ஒடுக்குமுறையும் அதன் உச்சக்கட்டமாகிய 83இன் இனக்கலவரமும் ஈழம் முழுவதும் ஏற்பட்டமையும் இவற்றின் விளைவாக உருவான தமிழீழ விடுதலை இயக்கங்களும் அவற்றின் ஆயுதப் போராட்டங்களும் முனைப்புற்றமையும் இத்தகைய அரசியல் எதிர்ப்புக் கவிதைகளின் பின்னணியாகத் திகழ்ந்தன என்பது தெளிவு.

இவ்வாறான அரசியல் எதிர்ப்புக் குரல்கள் இருவேறு அடிப்படைகளில் அமைந்துள்ளன. ஒன்று இனஒடுக்குமுறைக்கெதி-

ரான வர்க்கரீதியிலான எதிர்ப்புக்குரல். எ-டு: நுஃமான், சிவசேகரம் கவிதைகள் எ-டு :[19]

'நேற்றைய மாலையும்
இன்றைய காலையும்'

.....
திருவிழாக் காணச் சென்று கொண்டிருக்கையில்
படம் பார்க்கச் செல்லும் பாதிவழியில்
பஸ் நிலையத்தின் வரிசையில் நிற்கையில்
சந்தியில் இருந்து திரும்பி வருகையில்
எங்களில் யாரும்
சுடப்பட்டு இருக்கலாம்
எங்களில் யாரும்
அடிபட்டு விழலாம்
உத்தரவாதம் அற்றவாழ்க்கையே
மனிதனின் விதியா?
அடக்குமுறைக்கு அணி பணிவதே
அரசியல் அறமா?
அதை நாம் எதிர்ப்போம்
அதைநாம் எதிர்ப்போம்
எங்களின் தேவை:
மனிதனுக்குரிய வாழ்க்கை உரிமைகள்
மனிதனுக்குரிய கௌரவம்
வாழ்க்கைக்கான உத்தரவாதம்
யார் இதை எமக்கு மறுத்தல் கூடும்?
மறுப்பவர் யாரும் எம் எதிர் வருக!.....
.....

மற்றொன்று, இன ஒடுக்குமுறைக்கெதிராக தனிநாடு கோரும் நோக்கிலான எதிர்ப்புக்குரல். எ-டு: புதுவை இரத்தினதுரையின் கவிதைகள்.

மேலும், இத்தகைய எதிர்ப்புக் குரல்கள், மெல்லிசைப்-பாடல்கள், கவிதா நிகழ்வுகள், சுவரொட்டிகள் என்ற விதங்களிலும் வெளியிடப்பட்டமையும் இவ்வழி கவிதை ஜனரஞ்சகமயப்படுத்தப்-பட்டமையும் குறிப்பிடத்தக்கது எ-டு :[20]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மெல்லிசைப்பாடல்)

ஓ மரணித்த வீரனே
உன் சீருடைகளை எனக்குத் தா
உன் பாதணிகளை எனக்குத் தா
உன் படைக்கலங்களை எனக்குத் தா
உன்வீட்டு முகவரியை எனக்குத் தா
உனது இரு கண்ணீரை எனக்குத் தா.

'சுவரொட்டிக் கவிதை'[21]

காணவில்லை
சுதந்திரம்
வயது42

எண்பதுகளிலேற்பட்ட குறிப்பிடத்தக்க பிறிதொரு முயற்சி படித்த ஈழத்துப் பெண்கள் மத்தியிலே முகிழ்த்த சமூகவிழிப் புணர்ச்சியின் பின்னணியில் நீண்டகால ஆணாதிக்கத்திற்கெதிராக (ஈழத்தமிழ்ப்) பெண் கவிஞர்கள் முதன் முதலாக எதிர்ப்புக் குரல் எழுப்பியமை-யாகும். இவ்விதத்தில் 'சொல்லாத சேதிகள்' என்ற தொகுப்பின் வரவு நவீன தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியமானதொரு இடத்தைப் பெறுகின்றது.[22] எ-டு :

'அவர்கள் பார்வையில்'

எனக்கு
முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை
அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன
சமையல் செய்தல்
படுக்கையை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்

இவையே எனது கடமைகள் ஆகும்.
கற்பு பற்றியும்
மழைபெய்யெனப் பெய்வது
பற்றியும்
கதைக்கும்
அவர்கள்
எப்போதும் எனது உடலையே
நோக்குவர்
கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்

-அ.சங்கரி-

மேற்கூறியவாறான பெண்கவிஞர்களுள் சிலர் பெண்நிலைவாத நோக்கிலான கவிதைகளை மட்டுமன்றி, அசியல் சார்ந்த கவிதை-களையும் எழுதமுற்பட்டனர். சிவரமணி கவிதைகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகின்றன.

எண்பதுகளிலேற்பட்ட குறிப்பிடத்தக்க இன்னொரு முயற்சி, புகலிடக் கவிதைகளுடனான எதிர்ப்புக் குரல்களாகும். எண்பதுகளின் நடுக்கூற்றிலே ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பா, கனடா முதலான நாடுகளுக்குச் சென்ற இளந்தலை முறையினரின் படைப்பாக்க முயற்சிகளில் குறிப்பாக கவிதைகளில் அரச/இராணுவ ஒடுக்குமுறைக்கெதிரான குரல்கள் தீவிரமாக ஒலித்தன. அது மட்டுமன்றி தமிழீழ விடுதலை இயக்கங்களின் செயற்பாடு-களுக்கெதிரான எதிர்ப்புக் குரல்களும் முதன்முதலாகக் கேட்டன. புகலிடப் பெண்கள் மத்தியிலிருந்தும் குறிப்பிடத்தக்க கவிஞர்கள் உருவாகினர்.

மேற்கூறியவாறான புகலிடம் சார்ந்த அரசியல் எதிர்ப்புக் குரல்களும் ஆணாதிக்கத்திற்கெதிரான பெண்நிலை வாதக்குரல்களும் ஈழத்துக்கவிதையை மூன்றாம் உலகநாட்டுக் கவிதைப் போக்குடன் சங்கமிக்கச் செய்கின்றது. எடுத்துக்காட்டாக புகலிட நாடுகளில் நிலவும் நிறவாதத்திற்கெதிராக பின்வரும் கவிதை அமைந்துள்ளது:[23]

நாங்கள் ஏன் அகதிகளானோம்
என்தாய் எங்கே?
என்தாய் மொழி எது?
நாங்கள் ஏன் கறுப்பர்களாயிருக்கிறோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அவர்களால்' ஏன்
ஒதுக்கப்படுகின்றோம்?
துருக்கித் தோழி ஏன்
எரிக்கப்பட்டாள்?

-நிருபா-

இவ்வாறே புகலிட பெண்நிலைவாதக் கவிதைக்கு எடுத்துக்காட்டு, பின்வருவது:[24]

எனது இயக்கம்
எனது ஆற்றல்
எனது திறமை
அனைத்தும் எனக்கே
இருக்கக் கூடியவை
யாரிடமாவது இருந்து
இவற்றைப் பெற்றால்
நான் பெண்ணாக
இருக்க முடியாது
நீங்கள் உருவாக்கிய பெண்மை
எனது அடையாளமல்ல
நான் பெண்
பிறக்கும் போதே

-ரஞ்சனி-

எண்பதுகளிலேற்பட்ட மேற்கூறியவாறான எதிர்ப்புக் குரல்கள் தொண்ணூறுகளிலே சிற்சில மாற்றங்களைக் காண்கின்றன. இவ்விதத்திலே பின்வரும் விடயங்கள் குறிப்பிடத்தக்கன:

i. தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கெதிராக முன்னர் புகலிட நாடுகளிலே ஒலித்த எதிர்ப்புக் குரல்கள் இப்போது ஈழத்திலேயே கேட்க ஆரம்பிக்கின்றன (எ-டு: ஆத்மா).

ii. பெண்நிலைக் கவிஞர்களின் பங்களிப்புகள், முன்னரைவிட இப்போது பெண்நிலைவாதச் சிந்தனைகள் பரவலடைந்தமை காரணமாக ஆழமும் கூர்மையும் தெளிவும் பெற்றமைகின்றன. (எ-டு : பெண்ணியா, ஆழியாள், கல்யாணி). எ-டு:[25]

'பதில்'

என் ஆதித்தாயின்
முதுகிற்பட்ட
திருக்கைச் சவுக்கடி
நான் காணும் ஒவ்வொருவனது
முகத்திலும்
தழும்பாய் தேமலாய்
படர்ந்து கிடக்கின்றது

அடையாளத்தை
உணரும் போதெல்லாம்
வீரியங்கொண்ட
ஊழியச் சவுக்கின் ஒலி
மீளவும் என்னை
வலிக்கப் பண்ணும்
என்னைப் பிளந்து
ரத்த உடுக்கள்
வெடித்துப் பறந்து
தனித்துச் சிதறிக் கொட்டும்
தனித்து
அவை ஒவ்வொன்றும்
கிரகங்கள் என உருப்பெறும்
தன்னிச்சையாய் சுற்றிவரும்
தாளலயத்துடன்
அங்கு
எனக்கென
ஒரு பிரபஞ்சம்
என்னால் உருவாகும்
அப்போது உயிர்பெறும்
எனக்கான
வரிவடிவங்களுடன் கூடிய
என்மொழி
அதன் பின்
தேமல் படர்ந்த எவனாயினும்
உரையாடட்டும் அப்போது
கூறுகிறேன் பதிலை
என் மொழியில்
என் ஆதித்தாயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் மொழியில்
அதுவரை நீ காத்திரு.

விடுதலை இயக்கங்கள் சார்ந்த பெண் போராளிகளுட் சிலர் கவிதை எழுத முற்படுகின்றனர். எ-டு : [26]

எனது இனிய தேசமே
குறிப்பெடுத்துக்கொள்
எரியுண்டு
சிதைந்துபோன
என் தேசத்தின்
காப்பகழி ஒன்றில்
எழுகின்ற
உணர்வு அலைகளைக்
குறிப்பெடுத்துக்கொள்
.....

-பாரதி-

அரச, இராணுவ ஒடுக்கு முறைகளுக்கெதிரான விடுதலை இயக்கஞ் சார்ந்த கவிதைகள் தொண்ணூறுகளின் இறுதிப் பகுதியிலே முன்னரைப் போல் பரவலாக அறியப்படாவிட்டாலும் அவ்வப்போது இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து ஓரளவு வெளிவந்து கொண்டிருக்கின்றன (எ-டு : செம்மணிக் கவிதைகள் தொகுப்பு).

இனி, வாய்மொழி இலக்கியங்களுடாக, குறிப்பாக வாய்மொழிப் பாடல்களுடாக எதிர்ப்புக்குரல்கள் வெளிப்படுமாற்றினைப் பற்றிச் சுருக்கமாக கவனிப்போம்.

கூர்ந்து நோக்கின் வாய்மொழிப் பாடல்களையும் இருவகைப் படுத்தலாம். பாடியவர் யாவர் என்று இனங்காண முடியாதவை, ஒருவகை. பாடியவர் யாரென்று தெளிவாக இனங்காணக் கூடியவை, மற்றையவகை.

பாடியவர் யாரென்றறியப்படாத வாய்மொழிப் பாடல்களில் எதிர்ப்புக்குரல்கள் என்று கவனிக்கும்போது முதலில் மலையகப் பிரதேசப் பாடல்கள் கவனத்திற்குட்படுகின்றன.[27] எ-டு :

அந்தனா தோட்டமீது
ஆசையா தானிருந்தேன்
ஒரு மூட்டை தூக்கச்சொல்லி
ஒதைக்கிறாரே கண்டாக்கையா

கல்லாறு தோட்டத்திலே
கண்டாக்கையா பொல்லாதவன்

மொட்டே புடுங்குதின்னு
மூனாளு விரட்டிப் போட்டான்

வேலை முடிஞ்சிருச்சு
வீட்டுக்கு பயணமாச்சு
வேலையில்லா கண்டாக்கையா
வெரட்டுராறு எங்களேதான்

இத்தகைய வாய்மொழிப் பாடல்கள் சிலவற்றில் தோட்ட-நிருவாகத்திற்கெதிரான குரல்களையும் (எ-டு : பட்டியகாமம் வேல்சாமிதாசன்), சிலவற்றிலே சமூகக் குறைபாடுகளுக்கெதிரான குரல்களையும் அவதானிக்க முடியும்.[28]: எ-டு :

'எல்லாம் அதுக்குள்ளே'

பத்தடிக்காம்பரா வீட்டிலே - மக்கள்
படுக்கக் கஷ்டம் பாருங்க பாட்டிலே
தாயும் தகப்பனும் அதுக்குள்ளே - மேஜர்
ஆகிய
தலைப்பெண்ணும் அதுக்குள்ளே - சொந்த
மாமனும் மாமியும் அதுக்குள்ளே - சொந்த
மருமகன் மகளுமே அதுக்குள்ளே
.....
கங்காணிச் சாமிக்கும் வரிப்பணம் - உதிரி
காளான் சங்கத்திற்கும் வரிப்பணம்
பொங்கலுக்கும் பூசைக்கும் வரிப்பணம் - நம்ம
பூசாரி உடுக்கைக்கும் வரிப்பணம்

-வி.எஸ்.கோவிந்தசாமித்தேவர்

மட்டக்களப்புப் பிரதேசப் பாடல்களுள் குறிப்பாக கவிகளுள் ஆணாதிக்கத்திற்கெதிரான குரல்கள் கணிசமாக இடம்பெறுகின்றமை விதந்துரைக்கற்பாலது.[29] எ-டு :

நீயொரு வல்லவக் காரனெண்டு வாங்கி
வச்சேன் உன்பணத்தை
கோழித்தத்துவக் காரா கொண்டுபோடா
உன் பணத்தை

(களஆய்வு - மாண்டூர் கிராமம்)

மேற்கூறியவாறு பெண்கூற்றாக அமையும் பாடல்களை ஆண் பாவனைப் பாடல் என்று ஆய்வாளர் சிலர் கருதுவர். அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயிருந்தாலும் அக்காலச் சமூகப்பிரக்ஞையின் வெளிப்பாடு அவற்றினூடே ஓரளவு வெளிப்படுகின்றதென்பதில் தவறில்லை.

இறுதியாக, தொகுத்து நோக்கும் போது, எழுத்து ஊடகக் கவிதைகளில் முப்பதுகள் தொடக்கம் அரசியல் எதிர்ப்புக் குரல்களும் சமூக எதிர்ப்புக் குரல்களும் ஒலிப்பதை அவதானிக்க முடிகின்றது. இவற்றுள் சமூக எதிர்ப்புக் குரல்கள் அறுபதுகளில் மார்க்சியச்-சார்புடைய முற்போக்குக் கவிஞர்களின் வரவிற்குப் பின்னரே முதன்மை பெறுகின்றன. அரசியல் எதிர்ப்புக் குரல்கள் எண்பதுகள் தொடக்கம் செல்வாக்குப் பெறுகின்றன. இவ் அரசியல் எதிர்ப்புக் குரல்கள் ஈழத்திலேயே பெருமளவு இடம்பெற்றுள்ளன. இவை, சாதாரண மக்களைச் சென்று சேர்ந்துள்ளன போன்று, சமூக நோக்குடைய எதிர்ப்புக் கவிதைகள் சென்று சேரவில்லை என்பதும் கவனத்திற்குரியது.

வாய்மொழிப்பாடல்களில் எதிர்ப்புக் குரல்கள் அதிகம் இடம்பெறவாய்ப்புள்ளது. ஆயினும், இவைபற்றிய போதியளவிலான பரவலான தொகுப்பு முயற்சிகளும் ஆய்வுகளும் இன்றுவரை நிகழவில்லை. இவ்வித முயற்சிகள் தமிழ்நாட்டில் கணிசமாக இடம்பெற்றுள்ளன. இவ்வாய்மொழிப் பாடல்கள் தமிழ்நாட்டில் அண்மைக் காலமாக மக்களிசை வடிவில் வலுவான சக்தியாக உருவெடுப்பதையும் அறிய முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. செ.யோகராசா, ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றமும் 1985 வரையிலான அதன் வளர்ச்சியும் பற்றிய ஓர் ஆய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு 1998இல் சமர்ப்பிக்கப்பட்ட கலாநிதிப்பட்ட ஆய்வேடு (நூலுருப்பெறாதது).
2. வேந்தனார், கவிதைப்பூம்பொழில், ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம், 1985, ப.41.
3. சத்தியநாதன், ஈழகேசரி, 21.03.1934.
4. கலாயோகி ஆனந்தகுமாரசாமியைத் தலைவராகக் கொண்டு 1905இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமூகச் சீர்திருத்தச்சபை சில வருடங்களே செயற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.
5. கோ.ந.மீனாட்சியம்மாள், இந்தியர்களது இலங்கையின் நிலைமை, 1940 அட்டன்.
6. தினகரன், 11. 09.1944.
7. சுதந்திரன், 20.10.1959.

8. ஆரையூர் அமரன், அறப்போர்க்குரல், மட்டக்களப்பு, 1961.
9. தமிழ் எங்கள் ஆயுதம், முத்தமிழ் வெளியீடு, யாழ்ப்பாணம், 1962.
10. மே.கு.நூ., ப.11.
11. புரட்சிக்கமால், புரட்சிக்கமால் கவிதைகள், கண்டி, 1962, ப.2.
12. சுபத்திரன், சுபத்திரன் கவிதைகள், பூவரசன் வெளியீடு, 1997, ப.22.
13. நுஃமான், மழைநாட்கள் வரும், அன்னம், சிவகங்கை, 1983, பக் : 40.46.
14. ஆர்.சிவகுமார், புதுக்கவிதையும் புதுப்பிரக்ஞையும், காவ்யா, பெங்களூர், 1985, ப.29.
15. தா.இராமலிங்கம், காணிக்கை, அரசுவெளியீடு, கொழும்பு, 1967, பக்: 12.14.
16. குறிஞ்சி தென்னவன், குறிஞ்சி தென்னவன் கவிதைகள், மலையக வெளியீட்டகம், கண்டி, 2ம் பதிப்பு 1987, பக் : 16.
17. பாரதி, செப். 1948, மட்டக்களப்பு, ப.14.
18. நீலாவணன், வழி, கல்முனை, 1976, பக் : 88-89.
19. எம்.ஏ.நுஃமான், மே.கு.நூ., பக் : 69-71
20. மெல்லிசைப் பாடல்கள் - 1, ஒலிப்பதிவுநாடா, யாழ்ப்பாணம் 1989.
21. இவ் ஆய்வாளரது சேகரிப்பிலிருந்து.
22. சொல்லாத சேதிகள், பெண்கள் ஆய்வுவட்டம், யாழ்ப்பாணம்.
23. நிருபா, தேனீ, தை 1993, ப:43.
24. ரஞ்சனி, இனியும் சூல்கொள் (1997), 23வது இலக்கியச்சந்திப்பு பிரான்ஸ், பக்:7.
25. ஆழியாள், உரத்துப்பேச, மறு, சென்னை, 2000, பக் : 21-22.
26. காலம் எழுதிய கவிதைவரிகள் (தொகுதி I), தமிழ்த்தாய் வெளியீட்டகம், யாழ்ப்பாணம், 1994.
27. சாரல்நாடன், மலையகம் வளர்த்த தமிழ், கொழும்பு, 1997, பக்:109.
28. கே.கே.எஸ்.ஜில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை ஜனநாயக காங்கிரஸ் போட்டி விடுதலை, பதுளை, 1960.
29. சி.சந்திரசேகரம், "நாட்டுப்புறப் பாடல்களில் ஆணாதிக்கச் செயற்பாடும் அதற்கெதிரான குரலும்", நெய்தல், தொகுதி II எண் 1, கிழக்குப்பல்கலைக்கழகம்.

· நெய்தல், தொகுதி 2, எண் II, 2001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

உருவ நோக்கில் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி

ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி பற்றிய பெரும்பாலான ஆய்வுகள் உள்ளடக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தே நடைபெற்று வந்துள்ளனவே தவிர, உருவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து நடைபெற்றுள்ளமை அரிதே. கவிதை உருவத்திற்கும் முக்கியத்துவமளித்து ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி பற்றி அணுகும் போது, ஈழத்து நவீன கவிதையின் தனித்துவம் மேன்மேலும் புலப்பட வழியுண்டாகும். ஆதலின், உருவ நோக்கில் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி பற்றி நோக்குவது அவசியமாகின்றது.

தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தில் முக்கியம் பெற்று விளங்கிய பா வடிவங்களுள் வெண்பா முதன்மையானது. வெண்பா கடுமையான இலக்கண விதிகளுக்குட்பட்ட வடிவமாதலின் மன உணர்ச்சிகளை அதனூடே வெளிப்படுத்துவது கடினமானதொன்று ஆயினும், ஈழத்துக் கவிஞர்கள், ஈழத்தில் நவீன கவிதை தோற்றம் பெற்ற காலந்தொட்டு இவ்வெண்பா வடிவத்தினை அடிமைப்படுத்தி வந்துள்ளரெனில் அது தவறன்று. மஹாகவி, நீலாவணன், அண்ணல் முதலானோர் தொடக்கம் அண்மைக் காலக் கவிஞர் வரை இதற்கு விலக்கானவரல்லர். கவிதைப் பகுதியொன்றிலமையும் பின்வரும் வெண்பாக்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகின்றன:

தோடம் பழச்சுளை போல் தொங்கும் நிலவொளியில்
ஆடவருவாயென்று, ஆற்றோரம்
ஓடத்தே நான் காத்திருந்தேன் நடுச்சாமம்
மட்டும் ஏன் காக்க வைத்தாய் எனை?

- நீலாவணன்

அப்பன் அதட்ட அயலார்கள் தூற்ற, நான்
எப்பாடு பட்டேன் என உணரார்!
அப்படியோ,
என்னைத் தனியே விட்டெங்கோ அவர் மறைந்தால்
என் மீதி லேயா பழி?

- மஹாகவி

வெண்பா தொடர்பான இலக்கியச் சர்ச்சைகள் கூட ஒரு காலத்தில் நிகழ்ந்துள்ளன. அண்ணல் தமது வெண்பாவொன்றினை யாப்பு விதிக்கு மாறாக எழுதிவிடவே அன்றைய கவிஞர் பலரும் சர்ச்சையிலிறங்கி விட்டனர். நீலாவணன், அண்ணல், ஜீவா ஜீவரெத்தினம், இராஜபாரதி, சி.கனகசூரியம், மண்டூர் சோமசுந்தரம் பிள்ளை, பாண்டியூரன் முதலானோர் இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்விடத்தில் மூன்று வெண்பாக்கள் தரப்படுகின்றன:

தொல்காப் பியத்திலுமோர்
சூத்திரத்தை ஒப்புவித்து
எல்லாம் தெரிந்தவராய்
ஏமாற்றி - மல்லடித்து
மண்ணிற் புரண்டு மறுபடியும் பாடவந்த
அண்ணலே மீண்டும் அறி...

- நீலாவணன்

பொடிவைத்துப் பேசிடுதல்
ஒருபோக்கு எல்லார்க்கும்
வெடிவைத்தல் வீண்வேலை
விட்டிடுவீர் - வடிகட்டும்
பன்னாடை பாலில்
பழுதைத் தனதாக்கும்
விண்ணாணம் வேண்டாம் இனி!

- அண்ணல்

மண்டூர்க் கவியுன்றன் மச்சானா?
மாமாயம்
கண்ட கனவாபொய்க் கனலா
- கொண்டாடும்
உங்கள் குடும்பத்தை
ஒட்டிப் பிழைப்பவனா
எங்கள் மரபல்ல இது!

- மண்டூர் சோமசுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர, அரசியல் சார்ந்த விடயங்களுடன் தொடர்புபட்டும் ஈழத்துக் கவிஞர்களால் வெண்பா சிறப்போடு கையாளப்பட்டது. முன்பு 'சுதந்திரன்' நடத்திய வெண்பாப் போட்டியும் 'நண்டெழுத்து வேண்டாம் நமக்கு' என்ற மரபுடத்தில் இடம்பெற்ற போட்டியில் கவிஞர் பலர் பங்கு பற்றியமையும் இவ்வேளை நினைவிற்கு வருகின்றன.

அண்மைக்காலக் கவிஞருள் 'ஈழமோகம்' இவ்விதத்தில் கவனத்திற்குரியவர். 'சரிநிகர்' பத்திரிகை முகப்பில் (வலதுபுற மூலையில்) தொடர்ந்து வெளிவந்த அவர் இயற்றிய வெண்பாக்கள் அவ்வேளை பலரது கவனத்தையும் ஈர்த்தனவு; எடு:

'அனுருத்த சமாதானம்'

போருக்கு அஞ்சோம் நாம் புலிகளுக்கு அஞ்சோம்
ஊருக்கு இல்லை நாம் ஒருபோதும் - போருக்காய்ப்
பேசுகிறோம் பேச்சு முறியட்டும் பார் பார்த்துவிட்டு
பேசு ! பிறகெம் பெற்றி

(எனினும் அவரது வெண்பாக்களுள் சில-மேலுள்ளது உட்பட ஆங்காங்கே இலக்கண விதி மீறலுக்குட்பட்டிருந்தன என்பதனையும் அவை தவிர்க்கப்பட்டிருக்கக் கூடியவை என்பதையும் மறுப்பதற்கில்லை.)

எனினும், குறள் வெண்பா வடிவம் சம காலக் கவிஞர் ஒருவரால் சிறப்புறப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொன். கணேசமூர்த்தியின் 'துளித்துளி வைரங்கள்' என்ற தொகுப்பு (2003) இவ்வழி விதந்துரைக்கப்பட வேண்டியதே. (இத் தொகுப்பின் மற்றொரு சிறப்பு, படைப்புகளின் இடம்பெற்றுள்ள கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பாகும்.) எடுத்துக்காட்டு இதுவாகும்:

'செம்மணிப் புதையல்'

தோலோடு மூடினார் ஆளாளாய்த்
தேடினார்
ஆரும் அறிந்ததிலையே

அரசியல் தொடக்கம் இயற்கை அனுபவம் வரை பல விடயங்களும் கவிஞரால் குறள் வெண்பாவிலே பேசப்படுகின்றன.

மேற்கூறிய விடயங்களை நோக்கும் போது, வெண்பா வடிவம் அதுவும், கடுமையான யாப்பு விதிகளுக்குட்பட்ட வடிவம் - காதல், அரசியல், இயற்கை, கவிதா ஆற்றல் முதலான பல்வேறு விடயங்களையும் எடுத்துரைக்க அவ்வப்போது ஈழத்துக் கவிஞர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளமை புலப்படுகின்றது.

ஆசிரியப் பா வடிவம், ஈழத்துக் கவிஞர்களால் பிறிதொரு வித்தில் மாற்றங் கண்டது. ஓசை நயமும் சந்த விகற்பமும் மிக்கிருந்த கவிதை மரபு ஓய, பேச்சோசை ஈழத்துக் கவிஞர்களால் முதன்மைப் படுத்தப்பட்ட நிலையில் ஈழத்துக் கவிஞர்கள் பலரும் - மஹாகவி, நீலாவணன், இ.முருகையன், நுஃமான், சண்முகம் சிவலிங்கம் முதலானோர்-செய்யுள் அமைப்பு முறைகளில் பல மாற்றங்களை மேற்கொண்டனர். இத்தகைய மாற்றங்களில் ஒன்று, ஆசிரியப் பா அடியானது முன்னர் போலன்றி, பொருள் அமைப்பிற்கேற்ப, சீர் பிரித்து வரிகள் அமைக்கப்பட்டன. 'இடைவெளி'யும் குறியீட்டுப் பயன்பாடும் அதிகரித்தன. பின்வரும் கவிதைப் பகுதியை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்:

ஊரெல்லம் கூடி ஒருதேர்
இழுக்கிறதே;
வாருங்கள் நாமும் பிடிப்போம் எடத்தை
என்று வந்தான் ஒருவன்
வயிற்றில் உலகத்தாய்
நொந்து சுமந்திங்கு நூறாண்டு
வாழ்வதற்காய்ப்
பெற்ற மகனே அவனும்...

'தேரும் திங்களும்' என்ற தலைப்பில் மஹாகவி எழுதி நன்கறியப்பட்ட கவிதையின் ஆரம்பப் பகுதியே மேற்தரப்பட்டுள்ளதாகும்.

மேற் கூறிய மாற்றங்கள், ஆசிரியப்பாவில் மட்டுமன்றி, வெண்பாவிலும் இடம் பெற்றமை கவனத்திற்குரியது. சுருங்கக்கூறின் இவ்வழிகளில் நவீன கவிதையை வளமும் வலுவும் பெறச் செய்த சிறப்பானது ஈழத்துக் கவிஞர்களாலேயே மேற்கொள்ளப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது!

இனி, ஈழத்துக் கவிஞர்களால் அறிமுப்படுத்தப்பட்ட புதிய பா வடிவங்கள் பற்றிக் கவனிப்போம். இவ்விதத்தில், விதந்துரைக்கப்பட வேண்டியது மஹாகவி, நவீன தமிழ்க் கவிதையுலகிற்கு வழங்கிய 'குறும்பா' வடிவமாகும். மஹாகவியின் குறும்பா (1966) தொகுப்பு இவ்வழி முக்கியமானதொன்று; அந்நூலிலுள்ள நூறு குறும்பாக்களுள் பின்வருவதொன்று:

முத்தெடுக்க மூழ்கின்றான் சீலன்
முன்னாலே வந்து நின்றான் காலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தமின்றி வந்தவனின்
கைத் தலத்திற் பத்து முத்தைத்
பொத்தி வைத்தான், போனான் முச்சூலன்

மஹாகவிக்குப் பின்னர் குறும்பாவைச் சிறப்பாகக் கையாண்ட ஒருவர் குறிஞ்சித் தென்னவன். (எனினும், அன்னாரது குறும்பாக்கள் இன்றுவரை நூலுருப் பெறாமை துரதிர்ஷ்டமே). எ-டு:

குப்பன் வாழ் லயத்தினது கூரை
குளமாக்கும் வீட்டை மழைத் தாரை!
தப்பாது இங்கு வந்த
தகரமெல்லாம் ஓரிரவில்
அப்போதே அடையும் கொழும் பூரை

"குறும்பா"வை வெற்றிகரமாகக் கையாண்ட சமகாலக் கவிஞர்கள் குறைவு. பா.சிவபாலனின் "நகை" (2000) இவ்வழி கவனிக்கப்பட வேண்டியதே. பின்வரும் "குறும்பா" அத்தொகுதி-யிலுள்ளதே :

கந்தவனம் காலமாகி விட்டார்
கைதடியார் கடமைகளைச் செய்தார்
ஐந்துபிள்ளை கனடாவில்
ஆறாமவன் அபுதாபி
இந்தவகைப் பெருமையவர் கொண்டார்

அண்மையில், "கருடன்" என்ற புனைபெயருள்ள கவிஞரொருவரால் (தினக்குரல் - புதன்கிழமை) எழுதப்பட்டு வரும் குறும்பாக்களும் இலக்கிய ஆர்வலரது கவனத்தை ஈர்த்துள்ளன. எடுத்துக்காட்டாக பின்வரும் குறும்பா அமைந்துள்ளது :

விற்கிறாள் இளமங்கை தெருவினிலே இளனி
சொக்கிறான் அவளழகில் பயணித்த பழனி
தொட்டுப் பருகவா எனக்கேட்ட பழனிக்கு
வெட்டித் தருவதா எனக்கேட்டாள்
படுத்திருந்த அவள் புருஷன் களுமல்லிக் களனி

சுருங்கக் கூறின் சமூகப் பிரச்சினைகளை, அதுவும் அங்கதம் விரவ, புதுமை மிளிர வெளிப்படுத்துவதற்கு குறும்பா வடிவம் ஈழத்துக் கவிஞர்களுக்குக் கைகொடுத்து வருகின்றதென்பது மனங் கொள்ளத்தக்கது.

நவீன கவிதை வடிவங்களுள் தமிழ் நாட்டில் பிரபல்யம் பெற்றுள்ளது "ஹைக்கூ". ஈழத்தில் மலையகக் கவிஞர் முரளிதரனது "கூடைக்குள் தேசம்" தொகுப்பினூடாக அறிமுகமான இவ்வடிவம், இளம்தலைமுறையினர் பலரையும் ஆகர்ஷித்துக் கொண்டதென்பதில் தவறில்லை. பாலரஞ்சினி சர்மா என்ற பெண் கவிஞர் தொடக்கம் கனிவுமதி வரை பல்வேறு மட்டக் கவிஞர்களும் "ஹைக்கூ"வினைக் கையாண்டுள்ளனர். எ-டு:

குலை வாழை சரிந்தது
குட்டி நிமிர்ந்தது
இறுதியில் கைமாறும் ஆயுதம்

- மலரவன்

அகதி இளைஞனுக்கு
அறிவுரை
எயிட்ஸ்"

- வேலணையூர் பொன்னையா
(டென்மார்க்)

எனினும், "குறும்பா"வினைச் சரியாகக் சிறப்பாகக் கையாண்டு வருவது போன்று "ஹைக்கூ" கையாளப்பட்டு வருகின்றதா என்பது ஆய்வுக்குரியது.

வேறு சில வடிவங்களையும் ஈழத்துக் கவிஞர்கள் அவ்வப்போது பரீட்சித்துப் பார்த்துள்ளனர் என்று கூறத் தோன்றுகின்றது. மஹாகவியின் "பொருள் நூறு" இத்தகையதோவென்பது ஆய்விற்-குரியது. ("பொருள் நூறு" இன்னமும் பிரதியுருவிலேயே உள்ளது!) இவ்வாறே, சமகாலக் கவிஞரான "மருதமைந்தன்" கையாண்ட பின்வரும் வடிவமும் கவனத்திற்குரியதாகின்றது (இங்கே, இறுதி அடி முடிவடையாதது போன்ற நிலையுள்ளதே, இதன் சிறப்-பாகின்றதெனலாம்) :

ஹஜ்ஜுக்கள் பல செய்த
ஹாஜியார் சக்காத்து
பிச்சைதனை இடுகின்றார்.
பெருங்கூட்டம் வாசலிலே,
அண்டியொண்டி ஆண்பெண்
ஆள் மேலே ஆள் ஏறி
முண்டியடித்த வண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுக்கையும் நீட்டுகின்றார்
கண்ட பலன் வகவிரிப்பு
காலமெல்லாம்...?

ஆக, உருவ நோக்கில், ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி மேன்மேலும் நுண்ணாய்விற்குள்ளாகின்ற போது, ஈழத்து நவீன கவிதையின் வேறு சில தனித்துவ அம்சங்களும் வெளிப்பட வாய்ப்புள்ளதென்பதில் தவறில்லை!

- மல்லிகை, தை 2006.

VI பொதுப்பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

ஈழத்து நவீன தமிழ்க் கவிதை
ஒரு புதிய அலை

ஏறத்தாழ, கடந்த பத்தாண்டுகளாக (1980) இலங்கைத் தமிழ்க் கவிதையுலகினுள் புதியதொரு அலை வீசிவருகின்றது. இங்கு நாம் கூற விழைவது, ஐரோப்பிய நாடுகள் (ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து, டென்மார்க், பிரித்தானியா) கனடா அவுஸ்திரேலியா ஆகியவற்றிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளில் பிரசுரமாகும் கவிதைகள் பற்றியாம். இவைபற்றி இலக்கிய ஆர்வலர் பலரும் அறிந்திருப்பாரென்று கூறமுடியாது. இதற்கான வாய்ப்பு அரிதாகும். ஆதலின் இத்தகைய புகலிடக் கவிதைகள் பற்றிய சுருக்கமான அறிமுகமும் விமர்சனமும் அவசியமாகின்றது. இதற்குமுன், இவைவெளிவந்த புகலிடச் சஞ்சிகைகள் தோன்றுவதற்கான பின்னணிபற்றிச் சுருக்கமாக நினைவு கூர்வது பயனுடையதாகும்.

இலங்கைத் தமிழரின் புலப்பெயர்வு நீண்ட வரலாறு உடையது. வெவ்வேறு காரணங்களின் நிமித்தம் காலந்தோறும் நிகழ்ந்து வந்துள்ளது. இவைபற்றி விரிவாக ஆராய ஏற்ற இடம் இதுவன்று. முன்னைய காலங்களுடன் ஒப்பிடும்போது, எண்பதுகளிலிருந்து இளைஞர்கள் பலர் புலம் பெயர்ந்துள்ளனர். இவர்களது இலக்கிய வேட்கை, புகலிட அனுபவங்கள், பலவித சுதந்திரங்கள், தொழில்நுட்ப வசதிகள், பொருளியல் நெருக்கடியின்மை, தாயகத் தொடர்பு என்பன புகலிடச் சஞ்சிகைகள் பெருமளவு வெளிவர வாய்ப்பளித்தன. (ஜேர்மனியிலிருந்து, தூண்டில், புதுமை, சிந்தனை, சமர்,தேனீ; நோர்வேயிலிருந்து சக்தி, சுவடுகள்; பிரான்ஸிலிருந்து ஓசை, பள்ளம்; சுவிற்சர்லாந்திலிருந்து மனிதம்; இங்கிலாந்திலிருந்து பனிமலர்; கனடாவிலிருந்து தேடல், காலம், பார்வை, நான்காவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாணம்; அவுஸ்திரேலியாவிலிருந்து மரபு, அக்னிக் குஞ்சு போன்றனவும் கவிதைத் தொகுப்புகளும் வரலாயின: துருவச் சுவடுகள், கவிதைச் சோலை, இரண்டாவது பிறப்பு, காலத்தின் பதிவுகள்.)

மேற்கூறியவற்றில் வெளிவந்த - வெளிவரும் புகலிடக் கவிதைகள் நவீன தமிழ்க்கவிதையில் எத்தகைய செல்வாக்கினைச் செலுத்துகின்றன? இவ்விதத்தில், கவிதைப் பொருள்பற்றி முதலில் கவனிக்க வேண்டியவர்களாகின்றோம்.

புகலிடக் கவிதைகளுள் ஒருவகையானவை, அரசியல் சார்பான கவிதைகளாகும். இன்னொருவிதமாகக் கூறின், இலங்கை அரசியல் நிகழ்வுகள், போக்குகள் பற்றிய விமர்சனக் கவிதைகளாகும். இவ்விதத்தில் யாவருமறிந்த சேரன் தொடக்கம், சிவம், செழியன், சுகன், முதலானோர் வரை பலர் குறிப்பிடத்தக்கோராவார். ஆயினும் இவர்கள் அனைவரையும் விஞ்சியவர்களாக, அ. கந்தசாமி, கி.பி. அரவிந்தன், அருந்ததி ஆகியோர் இன்று அரங்கேறியுள்ளனர். அங்கதம் அரசியல் கவிதைகளுக்கு ஏற்புடையது என்பதனை இவர்கள் சிலரது கவிதைகள் எடுத்துரைக்கின்றன. தமிழ்மாறன் எழுதிய ' ஈழமும் அப்பமும்' குறியீட்டுப் பாங்கானது. சுகன் எழுதிய 'கலிங்கத்துப் பரணி'யும், ஜயகரன் எழுதிய 'தாண்டவ'மும் சிந்தனையைத் தூண்டும் படைப்புகளாகும். ஆயினும், அரசியல் விமர்சனம் கவிதையாகும்போது கவித்துவம் சற்றுக் குன்றிவிடுவதும், பிரச்சாரத் தொனி புகுந்துவிடுவதும், மொழியாட்சி மழுங்கிவிடுவதும் அழுத்தப்படவேண்டியவை. எவ்வாறாயினும், நவீன தமிழ்க் கவிதையுலகிற்கு இப்பொருள் புதிது என்பதில் ஐயமில்லை.

இன்னொரு வகைக் கவிதைகள், தாய்நாடு பற்றிய ஏக்கங்கள், தாய்நாட்டு நிகழ்வுகள் பற்றியன. இவற்றுள் வ.ஐ.ச. ஜெயபாலன், ராகவன், தமயந்தி, ஹம்சத்வனி, இளவாலை விஜேந்திரன், தீரன் முதலானோர் கவிதைகள் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள்ளும் புகலிட நாட்டுச் சூழலை வெளிப்படுத்துவன என்ற விதத்தில் வ.ஐ.ச. ஜெயபாலன்,ராகவன் கவிதைகள் விதந்துரைக்கப்பட வேண்டியனவாகும். ராகவன் கவிதைகளில் வ.ஐ.ச. ஜெயபாலனின் பாதிப்புக் காணப்படுகிறது.

மற்றொருவகைக் கவிதைகள், புகலிட அனுபவங்கள் சார்ந்தவை. இவ்வனுபவங்கள் நிறவேறுபாடு, அந்நியமானநிலை, அகதிமுகாம் வாழ்க்கை, தொழிலக வாழ்க்கை, இயந்திர வாழ்க்கை என்பனவாகப் பல்வகைப்பட்டவை. ஆனந்த பிரசாத், சம்பு, ஜயகரன், தம்பா, ராகவன், அருந்ததி, நாடோடி ஆகியோர் கவிதைகள் இவற்றிற்கு எடுத்துக்காட்டாகவுள்ளன. ஆனந்த பிரசாத் எழுதிய "Academic இன் ஆதங்கம்" என்ற கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு :

நானூறு பாகை நரகக் கொதிநிலையில்
தானூறி வருகின்ற பீங்கானும் கோப்பைகளும்
முக்காலுந் தானுணர்ந்த முனிவர்கள் தாம் வளர்க்கும்
அக்கினியின் கர்ப்பத்தில் அவை சுத்தமாகிவர,
கையாற் தொடமுடியாக் கருமம் பிடிச்ச கொதி
மெய்யாலும் சூடேறி மெலிகின்ற நேரத்தே
குளிர்ப்பதன அறையினில் குதூகலந்தான் - பழவகைகள்
தளிரிலைகள் தின்று தாகம் தணித்திடலாம்.
குக்கரின் பேயறுவை குறிப்பறிந்து சிரித்தாலோ
அற்புதமாய் ஒருணவு அன்பளிப்பாய் வீற்றிருக்கும்.
சற்றே இளைப்பாறி சலாட்டையோர் கைபார்த்து
மீண்டும் உயிர்பெற்று மெசினருகே போனாலோ
கோப்பை நிறைந்து குவிந்து வழிந்திருக்கும்.
சாப்பிட்ட யாவுமே சடுதியில் மறைந்துவிட
தட்டிற் கிடப்பதைத் தட்டிவிடும் போதெல்லாம்
பட்டப் படிப்பின் சான்றிதழ்களாய்த் தெரியும்

இக்கவிதை கவித்துவரீதியில் சற்றுக் குன்றியிருந்தாலும் அனுபவம் புதிது என்பதில் சந்தேகமில்லை.

ஏலவே இலங்கைக் கவிதைகளில் இடம்பெற்றுள்ள சில விடயங்கள் - பெண் விடுதலை, சமத்துவம் என்பன - செழுமை பெறவும், புகலிட அனுபவங்கள் வாய்ப்பளித்துள்ளன. இவ்விதத்தில் மைத்ரேயி, கலிஸ்ரா இராஜநாயகம், கல்யாணி ஆகியோரின் படைப்புகள் குறிப்பிட வேண்டியனவாகும்.

புகலிடக் கவிஞர்களின் பார்வை அகன்று கவிஞர்கள் சர்வதேச விவகாரங்கள், நவீன தொழில்நுட்ப விளைவுகள் பற்றிப் பாடவும் தூண்டியுள்ளன. முன்னதற்கு ராகவன், ரமணன், சித்தி ஆகியோர் படைப்புகள் எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. ஈரானிலுள்ள ஹலப்ஜா நகரில் ஈராக் நடத்திய தாக்குதல்பற்றி (1988) ராகவன் எழுதிய கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு:

இன்றாவது போர் நீங்கி
அமைதி பிறக்கட்டும்.
அல்லாவே
பள்ளி வாசலில்
தொழுகை நடாத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மனிதர்களும்
இறந்தே போயினர்.
ஹலப்ஜா நகரில் -
இரத்தத்தை உறைய வைக்கும்
மரணத்தின் ஓலம்.
விஷக் காற்றின் உட்புகலால்
மனித ஜீவன்கள்
மூச்சுத் திணறி
நெஞ்சடைபட்டு....
எனினும்
அந்த முல்லாக்களும்,
மனித குலத்தின் விரோதிகளும்
அதிகார வெறியோடு
போரினைத் தொடர்வர்.
தேன்சுவை தரும்
பேரீச்சம் பழங்களைச்
சுமந்தபடிக்கே
ஈச்ச மரங்கள்
நிழலை விரிக்கும்.
குமுறும் நெஞ்சை
அடக்கிய படிக்கே
நம்பிக்கையோடு
பாட்டி சொல்வாள்
" உன் அப்பனும்
அம்மையும்
இறந்துவிட்டனர்.
எனினும் நான்
இன்னும் வாழ்வேன்
அந்தப் பிசாசுகளுக்குப்
பாடம் புகட்டத்தான்
நீயுள்ளாயே என்செல்வமே.
மனித நேயத்தின்
உன்னத மறியா
அந்த முல்லாக்களும்

அதிகார வெறியர்களும்
இன்னும் தீர்க்கமாய்ப் போரினைத்
தொடர்வர்,
எதிரில் தோண்டப்படுகின்ற
சவக்குழிகளை அறிந்திடாமலே.

இவ்வாறே, ஈரானிய பயணிகள் விமானத்தைத் 'தவறுதலாக' அமெரிக்கா சுட்டு வீழ்த்தியதுபற்றி (1998) ரமணன் எழுதிய 'ரம்போ'வும், எரித்திரியா பற்றிச் சித்தி எழுதிய 'எரித்திரியா'வும் அமைகின்றன. இத்தகு கவிதைகள் எழுதுவதற்கும் ஒருவிதத்தில் புகலிட வாழ்க்கைச் சூழலே காரணமென்பதில் தவறில்லை. சூழல் மாசடைதல்பற்றிக் காங்கேசன் கோவிந்தகுமார் எழுதிய 'பூமிப் பந்து' என்ற கவிதையும் இத்தொடரில் விதந்துரைக்கப்பட வேண்டியது.

புகலிட நாடுகளின் புறச் சூழல் மேற்கூறிய கவிதைகளில் இடம்பெற்றுள்ளமை அரிது என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். முன்னர் குறிப்பிட்டது போல, வ. ஐ. ச. ஜெயபாலன், ராகவன் ஆகியோர் கவிதைகள் இவ்விடத்தில் ஓரளவு விதிவிலக்கானவை. ஜெயபாலன் எழுதிய 'பைன் மரக்காட்டில் ஓர் இலையுதிர் காலத்து மாலைப்பொழுது' பாராட்டத்தக்கது. பயன் கருதி கவிதை முழுமையாகத் தரப்படுகிறது.

இது கோடை நாட்களில் எனை மகிழ்வித்த
சோங்ஸ்வன் ஏரியா?
காணுமிடமெலாம் ஏன் குளிர்ந்த சோகம்?
பசுமையாய்ச் சிரித்து வருக என்னும்
கலகலப்பான 'பீச்' மரங்கள் இன்று
மஞ்சள் கண்ணீர் மௌனமாய் உதிர்ப்பதேன்?
பாதை மருங்கில் பள்ளிச் சிறுவர் போல்
வெண்பல் துலங்க முறுவலித் திருந்த
'டெய்சிகள்' எல்லாம் எங்கே மறைந்தன?
சொல்க சோங்ஸ்வன் நிகழ்ந்தது என்ன?
சொல்க பீச் மரங்களே நிகழ்ந்தது என்ன?
மஞ்சள் கொண்டு மரஞ்செடி கொடிகளில்
காலம் எழுதிய சேதிதான் என்ன?
'ஒன்றுமில்லை' என்றன 'பைன்'கள்
வைக்கிங்வீரர் கை ஈட்டிகள் போலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறைப்பாய் நின்ற பைன் மரக் காட்டை
வியப்புடன் பார்த்தேன்.
'அதோ பார் அந்த நோர்வேக் கிழவனை!'
பைன் பேசியது :
"அன்று தனது இளமை நாட்களில்
கண்ணுள் விழுந்த நிலக்கரித் துகள்போல்
கிட்லரின் படைகட்குத் தொல்லையாய் வாழ்ந்தவன்
இன்று இந்த இலையுதிர் நாட்களில்
கோடையில் இருந்த அதே குதூகலத்துடன்
தனது பேத்தியின்
பனிச் சறுக்கிகளைப் பழுது பார்க்கின்றான்.
இப்போது சொல்க, ஏதும் நிகழ்ந்ததா?
என்றும் போலவே உயிர்த் துடிப்போடு
இன்றும் உள்ளது வாழ்வு.
வானைத் துளாவி ஒளியைத்தேடும்
பைன் மரக் காட்டை நிமிர்ந்து பார்த்தேன்
புரிந்தது என்று புன்னகை பூத்தேன்.

ஆழ்ந்து நோக்குமொருவர், ஜெயபாலன் கவிதைகள் ஒரே பாணியில் அமைகின்றன என்று எண்ணவும் கூடும். ஜெயபாலன் எழுதிய இலையுதிர் கால நினைவுகள் 1989' பரவலாக அறியப்பட்ட (அண்மையில் "கனவு" இலங்கை இதழிலும் மறு பிரசுரமாகியுள்ளது) படைப்பாகும். ஆதலின், கவிதை இங்கு எடுத்தாளப்படவில்லை. இக்கவிதையின் சிறப்பியல்புகளுள் ஒன்று துருவப் பிரதேசத்தைச் சார்ந்த 'மக்பாய்' பறவை ஒரு குறியீடாக இடம்பெறுவது. குளிர்காலத்திலுங் கூட இடம்பெயராத மக்பாய் பறவை, புலம் பெயர்ந்தான் ஒருவனுக்கு தீக்கோல்போல் சொல்லால் குறிபோடுகிறது.

உனக்கெப்படி புரியும்?
துருவத்துப் பறவைகளே தேடுமுந்தன் தாய்நாட்டை
வழிப்போக்கன்
குண்டி மண்ணைத் தட்டுவது போல்
தட்டிவிட்டு வந்தவன் நீ

புதிய படிமம், புதிய உவமை என்பனவும் அமைகின்றன.

வானில் ஒரு பரதேசிபோல்
குளிர்ந்து போன சூரியனின் பரிதாபம்
மண்ணில்
மஞ்சளாய்த் தலைநரைத்த மரங்களின் கீழ்
பொன்னாய் இறகசைத்து
வண்ணத்துப் பூச்சியாய்ப் பகட்டி
'பேர்ச்' இலைப் பழுத்தல் ஒன்று
புயலின் தரையிறங்கும்
ஒரு புது அகதி வந்தது போல்

இத்தியாதி பண்புகள் புகலிடக் கவிதைகளில் பரவலாக அமைய வேண்டும். அத்துடன், புகலிட வாழ்க்கை அனுபவங்களும் முதன்மை பெற வேண்டும். இவ்வாறு அமையும்போதுதான் புகலிடக் கவிதைகள் நவீன தமிழ்க் கவிதைகளுக்கு வழங்கும் புதிய பரிமாணம் காத்திரமானதாக அமையும்!

- தமிழ் சாகித்திய விழா, 1992.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21

தமிழிலக்கியப் பரப்பில் ஈழத்து நவீன கவிதை

பேராசிரியர் வி.செல்வநாயகம் "தமிழ் இலக்கிய வரலாறு" எழுதிய காலப்பகுதியிலே "தமிழ் இலக்கிய வரலாறு" என்பது தமிழ்நாட்டு இலக்கிய வரலாறாகவே அமைந்திருந்தது. இப்போது நிலைமை வேறு. பல்வேறு நிலைகளிலும் ஈழத்து இலக்கிய வரலாறு இன்றித் தமிழிலக்கிய வரலாறு பூர்த்தி அடைய முடியாது என்பது உணரப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில் தமிழிலக்கிய பரப்பில் ஈழத்து நவீன கவிதை பெற்றுள்ள இடம் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது அவசியமானதென்று கருதுகின்றேன்.

தமிழிலே நவீன கவிதை 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே பாரதியாருடன் தோற்றம் பெற்றது என்பது இலக்கிய ஆர்வலர் பலரும் அறிந்தவிடயமே. தமிழ்க்கவிதையை பிரக்ஞைபூர்வமாக, சமூகத்துடனும் அவ்வழி அரசியலுடனும் இணைத்தமை பாரதியாரின் முக்கிய சாதனையாகிறது. "இரண்டொரு வருஷத்து நூற்பழக்கமுள்ள பொதுஜனங்களை" அவன் மனங்கொண்டமையினால் கவிதையின் (மேற்கூறியவாறான) உள்ளடக்கம் மட்டுமன்றி வடிவம், வெளிப்பாட்டு முறை என்பனவும் அவன் கவனத்திற்குள்ளாகின. பாரதிக்குப் பின்னர் அவன் நாசனான பாரதிதாசனிடம் தீவிரமான தமிழ்த்தேசியம், சமூகச்சீர்திருத்தம், பகுத்தறிவுச்சிந்தனை முதலியன வெளிப்பட்டன. இதே காலப்பகுதியில் 30களில் தமிழ்நாட்டில் புதுக்கவிதை முயற்சிகளில் மணிக்கொடிக் குழுவினரான ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா. முதலானோர் ஈடுபட்டனர்.

ஆயினும் பின்னர் நவீன கவிதை பாரதிதாசன் பரம்பரையினரிடம் ஓசை ஒலிக்கோலமாயும் அலங்காரப்பந்தலாயும் புதுக்கவிதைபாளரிடம் தனிமனித உணர்வுகளுக்கு தன்மையளிப்பதாயும் தளர்ச்சியடையத் தொடங்கியது. இன்னொரு விதமாகக் கூறின், தமிழ்க் கவிதை சமகால வாழ்வில் இருந்து அன்னியப்பட்டு நின்றது.

நவீன தமிழ்க் கவிதையின் மேற்கூறிய ஆரோக்கியமற்ற நிலை முனைப்பற்ற சூழலில் 50களளவில் ஈழத்தில் இருந்து புதுக்குரல்கள் கேட்டன. நவீன தமிழ்க் கவிதையின் தளர்ச்சியுற்ற நிலையினை ஈழத்துக் கவிஞரான மஹாகவி முதலில் உணர்ந்துகொண்டார்.

> நவீன வடிவங்களான சிறுகதை, நாவல் ஆகியன நவீன உரிப்பொருளைக் கையாண்ட வேளை கவிதை மட்டும் பழைய பொருள் மரபைப் பற்றியே சுழன்றமையால் அருகிவரும் கலையெனக் கருதுமாறாயிற்று. நிகழ்காலச் செய்திகளையும் பிரச்சினைகளையும் கவிதையின் ஆண்டு அதனை இன்றைய யுகத்திற்கு இழுத்துவரல் அவசியமாகும்.

என்று குறிப்பிட்ட மஹாகவி அவ்வாறே செயற்பட்டார். கவிதையில் உடன்பிறப்பான பண்பென்று கருதப்பட்ட பாரதி, பாரதிதாசன் ஆகியோரிடமும் காணப்பட்ட மனோரதியப் பாங்கு கூட மஹாகவி ஊடாக யதார்த்தத் தன்மையாக மாற்றம் கண்டது. அவர் நவீன கவிதையை இன்றைய யுகத்திற்கு இழுத்து வந்த போது அது தவிர்க்க இயலாததாயிற்று. கூடவே , நவீன கவிதையில் இதுவரை இடம்பெறாத பண்புகளாக, செவிப்புலன் கட்புலனானமை , யாப்பு வழி ஓசை பேச்சுஓசையானமை, கவிதை வடிவம் சிறுகதை, நாவல் வடிவப் பண்புகள் பெற்றமை என்பனவும் ஈழத்துக் கவிதை ஊடாக தமிழ் கவிதை உலகில் இடம்பெற்றன. இத்தியாதி பண்புகளை வளர்த்தெடுத்ததில் மஹாகவியுடன் , நீலாவணன், முருகையன் ஆகியோருக்கும் முக்கிய பங்குள்ளது. இதே காலப்பகுதியில் 50, 60 களில் தமிழ்நாட்டு நவீன கவிதை இத்தியாதி பண்புகளைப் பெறவில்லை என்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

நவீன தமிழ்க்கவிதை 60களின் பிற்பகுதியிலும் மாற்றங்கள் சிலவற்றைக் கண்டது. இத்தகு மாற்றங்களும் தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் வெவ்வேறு விதங்களில் இடம்பெற்றன.

தமிழில் புதுக்கவிதை பிரக்ஞைபூர்வமாகவும் ஆழமாகவும் வேரூன்றியது 60களில் ஆகும். தமிழ்நாட்டில் எழுத்துக் குழுவினருடாக அது சாத்தியமாயிற்று. ஆயினும் எழுத்துக்குழுவினரின் புதுக்கவிதையும் தனிமனித உணர்ச்சிகளுக்கே முதன்மையளித்தது. அத்துடன் அந்நியப்பட்டுள்ள படிமங்கள், குறியீடுகளையும் பெற்றிருந்தது. மாறாக அதே காலகட்டத்து ஈழத்துப் புதுக்கவிதையோ சமூக நோக்கத்திற்கு முதன்மையளித்தது. தமிழ்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழலுக்கேற்ற படிமங்கள், குறியீடுகளைக் கொண்டிருந்தது. தா.இராமலிங்கத்தின் கவிதைகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகின்றன. அதேவேளையில் எழுத்துக் குழுவினருள் சிறப்பிடம் பெறுகின்ற ஈழத்தவரான நுஃமானின் கவிதைகளும், தனிமனித உணர்வுகளுக்கு முக்கியமளித்திருப்பினும் வெளிப்பாட்டு ரீதியில் விதந்துரைக்கப்பட வேண்டியவை; தமிழ்க் கவிதை வரலாற்றில் புறக்கணிக்கப்பட முடியாதவை. இவ்விருவருடன் மு. பொன்னம்பலமும் இணைத்து நோக்கப்பட வேண்டியவராவர்.

மேலும், அறுபதுகளில் ஈழத்துப் புதுக்கவிதையில் தமிழ்நாட்டில் ஏற்படாத வேறுசில மாற்றங்களும், முகிழ்க்கத் தொடங்கின. கவிஞர் நுஃமான் ஊடாக அது சாத்தியமாயிற்று. முற்போக்குக் கவிஞரான நுஃமானூடாக பிரச்சாரப்பாங்கற்ற கலையழகுடனான அரசியல் கவிதைகள் தமிழ்க் கவிதையுலகினை வந்தடைந்தன. அவை, நாட்டார் பாடல் தன்மை, திரைப்படக்காட்சி முறைமை நாடகப்பாங்கு என்பவற்றைப் பெற்றிருந்தன. தவிர, நுஃமான் கவிதையுலகில் எழுபதுகளில் ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க மற்றொரு மாற்றம், கவிதை வடிவத்துடன் தொடர்புடையது. ஆரம்பத்தில் மஹாகவி முதலானோரின் "மரபு" சார்ந்த வடிவத்தடத்தில் சென்ற அவர், பின்னர் புதியதொரு வடிவத்தில் எழுத முற்பட்டார். (எடு: ஹோசிமின் நினைவாக) அதுவே பின்னர் சண்முகம் சிவலிங்கம், வ.ஐ.ச. ஜெயபாலன், சிவசேகரம், சேரன் முதலானோரினால் அவரவர் ஆளுமைக்கேற்ப வலிமையும் வனப்பும் பெற்றுக் கொள்கின்றது.

எண்பதுகளில் ஈழத்துக் கவிதை வளர்ச்சி எய்திய மூன்று புதிய மாற்றங்கள் தமிழ்க்கவிதையுலகிற்கு முற்றிலும் புதியனவையாகின்றன. இவற்றுளொன்று, இனஒடுக்குமுறைக்கெதிரான அரசியல் சார்ந்த எதிர்ப்புக் கவிதைகளினதும் விடுதலைப் போராட்டக் கவிதைகளினதும் தோற்றம். இத்தகைய கவிதைகள் இரு சிறப்புக்களைக் கொண்டுள்ளன. (அ) அவை, வெவ்வேறு ஊடகங்களூடாக (எ-டு: மேடைகளிலும், ஒலிப்பதிவு நாடாக்களிலும் மெல்லிசைப் பாடல்களாகவும், கவிதா நிகழ்ச்சிகளாகவும் இடம் பெற்றமை) பொது மக்களைச் சென்றடைந்தமை.(இரண்டொரு வருஷத்து நூற்பழக்கமுள்ள பொது ஜனங்களைச் சென்றடைய வேண்டுமென்று பாரதி சென்ற யுகத்தின் ஆரம்பத்திலே கண்ட "கனவு" யுகமுடிவில் ஈழத்துக் கவிதையூடாக ஓரளவு மெய்ப்பட்டதாயிற்று).

(ஆ) (குறிப்பிட்ட உள்ளடக்கம் காரணமாக) மூன்றாம் உலக நாடுகளின் கவிதை வரிசையில் இடம் பிடித்தமை.

மற்றொன்று, பெண்நிலைவாத நோக்கிலான கவிதைகளின் பிறப்பு, அதாவது, பெண்நிலை நின்று தமிழ்ப் பெண் கவிஞர்கள் தம் உணர்வுகளை தமிழிலே முதன் முதலாக வெளிப்படுத்தியமை. தமிழ்க் கவிதையுலகில் முதன்முதலாக இடம்பெறுவது ஈழத்துக் கவிதையூடாகவே தவிர இத்தகைய கவிதைகளூடாக ஈழத்துக் கவிதை உலகப் பெண் கவிஞர்களின் கவிதைப்போக்குடன் சங்கமிக்கின்றதென்பதும் கவனிக்கத்தக்கது.

பிறிதொன்று, புகலிடத் தமிழ்க் கவிதைகளின் வரவு, இங்கிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பா, கனடா முதலான நாடுகளில் வாழ்கின்ற தமிழ்க் கவிஞர்களின் படைப்புகள் தரும் அனுபவம் தமிழ் வாசகர்களுக்கு முற்றிலும் புதியதே. அத்துடன் அவர்களின் புகலிட அனுபவ வெளிப்பாடுகள் பிறநாடுகள் சார்ந்த புகலிட மக்களின் குரலாய் அமைந்துள்ளன. அவ்விடத்தில் ஈழத்துக் கவிஞரின் புகலிடக் கவிதைகள் மூன்றாம் உலக நாடுகளின் கவிதை வரிசையில் இடம் பிடித்துள்ளன. எடுத்துக்காட்டாக புகலிடக் கவிஞரான நிருபாவின் கவிதையொன்றின் ஒரு பகுதி பின்வருமாறு :

அம்மா
நாங்கள் ஏன் அகதிகளானோம்
என் தாய் நாடு எங்கே?
என் தாய் மொழி எது?
நாங்கள் ஏன்
கறுப்பர்களாயிருக்கிறோம்?
அவர்களால் ஏன்
ஒதுக்கப்படுகிறோம்?
துருக்கித் தோழி ஏன் எரிக்கப்பட்டாள்?

தவிர, இன்னொரு ஈழத்துக் கவிஞரான சோலைக்கிளி நவீன கவிதை வளர்ச்சிப் போக்கிலே ஏற்படுத்திய மாற்றமும் விதந்துரைக்கற்பாலது. தமிழ்க் கவிதையுலகு இதுவரை கண்டு கொள்ளாதது. சமகாலப் பிரச்சினைகளை சமூக மாற்றங்களை அரசியல் கண்ணோட்டங்களூடாகப் பார்ப்பதும், முற்றிலும் புதிய முறையில் அதனை வெளிப்படுத்துவதுமே அதுவாகும். எடுத்துக் காட்டாக "படைபோன பிறகு கண்ட என் அலரிமரமாமி" என்ற கவிதையின் ஒருபகுதி பின்வருமாறு :

மாமி
என்னைத் தெரிகிறதா உங்களுக்கு?
நான்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் மங்கி நிலா விதைக்க இருள்
வானம் உழும் நேரம்
ஊர் இருந்து பறந்து வந்து
இந்தப் பெருங் கொப்புள் குந்தியிருக்க
தினம் வரும் குருவி
நீங்கள் என்னைக் கக்கத்தில் இடுக்கி
இருப்பது போல இருக்கும்.
உங்கள் கொப்புக்குள் இருந்தால் நான்
பார்ப்போருக்கு
மாமி, ஆமி வந்து உங்களைத் தமது
படைவளவுள் சிறைப்படுத்த
அறுந்தது நமது தொடர்பு
ஆரம்பத்தில்
காற்றில் இரண்டொரு கடிதம்
முக்கேட்டு
வேரில்
சப்பாத்துக் காலால் உதைக்கிறான் என்று
சொல்லி
அழுததெல்லாம்
பின் காற்றும் இறந்தது
நம் காற்றும் எழுதி வாசிக்கும் எழுத்துக்களும்
மறந்தன
மாமி என்னைத் தெரிகிறதா உங்களுக்கு?

சோலைக்கிளியின் மேற்கூறிய கவிதைப் பண்பு குறுகிய காலத்துள் வெவ்வேறு பரிணாமங்களைப் பெற்று வந்துள்ளது நினைவு-கூரத்தக்கது. அவற்றை முழுமையாகத் தர ஏற்ற இடம் இதுவன்று.

ஆக,மஹாகவி தொடக்கம் சோலைக்கிளி வரையிலான ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி, தமிழ் இலக்கியப்பரப்பில் பெற்றுள்ள இடம் கவனிப்பிற்குரியது; விரிவான ஆய்வுக்குரியது என்பது இதுவரை கோடிகாட்டியதிலிருந்து புலப்படும் என்று கருதுகின்றேன். தமிழ்நாட்டு விமர்சனரொருவரது கூற்றுடன் இக்கட்டுரையை முடிப்பது பொருத்தமானது.

"இதுவரை தமிழ்நாட்டின் சமூகச் சார்புள்ள புதுக்கவிதைகள் தரமுள்ளவையாக உருப்பெறவில்லை. இனிவரும் தமிழ்க் கவிதை ஈழத்துக் கவிதைகளின் மேற்கண்ட இயல்புகளைச் சேர்த்துக் கொண்டால் மிக நல்லது".

- பேழை, 2002.

22

ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி
இன்னும் சில பக்கங்கள்

1

ஈழத்து நவீன கவிதை வளர்ச்சிபற்றி எடுத்துரைப்போர் நாவல், சிறுகதைத் துறைகளை விட கவிதைத்துறை சிறப்புற்றிருப்பதாகக் கூறுவர்; இது ஏற்றுக்கொள்ளத் தக்கதுதான். எனினும், நவீன கவிதை பற்றி இத்தகைய அவதானிப்பு குறிப்பிட்ட கவிதைத் தொகுப்புகள் சிலவற்றை வைத்தே கூறப்பட்டு வருகின்றது. பரந்துபட்ட நிலையில் முழுத் தொகுப்புகளும் கவனத்துக்குட்படுவதில்லை. இன்னொரு-விதமாகக் கூறின், ஈழத்தின் பல பிரதேசங்களிலிருந்தும் வெளி வருகின்ற அனைத்துத் தொகுப்புகளும் அவர்களது பார்வைக்குட் படுவதில்லை. எண்பதுகளின் பிற்பகுதி தொடக்கம் தொகுப்புகளின் வரவு அதிகரித்துக் காணப்படும் அதேவேளையில், அவற்றை எளிதாகப் பெறமுடியாத நிலைமை காணப்படுவதையும் மறுப்பதற்-கில்லை. இத்தகைய தொகுப்புகள் பலவற்றையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியின் ஆரோக்கியமற்ற பக்கங்கள் சில வெளிப்படுகின்றன!

மேற்கூறிய விதத்தில் நோக்கும் போது, முதலில் குறிப்பிடத்-தக்கதாயுள்ளமை, "மேத்தா, வைரமுத்து பாணியிலான" கவிதைப் போக்கு தொடர்ந்தும் செல்வாக்குச் செலுத்துவது. இப்போக்கு முன்னரைவிட அதிகரித்துள்ளது என்றுகூடக் கூறலாம். பின்வரும் தொகுப்புகள் இவ்வேளை நினைவுக்கு வருகின்றன: புயல் வாசித்த புல்லாங்குழல் (1991), கிழக்கில் வெளுக்காத வழக்கு (1991), உன்னிடம் விரல்கள் கேட்கிறேன் (2000), என் உயிரும் உன் முகவரியும் (2000). இவ்வாறு இன்னும் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்துக்குரிய மற்றொரு விடயம், "உற்பத்தி" செய்யப்படும் கவிதைகளின் வரவு பெருகியுள்ளமையாகும். இதனைத் தமிழ் நாட்டு விமர்சகரொருவரின் கூற்றினூடாக எடுத்துரைப்பது வசதியானது:

"...ஆனால், ஈழத்தில் அவதிப்படுவோரும் சரி, புலம்பெயர்ந்து வாழ்வோரும் சரி, அவர்கள் வாழ்க்கை எவ்வளவு நீண்டகாலமாகக் கடும் சோதனைகளுக்கும், துயருக்கும் உயிர் இழப்புகளுக்கும் இரையான வாழ்க்கை என்று நினைத்துப் பார்க்கும் போது, அந்த அனுபவங்கள் உண்மை எனும் முகத்தில் அறையும் போது, நீண்ட நீண்ட வாக்கியங்கள் எவ்வித உயிர்த்துடிப்பும் அற்று அதைப்புத் தராது, மனச்சலனம் தராது, எவ்வளவு யாந்திரிகத்தனமாக எழுதப்படுகின்றன என்று பார்க்க வியப்பாகவும் வேதனையாகவும் இருக்கிறது. ஒரு ஹாஸ்பிட்டலில், இன்ஜெக்ஷன் ஸிரிஞ்சுகளைத் தள்ளுவண்டியில் எடுத்துச் செல்லும் காட்சியை,

தட்டில் நிறைய வெண்டைக்காய்கள்
நிரப்பினாற்போல ஊசித்தட்டை
ஹாஸ்பிட்டல் ஆயா வைத்துச் செல்கையில்

என்று மிகப் புகழ்வாய்ந்த தமிழ் நாட்டுக் கவிஞர் எழுதுகிறார். இன்ஜெக்ஷன் ஸிரிஞ்சுகள் வெண்டைக்காயாகத் தோற்றம் அளித்த காரணம் என்ன? மனநிலை என்ன? சூழல் என்ன? என்பது தெரியவில்லை. எதோ உவமை புகுத்த வேண்டும். அதுதான் கவிஞனுக்கு அழகு. அதுதான் இதைக் கவிதையாக்கும் நினைப்பு. இதில் அனுபவ உண்மை ஏதும் இல்லை. இது சுகவாசத்தின் பிறப்பு. ஆனால் யாழ்ப்பாண அனுபவங்களை நேரடியாகத் தானே அனுபவித்த -அக்காயங்களைச் சுமந்து நிற்கும் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார் :

ஒளிக் குருதி வீச்சோடு
எழுகின்ற சூரியனே பார்
இரத்தப் பிடிப்பின்றி சோகையுற்றோம்
உன் குருதியை எமக்குள் பாய்ச்சு
என்றும்,
துயர்க் கொடி,
உணர்வின் மென் தண்டாகப் போனேன் நான்
நெகிழ்ந்து நெகிழ்ந்து
உருகும் வெண்பனியின் இதயம் படைத்தேனா
என்றும் எழுதுவது திடுக்கிட வைக்கிறது.....

"போலச் செய்யும்" (தன்னைக் கவர்ந்ததொரு கவிதையை முன்மாதிரியாகக் கொண்டு எழுதுதல்) கவிதைகளின் வரவும் பெருகியுள்ளமை ஆழ்ந்து நோக்கும் போது தெரிய வருகின்றது. (முற்கூறிய "உற்பத்தி செய்தல்" என்பதும் போலச் செய்தல் என்பதும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவையே.) மரபு வடிவக் கவிதைகள் எழுதிப் பழக்கமுள்ள இளங்கவிஞர் ஒருவருக்கு "சரிநிகர்" கவிதைகளை - வாசிக்கக் கொடுத்ததும், அதன் பின் நவீன வடிவக் கவிதைகள் இரண்டை அவர் எழுதி வந்ததும் - அவை சிற்பபுடையனவாக இருந்ததைப் பாராட்டியதும், "சரிநிகர்" கவிதைகள் சிலவற்றைப் "பார்த்து" சில சில பகுதிகளை இணைத்து அவற்றைத் தானெழுதியதாக அவர் கூறியதும் எனக்கு ஏற்பட்டதொரு அனுபவமாகும். இதே சரிநிகரில் வவுனியாவைச் சேர்ந்த வாசகரொருவர் ஒருதடவை, சரிநிகர் கவிதைகளை வெட்டி - சேர்த்து தானெழுதிய கவிதையொன்று பற்றி (உதாரணம் தந்து) வாசகர் கடிதத்தில் எழுதியிருந்ததும் இலக்கிய ஆர்வலருக்கு நினைவிருக்கலாம். இவ்வாறு இலைமறைகாயாகப் பலருள்ளனரென்பதே கசப்பான உண்மையாகும்!

மேலும் இளங்கவிஞர் பலரது கவிதைத் தொகுப்புகள் பிரதேச மட்டங்களில் பரவலாக வெளிவருவதும், அவற்றுள் பெரும்பாலானவற்றின் தரம் கேள்விக்குறியாக இருப்பதும், பாராட்டு விமர்சனம் காரணமாகவோ கவிதைகளைத் தொகுப்பு உருவில் கண்ட (உளவியல் சார்ந்த) பூரிப்புக் காரணமாகவோ அக்கவிஞர்கள் தம்மை "முதிர்ந்த கவிஞர்களாகக்" கருதிக் கொள்வதும் கவனத்திற்குரிய இன்னொரு விடயமாகின்றது. எடுத்துக்காட்டாக, பின்வரும் தொகுப்புகளைக் குறிப்பிடலாம்.

விருட்சப் பதியங்கள் (பங்குனி 2000), தேட்டம் (கார்த்திகை 2000), ஏணி (2004), இளையநிலா (2003), நெஞ்சு கனக்கும் நினைவுகள் (கார்த்திகை 2004), அருவிகளின் சங்கமம் (2003), இளந்தளிர்கள் (2004), (இவற்றுள் பலவும் பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ளன).

2

இனி, மூத்த அல்லது (கவனத்துக்குரிய) இளங் கவிஞர்கள் சிலரது கவிதைப் போக்குப் பற்றியும் முக்கியமான சிலவற்றைக் கூறவேண்டும்.

தொடர்ச்சியாக எழுதிவருகின்ற மூத்த கவிஞர்களது தொகுப்புகளை அவதானிக்கும் போது அவர்களிற் பலரது கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாட்டுமுறை ஒரே பாணியிலமைந்துள்ளமை புலனாகின்றது. (எ-டு : வ.ஐ.ச. ஜெயபாலன், சு.வில்வரத்தினம்). வேறு சிலரது கவிதைகள் புலமைத் தளத்திற்குச் செல்வதும் (சேரன்), இருண்மை நிலைக்குச் செல்வதும் (சோலைக்கிளி) கவனத்திற்குரிய விடயங்களே. அபூர்வமாக, சிலர் மட்டுமே வெவ்வேறு உத்திகளுடன் எழுதுகின்றனர் (எ-டு : சிவசேகரம்).

சங்க இலக்கிம் பற்றிய ஆய்வுகள் செய்தோர் சிலர், அவை வாய்மொழி இலக்கியமரபை அடியொற்றி எழுந்தவை என்பர். அதற்கு ஆதாரமாகச் சில, பல சொற்கள், சொற்றொடர்கள் மீண்டும் மீண்டும் சங்கப் பாடல்களில் வருவதை ஆதாரமாகக் குறிப்பிடுவர். அன்றைய சூழலில் அது தவிர்க்கவியலானதே இன்றைய நவீன கவிஞர்கள், குறிப்பாக இளங்கவிஞர்கள் பலரிடமும் அத்தகைய தன்மை கணிசமாகக் காணப்படுகின்றது. (எ-டு : "இரைச்சலைமேவி இரைச்சலில் கலந்தேன்", "இரைச்சலிடும்", "இரைச்சல் இல்லை" முதலிய தொடர்கள் கவனத்திற்குரிய இளங்கவிஞரொருவரின் தொகுப்பில் உள்ளவை). ஆரம்பநிலையில், இப்பண்பைத் தவிர்க்க இயலாதாயிடினும், கவிதைக்கு உயிரான "சொல்", "சொற்பிரயோகம்" என்பவற்றில் இளங்கவிஞருக்குள்ள அக்கறை மிகக் குன்றியே உள்ளமை இதிலிருந்து தெரியவருகின்றது!

இதுவரை கூறியவை அனைத்தையும் விட இன்னொரு முக்கிய விடயம், தலைமுறை வேறுபாடின்றி எமது கவிஞர்கள் பலரும் தொடர்ந்து குறிப்பிட்ட ஓரிரு விடயங்கள் பற்றியே கவிதை எழுதிவருவது. இன்றைய சூழலை எடுத்துக் கொண்டால், இன்றைய அரசியல் நெருக்கடி மட்டுமே எமது முக்கிய பிரச்சினை அன்று; சூழலியல், உலகமயமாக்கம், வெகுசனத்தொடர்பு ஊடகங்களால் ஏற்படும் பாதிப்பு, கல்வித்துறை மாற்றங்கள் எனப்பலவும் எமது கவனத்திற்குட்பட வேண்டியவையே. பதிலாக, பெரும்பாலானோர் அரசியல் நெருக்கடியை மட்டுமே கவிதைப் பொருளாகக் கருதிச் செயற்படுகின்றனர். (இக்குறை சிறுகதை, நாவல் எழுத்தாளர்களுக்கும் பொருந்துவதே). இதுபற்றி எம்மிற் பலரும் கவனத்திற் கொள்ளாமை ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.

அத்துடன், மேற்கூறிய பலவீனங்களிலிருந்து மீள்வதெவ்வாறு என்பது பற்றிச் சிந்திப்பதும், இளங்கவிஞர்கள் தமது கவிதை-யாக்கத்தில் அதிக அக்கறை காட்டுவதும், பாராட்டுகளின் போது விழிப்புணர்வுடன் செயற்படுவதும் அவசிய தேவைகளாகின்றன!

'தெரிதல்', தை மாசி 2005.

23

ஈழத்து நவீன கவிதையின் வளம் நோக்கி..

பாரதியார் நவீன கவிதையின் பிதாமகனென்பதில் கருத்து வேறுபாடில்லை. ஆயினும், நவீன கவிதை தொடர்பாக அவர் அறிமுகப்படுத்திய அனைத்து விடயங்களையும் அவருக்குப் பின்வந்த கவிஞர்கள் பின்பற்றியுள்ளனர் என்பதற்கில்லை. அத்தகைய விடயங்களுளொன்று, நாட்டார் பாடல் மரபிற்கு தமது நவீன கவிதையில் பாரதியார் கொடுத்துள்ள முக்கியத்துவமாகும். இவ்வடிப்படையில் பொதுவாக ஈழத்துக் கவிஞர்களும் குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர்களும் நாட்டார் பாடல் மரபினை எந்தளவிற்கு கையாண்டுள்ளனர் என்று சிந்தித்துப் பார்ப்பது அவசியமானது.

ஒரு கவிஞன் நாட்டார் பாடலைப் பல்வேறு விதங்களில் பயன்படுத்த முடியும். இவற்றுளொன்று நாட்டார் பாடல் உள்ளடக்கத்தை நவீன நோக்கில் பயன்படுத்துவதாகும். கிழக்-கிலங்கையில் பிரசித்தி பெற்றுள்ள "ஆக்காண்டி" பாடலை ஈழத்துக் கவிஞர்கள் சிலர் நவீன நோக்கில் அணுகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விதத்தில் ஈழத்துக் கவிஞர் மூவரது கவிதைகள் கவனத்திற்குரியன. சண்முகம் சிவலிங்கம், மு.பொன்னம்பலம், வ.அ.இராசரத்தினம் ஆகியோரே அவர்களாவர்.

மேற்கூறியவருள் சண்முகம் சிவலிங்கம் "ஆக்காண்டி"யின் குரலில், காலங்காலமாக சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்தும் மீட்சிகாணாத உலகத்தொழிலாளரின் அழுகையை இனங்காண்கின்றார்.

ஆக்காண்டி ஆக்காண்டி
எங்கெங்கு முட்டை வைத்தாய்
கல்லைக் குடைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலோரம் முட்டை வைத்தேன்.
.....
வண்டிகள் ஓட்டி
மனிதர்க் குழைத்து வந்தேன்.
கையால் பிடித்துக்
கரைவலையை நானிழுத்தேன்
கொல்லன் உலையைக்
கொளுத்தி இரும்படித்தேன்

விண்வெளியில் செல்வதற்குப்
பாதைகள் சமைக்கும்
பணியும் பல புரிந்தேன்
ஆனாலும் குஞ்சுக்கு
அரைவயிறு போதவில்லை
காதல் உருகக்
கதறி அழுது நின்றேன்
.....

என்றவாறு அமைகின்ற உள்ளத்தை உருகவைக்கும் நெடுங்கவிதை அது.

மற்றொரு கவிஞரான மு.பொன்னம்பலம் ஆக்காண்டி பாடலை ஈழத்து அரசியலை அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளை விமர்சிப்பதற்கும் ஆன்மீகக் கருத்துக்கள் சிலவற்றை வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்தியுள்ளார். உரையாடல் பாணியிலமைந்த சுவையான அக்கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு:

.....
பூர்வ கதை சொல்லவில்லை
புளித்த கதை அது, அதனால்
இடையில் நான் முட்டையிட்டு
சீரழிந்த கதை சொல்வேன்.

சரி எனக்கு விளங்குகிற மாதிரி
சொல்லு தாயே.

முன்னர் வயது முதிரா பருவத்தில்
ராணி ஒருத்திக்கு சேவகங்கள் செய்து வந்தேன்.
ஒரு அப்படியா
சொல்லு தாயே.

சேவகங்கள் செய்கையிலோர்
"சேர்" என்று பேர் பெற்ற
சீமானை நான் கூடி
தேசிய முட்டையிட்டேன்.
தேசிய முட்டையிட்டேன்.
பிறகு ?
தேசிய முட்டைமெல்ல
தேய்வுற்று தேய்வுற்று
தேய் கட்டையாய் போகையிலே
அன்னார் வழிவந்த ஐயாவை நான் கூடி
ஐம்பதுக் கைம்பதென்னும்
அழகான முட்டையிட்டேன்
முட்டையிட்ட வேகத்தில்
மூலம் எரிந்ததனால்
கொக்கரித்து கொக்கரித்து
கோமான் குறண்டிவிட்டார்.
அடபாவமே, பிறகு?
இட்ட முட்டை அடைகாக்க
இயலாமல் நான் அழிந்தேன்
.....

"ஆக்காண்டி" பாடலை புதிய நோக்கில் அணுகிய மற்றொரு 'கவிஞர்'.புனைகதை ஆசிரியராக நன்கறியப்பட்ட வ.அ.இராசரத்தினம் அன்னார் "ஆக்காண்டி"யின் அழுகையில் இன்றைய அகதித் தமிழரின் அழுகுரலைக் கேட்கின்றார். நீண்ட அக்கவிதை, பின்வருமாறு முடிகின்றது :

நானழுத கண்ணீரும் - இந்த
நாடழுத கண்ணீரும்
வாய்க்கால் நிறைந்து
வழிப்போக்கர் கால்கழுவி
இஞ்சிக்குப் பாய்ந்து
இலாமிச்சை வேரோடி
வயலுக்குப் பாய்ந்து
வயல்வெள்ளக் காடாகி
நாடே அழுததையா
நாளை நமதாமோ?"

மேற்கூறியவாறு நாட்டார் பாடல்களின் உள்ளடக்கத்தைப் பயன்படுத்துவது தவிர நாட்டார் பாடல் வடிங்களையும் நவீன கவிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்த முடியும். நிகழ்கால அரசியல் நெருக்கடியை எடுத்-துரைக்க நாட்டார் பாடல் வடிவத்தை அழகாகக் கையாண்டுள்ளார் சாருமதி. "இருவர் பாடல்" என்ற அவரது கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு:

பெண் : உச்சால வெய்யில் காய
ஊரை வீட்டுப் போற மச்சான்
வட்டைக்குள்ள போறியோகா
ஆமிக்காறன் வாறவழி

ஆண் : ஆமிக்காறன் வாறவழி
அப்பனும் நான் போறவழி
வட்டைக்குள்ள போகாட்டா
வகுத்துச் சோத்துக் கென்னவழி

பெண் : வகுத்துச் சோத்தப் பாத்தியெண்டா
வம்புல நீ மாட்டிடுவா
ஆமிக்காறன் சுட்டுப்போட்டா
ஆரு தருவா உசிருனக்கு?

இவ்வாறே, பூசாரியின் உடுக்கடி பாடல் வடிவத்தைப் பயன்படுத்தி இன்றைய கொடுமை நிகழ்வுகளை உணர்ச்சி பூர்வமாக சித்திரிக்-கின்றார் இன்னொரு கவிஞர்.

பூசாரி கூவுகிறான் :
"தின்பண்டங் கொண்டுவா
திரவவகை கொண்டுவா
என்னுடைய சாமி
இன்னமும்நீ நிற்பதேன்?
சொன்னதெல்லாம் கொண்டுவா"
.....
கோழி அறுத்தோம் ஆடு பலி தந்தோம்
காசு பணம் தந்தோம்! கட்டிடவும் துணிதந்தோம்.
.....

வெறியோடிச் சிவப்பான விழிகள் கனல்கக்க உடுக்கடித்துப் பூசாரி உரு ஆடிக்கூவுகின்றான் :

கோழிகளும் ஆடுகளும் கொண்டு பசிதீருவதோ
சாராயங்கள்ளருந்தி தாகம் தணிருவதோ
பத்தாயிரம் உயிர்கள் பலிகேட்டும் தெய்வமிது
ரத்தத்தைக் கொண்டுவா

நரபலியைக் கொண்டுவா
கிழடுபட்ட தசைவேண்டாம்
இளைய பரம்பரையின் இனியதசை கொண்டுவா
பட்டம் பதவி பல அதிகாரம் பண்முடையோர்
பெற்றெடுத்த பிள்ளைகளின்
ஊளைத்தசை வேண்டாம்.
.....

மேலே நவீன உள்ளடக்கத்திற்கு உடுக்கடிப் பாடல் வடிவம் வலுவும், வளமும் ஏற்படுத்தி உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

சமகால சமூக - பண்பாடு மாற்றங்களை எடுத்துக்கூற நாட்டார் பாடல் வடிவத்தை அதிகளவு பயன்படுத்துபவராக விளங்குகின்ற கவிஞருள் குறிப்பிடத்தக்க ஒருவர் செ.குணரெத்தினம் (பெரும்பாலும் கையெழுத்துப் பிரதியாக உள்ள அன்னாரது அத்தகைய பாடல்-தொகுப்பு நூலுருப் பெறுவது அவசியம்) இவ்வாறே மலையகத் தொழிலாளரது வாழ்வியலை வெளிப்படுத்த இந்நாட்டார் பாடல் வடிவங்களை இரு கவிஞர்கள் சிறப்புறப் பயன்படுத்தி வந்துள்ளனர். இவர்களுள் ஒருவர் கண்டி எம்.இ. ராமச்சந்திரன். மற்றொருவர் அல்.அஸுமத்.

மேற்கூறியவாறன்றி நாட்டார் பாடல் அமைப்பினை - அமைப்புக் கூறுகளை நவீன கவிஞர் பயன்படுத்துவதும் இயலக்-கூடியதே. குறிப்பாக, நாட்டார் பாடல்களில் குறிப்பிட்ட அடிகள் திரும்பத் திரும்ப வருகின்ற முறைமை கவனத்திற்குரியதொன்று. கவிஞர் நுஃமான் கவிதைகள் சிலவற்றில் இத்தகைய பண்பு வெளிப்பட்டுள்ளது. இத்தகைய முறை கருத்து அழுத்தத்தை ஏற்படுத்த உதவுகின்றது எனலாம்.

நாட்டார் பாடலுக்குரிய பண்புகளை - எளிமை, ஓசை ஒட்டம் முதலியவற்றை - உள்வாங்கி, தமது கவிதையுள் அவை இரண்டறக் கலந்துவருமாறு நவீன கவிஞர் பலர் தமது படைப்பினை உருவாக்கி வந்துள்ளனர். ஈழத்தைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர் பலர் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகின்றனர். இன்னொரு விதமாகக் கூறின், ஒப்பீட்டு ரீதியில் ஈழத்தின் நவீன கவிஞர் மட்டக்களப்பு பிரதேசத்தில் மிகுந்துள்ளமைக்கு இப்பிரதேசத்தின் நாட்டார் பாடல் வளமே அடிப்படையான காரணம் என்று கூறுவதில் தவறில்லை.

ஆயினும் பொதுவாக ஈழத்துக் கவிஞர்களும் குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர்களும் வாய்மொழிப் பாடல்களில் இருந்து உறிஞ்சிக் கொண்டவை போதாது என்பதே கசப்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையாகும்! இவ் உண்மை ஈழத்துக் கவிஞர்களால் உள்வாங்கப்-படுமாயின் ஈழத்துக் கவிதைப் பாய்ச்சல் இன்னொரு கட்டத்தினை அடைய முடியும் என்பதில் தவறில்லை.

ஆயினும் பிரதேசக் ஈழத்துக் கவிஞர்களும் குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர்களும் நாட்டார் பாடல் மரபுகளிலிருந்து உறிஞ்சிக் கொண்டவை போதாது என்பதே கசப்பான உண்மையாகும். இவ் உண்மை ஈழத்துக் கவிஞர்களால் உள்வாங்கப்படுமாயின் ஈழத்து கவிதைப் பாய்ச்சல் இன்னொரு கட்டத்தினை அடைய முடியும் என்பதில் தவறில்லை.

- சாகித்திய விழா சிறப்பு மலர்,
(ஆரைம்பதி), 2000.

VII அண்மைக்காலகப் போக்குகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24

தொண்ணூறுகளுக்குப் பின்னர் ஈழத்தில் நவீன கவிதை முயற்சிகள்

ஏறத்தாழ தொண்ணூறுகளிலிருந்து ஈழத்தில் குறிப்பாக, தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்ற வடக்கு/கிழக்குப் பிரதேசங்கள் அரசியல் நெருக்கடி காரணமாக தொடர்புகள் துண்டிக்கப்பட்ட பிரதேசங்களாகி வந்துள்ளன. இலக்கிய நிலைமையைப் பொறுத்த-வரையிலுங் கூட, இவை பிரதேசத் தீவுகள் என்ற நிலைக்குள்ளாகின. இவ்வாறான ஆரோக்கியமற்ற சூழலிலும் புதிய தலைமுறைக் கவிஞர்கள் பலர், பல பிரதேசங்களிலிருந்தும் வெளிப்பட்டனர். பல்வேறு இலக்கிய முயற்சிகள் நிகழ்ந்து வந்துள்ளன. சுருங்கக் கூறின், நவீன கவிதை வளர்ச்சியைப் பொறுத்தளவிலே வளம் மிக்கதொரு காலகட்டமாக இக்காலப் பகுதி உள்ளது.

சரிநிகர்க் காலம்

ஏறத்தாழ, தொண்ணூறுகளின் முதற் பத்தாண்டுகளையும் சரிநிகர்க் காலம் என்று குறிப்பிடுவது பொருத்தமானது. இக்காலப் பகுதியில் வெளிவந்த சரிநிநகர் பத்திரிகை ஈழத்தின் பல பிரதேசங்களிலுமிருந்து தனித்துவ வீச்சுள்ள கவிஞர் பலரை இனங்காட்டிற்று எ-டு: யாழ்ப்பாணம் (நட்சத்திரன், செவ்விந்தியன், அஷ்வகோஷ்), திருகோணமலை (உமா ஜிப்ரான்), அம்பாறை (றஸ்மி), மட்டக்களப்பு (ஆத்மா, வாசுதேவன்); கவிதை தொடர்பான சர்ச்சைகள் பலவற்றிற்கு களமமைத்தது; ஆரோக்கியமான வாசகர் பரம்பரையொன்றை உருவாக்கிற்று.

எடுத்துக்காட்டாக வசன நடைக்கு அண்மித்ததான கவிதை வெளிபாட்டு முறையொன்றை அறிமுகப்படுத்துகின்றது, நட்சத்திரன் செவ்விந்தியனின் பின்வரும் கவிதை:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கட்க்கப்படாத எல்லை'

நம்பிக்கை குலைகிறது
ஒரு காலத்தில் அப்படியொரு காட்டுப் பாதை
இருந்தது என்று சொல்கிறார்கள்
ஒரு மாதத்திற்கு முன்னால் கடந்தவர்களும் இருக்கின்றார்கள்.

செக்கரில், தோல்வியில்
வீட்டு நினைவுகள் துழாவுகின்றன
எல்லாவற்றையும் எழுத முடிகிறதா என்ன?

இன்றைய காலை விழிப்பில்
அதிகமாய் அழுங்கிப் போனேன்
இருபது நாட்களாக இங்கு தங்கியிருந்தேன்
ஒரு ஒற்றையடிப் பாதையைத் தானும்
கண்டடையவில்லை

ஊருக்குத் திரும்பி என்னத்தைச் சொல்வேன்
அங்கே எனக்கு
கல்லறை கட்டி எழுதியும் விட்டிருப்பார்கள்
இந்நாளில் அதில் பட்டிமரங்களும் மண்டி
பாசி பிடித்தும்
எழுத்துக்கள் அழிந்து சிதிலமடைந்தும்...

காட்டு வழியாய் எல்லையைக் கடந்தவன்
இந்நேரம் தூரதேசத்தில்
படித்துக் கொண்டிருப்பான்
கெட்டிக்காரன்; இனி தேசத்துரோகி

இன்னமும்
ஆபத்தான எல்லையைப் பற்றியே
இரவில் கவலைப்படுகிறேன்.

மிதிவெடிகளுக்கும்
ஆட்காட்டிக் குருவிகளின் சிடுசிடுப்புகளுக்காகவும்
தேசத்துரோகிகளுக்கு விழும் அடிகளுக்காகவும்
என் ஜீவனே இரவில் பயப்படுகிறது

பகலில்
ஒரு பீடி இழுக்கிறதைப் போல
எல்லாம் செய்யலாம் போலுள்ளது

கவிதை மொழி அமைப்பில் புதிய மாற்றங்களை உருவாக்கியது ர்றஸ்மியின் கவிதை; உதாரணமாக ஒரு கவிதையின் ஆரம்பப் பகுதி:

'இன்னும் ஒருவேறு நாள்'

உனக்கும் எனக்குமான உள்ளுறவின்
நீ கருதும் தூய்மையினுள்
குண்டொன்று வெடிப்பதற்கு
அண்ணளவாய் நிமிடங்கள் அறுபந்தைந்தின் இப்பால்
நாம் பேருந்தில் இருந்தோம்

பேருந்து என்றால் பேருந்து பருந்தெனப் பறந்து நம்
கணங்களைக் கொத்தி இழுத்துத்தின்று கொண்டிருந்த...

நமக்கு அருகருகான ஆசனங்கள்
கைச் சந்துகள் இரண்டும்

காலின் தொடையிரண்டும் சதை நொறுங்கீ நெருங்கு
சூடு ஊடு பாயும்
உனது வியர்வையின் மணத்தை இவ்வளவு நெருக்கத்தில்
இதற்கு முன்னம் அறிந்ததில்லை தான்
அங்கங்களின் மீதான தங்களின்
ஆதிக்கத்தை இழந்த சணங்களின் திரள்..
புழுக்கம், மனித வெக்கை.

எனது கால்விரல்கள் உன்னைத்தேடி துளாவுகின்றன
உனது பாதணியின் கால் மறையும் தோலில் நத்தை நான்.

ஒரு தற்செயலை உருவாக்கி
நாடி பிடித்து அறியும் முனைப்பு
பிதுங்கிய மனிதர்கள்
உன்னை இன்னும் இன்னும் என்னுள் நுழைக்கின்றனர்
அவர்களுக்கு என் நன்றி

பருந்துக்குப் பாதி இரையாயிற்று
தவிப்பு பெருந்தீயாகி மூண்டு பரவுகிறது
நான் அணிந்து வந்த அழகுமுகம் கிழிந்து உன்முன்
எனது சாயம் கரைந்த நிஜமாய் வெளுக்கிறது
நானே நாணும் முகம்
சொற்களால் தோலுரித்து என் போலியை
நீங்கி நானாய் நான் ஆக-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கணம் நாயாயும்
ஒரு கணம் பேயாயும்
அதற்கு அடுத்துக்கொடும் பிசாசாயும்
என்னை நீ காண்கிறாய்
.....

'சரிநிகர்' மட்டுமன்றி 'பெண்', 'கவிதை' ஆகிய சஞ்சிகைகளும் கவனத்திற்குரிய கவிஞர்கள் பலரை இக்காலப் பகுதியில் உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதிய பிரதேச அறிமுகம்

ஈழத்து அரசியலைப் பொறுத்தவரையிலே குறிப்பாக, தொண்ணூறுகளிலிருந்த வன்னிப்பிரதேசம் முதன்மை இடம் பெறத் தொடங்கியதென்பது மிகையன்று. நவீன கவிதைத் துறைக்கும் இது பொருந்துவதே. ஐம்பதுகளிலே வன்னியூர்க் கவிராயருக்குப் பின்னர் அவ்வப்போது அகளங்கன் முதலாக ஒரிருவர் வெளிப்பட்டிருப்பினும் இப்போதுதான தரத்திலும் எண்ணிக்கையிலும் கவனிப்பைப்பெறும் புதிய கவிஞர் குழாமொன்று உருவாகியது. கருணாகரன், அமரதாஸ், நிலாந்தன், முல்லைலக்கமல், அம்புலி, அநாமிகன், ஆதிலட்சுமி சிவகுமார் என இவர்களது பட்டியல் நீண்டு செல்லக்கூடியது...
இவர்களது கணிசமான கவிதைகளில் காட்டின் மணமும் மரங்களின் அசைவும் குண்டுகளின் அதிர்வும் துவக்கின் நெடியும் புதிய படிமங்கள், காட்சிப்படுத்தல்கள், விவரிப்புக்கள் ஆக தனித்துவமான முறையில் வெளிப்பட்டன. அமரதாஸின் 'வனம் பற்றி ' கவிதையின் ஆரம்பப் பகுதி பின்வருமாறு :

மண்ணிடை
வேர்க்கால்களைப் பின்னி
கிளைக் கரங்களை
காற்று வெளியிடை வலித்து வலித்து
விண் தொட விழையும்
விசால விருட்சங்களையும்

வண்ண வண்ணமாய்க் குலுங்கி மினுங்கும்
பூக்களையும்
பழங்களையும்
முகில் வழியும் மலைகளையும்

கரைகளில்
ஈரம் படியக் கொஞ்சிப் புணர்ந்து
தேக்கமின்றித் தாளகதியில் தவழும் நதிகளையும்

பூத்த வர்ணச் சிறகுகளில் புகுந்துலாவி
மரக் கிளைகளில்
குளக் கரைகளில்
பசுந் தரைகளில்
எங்கும் சோடித்து
இன்பமுறும் பறவைகளையும்
இன்னும்
எக்கச் சக்க வனப்புக்களையும்
ஏற்றிக் கொண்டு
ஆனந்தமாய்ச் சுழல்கிறது வனம்
.....

நிலாந்தனின் 'வன்னி மான்மியம்' தொகுப்பிலுள்ள நெடுங்கவிதைகள் பலவும் வன்னியின் பூர்வீகம், ஐதீகம், வரலாற்றுச் செய்திகள் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு சமகால வாழ்வியல் பற்றிப் பேசுகின்ற - புதிய வெளிப்பாட்டுமுறைகள் பல கொண்டவித்தியாசமான படைப்பாகின்றது. தொகுப்பிலுள்ள 'பாலியம்மன் பள்ளு'வின் ஒரு பகுதி, இதுவாகும் :

மின்மினிப் பூச்சிகளைச் சூடிய
முதுபாலை மரத்தின்
கீழிருக்கிறேன்
முன்னால்
வவுனிக்குளம்
எல்லாளன் கட்டியதென்று
சொல்லுகிறார்கள்
கனகராயன் குளத்தில்
மழை பெய்தால்
வவுனிக்குளம் நிரம்புமாம்
வவுனிக்குளம் நிரம்பினால்
பாலியாறு பெருகுமாம்
பாலியாறு பெருகினால்
பாலியம்மன் உருக் கொள்வாள்
பாலியம்மன் உருக் கொண்டால்
படை திரளும்
படை பெருகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் மூளும்
.....
காடு மாறிய பறவைகளே
வீடு திரும்புங்கள்
அரசர்கள்
ஆற்றங் கரையில்
காலாறி நடப்பாரினி
அரண்மனை மேட்டில் யானைகள் பிளிறுமினி
வேட்டைக்காரர் வருகிறார்
புதிய வேட்டைப் பாடல்களோடு
.....

புதிய போக்குகள்

முஸ்லீம் தேசியம்

முஸ்லீம் தேசிய உணர்ச்சியின் வெளிப்பாட்டுக்குரல்கள் கவிதையில் 1985இல் ஒலிக்கத் தொடங்கினாலும் இக்காலப்-பகுதியிலிருந்தே பரவலாகவும் உச்சமாகவும் கேட்கத் தொடங்கின. மிக அண்மையில் வெளிவந்த 'வேட்டைக்குப் பின்' (ஒட்ட மாவடி அரபாத் - 2004) அதன் உச்சமான வெளிப்பாடு என்ற வித்தத்தில் முக்கியமானதொரு தொகுப்பாகும்.

முஸ்லிம்களின் ஒட்டுமொத்தமான அனைத்து அவலங்களையும் வெளிப்படுத்துகின்றது பல்லாக்கத் தொகுப்பான 'மிஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்' (2002).

இடப்பெயர்வு

தொண்ணூறுகளின் பின்னர் உள்ளூர் இடப் பெயர்வுகள் இடம்பெறத் தொடங்கின. யாழ்ப்பாண மக்களது இடப்பெயர்வு அவலங்களை வெளிப்படுத்தும் சிறந்த கவிதைத் தொகுப்புகளும் கவிதைகளும் அதிகம் வெளிவரத் தொடங்கின. வில்வரத்தினத்தின் 'காலத்துயர்', 'காற்றுவழிக் கிராமம்' என்பன இவ்வித்தில் நன்கறியப்பட்டவை. நிலாந்தனின் "யாழ்ப்பாணமே, ஓ எனது யாழ்ப்பாணமே" என்ற நெடும் பாடலின் ஒருபகுதி பின்வரு-மாறுள்ளது:

ஒரு பாடலுக்குப் பரிசாகத் தரப்பட்ட
தரிசு நிலம் நீ
படையெடுத்து வந்த
எல்லாப் பகைவர்க்கும்

கவர்ச்சிப் பொருளானாய்
இரு ஆறுகள் விழுங்கிய
பாலை நிலம் நீ
உனது தாகம்
ஒரு புதிய வீர யுகத்தின்
பாடு பொருளாயானது
.....
நெடுங் கோட்டையில்
தார் உருகும் உனது
சாலைகளின் மருங்கில்
வேலிகளில்
தீச்சுடராய்ப் பளிச்சிடும்
முள் முருக்கம் பூவில்
உனது குணமிருக்கும்
உனது வீரமிருக்கும்
உனது விவேகமிருக்கும்
தந்திர மிருக்கும்
சுயநலமிருக்கும்
நூதனமானவள் நீ
நகரங்களிற்குள்
நிகரேது மற்றவள் நீ
எப்பொழுதும்
எதிரிக்குப் பொறியாய் மாறியவள்
யாழ்ப்பாணமே
ஓ..... எனது யாழ்ப்பாணமே..!
.....

முஸ்லீம் மக்களது இடம்பெயர்வு அவலங்களை வெளிப்படுத்துவது முல்லை முஸ்ரிபாவின் இருத்தலுக்கான அழைப்பு (2003) என்ற தொகுப்பாகும்.

இயற்கை அனர்த்தம்

சுனாமி அனர்த்தம் பல படைப்பாளிகளையும் வெளிப்படுத்-தியது. ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டது போன்று, " சுனாமியை விடக் கொடுமையானவை அதையொட்டி எழுதப்பட்ட பல கவிதைகள். இவற்றை எழுதிய கவிஞர்கள் பலரையும் டிசெம்பர் 26. 2004 காலை 8.20 மணிக்கு மீன் வாங்கிவரும்படி கடற்கரைக்கு அனுப்பாதது நாம் விட்ட மாகா வரலாற்றுப்பிழை" ஆயினும் வித்தியாசமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புகளும் வெளிவந்துள்ளமைக்கு, றஸ்மியின் 'ஆயிரங் கிராமங்களைத் தின்ற ஆடுகள்' சிறந்த எடுத்துக்காட்டாகின்றது இதன் முதற் காதையான இயேசு பாலனுக்கு ஒரு நாள் வயதாயிருந்த காலை தொடக்கம் கடைக்காதையான நரக உலகில் விதிக்கப்படுதல் வரை இப்படைப்பு, கிறிஸ்தவ, இந்துசமய தொன்மைங்கள், நாட்டார் பாடல் பண்புகள், நீலாவணன் முதலானோரின் நவீன காவியப் பண்புகள், நவீன உத்திமுறைகள் முதலானவற்றைக் கொண்டு முற்றிலும் நவீனமான காவியமாக வெளிப்பட்டுள்ளது. இவ்விடத்தில் பொருத்தம் கருதி இக்காவியத்தின் ஒருபகுதி தரப்படுகின்றது.

'நிலக்காட்சி'

திரண்டு மிடுக்காய்க் கரைகளைப்
போர்த்தியிருந்தன அடம்பன் கொடிகள்
ஊதா இளம் கிண்ணப்பூவுள் தேங்கும் தேன்வண்டுகள்
முயங்கிப் பாடும்
காற்றில் மோதுவதும் முட்டுவதும்
மிடுக்காய்த்திரண்டு கரை போர்த்திப்
படர்ந்திருந்தன அடம்பன் கொடிகள்
இரவில் நிலவின் முயலிறங்கி மேயவோ...
8.40மணி
நீராலான இராட்சதப் பாம்புகள்
நுழைந்து துரத்துகின்ற ஊருக்குள்
போட்டது போட்டதாய்க் கிடக்க
உயிரை மட்டும் காவிக் கொண்டு
ஓடுகிறோம்...

வித்தியாசமான முயற்சிகள்

சிறையில் நீண்டகாலமாக அடைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் பலர் அவ்வப்போது கவிதைகள் எழுதி வற்துள்ளனர். சரிநிகரில் அவ்வாறான கவிதைகள் சில வெளிவந்துள்ளனவாயினும் முழுமைத் தொகுப்பாக இக்காலத்தில் வெளிவந்தது என்ற விதத்தில் 'சிறையில் பூத்த உணர்வின் ஒளி' (கல்லடி றொபட் 2005) குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே, சொந்த வாழ்க்கை அனுபவங்கள் சார்ந்த தொகுப்புகள் வசன வடிவில் அவ்வப்போது வெளிவந்திருந்த சூழலில் (எ-டு: வரதர், தில்லைச்சிவன், தம்பையா முதலானோரின் நூல்கள்) கவிதைகள் வடிவில் வெளிவந்துள்ள 'நினைவுச் சுவடுகள்' (2005) விதந்துரைக்கப்பட வேண்டியதொன்று. கவிஞர் தமது "உறவுகள்" பற்றிப் பேசினாலும் அவ்வப்போது அவற்றினூடே சமூகம் / வாழ்க்கை / மனித இயல்புகள் கவிஞரையும் மீறி வெளிப்படுவது இத்தொகுப்பின் வரவை முக்கியப்படுத்தியுள்ளது என்பது மிகையன்று. எ-டு :

நயினார் அடிச்சா
நாலு பேருக்குத் தெரியும்
நான் அடிச்சா
உலகமெல்லாம் தெரியும்

புதிய தலைமுறைப் பெண் கவிஞர்கள்

எண்பதுகளிலிருந்து பெண் கவிஞர்கள் பலர் உருவாகத் தொடங்கியதும் இவ்விதத்தில் தமிழின் முதற் தொகுப்பான 'சொல்லாத சேதிகள்' (1986) ஈழத்திலிருந்து வெளிவந்தமையும் ஏலவே வரலாற்றுப் பதிவுகளாகி விட்டன. எனினும், இடைப்பட்ட சிலகாலம் தளர்ச்சி கண்டிருந்த பெண் கவிஞர்களது முயற்சிகள் இக்காலப் பகுதியில் மீண்டும் புத்தெழுச்சி பெறுகின்றன. தனித்துவ வீச்சுகளுடன் ஆழியாள்,மருதமுனை அனார், பெண்ணியா, விநோதினி, மைதிலி, ஆகர்ஷியா, தமிழ்நதி, கலைமகள் அம்புலி, சுதாகினி, பஹீமா ஜகான், லறீனா ஏ.ஹக் முதலாக கவிஞர்கள் பலர் வெளிப்பட்டுள்ளனர். கலா, உருத்திரா, விஜயலெட்சுமி, சாரங்கா என தொகுப்புத் தராத கவிஞர்களும் பலருள்ளனர். மலையகத்திலிருந்து பெண் நிலைவாத நோக்குடன் எழுதுகின்ற கவிஞர்களும் இக்காலப் பகுதியிலேயே வெளிப்படுகின்றனர். எ.டு: மறாயா கோகிலவாணி, வட்டவளை புனிதகலா, இவர்களுள் ஒருவரான 'பெண்ணியா' வின் கவிதைகளின் தனித்துவம் இயற்கைக்கும் கவிஞருக்கு மிடையிலான உறவு வெளிப்பாடு முதன்மை பெறுவது எனலாம். எ-டு :

நேசம் அல்லது நெல்லிமரம்
என்னையே பார்க்கும் நெல்லிமரம்
என்ன வடிவாய்த்தான் உள்ளது
என் முகத்தைவிட!
மழைக்காலங்களில்அடுப்பில்வைத்துகறுத்த
சட்டியின் நிறம் போன்று
அதன் தண்டு அதிலிருந்து
கிளைகளாய் பிரிந்து நிற்கும் அதன்
இளம் பச்சை இலைகள்
மழைத்துளிகள் பட்டு நிற்கும் போது
என்னவோ செய்கிறது எனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை நேரங்களில் நான்
மிருந்த துக்கத்துடன் இருக்கும் வேளைகளில்
அதனுடன் தான் பேசியும்
அழுதும் தீர்ப்போள்
வஞ்சகமும் பொறாமையும் நிறைந்த
மனிதர்களது முகத்தை விட அந்த
நெல்லி மரத்தின் உடல் முழுக்க
அழகாக உள்ளது
என் தேசத்திற்குரிய நெல்லி மரம்.

ஏனையோரைப் பற்றி விரிவஞ்சி இங்கு குறிப்பிடப்படவில்லை. பெண் கவிஞர்களின் பல்லாக்கத் தொகுப்புகளும் இக்காலப் பகுதியில் அதிகளவில் வெளிவருகின்றன. குறிஞ்சிக் குயில்கள், கனல், வெளிப்படுதல், உயிர்வெளி முதலானவை இவற்றுள் சிலவாகும்.

புதிய வடிவங்கள்

மஹாகவி தொடக்கி வைத்த 'குறும்பா' வடிவம் இக்காலப் பகுதியில் மீண்டும் வாழ்வு பெறுகின்றது. இவ்விதத்தில் 'நகை' தொகுப்பு முக்கியமானதொன்று.

சு. முரளிதரனால் அறிமுகப்படுத்தப்பட்ட 'கைக்கூ' வடிவமும் இளந்தலைமுறைக் கவிஞர்கள் பலரது கவனத்தை இக்காலத்தில் பெறலாயிற்று.. உ+ம் : பாலரஞ்சினி சர்மா, வேலணையூர் பொன்னையா, மலரவன் தொகுப்புகள். பின்வருவது, முரளி எழுதிய 'கைக்கூ' வாகும்.

நாய் குரைக்கும் இரவு
திடுக்கிடும் தென்னங் குருத்துகள்
விடியலில் தோரணங்கள்

(பொன். கணேசமூர்த்தி)

வெண்பா (ஈழமோகம்) குறள் வெண்பா/கணேசமூர்த்தி என்பன சமகால சமூகம் பற்றியும், அரசியல் பற்றியும் விமர்சிக்க பயன்படுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது. எ-டு :

'மூடநம்பிக்கை'
நூறென்றார் தும்மலிட நோயிற் கிடந்தாரை
ஆறென்றார் ஊரும் இலர்

மேற்கூறியவை தவிர விசாகனின் உலைக்கனம் (2003) தொகுப்பு வித்தியாசமாக புதிய வடிவத்தைக் கொண்டமைவது விதந்துரைக்கப்பட வேண்டியதொன்று.

ஏலவே, வடிவப் பரிசோதனைகள் செய்துள்ள கவிஞர் சிவசேகரத்தின் அண்மைத் தொகுப்பான 'இன்னொன்றைப்பற்றி' (2003) என்ற தொகுப்பிலுள்ளவை புதிய வடிவங்கள் பல கொண்ட கவிதைகளாகத் திகழ்கின்றன.

மேற் கூறியவற்றைவிட இக்காலப்பகுதியிலே நெடும் பாடல் வடிவிலான பரிசோதனை முயற்சிகளும் குறிப்பிடத்தக்களவு இடம் பெற்றுள்ளன. இந்நெடும்பாடல்களுள் சில. நவீன காவியங்கள் என்று கருதப்படக்கூடியனவாயுமுள்ளன. இவற்றுள், வன்னிமான்மியம் (நிலாந்தன்; இதுபற்றி ஏலவே கூறப்பட்டுள்ளது). ஆயிரம் கிராமங்களைத் தின்ற ஆடு (றஸ்மி; இதுபற்றியும் ஏலவே கூறப்பட்டுள்ளது.) பொறிக்குள் அகப்பட்ட தேசம் (மு. பொன்னம்பலம்) சுள்ளிக்காடும் செம்பொடையனும் (மஜீத் ; 2005) வண்ணத்துப்பூச்சியாகப் பிறந்த கதைக்குரிய காலம் (றியாஸ் குரானா - 2006) என்பன இகிலாகித்துப் பேசத்தக்கவை. இவையாவும் விரிவான ஆய்வுக்குரியவை. இவற்றுள், பொறிக்குள் அகப்பட்ட தேசம் தனித்துவ அம்சங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. அமெரிக்கா மீது செப்.11.2001ல் நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதல் பற்றிப் பேசும் இப்படைப்பு உள்ளடக்கத்தால் மட்டுமன்றி, இந்திய/ தமிழ் இலக்கிய மண் மணம் கமழ்வது காரணமாகவும் முக்கியத்துவமும் கவனிப்பும் பெற்றுள்ளது.

மொழிபெயர்ப்புக்கள்

ஈழத்தின் அரசியல், சமூக, நிலைமைகளுக்கேற்ப ஈழத்தில் கவிதை மொழிபெயர்ப்பு முயற்சிகள் நீண்டகாலமாக இடம் பெற்று வருகின்ற சூழலில், இம்மரபிற்கு மேலும் வளம் சேர்ப்பதாக ஆபிரிக்க கவிதைகள் (2001) 'தென்னிலங்கைக் கவிதைகள்' ஆகிய இருதொகுப்புகள் (இரண்டினதும் மொழிபெயர்ப்பாளர் சோ. பத்மநாதன்) இக்காலப்பகுதியில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிறுவனஞ்சார் வெளியீடுகள்

முன்னைய காலங்களைவிட இக்காலப்பகுதியிலே நிறுவனஞ் சார்ந்த பல்வாக்கத் தொகுப்புகள் பல வெளியவந்திருக்கின்றன. எ -டு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக வெளியீடுகள் :

என் தேசத்தில் நான் (பேராதனை 2004)
நெஞ்சில் கனக்கும் நினைவுகள் (யாழ்ப்பாணம்2004)
இளம்பரிதி 1, 2, 3, (கிழக்குப்பல்கலைக்கழகம்
(கலாசாரத் திணைக்களம், வடக்கு, கிழக்கு மாகாணம்) துத்துளிர்நூறு 2003/2004)

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வெளியீடுகள் :

மதுரத்தமிழ் (கொட்டகலை ஆ. ப. க.)
தேட்டம் (கொட்டகலை ஆ. ப. க.)

பாடசாலை வெளியீடுகள் :

ஏணி (அரசடித்தீவு த. ம. வி)
இளைய நிலா (நிலாவெளி த. ம. வி)

இவையாவும் விரிவான ஆய்வுக்குரிய முயற்சிகளாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து நவீன கவிதை

புதிய உள்ளடக்கங்கள் - புதிய தரவுகள் - புதிய போக்குகள்

கலாநிதி செ. யோகராசா

இந்நூல் ஈழத்து நவீன கவிதையின் வளர்ச்சிப் பற்றி முழுமையாக விபரிக்கின்றது. இந்நூலிலுள்ள இருபத்திநான்கு கட்டுரைகளும் ஈழத்து நவீன கவிதையின் தோற்றம் குறித்தும், முக்கியமான முன்னோடிகள்/ ஆளுமைகள் சிலர் குறித்தும், பிரதேச அடிப்படையிலும் கோட்பாட்டு நிலையிலும் பொதுப்பார்வையிலும் ஈழத்து நவீன கவிதைப் பற்றி பேசுகின்றன. இந்நூல் ஈழத்து நவீன கவிதையின் புதிய உள்ளடங்களையும் புதிய போக்குகளையும் விபரிப்பதுடன் புதிய தரவுகளையும் தருகின்றது.

செல்லையா யோகராசா *(1949)* : யாழ்ப்பாணத்தில் கரணவாய் கிராமத்தைப் பிறப்பிமாகக் கொண்ட இவர் தமது இளங்கலைமாணி சிறப்புக் கற்கைநெறியை கொழும்புப் பல்கலைக்கழகத்திலே *(1968-1972)* பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையினதும் பேராசிரியர் கா.சிவத்தம்பியினதும் வழிகாட்டலில் முறையே முதுகலைமாணி *(1991)* கலாநிதி *(1999)* பட்டங்களைப் பெற்றார். பாடசாலைக்காலத்தில் 'கருணையோகன்' என்ற பெயரில் கவிதை, சிறுகதை எழுதியவர், பல்கலைக்கழகம் சென்றபின்னர் நவீன இலக்கியம், ஈழத்து இலக்கியம், தமிழியியல் ஆய்வு, விமர்சனம், பெண்கள் இலக்கியம், சிறுவர் இலக்கியம் என்பன சார்ந்த ஆய்வாளராக வெளிப்பட்டார். பல நூல்களையும் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளதுடன் பல தொகுப்பு நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார். தற்போது கிழக்குப் பல்கலைக்கலைக்கழக மொழித்துறையில் முதுநிலை விரிவுரையாளராக விளங்குகின்றார்.

குமரன் புத்தக இல்லம்

விடயம் : தமிழ் இலக்கியம்

ISBN 978-955-659-101-X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BOOK LAB